[illegible]

[illegible]

[illegible]

[illegible] 2002

D
V2ll, 31 P02
P02
224377

வெளியீடு 4-12-2002 Issued 4-12-2002

44

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 26, 2002 – தொகுதி 25 – எண் 1

**Friday the 26th April, 2002 – Volume 25 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

*ரூ. 3.00]* **[Price Rs. 3.00**

55/2003

26–4–2002

உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vii |
| Governor and Council of Ministers | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-47 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (எட்டாம் பட்டியல்) | 47-78 |
| **2. தகவல் கோரல்—** | |
| கிருஷ்ணா நதிநீர்த் திட்டப் பணி ஆந்திரத்திற்கு மத்திய அரசு நிதி உதவி | 79 |
| **3. அறிவிப்பு—** | |
| கவன ஈர்ப்பு ஒத்திவைப்பு | 80 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) மதிப்பீட்டுக் குழு | 80 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு | 80 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 81 |

224377


பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 43—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 82,92,94,97, 153-166, 169,171-192

திரு. அன்பில் பெரியசாமி 92,93,94-98

*திரு. கே.பி. அன்பழகன் 98-110

திரு. சி. ஞானசேகரன் 82, 110-121, 128, 192

திருமதி காசாம்பு பூமாலை 121-128

*திருமதி சி.எம். சூரியகலா 128-134

*திருமதி எஸ். மகேஸ்வரி 134-144

செல்வி க. பாலபாரதி 144-149

*திரு. வே. கிருஷ்ணமூர்த்தி 150-153

7. அரசினர் தீர்மானம்—

உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல் 166-168

8. மானியக் கோரிக்கைகள் விவாத இறுதியில் வெளியிடும் அறிவிப்புகளை அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்குதல்— 193

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 199, 200


224377



V211,31'P02 · P02 25·1

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் — திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல்.

4. கல்வி அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

5. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :
சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :
இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை :
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்பநலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால் :
கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :
வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



11. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

12. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :
ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

14. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மின் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :
மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :
தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

| | |
|---|---|
| 17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. ப. மோகன் : வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு. |
| 18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் : குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர் கிராமத் தொழில் வாரியம். |
| 19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் : வீட்டுவசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் : கால்நடை பராமரிப்பு. |
| 21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் : பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன். |
| 22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் : தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு. |



| | |
|---|---|
| 23. பால் வளத் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் : பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி. |
| 24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் : செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு. |
| 25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் : கைத்தறி மற்றும் துணித் தொழில். |
| 26. மீன்வளத் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் : மீன்வளம். |
| 27. சுற்றுலாத் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. அ. மில்லர் : சுற்றுலா மற்றும் சுற்றுலா வ[illegible]ம். |

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

2. **Minister for Public Works and Prohibition and Excise** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

   Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption and Prisons.

3. **Minister for Finance and Information Technology** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

   Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies and Information Technology.

4. **Minister for Education** .. **The Hon. Dr. M. Thambidurai:**

   Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional energy development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines & Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests & Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

| | | |
|---|---|---|
| 19. **Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru M.C. Sampath:**<br>Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 20. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**<br>Animal Husbandry. |
| 21. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru K. Sudarsanam:**<br>Backward Classes, Most Backward Classes and De-notified Communities. |
| 22. **Minister for Labour** | .. | **The Hon. Thiru Va. Thu. Natarajan:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 23. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:**<br>Milk and Dairy Development. |
| 24. **Minister for Information and Publicity** | .. | **The Hon. Thiru K.K. Balasubramanian:**<br>Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control. |
| 25. **Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundram:**<br>Handlooms and Textiles. |
| 26. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| 27. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்**

*மாற்றுத் தலைவர்கள் **

**திரு. பி.ஆர். சுந்தரம்**

**திரு. அ. பாப்பா சுந்தரம்**

**திரு. ப. இராஜரெத்தினம்**

**திரு. எம்.ஏ. ஹக்கீம்**

**திரு. செ.கு. தமிழரசன்**

**திரு. லா. சந்தானம்**

*முதன்மைச் செயலாளர்*

**திரு. செ.க. ஜானகிராமன்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

* *12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பிஎஸ்.சி., பிஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பிஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பிஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பிஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீதா. உமா, பி.ஏ. (விடுப்பு) | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பிஎஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பிஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பிஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பிஎஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. (விடுப்பு) | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ. பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |



| | | |
|---|---|---|
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆரு.சி. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்

22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்

24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி

25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்

26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி

27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை

28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி

29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்

30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்

31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்

32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)

34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)

35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)

36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்

37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்

38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்

39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்

40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்

41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)

42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி

45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்

47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு

48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி

49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)

50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி

51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி

52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)

கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்

கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)

கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்

கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்

5கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

5கருப்பணன், திரு. கே.சி. .. பவானி

5கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)

60லாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

61னகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)

62ரிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)

63. சாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்

64. மராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்

65. த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இ[illegible]ணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ர. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. என்.கே. .. வீரபாண்டி

| | | |
|---|---|---|
| 112. செல்வராஜ், திரு. ஏ.கே. | .. | மேட்டுப்பாளையம் |
| 113. செல்வி முருகேசன், திருமதி | .. | காங்கேயம் |
| 114. சேகரன், திரு. கே.என். | .. | திருவெறும்பூர் |
| 115. சேகர்பாபு, திரு. பி.கே. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 116. சோமசுந்தரம், திரு. வி. | .. | உத்திரமேரூர் |
| 117. ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | .. | திருநாவலூர் |
| 119. தமிழரசன், திரு. செ.கு. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | .. | மேல்மலையனூர் |
| 121. தம்பிதுரை, டாக்டர் மு. | .. | பர்கூர் |
| 122. தவமணி, திரு. க. | .. | திருவிடைமருதூர் |
| 123. தளவாய் சுந்தரம், திரு. ந. | .. | கன்னியாகுமரி |
| 124. தனபால், திரு. ப. | .. | சங்கரி (செ.வ.) |
| 125. தாமோதரன், திரு. எஸ். | .. | விருதுநகர் |
| 126. தாமோதரன், திரு. செ. | .. | கிணத்துக்கடவு |
| 127. தாமோதிரன், திரு. ப.வெ. | .. | பொங்கலூர் |
| 128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. | பேராவூரணி |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். | .. | காஞ்சிபுரம் |
| 130. திருமாவளவன், திரு. இரா. | .. | மங்களூர் (செ.வ.) |
| 131. துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 132. துரைராஜ், திரு. சி. | .. | சேடப்பட்டி |
| 133. தென்னரசு, திரு. கே.எஸ். | .. | ஈரோடு |



| | | |
|---|---|---|
| 134. நடராஜன், திரு. அ. | .. | குத்தாலம் |
| 135. நடராஜன், திரு. எஸ். | .. | நாட்ராம்பள்ளி |
| 136. நடராஜன், திரு. பி.கே.டி. | .. | ஆத்தூர் |
| 137. நடராஜன், திரு. வது. | .. | இளையான்குடி |
| 138. நயினார் நாகேந்திரன், திரு. | .. | திருநெல்வேலி |
| 139. நரசிம்மன், திரு. பி.எம். | .. | பள்ளிப்பட்டு |
| 140. நளினி மனோகரன், திருமதி | .. | போளூர் |
| 141. நன்மாறன், திரு. என். | .. | மதுரை கிழக்கு |
| 142. நீலகண்டன், திரு. ப. | .. | ஆற்காடு |
| 143. நெப்போலியன், திரு. து. | .. | வில்லிவாக்கம் |
| 144. பச்சைமால், திரு. தா. | .. | குளச்சல் |
| 145. பதினெட்டாம்படியான், திரு. க. | .. | முதுகுளத்தூர் |
| 146. பரணிகுமார், திரு. மா. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 147. பரிதி இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 148. பவானி கருணாகரன், திருமதி கே. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 149. பழனிசாமி, திரு. கே.எஸ். | .. | பெருந்துறை |
| 150. பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 151. பழனியப்பன், திரு. பெ. | .. | மொரப்பூர் |
| 152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. | குறிஞ்சிப்பாடி |
| 153. பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. | பெரியகுளம் |
| 154. பாண்டுரங்கன், திரு. கே. | .. | அணைக்கட்டு |
| 155. பாப்பா சுந்தரம், திரு. அ. | .. | குளித்தலை |
| 156. பாரமலை, திரு. க. | .. | மானாமதுரை (செ.வ.) |

| | | |
|---|---|---|
| 157. | பாரிமோகன், திரு. கி. | .. தருமபுரி |
| 158. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. கடலாடி |
| 159. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | .. தொண்டாமுத்தூர் |
| 160. | பாலசுப்ரமணியன், திரு. கே.கே. | .. ஸ்ரீரங்கம் |
| 161. | பாலபாரதி, செல்வி க. | .. திண்டுக்கல் |
| 162. | பாலன், திரு. எஸ்.எம். | .. லால்குடி |
| 163. | பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | .. சேரன்மகாதேவி |
| 164. | பிச்சாண்டி, திரு. கு. | .. திருவண்ணாமலை |
| 165. | புகழேந்தி, திரு. இ. | .. கடலூர் |
| 166. | பூபதி மாரியப்பன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 167. | பெருமாள், திரு. என்.கே. | .. விளாத்திக்குளம் |
| 168. | பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 169. | பொன்னம்பலம், திரு. ப. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 170. | பொன்னையன், திரு. சி. | .. திருச்செங்கோடு |
| 171. | போளூர் வரதன், திரு. | .. செங்கம் (செ.வ.) |
| 172. | மகாலிங்கம், திரு. எஸ். | .. அவினாசி (செ.வ.) |
| 173. | மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 174. | மகேஸ்வரி, திருமதி எஸ். | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 175. | மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 176. | மணி, திரு. டி. | .. விளவங்கோடு |
| 177. | மணி, திரு. ஜி.கே. | .. பென்னாகரம் |
| 178. | மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. சாத்தான்குளம் |



| | | |
|---|---|---|
| 179. | மலையப்பசாமி, திரு. அ.இரா. | .. கபிலர்மலை |
| 180. | மல்லிகா சின்னசாமி, திருமதி | .. முசிறி |
| 181. | மாணிக்கராஜ், திரு. எஸ். | .. நாங்குநேரி |
| 182. | மில்லர், திரு. அ. | .. கூடலூர் |
| 183. | முரளிதரன், திரு. கே.வி. | .. தளி |
| 184. | முருகவேல் ராஜன், திரு. க. | .. வந்தவாசி (செ.வ.) |
| 185. | முருகேசன், திரு. ஆ.கு. | .. ஆத்தூர் |
| 186. | முனுசாமி, திரு. கா.பூ. | .. காவேரிப்பட்டினம் |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 188. | மோகன், திரு. ப. | .. சின்னசேலம் |
| 189. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 190. | ரங்கநாதன், திரு. ப. | .. புரசைவாக்கம் |
| 191. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 192. | ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | .. கோபிசெட்டிப்பாளையம் |
| 193. | ராதாகிருஷ்ணன், திரு. எம். | .. திருமயம் |
| 194. | ராமராஜ், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 195. | ராம்குமார், திரு. எம். | .. பாபநாசம் |
| 196. | ராஜகோபால், திரு. ஆ. | .. சிவகாசி |
| 197. | ராஜம்மாள், திருமதி எஸ். | .. தூத்துக்குடி |
| 198. | ராஜா, திரு. எச். | .. காரைக்குடி |
| 199. | ராஜாங்கம், திரு. வி.ஆர். | .. சோழவந்தான் |
| 200. | ராஜு, திரு. எச்.எம். | .. உதகமண்டலம் |
| 201. | ரெங்கநாதன், திரு. என். | .. பூம்புகார் |

| | | |
|---|---|---|
| 202. | ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. பேரூர் |
| 203. | லட்சுமணன், திரு. வி.கே. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. | லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. அரவக்குறிச்சி |
| 205. | வளர்மதி, திருமதி பா. | .. ஆலந்தூர் |
| 206. | வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. மதுரை மேற்கு |
| 207. | வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. | வாசுதேவன், திரு. பெ. | .. மதுராந்தகம் |
| 209. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 210. | வில்வநாதன், திரு. இரா. | .. சோளிங்கர் |
| 211. | வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. பூங்கா நகர் |
| 212. | விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. புதுக்கோட்டை |
| 213. | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. பனமரத்துப்பட்டி |
| 214. | வீரபாண்டியன், திரு. ஜெக. | .. மயிலாடுதுறை |
| 215. | வெங்கடாசலம், திரு. அ. | .. ஆலங்குடி |
| 216. | வெங்கடாஜலம், திரு. செ. | .. சேலம்-1 |
| 217. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 218. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 219. | வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 220. | வேல் முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |
| 221. | வைதியலிங்கம், திரு. மீ. அ. | .. தாம்பரம் |
| 222. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 223. | ஜீவானந்தம், திரு. இரா. | .. நாகப்பட்டினம் |
| 224. | ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |
| 225. | ஜெயக்குமார், திரு. கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 226. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 227. | ஜெயராமன், திரு. வி. | .. பொள்ளாச்சி |
| 228. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 229. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 230. | ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. மதுரை மத்தி |
| 231. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. திருவட்டாறு |
| 232. | சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. (நியமனம்) |
| 233. | (வெற்றிடம்) | .. சைதாப்பேட்டை |
| 234. | (வெற்றிடம்) | .. வாணியம்பாடி |
| 235. | (வெற்றிடம்) | .. அச்சரப்பாக்கம் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 13, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 ஏப்ரல் 26, வெள்ளிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி."*

வயிற்றுப் பசியால் வாடுவோருக்கு உணவளித்துப் பசியைப் போக்குவதென்பது பெற்ற பொருளைப் பேணிக் காக்கும் கருவூலமாகும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 230, திரு. டி. மணி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

**230—**

**பாலம் கட்டுதல்**

***215—திரு. டி. மணி:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை ஆற்றுப்பாலம் புதிதாகக் கட்ட நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்த பின்னரும் இப்பாலப் பணி தொடங்கப்படாதது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

[2002 ஏப்ரல் 26

(ஆ) ஆம் எனில், இப்பால வேலைகள் எப்போது ஆரம்பிக்கப் படும்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேசிய நெடுஞ்சாலை 47-ல் கிலோ மீட்டர் 604/4ல் குழித்துறை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தைத் திரும்பக் கட்டும் பணிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்படி பாலம் கட்டும் பணியானது தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையில் வருகின்ற இந்த குழித்துறை ஆற்றுப்பாலம் கட்டப்பட்டு 100 வருடங்கள் தாண்டிவிட்டன. 4 ஆண்டுகளுக்கு முன்னால் பாலத்தினுடைய பில்லரின், அடிமட்டத்திலே அரிப்பு ஏற்பட்டு, பிறகு தமிழ்நாடு P.W.D.-யைச் சார்ந்தவர்கள் கொஞ்சம் கற்களைக் கொண்டு நிரப்பினார்கள். எந்த நேரத்திலே என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய விளையாட்டுத் துறையினுடைய இணை அமைச்சரை நேரில் சந்தித்து நான் இதுபற்றிக் கேட்கின்றபோது, அனுமதி எல்லாம் பெற்றாகி விட்டது; பணம் ஒதுக்குவதிலேதான் பிரச்சினை இருக்கிறது; இதை B.O.T. Scheme-லே செய்ய வேண்டுமா அல்லது தனியார் அதை எடுத்துக் கொள்வார்களா என்ற பிரச்சினையைத்தான் அன்றைக்கு அவர்கள் கிளப்பினார்கள். கடந்த வருடமும் இந்தப் பிரச்சினையைப்பற்றி நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தபோது ஒரு மாதத்திற்குள் இதனுடைய ஏற்பாடுகள் எல்லாம் நடைபெறும் என்று சொன்னார்கள். எந்த நேரத்திலும், ஏதோ ஒரு ஆபத்து வரக்கூடிய நிலையில் பாலம் இருக்கிற காரணத்தால், மத்திய அரசாங்கத்தினுடைய பணத்தைப் பெற்று நாம் செய்ய வேண்டிய கட்டாய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அதைத் துரிதப்படுத்துவதற்கும், அந்தப் பாலத்திற்குப் பதிலாக புதிய பாலத்தைக் கட்டுவதற்கும்--ஏற்கெனவே 17 கோடி ரூபாய் வரையிலும் ஆகும் என்று ஒரு மதிப்பீட்டைச் சொன்னார்கள். அதைப் பெற்று விரைவாக அந்த வேலைகளைச் செய்வதற்கு--அரசு துரித நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 26]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழித்துறை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தைத் திரும்பக் கட்டும் பணிக்கு ரூ.19.52 கோடிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, 23-5-2001 அன்று மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற்றபின், கட்டி, நிர்வகித்து, ஒப்படைத்தல்—B.O.T.—திட்டத்தின்கீழ் மேற்படி பாலப்பணி தொடங்கப்படவுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அந்தப் பாலத்தினுடைய அவசர அவசியத்தைக் கருதி பால வேலைக்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறுவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு விரைந்து துரித நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த B.O.T. Scheme-க்கு ஏற்கெனவே 3 மிகப் பெரிய ஒப்பந்தக்காரர்கள், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சர்வே நடத்தினார்கள். அந்த சர்வே நடத்துகின்றபோது அந்த வட்டாரத்தைச் சார்ந்த லாரி, கார், வேன் இதுபோன்ற வாகனங்களுடைய சொந்தக்காரர்களை அணுகிக் கேட்டார்கள். அவர்கள் 10 ரூபாய்க்கு மேல் அதிகமாகத் தர எங்களால் இயலாது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதோடு மிகப் பெரிய காண்ட்ராக்டர்கள், இதிலிருந்து விடுபட்டுப் போனார்கள். மீண்டும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது; இது நம்முடைய தேசிய நெடுஞ்சாலை. நெடுஞ்சாலைகளில் எல்லாம் B.O.T. Scheme-லேயே இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதன் மூலமாக 100 ரூபாய், 60 ரூபாய், 70 ரூபாய் என்று வசூலிக்கின்ற ஒரு நிலை நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு ஒரு நல்ல பெயரைச் சம்பாதித்துத் தருமா என்பதில் எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த நிலையை மாற்றி மத்திய அரசாங்கமானாலும்சரி, மாநில அரசாங்கமானாலும் சரி, நம்முடைய நிதியிலிருந்து நாம் கட்டிக் கொள்வதும், அதைக் கட்டி முடித்ததற்குப் பின்னால் சின்ன ஒரு டோல்கேட், 10 ரூபாயோ, 15 ரூபாயோ என்று வைத்தால் அதில் ஒன்றும் பெரிய ஆட்சேபனைக்கு இடம் இருக்காது. சமீபத்திலேகூட நம்முடைய கிழக்கு கடற்கரைச் சாலையிலே என்ன பார்க்கிறோம் என்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, கேள்விக்கு வாருங்கள்.

**திரு. டி. மணி:** ரூ.60-க்கு மேலே வசூலிக்கிறார்கள். 60 ரூபாய் 70 ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். அந்த நிலை வரக்கூடாது. அந்த அடிப்படையிலே இதை நம்முடைய மாநில அரசாங்கம், அந்தக் கண்ணோட்டத்தோடு செய்வதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் B.O.T. Scheme-ல் கட்டி முடிக்கப்பட்டபின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் யாருக்கும் பாதிக்காத வகையில் சுங்க வரியினை நிர்ணயிப்பது குறித்து பேசி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், நடப்பு ஆண்டிலே வேறு எத்தனை பாலங்கள் கட்டுவதற்கு.... (மணியடிக்கபெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. ஹேமச்சந்திரன், குழித்துறை பாலத்திற்குத்தான் அவரிடம் தகவல் இருக்கும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** குழித்துறையைச் சேர்ந்ததுதான். கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை ஆற்றிலே இருக்கிற பாலம் என்பது தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிற மிக முக்கியமான பாலம் என்ற காரணத்தினால் B.O.T. Scheme-ல் சேர்த்துத்தான் இது செய்யப்படவேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறதா? இதிலே இருந்து வெளியே கொண்டு வந்து மாநில அரசு இதைச் செய்ய முடியாதா? அதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள முடியாதா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் நிதிநிலையினைக் கருத்திற்கொண்டு தான் இதை B.O.T.-திட்டத்தின்கீழ் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் வேறு நிதி ஆதாரங்கள் மூலமாக இதைக் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகளை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திர பிரசாத்.





**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மிக முக்கியமான குழித்துறை ஆற்றுப் பாலம் என்பது முன் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் சி.பி. ராமசாமி அவர்கள் திவானாக இருந்தபோது கட்டப்பட்ட பாலம் ஆகும். 1918 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட அந்தப் பாலம் ஒரு நூற்றாண்டை நெருங்கி உள்ளது. 1994-ல் ஏற்பட்ட வெள்ள பாதிப்பால் அந்தப் பாலம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. அது மட்டுமல்லாமல், அந்தப் பாலத்தின் அருகிலிருந்து மணல் எடுப்பதால் எந்த நேரத்திலேயும் அந்தப் பாலத்தில் உடைப்பு ஏற்படுகின்ற ஒரு ஆபத்தான நிலை இருந்துகொண்டு இருக்கிறது. அந்தப் பாலத்தை கட்டுவதற்கு மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து கொண்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். காலதாமதம் ஏற்படுமேயானால், பாலம் உடைந்து, திருவனந்தபுரம், நாகர்கோவில் போன்ற முக்கியமான இடங்களுக்கு தினமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலவகையான வாகனங்கள் செல்வதற்குத் தடை ஏற்பட்டுவிடும். குழித்துறை ஆற்றுப் பாலத்தின் அருகில் ஒரு நடைபாதை முன் காலங்களில் போக்குவரத்து வசதிக்காகச் செயல்பட்டு வந்தது. அதை அந்தப் பகுதி மக்கள் குழித்துறை சப்பாத்திப் பாலம் என்று கூறுவார்கள். அது இப்போது பழுதடைந்து போக்குவரத்துக்கு வழியில்லாமல் பாதிக்கப்பட்டு இருப்பதால் உடனடியாக அந்தச் சப்பாத்திப் பாலத்தைச் சரி செய்து ஒரு மாற்றுச் சாலையாகப் போட்டு போக்குவரத்து வசதிக்காக அதைப் பயன்படுத்தலாம். குழித்துறையில் இருக்கின்ற ஆற்றுப் பாலத்தில் விபத்து ஏற்பட்டால்கூட ஒரு மாற்றுச் சாலையாக அதைப் பயன்படுத்த முடியும். அதை உடனடியாகச் சரி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை இந்த மாமன்றத்தில் உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி அந்தப் பணி ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? கன்னியாகுமரிக்குப் போகப் போகிறீர்களா எல்லோரும்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. பாலம் என்றால், எல்லாப் பாலங்களைப் பற்றியும் கேட்கக் கூடாது.

வினா எண் 231, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 26

231—

**பாசனக்குளச் சங்கம்**

***971—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் மாவட்டம், வெள்ளியணை ஊராட்சியிலுள்ள பொதுப் பணித் துறையின் பாசனக்குளச் சங்கம் சரிவர இயங்காததால் அச்சங்கத்தினை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம், வெள்ளியணை ஊராட்சியிலுள்ள வெள்ளியணை ஏரிப் பாசனக்குளச் சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் குல விளக்கே, விவசாயிகளின் நலனை தன் நலனாகக் கொண்டிருக்கும், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். குடகனாறு அணையில் இருந்து வரும் தண்ணீருக்கு திண்டுக்கல் மாவட்டத்திற்கு மட்டும் பாசன உரிமை வழங்கப்பட்டு உள்ளது. வெள்ளக் காலங்களில் மட்டும் கரூர் மாவட்டத்திற்குத் திறந்து விடப்படுகிறது. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசிடம் விவசாயிகளின் நலனைக் கருதி, இப்போது மழை இல்லாத காரணத்தினால் கரூர் மாவட்டத்தில் வெள்ளியணைப் பகுதிக்கு குடிநீருக்கும், பாசனத்திற்கும் தண்ணீர் திறந்துவிட திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தண்ணீர் திறந்துவிட முடியுமா என்று கேட்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வெள்ளியணை ஏரி பாசனக்குளச் சங்கத்தைப்பற்றித்தான் கேள்வி விடுத்து இருந்தார்கள். இப்போது ஏரிக்குத் தண்ணீர் விடவேண்டும் என்று கோருகிறார்கள். அவர் அதற்குத் தனி வினா கொடுத்தால் விடையளிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2002 ஏப்ரல் 26]

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 232, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

232—

**வாக்காளர் பட்டியல்**

***637—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் நிறைய வாக்காளர்கள் பெயர் விடுபட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் 2001-ன் போது இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியபடி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களில் இடம் பெற்றுள்ள வாக்காளர்களில் இறந்தவர்கள், நிரந்தரமாக இடம் பெயர்ந்து சென்றவர்கள் ஆகியோரின் பெயர்களை நீக்கம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான உரிய விசாரணைக்குப் பிறகு அவ்விதம் இறந்த மற்றும் தொகுதியை விட்டு இடம் மாறிய 47,857 வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யப்பட்டன என்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

தற்போது 1-1-2002-ஐத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலில் தீவிர முறையில் சிறப்புத் திருத்தம் செய்யுமாறு இந்திய தேர்தல் ஆணையம் பணித்துள்ளது. இதற்கான விரிவான கால அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் வகுத்துள்ளது. அந்த அடிப்படையில் 1-1-2002 ஆம் நாளன்று வாக்காளர் பட்டியலில்

[2002 ஏப்ரல் 26

முதன்முறையாகச் சேர்க்கப்படத் தகுதியான வாக்காளர்கள் மற்றும் பட்டியலில் விடுபட்டுள்ள வாக்காளர் பெயர்கள், அந்தப் பகுதிக்குக் குடிபெயர்ந்துள்ள வாக்காளர் பெயர்கள் ஆகியவற்றைப் பட்டியலில் சேர்ப்பதற்கும், இறந்த மற்றும் குடிபெயர்ந்து வேறு தொகுதிக்குச் சென்றுள்ள வாக்காளர்களின் பெயர்களை நீக்கம் செய்யவும் இந்தியத் தேர்தல் ஆணையம் வகுத்த கால அட்டவணைப்படி வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணி *5-11-2001* முதல் *11-12-2001* வரை நடைபெற்று, தற்போது அதனுடைய இறுதிப் பட்டியல் *25-4-2002*-லே வெளியிடப்பட்டுள்ளது.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே விடுபட்ட வாக்காளர்கள் இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கும் அரசினுடைய நடவடிக்கைக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த சட்டசபைத் தேர்தலிலே புகைப்பட அடையாள அட்டை இருந்தும் இலட்சக் கணக்கான வாக்காளர்கள் பல்வேறு சட்டமன்றத் தொகுதிகளிலே விடுபட்டிருந்தார்கள் என்பதை இந்த நாடே அறியும். அதுமட்டுமல்லாமல், பல்வேறு இடங்களில் வாக்காளர் பட்டியலுக்கும், புதிய கதவு எண்களுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே, தமிழக அரசு இந்த வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை நீக்கி புதிய வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க முன்வருமா என்பதையும், புதுக்கோட்டை மாவட்டத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கேற்ப *1-1-2002*க்குப் பிறகு புதிதாகச் சேர்க்கப்பட்ட வாக்காளர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிற கணக்கெடுப்புக்கூட சென்ற ஆண்டுக்கு முன் year before last year இருந்த குறைபாடுகளைக் களைந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுதான் ஆகும். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் முன்பு *10, 46, 778* என்று இருந்த அந்த எண்ணிக்கை, தற்போது புதிய வாக்கெடுப்புக்குப் பிறகு *11, 13, 407* ஆக உயர்ந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.



2002 ஏப்ரல் 26]

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தினுடைய ஆணி வேரே இந்த வாக்காளர்கள்தான். முதல் கோணல் என்று சொன்னால், அது முற்றிலும் கோணலாகச் சில நேரங்களிலே அமைந்து விடுவது உண்டு. காரணம், இந்த வாக்காளர்களை ஆசிரியப் பெருமக்கள்தான் சேர்க்கிறார்கள். அவர்கள் பள்ளிக்குச் சென்று பாடம் கற்பித்த நேரம் போக மீதம் எஞ்சியுள்ள நேரங்களில்தான் சேர்க்கிறார்கள். அதனால்தான் வாக்காளர் பெயர்கள் விடுபடுகின்ற பிரச்சினை எல்லாம் ஏற்படுகிறது. எனவே, கிராம நிர்வாக அலுவலர்கள் அல்லது வருவாய்த்துறை அலுவலர்களை வைத்து இந்த வாக்காளர்களைச் சேர்க்கின்ற பணியினைச் செய்ய இனிமேலாவது இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்திய தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்களுடைய ஒப்புதலும் பெறப்பட்ட பிறகுதான் இதை நடைமுறைக்குக் கொண்டுவர முடியும். காரணம், இந்த வாக்காளர்கள் ஆய்வைப் பொறுத்தவரைக்கும் இது மாநில அரசினுடைய பணி அல்ல. இது மைய அரசினுடைய பணி. இதிலே குளறுபடிகள், குறைபாடுகள் இருந்ததை ஏற்கெனவே இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அரசு சுட்டிக்காட்டியுள்ளது; எடுத்துரைத்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்ந்து பரிசீலிக்க, இந்திய தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களை வைத்து இந்த வாக்காளர் பட்டியலைத் திருத்துவதைவிட, ஒவ்வொரு கிராமங்களிலேயும் அஞ்சல் அலுவலகங்கள் இருக்கின்றன, அந்த அஞ்சல் அலுவலகங்களில் வேலை பார்க்கின்ற தபால் ஊழியர்கள் எல்லா வீடுகளுக்கும் நாள்தோறும் போய் வருகின்ற காரணத்தினால், அவர்களை வைத்து, இந்த வாக்காளர் பட்டியலைச் சரி பண்ணுவது என்பது ஒரு சிறந்த முறையாக இருக்கும். இதை நம்முடைய தமிழக அரசு தேர்தல் ஆணையத்திற்குச் சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தபால் பட்டுவாடா செய்ய ஆள் இல்லாத ஒரு நிலை, இந்த ஆலோசனையை நடைமுறைப்படுத்தும்போது ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. மைய அரசு இதுகுறித்து ஆக்கப்பூர்வமான நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதுதான் மாநில அரசினுடைய நோக்கம். பல்வேறு ஆலோசனைகளை இது குறித்து இந்திய தேர்தல் ஆணையத்திற்கு மாநில அரசு தெரிவித்திருக்கிறது. தொடர்ந்து தெரிவிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் சேர்ப்புப் பணி என்பது, ஜனநாயகத்தின் அளவுகோலாக இருந்தாலும்கூட, சென்ற தேர்தலின்போது என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 15 ஆயிரம் வாக்காளர்களுக்கு identity card--அடையாள அட்டை--இருந்தும், ரேஷன் கார்டு இருந்தும் வாக்களிக்க முடியாத சூழ்நிலை இருந்தது. இனி வருங்காலங்களில் அதுபோல் தொடராத வண்ணம், ஏதேனும் ஒரு identity card இருந்தால் அவர்களுக்கு வாக்களிக்கக்கூடிய உரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய ஆலோசனை உட்பட பல ஆலோசனைகள் மைய, இந்திய தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது நல்ல ஆலோசனை. எதிர்காலங்களில் அதை நடைமுறைப்படுத்துகிறபோது வாக்காளர்களுடைய இன்னல் குறையும் என்ற நம்பிக்கையில் இதுகுறித்து இந்திய தேர்தல் ஆணையத்தை, தொடர்ந்து மாநில அரசு வலியுறுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய கேள்வியைத் தொடங்குகின்றேன். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் இருந்ததுபோலவே இப்போதும் வாக்காளர் புதிய கணக்கெடுப்பு எடுத்தது முறையாக எடுக்கப்படவில்லை. என்னவென்று கேட்டால், ஆசிரியர்கள் காலையில் 9-00 மணிக்கு





வருகிறார்கள், சாதாரணப்பட்ட மக்களெல்லாம் வேலைக்குச் சென்று விடுகிறார்கள். ஆகவே முறையாகக் கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை. கடந்த தேர்தலில் 46 ஆயிரம் வாக்காளர்கள் ஈரோடு தொகுதியில் விடுபட்டிருக்கிறார்கள். அதே நிலைதான் இப்போதும் இருக்கிறது. இதைச் சரிசெய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-11-2001 முதல் 11-12-2001 வரை புதிய வாக்காளர் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையிலே தற்போது 25-04-2002-லே அந்தப் புதிய பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது. மீண்டும் இதிலே குளறுபடிகள், குறைகள் இருந்தால் அதை நிவர்த்தி செய்வதற்கு இந்திய தேர்தல் ஆணையத்திற்கு மாநில அரசு தெரிவிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் குறைகள் இருந்தால், கண்டுபிடித்துச் சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் பதிவு செய்வதற்கு ஏற்கெனவே புகைப்படம் எடுக்கப் பட்டுள்ளது. அப்படிப் புகைப்படம் எடுக்கப்பட்டபோதுகூட வாக்காளர் பட்டியலிலே பெயர்கள் விடுபட்டிருந்தன. ஆகவே புகைப்படம் எடுத்தவர்களெல்லாம் வாக்களிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, ஆசிரியர்களை வைத்துக் கொண்டு வாக்காளர்களைப் பதிவு செய்வதால், சிலர் வேலைக்குச் சென்ற பின்னால் சரியாகக் கணக்கெடுக்க முடியாமல் அந்த ஆசிரியர்கள் சில சமயங்களில் மாணவர்களை வைத்துக் கொண்டே கணக்கெடுப்பு எடுத்துவிட்டு வந்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன. Revenue துறை மூலமாக அந்தத் தேர்தலை முழுமையாக நடத்துகிறார்கள். அந்த வகையிலே Revenue துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகளை வைத்துக்கொண்டு இந்த வாக்காளர் பட்டியலைப் பதிவு செய்வதற்குத் தேர்தல் ஆணையத்திற்கு மாநில அரசு வலியுறுத்துமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகைப்பட அட்டை இருந்தும் வாக்காளர் பலர் இடம் பெறாத ஒரு வேதனையான சூழ்நிலை கடந்த காலங்களில் ஏற்பட்டது உண்மைதான். இதைப் போக்குவதற்கு என்னென்ன அணுகுமுறைகளை

மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய தேர்தல் ஆணையத்திற்கு மாநில அரசு தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் உண்மையிலேயே நாம் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் Revenue authorities-ஐ மட்டும் வைத்து இந்தப் பணியைச் செய்ய முடியுமா என்றால் முடியாத காரியம். எனவே, எந்தவிதத்தில் இந்தக் குறைபாடுகள் எதிர்காலங்களில் இல்லாமல் மேற்கொள்ளலாம் என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனைகளையெல்லாம் ஆய்ந்து மத்திய தேர்தல் ஆணையத்திற்கு அரசு அறிவிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாக்காளர் புகைப்பட அட்டையைப் பெற்றவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலேயிருந்து விடுபட்டிருக்கக்கூடிய சூழ்நிலை கடந்த காலத்திலிருந்து தொடர்ந்து வருகிறது. இதை நாம் எல்லோரும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். சாதாரண அடித்தட்டு மக்களிலேயிருந்து முக்கியமானவர்களின் பெயர்கள்கூட விடுபட்டிருக்கின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே வரக்கூடிய காலகட்டங்களிலே இதை அரசு சீர்செய்ய வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை வைக்கின்ற அதேநேரத்திலே--இப்போது இடைத் தேர்தல் நடைபெறக்கூடிய நேரம். இந்த நேரத்திலே--புகைப்பட அட்டை இல்லாதவர்கள் எந்தெந்த ஆவணங்களை வைத்து வாக்களிக்கலாம் என்ற ஒரு விதிமுறையை--ஆவணங்களையெல்லாம் தேர்தல் ஆணையம்-- முன்கூட்டியே சொல்லவேண்டும். இறுதி நேரத்தில் சொல்லுவது என்பது வாக்காளர்கள் வாக்களிக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தி விடுகிறது. அந்தக் காரணத்தினாலே புகைப்பட அட்டை இல்லாதவர்கள் எந்தெந்த ஆவணங்களை வைத்து, யாருடைய சான்றிதழைப் பெற்று வாக்களிக்க முன்வரலாம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Post office-ல் Savings Certificate இருந்தால்கூட, பணம் டெபாசிட் செய்திருந்தால்கூடப் போதும் என்று பத்து பதினைந்து வழிமுறைகளைத் தேர்தல் ஆணையம் தெரிவித்திருக்கிறது. இதைச் சென்ற ஆண்டே தெரிவித்துவிட்டார்கள். இதுதான் தற்போது நடைமுறையில் இருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் வாக்காளர் பட்டியல் தயார் செய்வதில் அரசுக்குப் பல கோடி ரூபாய் செலவு ஏற்படுகிறது. ஆனால், தமிழகத்தில் இருக்கிற குறிப்பிட்ட வாக்காளர்கள் மட்டும் எந்தத் தேர்தல் வந்தாலும் அதில் வாக்களிக்கிறார்கள். சிலர் வாக்களிப்பதையே மறந்து, வருவதே கிடையாது. அப்படித் தொடர்ச்சியாகத் தேர்தல் காலங்களில் வாக்களிக்க வராமல் இருக்கக்கூடியவர்கள்மீது ஏதாவது ஒரு நிபந்தனை வைத்து, இரண்டு மூன்று தேர்தல்களில் தொடர்ச்சியாக வாக்களிக்காதவர்களுக்கு இந்த நாட்டினுடைய குடியுரிமை ரத்து செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்கே கொண்டுபோய்த் தள்ளுவது அவர்களை? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, As on date, there is no law to take action against this.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் பட்டியலில் பெயர் விட்டுப்போய்விட்டது என்பது தேர்தல் தோன்றிய காலத்திலிருந்து எல்லா நிலையிலும் சொல்லப்பட்டு வருகின்ற ஒரு குற்றச்சாட்டாகும். கடந்த தேர்தலில்கூடப் பார்த்தால், புதிதாகத் திருமணம் செய்துகொண்ட மனைவிக்கு வாக்குரிமை இருந்தது. காலங்காலமாக இருந்த கணவனுக்கு அங்கே வாக்குரிமை இல்லாத ஒரு நிலை காணப்பட்டது. ஒரு சில வாக்குச்சாவடியின் முன்பு, தேர்தலிலே வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட நாங்கள் செல்கின்ற நேரத்தில், அந்த வாக்குப் பதிவு அதிகாரியிடத்தில் பெரிய அளவிலே ரகளையில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்தோம். புதிதாக வந்த மனைவிக்கு வாக்குரிமை இருக்கிறது; காலங்காலமாக இருந்து வந்த எனக்கு வாக்குரிமை இல்லையே என்று அந்தக் கணவனால் ரகளைகூட ஏற்பட்ட நிலைமை உண்டு. என்னதான் ஒரு அரசாங்கம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே என்ன.....(குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** கேள்விதான், கேள்விதான். அரசாங்கம் முழு அளவிலே.....

[2002 ஏப்ரல் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணவனுக்கும் கொடுக்கச் சொல்வோம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** வாக்காளர்களாகப் பதிவு செய்ய முற்பட்டாலும் வாக்குரிமை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணவனுக்கும் கொடுக்கச் சொல்வோம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அடைந்தவர்கள் நிச்சயமாக வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்ற ஒரு நிலையினை ஏற்படுத்த மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த ஒரு சட்டம் கொண்டுவர மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முயல்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையத்தினுடைய விதிமுறைகள், அறிவுரைகள் ஆகியவற்றிலுள்ள சந்து பொந்துகளைப் பயன்படுத்தி இப்படிப்பட்ட கணக்கெடுப்பு நடைபெறுகிறபோது பல தவறுகள், குறைபாடுகள், தளறுபடிகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இவற்றை நீக்குவதற்கு Fool-proof system என்று சொல்கிற அளவிற்கு ஒரு தரமான வாக்காளர் கணக்கெடுப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று மைய தேர்தல் ஆணையத்தை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆலோசனைகளுக்கெல்லாம் இந்த அரசு முக்கியத்துவத்தைத் தந்து கட்டாயம் எதிர்காலத்தில் இதுபோன்ற குளறுபடிகள் இல்லாமல் நல்லமுறையில் இந்தக் கணக்கெடுப்பை நடத்துவதற்கு என்னென்ன ஆக்கப்பணிகளை மேற்கொள்ளவேண்டுமோ அவற்றை மேற்கொள்ள மைய தேர்தல் ஆணையத்திற்கு மாநில அரசு தெரிவிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாக்காளர் பட்டியல் எடுக்கிற பணியினை மற்றத் துறைகளைவிட அந்தந்த உள்ளாட்சித் துறைகளிடத்திலே ஒப்படைத்து குறைந்த அளவு காலஅவகாசம் கொடுத்தால்கூட சிறந்த முறையில் நடைபெறும். அந்தந்த உள்ளாட்சித் துறையிலே இருக்கிறவர்கள் அந்தந்த ஊரிலே இருக்கிற மக்களை அறிந்தவர்கள், எல்லாக் குடும்பங்களையும் தெரிந்தவர்கள் என்ற வகையில் அவர்கள் செலவு செய்கின்ற பணத்தை



2002 ஏப்ரல் 26]

மத்திய அரசு கொடுத்துவிடுவார்களேயானால், உள்ளாட்சித் துறையில் ஒப்படைத்தால், இந்தப் பணி மிகச் சிறந்த முறையிலே நடக்கும். எனவே, அப்படி உள்ளாட்சித் துறையின்மூலம் வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்கு மைய அரசை இந்த அரசு வற்புறுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை தனித்து அல்ல, உள்ளாட்சித் துறையினையும் பயன்படுத்தி இதை எப்படிச் செம்மைப்படுத்துவது என்பது குறித்து அரசு ஆயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் பட்டியலை ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் எடுக்கின்ற காலங்களிலே பல்வேறு சிரமங்கள் வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைத் தனியார் consultancy மூலம் கொடுத்து தவறுகள் இல்லாமல் செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களே தவறு செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறபோது, தனியார் துறைக்குப் பொறுப்பை ஒப்படைக்க மைய தேர்தல் ஆணையம் முன்வருமா என்பது கேள்விக்குரிய ஒன்று என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா வினாக்களுக்கும் சிறப்பான பதிலைத் தந்தார்கள். தமிழ்நாட்டில் அதிக அளவிலே வேலையில்லாத படித்த இளைஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் இந்தத் துறையிலே வைத்தால் சிறப்பாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு. நமது அரசு மத்திய அரசிற்கு இதை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசுக்கு மாநில அரசு எழுதவிருக்கின்ற ஆலோசனைகளில் இதையும் சேர்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் கணவன் பல ஆண்டு காலமாக இருந்தும் அவருக்கு ஓட்டு இல்லை, ஆனால் மனைவிக்கு ஓட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருந்தால்கூடப் பரவாயில்லை. கணவனையும், மனைவியையும் வேறு, வேறு மதமாக மாற்றிக்கூட கடந்த தேர்தலிலே போட்டிருந்தார்கள்; முஸ்லீமாக உள்ளவரை ஒரு இந்துவிற்கும், இந்துவாக உள்ளவரை ஒரு முஸ்லீமிற்கும்; இப்படி அதை அதிகாரப்பூர்வமாகக்கூடக் காட்டிப் பேசிய கூட்டங்கள் எல்லாம் உண்டு. அப்படி எல்லாம் மாறாமல்—அந்த card அப்படி போட்டு அடித்திருந்தார்கள்—அப்படி கடந்த காலத்திலே இருந்ததுபோல இல்லாமல், வருகிற நாட்களில் சிறப்பாக அந்த வாக்காளர் கணக்கெடுப்பு நடத்தப்படுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய குற்றச்சாட்டு உண்மையில் பல இடங்களில் நடந்துள்ளது என்பது அரசிற்குத் தகவலாக வந்திருக்கிறது. இவற்றை நாம் களைந்தாக வேண்டும். குறிப்பாக மையத் தேர்தல் ஆணையம் இதுபோன்ற அறிவுரைகளை, வழிமுறைகளை மாநில அரசுக்குத் தந்திருக்கிற போதிலும்கூட இதை நடைமுறைப்படுத்துகிற பொறுப்பு மாநில அரசு அலுவலர்கள் கையிலே இருக்கிறது. மாநில அரசு அலுவலர்கள் இதுபோன்ற பிரச்சினைகளில் எங்கெங்கு தவறு செய்தாலும் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு தற்போது ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 233, திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



233—

## பாலமடையில் மேல்நிலைப் பள்ளி

***7078—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், பாலமடை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*திருநெல்வேலி மாவட்டம், பாலமடை அரசு உயர்நிலைப் பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டால், அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.*

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணும், எழுத்தும் கண்ணெனத் தகும் என்பார்கள். கோடானுகோடி தமிழக மக்களின் எண்ணுமாய், எழுத்துமாய்த் திகழ்ந்து, கண்ணை இமை காப்பது போல் தமிழக மக்களைக் காத்து வரும் இதயதெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன். பாலமடை உயர்நிலைப் பள்ளி ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகள் அதிகமாகப் பயிலும் பள்ளி. இங்கு மாணவ, மாணவிகள் பள்ளி இறுதி வகுப்பை முடித்துவிட்டு மேல்நிலைக் கல்விக்காகத் தொலைவிடத்திலுள்ள தாழையூத்து 'இண்டியா சிமெண்ட் நிறுவனம்' நடத்தும் தனியார் மேல்நிலைப் பள்ளியில்தான் கல்வி கற்க வேண்டியுள்ளது. இதனால் பண வசதியில்லாத ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, ஏழையெளிய மாணவர்கள் மேல்நிலைக் கல்வியைத் தொடர முடியாமல் போய்விடுகிறது. ஆகவே தாயுள்ளம் கொண்ட இதயதெய்வம் அம்மாவின் அரசு பாலமடை உயர்நிலைப் பள்ளியை வருகிற நிதியாண்டிலாவது மேல்நிலைப் பள்ளியாக்கிட நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய அரசானது கிராமப்புறங்களில் பல்வேறு பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், மேல்நிலைப்*

[2002 ஏப்ரல் 26

பள்ளிகளாகவும் ஆக்குவதற்கு பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. சென்ற ஆண்டில் 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியது. இதில் சில வரைமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பார்க்கும்போது திருநெல்வேலி மாவட்டம், பாலமடை அரசினர் உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில் அரசு வகுத்துள்ள சில நெறிமுறைகளுக்கு முழுமையாக அது ஆட்படவில்லை. அதன் காரணமாகத்தான் காலதாமதம் ஆகிறது. பத்தாவது வகுப்பில் படிக்க 100 மாணவர்கள் இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 57 மாணவர்கள் தான் அந்தப் பள்ளியிலே படிக்கிறார்கள். கட்டட வசதி, விளையாட்டு வசதிக்கு 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில் 75 செண்டு அதாவது 3/4 ஏக்கர் நிலம் மட்டும்தான் உள்ளது. கட்டட வசதிகள் இருக்கின்றன, ஆனால் விளையாட்டு வசதிக்கு இடம் கிடையாது. பிறகு பொதுமக்களுடைய பங்குத் தொகை ரூ.2 இலட்சம் கட்ட வேண்டும். அது இதுவரை கட்டப்படவில்லை. அரசு வகுத்துள்ள அந்த வரைமுறைகளை எல்லாம் நிவர்த்தி செய்ய முற்பட்டார்கள் என்றால் இந்தக் கருத்துரு பற்றி இந்த ஆண்டிலே கருதப்படும், மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த கருதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 234, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**234—**

### முகாசபரூரில் மேல்நிலைப் பள்ளி

***7954—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் கல்வி மாவட்டத்திலுள்ள முகாசபரூர் அரசு உயர்நிலைப் பள்ளி எப்போது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்கண்ட பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.



2002 ஏப்ரல் 26]

முற்பகல் 10-30

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு முயற்சி எடுத்த கல்வி அமைச்சருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே முகாசபரூர் கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி 1964 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 960 மாணவ மாணவிகளை வைத்துக்கொண்டு, 13 ஆசிரியர் பணியிடங்களை வைத்துக்கொண்டு செயல்படுகிறது. அதைச் சுற்றியுள்ள சின்னபோரூர், பட்டி, தொட்டிகுப்பம், இராசபாளையம் போன்ற ஏறக்குறைய 35 கிராமங்களிலுள்ள மாணவர்கள் பாதிக்கப்பட்டு, மேல்நிலைப் பள்ளிப் படிப்பு தொடரமுடியாமல் இருக்கிறார்கள். குறிப்பாக, விருத்தாசலம் செல்ல வேண்டுமென்றால் 15 கிலோமீட்டர் செல்ல வேண்டும் அல்லது மங்கலம்பட்டி செல்ல வேண்டுமென்றால் 10 கிலோமீட்டர் செல்ல வேண்டும். அதிலும் குறிப்பாக, போக்குவரத்து வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. இதனால் மாணவிகள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகையினாலே, அவசிய அவசரம் கருதி இந்த ஆண்டிலேயே மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்படும் மொத்தக் கணக்கிலே இந்தப் பள்ளியும் கண்டிப்பாக வைக்கப்படுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகாசபரூர் உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில் 97 மாணவர்கள் 10 ஆம் வகுப்பிலே படிக்கின்றார்கள். ஆகவே, 100 என்று சொல்கிற இடத்தில் ஓரளவுக்கு அது பொருந்துகிறது. பிறகு கட்டட வசதியும், 5 ஏக்கர் நிலமும் இருக்கின்றன. அதுவும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2 இலட்சம் கட்ட வேண்டும். அதை இந்த ஆண்டு கட்டியிருந்தால் கருத்துரு பெற்ற பிறகு நடவடிக்கை எடுக்கப்படும். நிதியமைச்சரிடம் நான் இதுகுறித்து வேண்டுகோள் வைத்திருக்கின்றேன்—மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாக தங்களுடைய பகுதியிலே உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்காகவும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்காகவும் வேண்டுகோளை வைத்திருக்கின்றார்கள்—ஆகவே, அவர்களுடைய அந்த department-லே இருந்து approval கிடைத்தவுடன் எவ்வளவு கல்வி நிலையங்களை உயர்த்துகிறோம் என்பதற்குட்பட்டு அதற்கேற்றாற்போலச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 26

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ரூ.2 இலட்சத்திற்குண்டான ஏற்பாடுகளை நான் செய்யத் தயாராக இருக்கின்றேன். அமைச்சர் அவர்கள் கூறியதுபோல அந்த நிலம் 8 ஏக்கர் 4 செண்ட்டுகள் உள்ளன. அதைவிட குறிப்பாக, பழமொழி 'கோவில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம்' என்பது. ஆனால், புதுமொழி 'பள்ளிக்கூடம் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம்' என்பது. அதன்படி விருத்தாசலம் ஒன்றியத்திலே காணாதுகண்டான், எம். கொட்டாரகுப்பம் ஆகிய இரண்டு ஊர்களிலும் மக்கள்தொகை 650, 750 இருந்தும் பள்ளிகளே இல்லையென்ற குறை இருக்கிறது. அதையும் இந்த அரசு கவனிக்குமா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூ. 2 இலட்சம் பங்குத் தொகை கட்டுவதற்கு முன்வந்தது மிகவும் பாராட்டத்தக்கது, வரவேற்கத்தக்கது. அதை மனதார வரவேற்கிறேன். அடுத்ததாக, அவர் சில கிராமங்களில் கல்வி நிலையங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அரசால் இந்த ஆண்டு எல்லாக் கிராமங்களிலும், எங்கெங்கு மாணவர்கள் சேர வாய்ப்பு இருக்கிறதோ, ஒரு கிலோமீட்டருக்குட்பட்ட இடங்களில் பள்ளி இல்லாவிட்டால், அதைச் செயல்படுத்த திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே அந்தப் புள்ளிவிவரம் தரும்போது அதைக் கருத்தில்கொண்டு அந்தப் பகுதியிலே ஆரம்பப் பள்ளிக்கூடத்தைத் திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நான் 27-08-2001 அன்று முதல்வர் தனிப் பிரிவுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும், கல்வி அமைச்சருக்கும் கடிதம் எழுதினேன். அதுசம்பந்தமாக மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம், புதுக்கூரப்பேட்டையிலிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அவர்கள் இதற்குச் சாதகமாக பதில் அளித்திருக்கிறார்கள். இந்த இரண்டு கிராமங்களிலும் கண்டிப்பாகத் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்தான் சொன்னேனே இந்தத் தொடக்கப் பள்ளி



2002 ஏப்ரல் 26]

ஆரம்பிப்பதில் எந்தவிதத் தடையும் கிடையாது. இந்த அரசான தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்று ஒலிபெருக்கி இணைப்பைத் துண்டித்துவிட வேண்டாம் என்று தயவுகூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இது முகாசபரூர் சம்பந்தப்பட்ட விஷயம் இல்லை. அரூர் அருகே ஈச்சம்பட்டி என்கிற ஒரு கிராமத்தில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக அரசு தரம் உயர்த்தி, அதற்கெனத் தனியே இடம் ஒதுக்கிக் கட்டடமும் கட்டித் தந்திருக்கிறது. ஆனால், அந்த இடத்திற்கு பள்ளியை மாற்றக் கூடாது என்று கிராமத்து மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள். அதற்குக் காரணம் அந்த இடமும், அந்தக் கட்டடமும் ஆதிதிராவிடர்கள் வசிக்கின்ற பகுதியையொட்டி இருப்பதனால் அங்கே பள்ளிக்கூடத்தை மாற்றக்கூடாது என்று தொடர்ந்து பிரச்சினை வந்துகொண்டிருக்கிறது. இதை அரசின் கவனத்திற்குப் பலமுறை எடுத்துச் சொல்லியும் நடவடிக்கை இல்லை. ஆகவே, அதுசம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பல கிராமங்களில் இப்போது பார்த்த பள்ளிகள் எல்லாம் ஆதிதிராவிட மக்கள் பகுதியில்தான் இருக்கின்றன. அந்தக் கிராமத்தில் ஏதோ பிரச்சினை வந்திருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசு பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பாண்டுரங்கன்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தொடர்ந்து 10 ஆண்டுகளாக 100 சதவிகிதம் தேர்ச்சிபெற்றிருப்பின் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு இருப்பின், அதற்கு நடப்புக் கல்வியாண்டில் முன்னுரிமை அளிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 26

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 100 சதவிகிதம் மாணவர்கள் வெற்றி பெற்றிருக்கின்றார்கள், தேர்ச்சி பெற்று இருக்கின்றார்கள்; ஆகவே, அதற்கு முன்னுரிமை தரப்படுமா என்று கேட்கின்றார்கள். எந்தப் பள்ளி என்று சொல்லவில்லை. இருப்பினும், பொதுவாகச் சொன்னால்கூட அத்தகைய பள்ளிகளில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்றாலும் அரசின் நெறிமுறைகளான, 100 மாணவர்கள் இருக்க வேண்டும், பள்ளிக் கட்டடம் இருக்க வேண்டும், இடம் இருக்க வேண்டும், இப்படியெல்லாம் இருந்தால், அவற்றிற்கு முன்னுரிமை தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்களுக்குக் கொடுத்த அதே வாய்ப்பை எனக்கும் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, திருவள்ளூர் மாவட்டத்திலே விடையூர் என்கிற கிராமத்திலே நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டு கிராம மக்கள் சார்பாக அதற்குரிய பணம் கொடுக்கப்பட்டு, 5 ஏக்கர் நிலமும் வழங்கப்பட்டு இருக்கிறது. ஐந்தாண்டு காலமாகியும், இதுவரையில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தவில்லை. அதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அமைச்சரிடம் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்லாமல் மற்ற எல்லா உறுப்பினர்களும், இதேபோல வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். பொதுவாகச் சொல்லுகின்றேன். அரசினுடைய நிதிநிலைமையைப் பற்றித்தான் இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறோம். நிதிநிலைமை சரியாக இருந்தால் எவ்வளவு பள்ளிக்கூடம் தரப்படுமோ அவ்வளவையும் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அது நிதிநிலைமையைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 235, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 26]

**235—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***1796-திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மேற்கு ஒன்றியம் பெரியபட்டி பஞ்சாயத்தில் காஞ்சரம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): காஞ்சரம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. போதிய இடவசதி இல்லாததால், படுக்கை வசதிகள் செய்யப்படவில்லை.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், காஞ்சரம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. பொதுமக்களின் நலன் கருதி மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இதற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் பெறப்படுவதிலே காலதாமதம் ஆன காரணத்தினால் தான் அங்கே கட்டடம் கட்டிக் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்பட்டது. ஆனால், இப்போது நிலம் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று சொன்னால் ரூபாய் 15.40 இலட்சம் தேவைப்படுகிறது. அதற்கான திருத்திய மதிப்பீட்டுடன் முன் மொழிவு அனுப்பப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது. அதற்கான திருத்திய நிருவாக ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் அங்கே கட்டடம் கட்டப்படும்

[2002 ஏப்ரல் 26

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்னம்பலம்.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சரம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்திருப்பது மதுரை மேற்கு ஒன்றியத்தின் மையப் பகுதியாகும். இப்பகுதியில் ஆதிதிராவிடர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்னம்பலம், கட்டடம் கட்டப்படும் என்கிறார், மந்திரி.

**திரு. ப. பொன்னம்பலம்:** அதற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 236, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**236—**

**பரிசோதனைக் கூடம்**

***3938—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் மற்றும் குளிர்சாதன வசதியுடன் பிணவறை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அவினாசி அரசு மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுடன் பிணவறை அமைத்துத் தருவதற்கான திட்டம் அரசிடம் தற்போது இல்லை. இருந்தாலும், இது தாலுக்கா மருத்துவமனையாக



2002 ஏப்ரல் 26]

இருப்பதால், பிரேத பரிசோதனைக் கூடம் அமைக்க அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு அது தற்போது நடவடிக்கையில் இருந்து வருகிறது.

முற்பகல் 10-40

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் குடும்பத்தின் குலதெய்வமாகவும், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராகவும் விளங்கிக் கொண்டிருக்கும் எங்கள் இதயதெய்வம், ஜனநாயகத்தில் எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் உண்டு என்பதை வித்திட்டுக் காட்டிய எங்கள் இதயதெய்வம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை நோக்கி எனது பணிவான வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். நான் மத்திய ரிசர்வ் காவல் படையில் 1993 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை பணியாற்றிய காரணத்தினால், நேற்றையதினம் காவல்துறை மானியக் கோரிக்கையின்போது நல்ல பல திட்டங்களை அறிவித்து, இந்தியாவிலேயே சிறந்த காவல் துறையாக உருவாக்கிட வழிவகை செய்த எங்கள் காவல் தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதிக்குட்பட்ட அவினாசி அரசு மருத்துவமனையில் இதுநாள்வரை பிரேத பரிசோதனைக் கூடம் மற்றும் பிணவறை வசதி இல்லாத காரணத்தினால் சாலை விபத்து மற்றும் பிற காரணங்களினால் மரணமடைந்தவர்களின் சடலங்களை அதிகத் தொலைவில் உள்ள திருப்பூர் அல்லது கோவை அரசு மருத்துவமனைகளுக்கு எடுத்துச் சென்று, அங்கே பிரேத பரிசோதனை செய்து முடித்து, பின்னர் எடுத்து வந்து அடக்கம் செய்ய வேண்டியுள்ளது. இதனால் ஏழை எளிய மக்களாக இருப்பவர்கள் படுகின்ற துன்பங்கள் வார்த்தைகளால் சொல்ல இயலாது. எங்கள் தாய் கேட்காமலேயே அள்ளிக்கொடுக்கும் உயர்ந்த உள்ளம் படைத்தவர். ஆகவே, எனது தொகுதி மக்களின் நலன் கருதி நடப்பு நிதியாண்டில் அவினாசி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் மற்றும் குளிர்சாதன வசதியுடன் பிணவறை அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 26

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி மருத்துவமனை என்பது ஒரு வட்டார மருத்துவமனை. தற்போது பிரேத பரிசோதனை செய்யப்படவேண்டும் என்று சொன்னால், அங்கிருந்து உடல்கள் திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவமனைக்குத்தான் எடுத்துச்செல்லப்படுகின்றன. எனவே, இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, வருவாய்த் துறையின்மூலம் இப்போது 5 சென்ட் நிலம் மருத்துவத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 4.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பிரேத பரிசோதனைக் கூடம் அமைப்பதற்கான முன்மொழிவு அரசுக்கு அனுப்பப்பட்டு, தற்போது பரிசீலனையில் இருந்து வருகிறது. எனவே, அவினாசி மருத்துவமனை வளாகத்திலே உடனடியாகப் பிரேத பரிசோதனைக் கூடம் கட்டுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 237, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

237—

**குடிநீர் வழங்கல்**

***1042—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் வளாகப் பகுதியிலுள்ள அடுக்குமாடிக் கட்டடத்தின்மீதுள்ள குடிநீர்த் தொட்டிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி முறையாகக் குடிதண்ணீர் வழங்குவதில்லை என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் வளாகத்திலுள்ள அடுக்குமாடிக் கட்டடத்தின்மீதுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சியால் நேரடியாகக் குடிநீர் வழங்கப்படுவதில்லை. இந்த வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கீழ்நிலை நீர்த்



2002 ஏப்ரல் 26]

தேக்கத் தொட்டிகளில் இருந்து, குடிநீர், மோட்டார்மூலம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு ஏற்றப்பட்டு, வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிமூலம் தண்ணீர் ஏற்றுகின்ற பொறுப்பு வீட்டுவசதி வாரியத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஸ்கோர்ஸ் பகுதி என்பது கோவை மாநகராட்சியினுடைய 26-வது வார்டில் உள்ளது. அங்குள்ள D.F.O. Compound-லே அரசு அலுவலர்கள் நிறையப் பேர் வாழ்ந்து வருகிறார்கள். இது வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம். அங்கே வாக்குச் சேகரிக்கச் சென்றபோது, மூன்றாவது மாடியிலிருந்து கருவுற்ற பெண்கள் கீழே வந்து எங்களால் தண்ணீர் எடுத்துச் செல்ல முடியவில்லை என்று தங்களுடைய துன்பத்தை, துயரத்தை என்னிடத்திலே சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் செலவிலே அந்தப் பகுதியிலே மேல் மாடியிலே சின்டெக்ஸ் tanks பொருத்தப்பட்டிருக்கின்றன. நான் இப்போது தங்கள் மூலமாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் அந்த மாடியிலே பொருத்தப்பட்டிருக்கிற சின்டெக்ஸ் tanks-க்கு மாநகராட்சி நேரடியாகக் குடிநீர் வழங்காவிட்டாலும்கூட, அந்த tanks-க்குச் செல்ல வேண்டிய தண்ணீரைக் கீழ்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு முறையாக வழங்கினால், அதன்மூலமாக அங்கிருந்து அந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு எடுத்துச் செல்ல வசதியாக இருக்கும். எனவே, என்னுடைய கோரிக்கையெல்லாம் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தேவையான அளவிற்குக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதுதான். இதனைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற, குறிப்பிட்ட பகுதிக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் சுமார் 70 ஆயிரம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒருவேளை அந்த அளவு குறைவாக இருக்குமானால் அதை உயர்த்திக் கொடுப்பதற்கு மாநகராட்சிமூலம் மேல்

[2002 ஏப்ரல் 26

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியின்கீழ் கோவை மாநகர அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு பகுதிகளுக்கும் இதர பகுதிகளுக்கும் லாரிகளின் மூலமாகக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு லாரிகளுக்கு வாடகையாக மட்டும் 88 இலட்சம் ரூபாய் கோவை மாநகராட்சி செலவு செய்கிறது. இதற்குப் பதிலாக பொதுக் குழாய்களைப் பகிர்மானம் செய்து அமைத்து விட்டோம் என்று சொன்னால் தண்ணீர் நிரந்தரமாக ஜனங்களுக்குக் கிடைக்கும். இந்த வாடகைப் பணம் மாநகராட்சிக்கு, அரசுக்குச் செலவாகாது. இரண்டாவது, ஏற்கெனவே நம்முடைய ஆளுநர் உரையிலே குறிப்பிட்டது போல, 100 பேர் வாழ்கின்ற பகுதிகளில் குடிநீர் வசதி செய்து தரும் திட்டத்தின் அடிப்படையில், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு பகுதிகளுக்கும் பொதுக் குழாய்களை நிர்மாணித்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 238, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**238—**

### விளம்பரப் பலகைகள்

***3680—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் சாலையோரங்களில் அனுமதி பெற்று வைத்துள்ள பெரிய விளம்பரப் பலகைகள் எத்தனை?



2002 ஏப்ரல் 26]

(ஆ) அனுமதி இல்லாதவற்றை அகற்றிட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் சாலையோரங்களில் அனுமதி பெற்று வைத்துள்ள பெரிய விளம்பரப் பலகைகள் 598 ஆகும். அனுமதி பெறாமல் விளம்பரப் பலகைகள் வைக்கப்படுமேயானால் அவ்வப்போது மாநகராட்சியின்மூலம் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான கேள்வியாக இருக்கின்ற காரணத்தினாலே, 3, 4 துணைக் கேள்விகளைச் சேர்த்துக் கேட்க வேண்டிய அவசியத்திலே இருக்கின்றேன். அமைச்சர் அவர்களுடைய பதில் அவ்வளவு திருப்தியாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உங்களுக்கு இன்னொரு வாய்ப்பும் கொடுக்கிறேன். எல்லாவற்றையும் சேர்த்துக் கேட்காதீர்கள். இரண்டு தடவையாக உங்களைக் கூப்பிடுகிறேன்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** அப்படியானால் சரி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்த காலத்திலேயே 584 விளம்பர போர்டுகள் சென்னையில் இருந்ததாகக் கணக்கிடப்பட்டு, அவற்றை எல்லாம் அப்புறப்படுத்த வேண்டும் என்கின்ற நிலையிலே ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டபோது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை வாங்கியதாகத் தெரிகின்றது. அந்தத் தடையாணையினுடைய நிலை என்ன என்று இப்போது எனக்குத் தெரிய வேண்டும். அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிப்பாரா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தடையாணை விலக்கிக்கொள்ளப்பட்டு, அதன்பிறகு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு புதிய விளம்பரப் பலகைகளை வைப்பதற்கு யார் யார் முன் வருகிறார்கள் என்பதன் அடிப்படையில் விளம்பரம் கொடுக்கப்பட்டு,

சுமார் 3609 மனுக்கள் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. இது தொடர்பாக அரசு மேல் நடவடிக்கை மூலம் இன்னும் நல்ல வருமானம் ஈட்டக்கூடிய அளவுக்கும், அதிலே குறைபாடு இல்லாத அளவுக்கும் பாரபட்சம் இல்லாத வகையில் யார் யாருக்கு விளம்பரம் கொடுக்கலாம் என்ற சிந்தனையோடு செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 3609 விண்ணப்பங்களும் மாநகராட்சிமூலம் பெறப்பட்டுள்ளன. அரசு நல்ல ஒரு தெளிவான முடிவு கூறியதற்குப் பின்பு நீங்கள் பரிசீலனை செய்யுங்கள் என்று மாநகராட்சிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் மட்டுமல்ல, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடங்கள், Highways-க்கு சொந்தமான இடங்கள், Fisheries-க்கு சொந்தமான இடங்கள், இப்படிப்பட்ட இடங்களிலே எல்லாம் சென்னை நகரத்திலே மட்டும் இப்போது இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விளம்பரப் பலகைகள் ஒருவித size-ம் இல்லாத நிலையிலே, பாதுகாப்பற்ற நிலையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் அனுமதி பெற்றவைதானா என்று உத்தரவாதம் கொடுக்க முடியுமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். சின்னக் குடிசைகள் போடுவதாக இருந்தாலும்கூட கட்டட விதிகள் சொல்லப்படுகின்றன. மிகப் பெரிய உயரத்தில் மிகப் பளுவான இந்த போர்டுகளை வைப்பதன்மூலம், மழை நேரங்களிலும், பெரும் காற்று வீசுகின்ற நேரங்களிலும் அவை வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின்மீது விழுந்து விபத்துகளுக்கு ஆளாகி தொந்தரவுகளைக் கொடுக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் முறைப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி



மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், இல்லை. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அனுமதியில்லாமல் இருக்கின்ற விளம்பர போர்டுகளுக்கெல்லாம் நிலத்திற்கான வாடகை கொடுப்பதில்லை. விளம்பர வரி செலுத்தப்படுவதில்லை. இவற்றை முறைப்படுத்தி வசூல் செய்தால் சென்னை மாநகரத்தில் மட்டுமே ஆண்டுக்கு ரூ.10 கோடிக்கு மேலாக வருமானம் வரும். தமிழகம் முழுமையும் இருக்கின்ற பகுதிகளை எடுத்துக்கொண்டால் ரூ.100 கோடிக்கு மேலாக வருமானம் வரும். இங்கே நிதியமைச்சர் அவர்கள் இல்லை. அவர் இருந்தால் அவருடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வரவேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஆக, ரூ.100 கோடி வருமானம் வரக்கூடிய இந்த நிலையிலே இருக்கின்ற இந்த விளம்பரத்திற்கான கட்டணத்திற்கும், வரி வாங்குவதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். அதே நேரத்தில் மீண்டும் ஒரு விஷயத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த விளம்பர போர்டுகளைப் பொறுத்தமட்டிலே சென்னையிலேயும், தமிழகத்திலேயும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு வேண்டாம்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** நான் சொல்ல வருவது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவாகக் கேளுங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** பொதுவாகத்தான் சொல்கிறேன். குற்றச்சாட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** விசாரிக்க வேண்டுமென்று சொல்லத்தான் வருகிறேன். பொதுவாக, இந்தத் தகவல் முக்கியமானது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஒருவருக்கே பல்லாயிரக்கணக்கான விளம்பர போர்டுகள் வைப்பதற்கு வசதி இருக்குமானால், தவறுகளும் முறைகேடுகளும் நடந்திருப்பதாக யூகிக்க முடிகின்றது. இந்தத் தவறுகளையும் முறைகேடுகளையும் களைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியினுடைய அனுமதி பெறாமல் விளம்பரப் பலகை வைப்பவர்கள்மீதும், அவ்வாறு வைத்து, பணம் செலுத்தாதவர்கள்மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது இடங்கள் மற்றும் தனியார் இடங்களிலேயுள்ள விளம்பரப் பலகைகள்மீது முனிசிபல் சட்டம் 109(ஏ) பிரிவின்கீழ் விளம்பர வரி கட்டப்பட வேண்டும். 1985 ஆம் ஆண்டிலிருந்து இந்த விளம்பர வரி தனியார் விளம்பர நிறுவனங்களால் கட்டப்படாமல் கோடிக்கணக்கான ரூபாய் நிலுவையில் உள்ளது. இதுசம்பந்தமாக இந்த விளம்பர நிறுவனங்கள் உயர் நீதிமன்றத்திலேயும், உச்ச நீதிமன்றத்திலேயும் தடையாணைகளைப் பெற்று விடுகின்றனர். ஆகவே, இந்த விளம்பர வரியைப் பெறுவதற்கும் நிலுவையிலுள்ள வழக்குகளை முடிப்பதற்கும் அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா? 1985ஆம் ஆண்டிலிருந்து இந்த விளம்பர வரியைச் செலுத்தாதவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல அரசு நிதி நெருக்கடியில் இருக்கின்ற காரணத்தினால் விளம்பரதாரர் களிடமிருந்து இப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கைகளின்மூலம் பணம் வசூல் செய்வதற்கு வேண்டிய முயற்சியை அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அதேபோலத் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய நகராட்சிப் பகுதிகள் மற்றும் பேரூராட்சிகளிலேகூட அனுமதியில்லாமல் இப்போது நிறைய விளம்பர போர்டுகளை அவரவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த உள்ளாட்சித் துறையைச் சார்ந்தவர்கள், வந்த மாட்டையும் கட்டுவதில்லை; போன மாட்டையும் தேடுவதில்லை என்கிற நிலையில்தான் தமிழகம் முழுவதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே சில பிரம்மாண்டமான போர்டுகள் சிறிய காற்று, புயல் வந்தாலே கீழே விழுந்து பெரிய அபாயத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. சில பேருந்து நிலையங்களுக்குப் போனால், பேருந்து நிலையம் எங்கு இருக்கிறது என்று கண்டுபிடிக்கவே முடியவில்லை. காரணம், சுற்றி, பெரிய பெரிய பிரம்மாண்டமான போர்டுகள் இருக்கின்றன. இப்படி அனுமதி இல்லாமல் இருக்கக்கூடிய இந்த பெரிய பெரிய விளம்பர போர்டுகளை எல்லாம் உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அலுவலர்களுக்கு உத்தரவிடுவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் கடந்த காலங்களில் வேண்டுமானால் இருந்திருக்கலாம். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு யாரும் அனுமதி பெறாமல் வைக்கக்கூடாது என்றும் ஏற்கெனவே அனுமதியின்றி வைத்தவர்களும் பணம் செலுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே நான் கூறியதுபோல் இன்னும் கடுமையான சட்டத்தின் மூலமாக அல்லது விரைவான நடவடிக்கையின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தை அரசு தீவிரமாகச் செயல்படுத்துவதற்கு, நடைமுறைப்படுத்துவதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே 598 விளம்பர போர்டுகள்

சென்னை மாநகராட்சியின் அனுமதியோடு வைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அப்படி வைக்கப்பட்டிருக்கின்ற விளம்பரப் பலகைகள் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவிலே வைக்கப்பட்டுள்ளனவா என்பதை ஒரு குழுவின் மூலம் அமைச்சர் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன், சமீபத்தில் இந்திய தணிக்கைத் துறை அதிகாரி அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே இரயில்வே லைனில் வைக்கப்பட்டிருக்கும் 173 விளம்பர போர்டுகளுக்கு கடந்த 4 ஆண்டு காலமாக வரி வசூலிக்கப்படாததால் சென்னை மாநகராட்சிக்கு ரூபாய் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகை நிலுவையில் உள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதுகுறித்து சென்னை மாநகராட்சி எடுத்திருக்கின்ற நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு அறிவிக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூபாய் 50 இலட்சம் என்று குறிப்பிட்டுச்சொன்னார்கள். ரூபாய் 50 இலட்சத்திற்கும் கூடுதலாகக் கூட இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்காக ஒரு தனிக் கேள்வி போடுவாரேயானால், அதற்குரிய விளக்கம் அளிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 239, திரு. பி. ஆர். சுந்தரம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**239—**

## விலைப் பட்டியல்

***1846—திரு.பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறிய மற்றும் பெரிய விற்பனைக் கடைகளில் விலைப் பட்டியல்கள் வைக்கும் முறை கட்டாயப்படுத்தப்படுமா?





**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறிய மற்றும் பெரிய விற்பனைக் கடைகளில் விலைப் பட்டியல்கள் வைக்கும் முறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய மற்றும் பெரிய விற்பனைக் கடைகளில் விலைப் பட்டியல்கள் வைப்பது கட்டாயம் ஆக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு தெரியப்படுத்தியிருக்கின்றார்கள். இருந்தாலும், பெரும்பாலும் சிறிய மற்றும் பெரிய கடைகளில் விலைவாசிப் பட்டியல்களை அவர்கள் வைப்பதில்லை. அவ்வாறு விலைவாசிப் பட்டியல்களை வைத்தாலும், ஒரு கடைக்கு ஒரு கடை வெவ்வேறு விதமாக விலையை இங்கே குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் அத்தியாவசியமான பண்டங்களின் விலை அந்த விலைவாசிப் பட்டியலில் இடம்பெறுவதில்லை. கிராமப்புறங்களில் ஒருசில நேரங்களில் அறுவடையின்போது விலை குறைவாக இருக்கும். அறுவடை முடிந்ததற்குப் பிறகு விலை அதிகமாக இருக்கும். ஆனால், அறுவடையான காலத்தில்கூட, விலை மிகவும் குறைவாக இருக்கிற காலத்தில்கூட, நகர்ப்புறங்களில் எல்லாம் அந்த விலையை உயர்த்தி பழைய விலைக்கே அந்த விலைப் பட்டியல்களை எல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, சென்னையிலே சுபிக்சா, Food World போன்ற நிறுவனங்களில் எல்லாம் பன்மடங்கு விலையை அதிகமாக உயர்த்தி விலைப் பட்டியல்கள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் அரசு தன்னுடைய விலையைக்கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த விலைப் பட்டியல்கள் சரியாக இல்லாத காரணத்தினால் மக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த முடியாத நிலை இருக்கிறது. எனவே இது குறித்து மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும். ஆக, அரசும் விலைவாசிப் பட்டியல்கள் வைப்பதனைக் கட்டுப்பாட்டிலே வைத்திருக்க வேண்டும் என்பதை மனதிலே வைத்து அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த விலைவாசிப் பட்டியல்கள் அனைத்துக் கடைகளிலும் வைக்க வேண்டும் என்பைதைக் கட்டாயமாக்கும்படி உடனடியாகப் பார்வையிட்டு தக்க நடவடிக்கை எடுத்து விரைவுபடுத்துவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 26

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகளைக் களைவதற்காகத்தான் Tamil Nadu Essential Commodities Act (Display of the Stocks and Price and the Maintenance of the Accounts Order) 1977 என்ற சட்டத்தின்படி விலைப்பட்டியல்கள் கட்டாயமாகக் கடைகளிலே வைக்கப்பட் வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே இந்த அரசு மிக அக்கறையோடு இருக்கிற காரணத்தினாலே, இந்த ஆட்சி அமைந்ததற்குப் பின்னாலே கடந்த 2001 மே மாதத்திலிருந்து 2002 மார்ச் மாதம் முடிய இதுவரை 4263 சோதனைகள் நடத்தப்பட்டு, அப்படி விலைப் பட்டியல்கள் வைக்காத 137 பேருக்கு show-cause notice கொடுத்து, இந்த அரசு விரைவான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

*வினா எண் 240, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.*

**240—**

**சாயப் பட்டறை**

***7339—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் நகராட்சிப் பகுதியில் அமராவதி ஆறு மற்றும் காவிரி ஆற்றுப் படுகையிலிருந்து 5 கி.மீ. தூரம் தள்ளி மட்டுமே சாயம் மற்றும் சலவைப் பட்டறை அமைக்க வேண்டும் என்ற அரசு விதியை 1 கி.மீ. ஆக மாற்றிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே,

அமாராவதி ஆறு மற்றும் காவிரி ஆற்றுப் படுகையிலிருந்து 5 கி.மீ. தூரம் தள்ளி மட்டுமே சாயம் மற்றும் சலவைப் பட்டறை அமைக்க



2002 ஏப்ரல் 26]

வேண்டும் என்பது தொடர்பாக தமிழக அரசின் சுற்றுச் சூழ. ற்றும் வனத் துறை வெளியிட்ட 8-5-1998 நாளிட்ட அரசாணை நிலை எண் 127-ல் மாற்றம் செய்ய வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் நகரத்தினுடைய முக்கியமான தொழில் சலவை சாயப் பட்டறைதான். இது அந்நியச் செலாவணி ஈட்டுகின்ற ஒரு தொழில். அதுமட்டுமல்லாமல் கரூர் நகரில் வசிக்கின்ற 50,000க்கும் மேற்பட்ட மக்கள் இந்தத் தொழிலை நம்பித்தான் வாழ்கின்றார்கள். சென்ற 1991-96 ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆட்சியிலே அரசாணை 213 மூலமாக 1 கிலோமீட்டர் தூரம் தள்ளி, ஆற்றுப் படுகையைத் தள்ளி, இதுபோன்ற சாயப் பட்டறைகளை அமைத்துக்கொள்ளலாம் என்று G.O. இருந்தது. ஆனால் சென்ற அரசு, அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, 8-5-1998 நாளிட்ட 127 எண்ணிட்ட அரசாணையின்படி, 5 கிலோமீட்டர் தள்ளிதான் இந்தச் சாயப் பட்டறைகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாணை வெளியிட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே கரூரைச் சுற்றியிருக்கின்ற அமராவதி, காவிரி நதிகள் பக்கத்திலே ஓடுவதால், இந்தச் சாயப் பட்டறைகள் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லாமல் இருப்பதை அரசு அறிய வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் இந்தத் தொழில் நசிவதற்கு இது ஒரு முக்கியமான காரணமாக இருப்பதால் இந்தத் தொழில் முனைவர்களைக் காப்பாற்ற இந்த G.O.வை புரட்சித் தலைவி அம்மா அரசு இரத்து செய்து, 1 கிலோமீட்டர் அளவுக்கு இந்த சாயப் பட்டறைகள் அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயத் தொழிற்சாலை உள்ளிட்ட அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் சில நீராதாரங்களிலிருந்து 1 கிலோமீட்டர் தொலைவிற்குள் அமையக் கூடாது எனத் தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை 30-3-1989 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 213-ல் ஆணை பிறப்பித்துள்ளது. அதற்குப் பின்னால் தமிழ்நாட்டில் முக்கிய நீராதாரங்களான காவிரி மற்றும் உப நதிகள் பெண்ணையாறு, பாலாறு, வைகை மற்றும் தாமிரபரணி ஆகிய நதிகளிலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்திற்குள் நீரை அதிக அளவில் மாசுபடுத்தும் 30-3-1989 ஆம் நாளிட்ட

[2002 ஏப்ரல் 26

சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அரசாணை எண் 213-ல் இணைப்பு 1-ல் கண்டுள்ள 14 வகைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட அனுமதியளித்தல் கூடாது என தமிழக அரசால் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை தனது அரசாணை 127, நாள் 8-5-1998 மற்றும் அரசாணை டி எண். 223 2-9-1998 என்ற தேதியில் ஆணையிட்டிருக்கிறது.

சாயத் தொழிற்சாலைகள், நீரை மிக அதிக அளவில் மாசுபடுத்தும் சிவப்பு வகைத் தொழிற்சாலைகள் என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வகைப்படுத்தியுள்ளது. மேலும் இத்தொழிற்சாலைகளை நீராதாரங்களுக்கு அருகில் நிறுவுவதால், இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் நீராதாரங்களான ஆறு மற்றும் நிலத்தடி நீரை எளிதில் சென்றடைந்து மாசு அடையச் செய்து, பயனற்றதாக்கிவிடுகிறது. நிலத்தடி நீர் மற்றும் ஆற்று நீரையே தமிழக மக்கள் பெரிதும் நம்பியுள்ளனர். தமிழ்நாட்டில் பாயும் ஆறுகளான காவிரி, வைகை, பாலாறு, தாமிரபரணி போன்றவை வற்றாத ஜீவ நதிகள் அல்ல. மாறாக இந்த நதிகள் பெரிதும் பருவ மழையையே நம்பியிருக்கின்றன இந்த ஆறுகளின்மூலம் குடிநீர், விவசாயம் போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. எனவே, தொழில் வளம் குன்றாமல் இருக்க வேண்டிய அதே தருணத்தில் மக்கள் மற்றும் பிற உயிரினங்கள் பாதிக்கப்படாத வகையில் பாதுகாக்க வேண்டியுள்ளதால், தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை 8-5-1998-ல் வெளியிட்ட அரசாணை நிலை எண் 127-ல் குறிப்பிட்டுள்ள காவிரி மற்றும் அதன் உப நதிகள் பெண்ணையாறு, பாலாறு, வைகை மற்றும் தாமிரபரணி ஆகிய ஆற்றுப் படுகைகளிலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்திற்கு உட்பட்ட பகுதியில் சாயப் பட்டறைகள் அமைக்க அனுமதி வழங்க இயலாது என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்புறம் கேளுங்கள். அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொல்லிவிட்டார்கள்.

வினா எண் 241, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 26]

241—

## ஊரகத் தொழில்கள்

***12956—திரு. ப. சிதம்பரம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதியிலுள்ள புளியம்பட்டியில் ஊரகத் தொழில்கள் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பவானிசாகர், புளியம்பட்டி பகுதியில் வட்டார அளவில் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு முகாம் நடத்தி, சிறுதொழில் பற்றிய கருத்துகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. சிதம்பரம்

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றில் அசைக்க முடியாத ஆற்றல்மிக்க சக்தியாக விளங்கிக்கொண்டிருக்கும் எங்கள் அன்னை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என் கேள்வியைத் தொடங்குகின்றேன். எனது பவானிசாகர் தொகுதியில், புஞ்சை புளியம்பட்டியில் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்கள் பெருமளவில் வாழ்கின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திட நடப்பு நிதியாண்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சிறுதொழில் தொடங்கிட முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர், புளியம்பட்டி பகுதியில் வட்டார அளவில் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு முகாம் நடத்தி, சிறுதொழில் வளர்ச்சிக்கு ஏதுவாக தொழில் பற்றிய கருத்துகள் வழங்கப்பட்டு

[2002 ஏப்ரல் 26

வருகின்றன. ஆர்வமுள்ள தொழில் முனைவோர், இப்பகுதியில் தொழிற்சாலைகள் நிறுவ பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், ஈரோடு அவர்களை அணுகும்பட்சத்தில் அவர்களுக்குத் தகுந்தத் ஆலோசனை வழங்கி, ஊக்கம் அளித்து தொழில் துவங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாணை எண் 41, தொழில் துறை, நாள் 19-3-1996-ன்படி, பவானிசாகர் வட்டாரம் தொழில்ரீதியாகப் பின்தங்கிய வட்டாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் அமையும் தொழில் நிறுவனங்களுக்கு நிலையான முதலீட்டில் 15 சதவிகிதம், அதிகபட்சமாக 15 இலட்சம் மானியமாக அரசுத் துறையின் மூலம் வழங்கப்படுகிறது. மேலும், தொழில் துவங்குகின்ற நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மின்சார மானியம் முறையே 40%, 30%, 20% என்ற அளவிலே வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் ஊரகத் தொழில் வளர்ச்சிப் பணி நடைபெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் 8 ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் சுய தொழில் துவங்க பயிற்சி அளித்து, கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டு வருமானம் ரூபாய் 40,000-க்கு மிகாமல் இருக்க வேண்டுமென்ற அளவுகோலை நிர்ணயித்து, பெண்கள், உடல் ஊனமுற்றோர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், முன்னாள் படைவீரர் ஆகியோருக்கு 18 முதல் 45 வயது வரை பயிற்சி அளித்து, கடன் வழங்கப்பட்டு தொழில் முனைவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 242, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**242—**

## வீட்டுமனைப் பட்டா

***13921—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 26]

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

என்போன்ற சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த கழகத் தொண்டனை அமைச்சராக்கி மக்களுக்காக உழைப்பு, நேர்மை, எளிமை என்கிற தாரக மந்திரத்தைச் சொல்லி வழிநடத்திச் செல்லும் எங்கள் கழகக் காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது பதிலைத் தெரிவிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) வெள்ளக்கோவில் தொகுதி, காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமம் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்திற்கான கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வெள்ளக்கோவில் பேரூராட்சி இப்போது ஈரோடு மாவட்டத்தில் மிகப்பெரிய பேரூராட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கே, விசைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், அதேபோல ஆயில் ஆலைகளில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களும், நூற்பாலைகளிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களும் ஏராளமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு இன்னும் இலவச வீட்டுமனைப் பட்டா கிடைக்கவில்லை. மேலும், கடந்த கழக ஆட்சியில் 2 முறை வெள்ளக்கோவில் பேரூராட்சிப் பகுதியிலுள்ள சேனாதிபாளையம் வருவாய் கிராமத்தில் 2 இடங்களில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதிலே விடுபட்டுப்போனவர்களுக்குத்தான் இப்பொழுது கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இலவச வீட்டுமனைப் பட்டா இல்லாத அப்பகுதி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 26

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பகுதிகளில் பயனாளிகள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு ஏதுவாக அடிப்படை வசதிகளை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கெனப் புதிதாக நிலம் கையகப்படுத்தும் திட்டம் இந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 243, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**243—**

## ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகம்

***444—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அயன்புரம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத் தலைமை மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை, அயன்புரத்தில் இயங்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை எனக் கூறிக் கொள்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அயன்புரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத் தலைமை மருத்துவமனையை, 1962 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, வடசென்னை பகுதியிலே நிரம்ப



2002 ஏப்ரல் 26]

தொழிற்பேட்டைகள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே உருவாக்கினார்கள். ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்குப் பின்பும், அந்த மருத்துவமனை விரிவுபடுத்தப்படாமலும், பெருகி வருகின்ற புதிய நோய்களிலிருந்து தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்குப் புதிய சிறப்புப் பிரிவுகள் அங்கே உருவாக்கப்படாமலும் தொடர்ந்து அதே நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையில், அந்த மருத்துவமனையில், சிடிஸ்கேன், கார்டியாலஜி அறுவை சிகிச்சைப் பிரிவு, கிட்னி அறுவை சிகிச்சைப் பிரிவு போன்ற சிறப்புப் பிரிவுகளை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அயன்புரத்தில் இயங்கிவரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை 616 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் அனைத்து வகையான சிகிச்சைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. சென்னை மற்றும் அருகில் அமைந்துள்ள 39 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மேற்பார்வை மருத்துவமனையாக இம்மருத்துவமனை செயலாற்றி வருகிறது. இம்மருத்துவமனையில் தற்போது அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர் மற்றும் ஊடுகதிர்க் கருவிகள் உள்ளன. இம்மருத்துவமனைக்கென பிரத்யேகமாக ஒரு முழு உடல் பரிசோதனைக் கருவி வழங்க தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திடம் கோரப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக்கு வரும் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்குச் சிறப்பு மற்றும் உயர் சிறப்புச் சிகிச்சை தேவைப்படும் சூழலில் அவர்கள் சென்னை பொது மருத்துவமனை மற்றும் பிற கல்லூரி மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். சிறப்பு மற்றும் உயர் சிறப்பு அறுவைச் சிகிச்சையை அவசரமாக மேற்கொள்ளும் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் செலவிடும் மருத்துவச் செலவு மீள வழங்கப்பட்டு வருகிறது. சிறுநீரக, நரம்பியல் மற்றும் அவசரகால இதய நோய்ச் சிகிச்சைகள், பிரசவகால முன், பின் சிகிச்சைகள் உள்ளிட்ட அனைத்துச் சிகிச்சைகள், சிறப்பு மற்றும் உயர் சிறப்புச் சிகிச்சை வசதிகளுடன் இம்மருத்துவமனையை முன்மாதிரி மருத்துவமனையாகச் செயல்படுத்த கருத்துரு ஒன்று புதுதில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திற்கு—

[2002 ஏப்ரல் 26

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்—மாநில தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக இயக்குநரால், 17-4-2001 அன்று அனுப்பப்பட்டு, அக்கருத்துரு இக்கழகத்தின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 244, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

244—

**சுற்றுலாத் தலம்**

***2106—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலையை சுற்றுலாத் தலமாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலை ஏற்கெனவே மாவட்ட உலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்குவரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு நிதியாதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே ஏலகிரி மலை என்பது மிகப் பிரசித்திபெற்ற, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சுற்றுலாத் தலம். கோடைகாலங்களிலேகூட, கடுமையான கோடை இல்லாமல், அங்கே நிலவுகின்ற சூழ்நிலையெல்லாம் இருந்து வருகிறது. குளிர் தலமாக அறிவிக்கப்பட்டு இருந்தாலும்கூட, அது ஒரு சுற்றுலாத் தலம் சுற்றுலாத் தலத்திற்குண்டான



2002 ஏப்ரல் 26]

அறிகுறிகள் எதுவுமே அங்கு இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே—சுற்றுலாத் தலத்திற்கு பொதுமக்கள் இன்னும் வெளிநாட்டவர்கள் எல்லாம் அங்கே வரக்கூடிய சூழ்நிலையிருக்கிறது--அந்தச் சுற்றுலாத் தலத்தை மேம்படுத்துவதற்கு, அரசு நடப்பு ஆண்டிலே முன்வருமா? எந்தெந்த நடவடிக்கைகளை அரசு எடுக்கவிருக்கிறது என்பதையெல்லாம் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலிருந்து சுமார் 91 கிலோ மீட்டர் தொலை தூரத்தில், திருப்பத்தூர் நெடுஞ்சாலையில், சென்னையிலிருந்து இராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி வழியாக பொன்னேரி கூட்டு ரோடிலிருந்து பிரிந்து செல்லும் மலைப் பாதைச் சாலையில் 15 கிலோ மீட்டர் தூரத்தில் ஏலகிரி மலை, கோடை வாசஸ்தலம் அமைந்துள்ளது. ஏலகிரி மலையில் அமைந்துள்ள ஏரியின் நீர்ப்பகுதி பரப்பளவு 56.706 சதுரமீட்டர். ஏரியின் கொள்ளளவு 4.86 மில்லியன் கன அடி. அதிகபட்ச ஆழம் 10 முதல் 20 மீட்டர் வரை உள்ளது. ஏலகிரிமலை வளர்ச்சி சுற்றுலா மேம்பாட்டிற்காக 1995 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு, படகு குழாம், இரண்டு குடில்கள் மற்றும் அருகிலுள்ள இடங்களை ஏலகிரிமலை வளர்ச்சி சுற்றுலா மேம்பாட்டுச் சங்கம் ஏற்றுக்கொண்டு, மேலே கூறப்பட்டுள்ளவற்றைத் தனியாருக்குக் குத்தகைக்கு விட்டு, இதனால் கிடைக்கின்ற தொகையைக் கொண்டு, ஏலகிரிமலை வளர்ச்சி சுற்றுலா மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏலகிரிமலையில் குங்கலூர் செயற்கை ஏரிப் பூங்கா, படகுச் சவாரி, செயற்கை வண்ண மீன் அலங்கார நீருற்று, சிறுவர் பூங்கா, மிருகக் காட்சிசாலை, வனத் துறையின் மூலிகைப் பண்ணை, பரன் பார்வை மையம், தொலை நோக்கு இல்லம், ஜலகாம்பாறை நீர்வீழ்ச்சி போன்ற பொழுதுபோக்கு மையங்கள் உள்ளன. மேலும், ஏலகிரியில் யாத்ரி நிவாஸ் கட்ட மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏலகிரி மலையில் உள்ள மலைப் பாதையை மேம்பாடு செய்வதற்காக, ரூ.2 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, வனத் துறையின் மூலம் பணி நடைபெற்று வருகிறது என்பதை அவைக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பாண்டுரங்கன்.

[2002 ஏப்ரல் 26

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் சிம்லா, ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுகின்ற ஏலகிரிமலையில் பல்வேறு வசதி வாய்ப்புகள் சுற்றுலாத் தலத்திற்கு இருந்தாலும்கூட, அது முறையாக, முழுமையாகப் பராமரிக்கப்படாத காரணத்தாலே, அங்கே வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தவொரு மகிழ்ச்சி கொடுக்கின்ற அளவிலேயும் சூழ்நிலைகள் இல்லாத ஒரு நிலையிலே இருக்கிறது. எனவே, நடப்பு நிதியாண்டிலே சுற்றுலா ஸ்தலமாக இருக்கின்ற ஏலகிரி மலைக்குக் கூடுதலாக பெருமளவு நிதியொதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன் அவர்கள் தொடுத்திருக்கின்ற வினாக்களுக்கு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையை ஏற்று நிதிநிலைக்கு ஏற்ப அரசு சிந்திக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலே, ஏலகிரியிலே இருக்கக்கூடிய அந்த ஏரியில் படகு விடக்கூடிய அந்தப் பணியை ஒரு தனியாருக்குக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். கடந்த 4 ஆண்டுகளாகப் படகு விடக்கூடிய பணியைத் தனியார் ஏலம் எடுத்து நடத்திக் கொண்டு இருக்கிறபோது, அங்கே ரௌடித்தனம்தான் அதிகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென்ற கோடை விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோதே, அவர்கள் படகை ஓட்டத் தெரியாமல் ஓட்டி, ஒரு குழந்தையே இறந்துபோய், பெரியதொரு பதட்ட நிலையே அன்று உருவானது. முதலிலே சுற்றுலாத் துறைதான் படகை விட்டுக் கொண்டிருந்தது. பிறகு திடீரென்று சுற்றுலாத் துறை வாபஸ் வாங்கிக் கொண்டு தனியாருக்கு விட்டதனுடைய விளைவால், இப்படிப்பட்ட கோரச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் சுற்றுலாத் துறை மூலமே அந்தப் படகை விடக்கூடிய ஒரு நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஆவன செய்வாரா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல யாத்ரி நிவாஸுக்கு இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற இடம் கொஞ்சம் ஓரமாக இருக்கிறது. கட்டட மையம் இருக்கக்கூடிய கட்டடத்திற்குப் பக்கத்திலே 40 இலட்சம் ரூபாயிலே நீங்கள் யாத்ரி நிவாஸ் கட்டினால், அது பொதுமக்களுக்கு வசதியாக



2002 ஏப்ரல் 26]

மெயின் ரோட்டிலே அமையும் என்கிற காரணத்தினாலே, இடத்தை மாற்றி, கட்டட மையத்திற்குப் பக்கத்திலே யாத்ரி நிவாஸ் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுடைய கருத்தை ஏற்று, அரசு அதிகாரிகளோடு ஆலோசனை நடத்தி, புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுச் சிந்திக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

### (எட்டாம் பட்டியல்)

### வாய்க்கால் நீர்

1—

**வினா 13124—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதியில் வடகரை வாய்க்கால் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த கொரம்பு தடுப்பு அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

வடகரை வாய்க்கால் காவிரியிலிருந்து நேரடிப் பாசனம் பெறும் வாய்க்கால் ஆகும். இதன் மொத்த ஆயக்கட்டு 104000 ஏக்கர். இதன் நீளம் 27 மைல், 3 பர்லாங் ஆகும். காவிரி டெல்டாவிற்காக மேட்டூர் அணை மூடப்பட்ட பிறகு காவிரியில் வரும் குறைந்த அளவு ஊற்று நீரினை வடகரை வாய்க்கால் தலைப்பிற்குச் செல்ல ஏதுவாக காவிரியில் மண் அணை என்ற தற்காலிக கொரம்பு அமைத்து தண்ணீர்

* உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2002 ஏப்ரல் 26

வழங்கப்படுகிறது. இந்த ஆண்டும் தலைப்பில் கொரம்பு அமைத்து தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

2—

### இலவச பாடநூல்

**வினா 1318—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் இலவசமாக பாடநூல் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) அவற்றில் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அதை அதிகப்படுத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் கல்வி ஆண்டில் 1 முதல் 8 வகுப்புகள் வரை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 7,17,550 மாணவர்கள், 6,46,481 மாணவியர்கள் என மொத்தம் 13,64,031, அதாவது 13.64 இலட்ச மாணவ. மாணவியர்களுக்கு இலவசப் பாடநூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) வழங்கப்பட்ட இலவசப் பாடநூல்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.20,04,34,520/- ஆகும்.

(இ) இதை அதிகப்படுத்துவது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

3—

### இளைஞர் விளையாட்டு மையம்

**வினா 5074—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கஞ்சமநாதன்பேட்டை கிராமத்தில் இளைஞர் விளையாட்டு மையம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 ஏப்ரல் 26]

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தற்போதுள்ள நிதிநிலையில் பண்ருட்டி தொகுதி, கஞ்சமநாதன்பேட்டை கிராமத்தில் இளைஞர் விளையாட்டு மையம் ஏற்படுத்தும் உத்தேசம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

4—

### ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

**வினா 6748—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, சேத்பட் சாலையில் ஜோஜப் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

செஞ்சி தொகுதி, சேத்பட் சாலையில் உள்ள ஜோஜப் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

5—

### ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

**வினா 7088—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு நகரில் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2002 ஏப்ரல் 26

விடை—

**மாண்புமிகு டாக்டர், மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

6—

**மேல்நிலைப் பள்ளியாக மாற்றுதல்**

**வினா 10426—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய் கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/ நகராட்சி/ மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. செந்துறை ஒன்றியம், தளவாய் கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி குறித்து வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

7—

**விளையாட்டு மையம்**

**வினா 10524—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட அப்பியம்பேட்டை கிராமத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டு மையம் ஆரம்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 ஏப்ரல் 26]

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தற்போதுள்ள நிதி நிலையில் பண்ருட்டி, தொகுதிக்குட்பட்ட அப்பியம்பேட்டை கிராமத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் விளையாட்டு மையம் ஏற்படுத்திட வழிவகை இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

8—

**நூலகம் திறத்தல்**

**வினா 10548—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட கோ. சத்திரம் கிராமத்தில் நூலகம் ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட கோ. சத்திரம் கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 2500 ஆகும். மக்கள் தொகையின் அடிப்படையில் அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்கலாம். ஆனால், அவ்வூர் மக்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்யாததால் அவ்வூரில் நூலகம் திறக்க இயலவில்லை:

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தரப்பட வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

[2002 ஏப்ரல் 26

(4) ரூ.2,000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்படவேண்டும்.

(5) தலா ரூ.1,000 வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்படவேண்டும்.

9—

**சுற்றுச்சுவர் கட்டுதல்**

**வினா 10632—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட தொளசம்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியைச் சுற்றிலும் சுற்றுப்புறச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட தொளசம்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியைச் சுற்றிலும் சுற்றுப்புறச் சுவர் கட்டுவது சார்பாக நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. எனவே அரசாணை (நிலை) எண் 581, கல்வித் துறை, நாள்: 14-7-1994 இன்படி பசுமைவேலி அமைப்பது சார்பாக வனத் துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

10—

**இலங்கை அகதிகள் விவரம்**

**வினா 11436—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டு மே மாதம் வரை தமிழகத்திற்கு எவ்வளவு இலங்கை அகதிகள் வந்துள்ளனர்?



2002 ஏப்ரல் 26]

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2000ஆம் ஆண்டில் 1620 பேரும், 2001ஆம் ஆண்டு மே மாதம் வரை 279 பேரும், இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு அகதிகளாக வந்துள்ளனர். இவர்கள் 758 குடும்பங்களைச் சேர்ந்த 846 ஆண்களும், 686 பெண்களும், 185 சிறுவர்களும் மற்றும் 182 சிறுமியர்களும் ஆவர்.

11—

**இலங்கை அகதிகள்**

**வினா 11438—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டத்தில் இலங்கை அகதிகள் தங்கியுள்ளனர்?

(ஆ) தமிழகத்தில் மொத்தம் எவ்வளவு பேர் உள்ளதாக அரசு கணக்கெடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) 31-12-2001-ஆம் தேதியில் இலங்கை அகதிகள் குடும்பங்கள் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருச்சி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 23 மாவட்டங்களிலுள்ள 111 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) தமிழகத்தில் உள்ள 23 மாவட்டங்களில் உள்ள 111 முகாம்களில் 31-12-2001ஆம் தேதி வரையில் 16,943 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 64,061 நபர்கள் இலங்கையிலிருந்து அகதிகளாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

[2002 ஏப்ரல் 26

12—

**உடற்பயிற்சி மையம் அமைத்தல்**

**வினா 12009— திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் புற விளையாட்டு மையங்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்கள் அமைக்க அரசிடம் கருத்துரு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு ஆரம்பிக்கப்படவுள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தற்போதுள்ள நிதிநிலையில் திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியில் புற விளையாட்டு மையங்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் அமைக்க வழிவகை இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

13—

**கோயில்கள்**

**வினா 7637—திரு. மீ.அ. வைத்திலிங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை கோயில்கள் உள்ளன?

(ஆ) அவற்றில் எத்தனை கோயில்கள் அரசின் நேரடி நிர்வாகத்திலும் மற்றும் எத்தனை கோயில்கள் தனிப்பட்டவர் பராமரிப்பிலும் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**



2002 ஏப்ரல் 26]

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் உள்ள திருக்கோயில்களின் மொத்த எண்ணிக்கை 36,355. அவை கீழ்க்கண்டவாறு வருமான வரம்பின் அடிப்படையில் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| (1) | ரூ.10,000க்குகீழ் உள்ள கோயில்கள் | 32,552 |
| (2) | ரூ.10,000க்கு மேல் ரூ.2 இலட்சம் வரையுள்ளவை | 3,266 |
| (3) | ரூ.2 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரையுள்ளவை | 403 |
| (4) | ரூ.10 இலட்சத்திற்கு மேலுள்ள திருக்கோயில்கள் | 134 |
| | மொத்தம் | 36,355 |

மேற்கண்டவை தவிர, தனியார்வசம் உள்ள கோயில்கள் இத்துறைக் கட்டுப்பாட்டில் இல்லை என்பதால் அவற்றின் எண்ணிக்கை விவரம் இத்துறையில் இல்லை.

14—

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா 513—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, முடவன்குளம் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குழாய்த் தொடரமைப்பு மற்றும் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஒன்றியம், கஸ்தூரி ரெங்கபுரம் ஊராட்சியைச் சேர்ந்த முடவன்குளம் குடியிருப்பு, நாங்குநேரி, திசையன்விளை மற்றும் 342 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன்பெறும் வழியோரக் கிராமங்களில் சேர்க்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 26

15—

### குடிநீர் வழங்குதல்

**வினா 514—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் கிராமத்தில் கூடுதலாக 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்குழாய்க் கிணறும் அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சியைச் சேர்ந்த கஸ்தூரிரெங்கபுரம் குடியிருப்புக்கு புதிய ஆழ்குழாய்க் கிணறு தோற்றுவிக்கப்பட்டு 8/2000ல் பராமரிப்பிற்காக ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது தற்போது பரிசீலனையில் இல்லை.

16—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

**வினா 1162—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் வசதி பெறாத கிராமங்கள் எத்தனை?

(ஆ) அவற்றிற்கு இந்த நிதியாண்டில் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2002 ஏப்ரல் 26]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் வசதி பெறாத கிராமங்கள் 742 ஆகும்.

(ஆ) மேற்காணும் 742 குடியிருப்புகளில் ஊரகக் குடிநீர்த் திட்ட கோட்பாடுகளின்படி, தகுதி, தேவை மற்றும் நிதி ஆதாரத்தைக் கருத்திற்கொண்டு 78 குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய விசைப்பம்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மீதமுள்ள குடியிருப்புகளுக்கும் வரும் நிதியாண்டுகளில் முழுமையாக குடிநீர் வசதி செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17—

### சாலை வசதி

**வினா 1176—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி 23வது வார்டு கவுண்டன்பட்டிக்கு சாலை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி, நகராட்சி 23-வது வார்டு கவுண்டன்பட்டிக்கு சாலை வசதி செய்து கொடுக்க ரூ.4.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நகராட்சியில் தற்போது போதிய நிதி இல்லாததால் இப்பணியைச் செய்ய இயலவில்லை.

18—

### கழிப்பிட வசதி

**வினா 1362—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 ஏப்ரல் 26

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் பொது உலர் கழிப்பிடங்களை தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பிடங்களாக மாற்ற அரசு வழங்கிய மானியம் எவ்வளவு?

(ஆ) எத்தனை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன?

(இ) பயன் அடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகராட்சிப் பகுதியிலுள்ள பொதுக் கழிப்பிடங்கள் அனைத்தும் தண்ணீர் வசதியுடன் உள்ளன. எனவே, இந்நகராட்சிப் பகுதியிலுள்ள பொது உலர் கழிப்பிடங்களைத் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பிடங்களாக மாற்ற 2000-2001 ஆம் ஆண்டில் அரசு மானியம் ஏதும் வழங்கவில்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழாது.

19—

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா 1485—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காலிபாளையம் கிராங்குண்டல் குமாரபாளையம், கோட்டை மருதூர், எடைக்கல்பாடி ஆகிய ஊராட்சிகளிலுள்ள கிராமங்களில் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த காலிபாளையம் கிராங்குண்டல்



2002 ஏப்ரல் 26]

குமாரபாளையம், கோட்டை மருதூர், எடைக்கல்பாடி ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட 74 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் காங்கேயம் வெள்ளக்கோவில் கூட்டுக் குடிநீர் திட்ட நிலை 4 பகுதி 2(c)-ல் செயலாக்க உத்தேசிக்கப்பட்டு இதற்கான மதிப்பீடு ரூ.548 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

20—

**ஆழ்துளைக் கிணறு**

**வினா 3339—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட க. புதூர் அருந்ததியர் தெருவில் ஆழ்துளைக் கிணறு நீண்டகாலமாகப் பழுதுபட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட க. புதூர் அருந்ததியர் தெருவில் ஆழ்துளைக் கிணறு சில நாட்கள் மட்டுமே பழுதடைந்திருந்தது. தற்போது பழுது சரிசெய்யப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

21—

**விளக்குகள் சீர்செய்தல்**

**வினா 4099—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் தெரு விளக்குகள் எரியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்செய்ய எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

[2002 ஏப்ரல் 26

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி வெட்டன்விடுதியில் குழல் விளக்குகள் 18-ம், சோடியம் விளக்குகள் 6-ம், மொத்தம் 24 விளக்குகள் உள்ளன. இவற்றில் பேருந்து நிற்குமிடத்தில் உள்ள 3 விளக்குகள் மட்டும் குறைந்த மின் அழுத்தம் காரணமாக எரியாமல் இருந்தன. தற்போது இவை அனைத்தும் சரிசெய்யப்பட்டு அனைத்து விளக்குகளும் எரிகின்றன.

**22—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 4915அ—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கன்னியாகுடி ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனிக்குக் குடிநீர் ஆதாரம் அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சீர்காழி ஒன்றியம், கன்னியாகுடி ஊராட்சி, ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**23—**

**குடிநீர் வழங்கல்**

**வினா 4921அ—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 26]

(அ) சீர்காழி தொகுதி, திட்டை ஊராட்சி, சிவனார் விளாகம் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு குடிநீர் வசதி செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திட்டை ஊராட்சியிலுள்ள சிவனார் விளாகம் ஆதிதிராவிடர் காலனியில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசை திட்டத்தின் மூலம் தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே புதிய திட்டம் மேற்கொள்வது பரிசீலனையில் இல்லை.

**24—**

**குடிநீர்த் திட்டம்**

**வினா 4922அ—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புங்கனூர் ஊராட்சி, காடாகுடி கிராமம், கீழத்தெரு ஆதிதிராவிடர் கிராமத்திற்கு குடிதண்ணீர் ஆதாரம் ஏற்படுத்தித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) புங்கனூர் ஊராட்சி, காடாகுடி கீழத்தெரு ஆதிதிராவிடர் காலனிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் முடிக்கப்பட்டு தற்பொழுது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2002 ஏப்ரல் 26

25—

**தெரு விளக்குகள்**

**வினா 5114—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜெல்லிபட்டி கிராமத்தில் தெரு விளக்குகள் சரியாக போடப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜெல்லிபட்டி கிராமத்தில், ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் தெரு விளக்குகள் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

26—

**நிழற்குடை**

**வினா 5847—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி பேருந்து நிலையத்தில் அம்பாசமுத்திரம்-பாபநாசம் மார்க்கமாக தென்காசி செல்லும் பயணிகள் தங்க நிழற்குடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாநகராட்சி பேருந்து நிலையத்தில் அம்பாசமுத்திரம்-பாபநாசம் மார்க்கமாக தென்காசி செல்லும் பயணிகள் தங்க நிழற்குடை அமைக்க போதிய இடவசதியின்மையால் நிழற்குடை அமைக்க வாய்ப்பில்லை. எனினும் கட்டி முடிக்கப்படவுள்ள புதிய பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு வந்த பின்பு அம்பை செல்லும் பேருந்துகள்



2002 ஏப்ரல் 26]

இப்பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் திட்டம் செயல்பட்டால் காலியாக இருக்கும் பயணிகள் பகுதியை பயன்படுத்திக்கொள்ள வாய்ப்புள்ளது.

27—

**குடிதண்ணீர்**

**வினா 7063—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகர வார்டு 21-ல் பொதுமக்கள் நலன் கருதி குடிதண்ணீர் பொதுக் குழாய் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகரின் 21-வது வார்டு பகுதியில் ஏற்கெனவே 4 பொதுக் குழாய்கள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

28—

**தெரு விளக்குகள் செப்பனிடல்**

**வினா 9035—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், பொன்குடிக்காடு கிராமத்தில் உள்ள தெரு விளக்குகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2002 ஏப்ரல் 26

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், பொன்குடிக்காடு கிராமத்தில் மொத்தம் 56 குழல் விளக்குகளும், 4 சோடியம் விளக்குகளும் உள்ளன. இதில் எரியாத 16 குழல் விளக்குகள் மற்றும் 1 சோடியம் விளக்கு பழுதுநீக்கம் செய்யப்பட்டு 20-11-2001 முதல் நல்ல நிலையில் எரிகின்றன.

29—

## கைப்பம்பு அமைத்தல்

**வினா 9045—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், இளைக்கடம்பூர் கிராமத்தின் வடக்கு தெருவிற்கு ஒரு கைப்பம்பினை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், இளைக்கடம்பூர் கிராமத்தின் வடக்குத் தெருவில் நிலத்தடிநீர் குடிப்பதற்கு தகுதியற்ற நிலையில் உப்பு நீராக உள்ளதால், கைப்பம்பு அமைத்துக் கொடுத்தால் கிடைக்கும் நீர் பொதுமக்களுக்கு உபயோகமற்றதாக இருக்கும். எனவே, கைப்பம்பு அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

30—

## அடிபம்பு அமைத்தல்

**வினா 9129—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 26]

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சிலுப்பனூர் கிராமத்திற்கு அடிப்பம்பு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சிலுப்பனூர் கிராமத்திற்கு வெள்ளாற்றிலிருந்து ஆழ்க் குழாய் அமைத்து மின்மோட்டார் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சிலுப்பனூரில் கைப்பம்பு அமைக்க நிலத்தடி நீர் உப்பாக உள்ளதாலும், நிலத்தடி நீரை பரிசோதனை செய்து கைப்பம்பு அமைக்க சுமார் ரூ.1.25 இலட்சம் செலவாகும் என்பதாலும் தற்போது ஊராட்சியில் நிதிநிலை சரியில்லாத காரணத்தாலும் கைப்பம்பு அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

31—

## மின் மோட்டார் பழுதுபார்த்தல்

**வினா 9133—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சிலுப்பனூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றும் மோட்டார் பழுது அடைந்துள்ளதை சரிசெய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சிலுப்பனூர் கிராமத்தில் தற்பொழுது பைப்லைன் மூலம் குடிதண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் மின்மோட்டார் தற்போது பழுதடைந்ததை

சரிசெய்ய ரூ.1,20,000/- செலவாகும். தற்போது ஊராட்சியில் நிதிநிலை சரியில்லாத காரணத்தால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மின்மோட்டார் ஆகியவற்றைச் சரிசெய்ய தற்போது வாய்ப்பில்லை.

32—

**மின்விளக்கு வசதி**

**வினா 11301—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புலியூர் அருந்ததியர் தெருவில் மின்விளக்கு வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, புலியூர் அருந்ததியர் தெருவில் தற்போது ஊராட்சியில் நிதி வசதியில்லாத காரணத்தால் மின்விளக்கு வசதி ஏற்படுத்தித்தர தற்போது சாத்தியமில்லை.

33—

**ஜீவன்தாரா திட்டம்**

**வினா 14291—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஏழை விவசாயிகளுக்கு ஜீவன்தாரா கிணறு வெட்டும் திட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் எவ்வளவு பேர் பயனடைந்து உள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் ஏழை விவசாயிகளுக்கு ஜீவன்தாரா கிணறு வெட்டுப் திட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் பயனடைந்தோர் விவரம் இபே கொடுக்கப்பட்டுள்ளது:



| வருடம் | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் | இதர பிரிவினர் | மொத்தம் |
| --- | --- | --- | --- |
| 1996-97 | 4317 | 1645 | 5962 |
| 1997-98 | 2308 | 1318 | 3626 |
| 1998-99 | 3604 | 1444 | 5048 |
| 1999-2000 | 1640 | 664 | 2304 |

1-4-1999 முதல் இத்திட்டம் பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் இணைக்கப்பட்டு விட்டது. 1-4-1999 முதல் இத்திட்டம் நடைமுறையில் இல்லாததால் 1999-2000 மற்றும் 2000-2001 ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எவரும் இல்லை.

34—

**வட்டி நிவாரணத் திட்டம்**

**வினா 11362—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகள் வாங்கிய கடனுக்கான வட்டி, அபராத வட்டி ஆகியவற்றை அரசு தள்ளுபடி செய்து அறிவித்ததினால் சேலம் மாவட்டத்தில் பலனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்?

(ஆ) தள்ளுபடி செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.**

(அ) தமிழக அரசு அறிவித்த விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி நிவாரணத் திட்டம் 2001-ன்கீழ் சேலம் மாவட்டத்தில் மட்டும் 30-11-2001 முடிய 22,833 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

(ஆ) ரூ.735.79 இலட்சம் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

35—

[2002 ஏப்ரல் 26

## பட்டயப் பயிற்சி நிலையம்

**வினா 14298—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.

36—

## பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்

**வினா 15935—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் பண்ணை மகளிர் பயிற்சித் திட்டத்தின்கீழ், சிறு விவசாயப் பண்ணை மகளிருக்கு பயிற்சி அளிக்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம். சேரன்மகாதேவி தொகுதியில் உள்ள கிராமங்களில் தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*(ஆ)* 1993-98 வரை அனைத்து உதவி வேளாண்மை அலுவலர் பகுதியிலும் தலா 25 சிறு/குறு விவசாயப் பண்ணை மகளிர் தேர்வு



2002 ஏப்ரல் 26]

செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1999 முதல் இன்று வரை பயிற்சி பெற்ற/பயிற்சி பெற பண்ணை மகளிருக்கு தொடர்பணி மற்றும் சுய உதவிக்குழு அமைப்பது பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குழுவிற்கு விரிவாக்கம் மற்றும் வேளாண் தொழில்நுட்பங்கள் தெரிவிக்கப்படுகின்றன. படிப்படியாக அனைத்துக் கிராமங்களிலும் குழு அமைக்கும் பணி நடைபெறும். அடுத்த ஆண்டு இத்திட்டம் நிறைவு பெறுகிறது.

37—

## ஆதிதிராவிட விடுதி

**வினா 6762—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2001-2002 ஆம் கல்வியாண்டில் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் ஆதிதிராவிட விடுதிகளில் கூடுதலாக மாணவ, மாணவியர்களைச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இதுதொடர்பாக செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

38—

## பேருந்துகள் நிறுத்துதல்

**வினா 8895—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், குறிஞ்சி நகர் செக்போஸ்ட்டில் அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகளுக்கு நிறுத்தம் ஏற்படுத்தித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை— [2002 ஏப்ரல் 26

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி, குறிஞ்சி நகர் செக்போஸ்ட்டில் தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் அனைத்தும் நிறுத்தம் செய்து பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன.

39—

## நகரப் பேருந்து

**வினா 9686—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நாகர்கூடல் ஊராட்சி, தருமபுரி-நல்லம்பள்ளி, நாகர்கூடல் வழியாக கழனிகாட்டூர், நடப்பனஅள்ளி, இண்டூர் வரை எண் 2 நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரியிலிருந்து நல்லம்பள்ளி, நாகர்கூடல், கழனிகாட்டூர், நடப்பனஅள்ளி, இண்டூர் வரை உள்ள வழித்தடத்தின் நீளம் 31 கி.மீ. ஆகும். இதில் தற்போதுள்ள அரசு ஆணைப்படி யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமங்களுக்கு மட்டுமே 30-வது கி.மீ.-ல் இருந்து 35-வது கி.மீ. வரை நீட்டித்து இயக்கப்படும். ஆனால் பேருந்து வசதி கோரியுள்ள (நல்லம்பள்ளி முதல் இண்டூர் வரை) தடம் முழுவதும் நகரப் பேருந்து வசதி பெற்றுள்ளதால், நகரப் பேருந்து தடம் எண் 2-ஐ மாற்றி இயக்கிட இயலாத நிலை உள்ளது.

40—

## கூடுதல் பேருந்து

**வினா 9693—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 26]

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, தருமபுரி-பிக்கிலி பெரியூர் வரை கூடுதலாகப் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகர் பேருந்து தடம் எண் டி.12 மூலம் கோரியுள்ள தருமபுரி-பெரியூர் வழித்தடத்தில் நாளொன்றுக்கு 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் பேருந்து தடம் எண் டி.12சி-ன் மூலம் தருமபுரியிலிருந்து பிக்கிலி கிராமத்திற்கு பெரியூர் கிராஸ் வழியாக நாளொன்றுக்கு 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்சமயம் உள்ள நிதி நிலைமையில் புதியதாக கூடுதலாகப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

41—

## புதிய வழித்தடம்

**வினா 9714—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து மல்லூர் வாழக்குட்டப்பட்டி, வாணியம்பாடி வழியாக வீரபாண்டிக்கு புதியதாக வழித்தடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-வீரபாண்டி (வழி) மல்லூர், வாழகுட்டப் பட்டி, வாணியம்பாடி வழித்தடம் சுற்று வழித்தடமாகும், இதை நேரடி

பயணிகள் பயன்படுத்த மாட்டார்கள். இவ்வழித்தடத்தில் தற்போது தனியார் நகரப் பேருந்து ஒன்று (தடம் எண் 18) தினசரி 10 நடைகளுடன் இயக்கப்பட்டு வருகின்றது. மேலும் பகுதிவாரியாக கீழ்க்கண்டவாறு நகரப் பேருந்து வசதி உள்ளது.

| வ.எண் | பகுதி | பேருந்துகளின் எண்ணிக்கை | நடைகள் |
|---|---|---|---|
| 1. | சேலம்-மல்லூர் (13.2 கி.மீ.) | 25 | 282 |
| 2. | மல்லூர்-வாணியம்பாடி (6.2. கி.மீ.) | 2 | 12 |
| 3. | வாணியம்பாடி-பாலம்பட்டி (3.5. கி.மீ.) | 1 | 8 |
| 4. | பாலம்பட்டி-வீரபாண்டி (0.3 கி.மீ.) | 13 | 150 |

இவ்வழித்தடத்தில் பயணிகள் அடர்வு 46% மட்டுமே உள்ளது. எனவே மேற்கூறியவாறு தற்போதுள்ள பேருந்துகள் மூலமாகவே இவ்வழித்தடம் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

42—

## போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டுதல்

**வினா 14922—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் தற்போது பகுதி அலுவலகம் மட்டுமே இயங்கி வருகின்றது. இவ்வலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தெரிவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



(ஆ) இடம் தெரிவு செய்யப்பட்டபின், அரசின் நிதி நிலைமைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்து கட்டடம் கட்டப்படும்.

43—

## மின் திட்டத்திற்கான நிலம்

**வினா 11674—திரு. கா.மூ. முனுசாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி சுரங்கத்திற்கு முழு அளவில் நிலம் கையகப்படுத்தப்பட்டபின் மின் உற்பத்தித் திட்டத்திற்கான கட்டுமானப் பணி தொடங்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டத்திற்கான நிலப் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. திட்டத்திற்கென கையகப்படுத்த உத்தேசித்துள்ள மொத்தம் 3616.84.5 ஹெக்டேர் நிலத்தில் 2759.34.0 ஹெக்டேர் நிலத்திற்கு அவார்டு உத்தரவு பிறப்பிக்கப பட்டுள்ளது. மீதி நிலத்திற்கான அவார்டு உத்தரவு பிறப்பிக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இத் திட்டத்தை செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ள திட்ட முனைவர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குமிடையே மின்சாரம் வாங்குவதற்கா ஒப்பந்தம் கையெழுத்தானவுடன் இத்திட்டப் பணிகள் தொடங்கப்படு

44—

## உயிரியல் பூங்கா

**வினா 7643—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு வனம் மற்று சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக் விடையளிப்பாரா—

(அ) வண்டலூர் உயிரியல் பூங்காவில் எத்தனை வகையா உயிரினங்கள் உள்ளன?

[2002 ஏப்ரல் 26

(ஆ) எத்தனை பேர் அன்றாடம் பார்வையிட வருகின்றனர்?

(இ) அதன் மூலம் எவ்வளவு வருவாய் வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வண்டலூரில் 176 வகை வன உயிரினங்களில் மொத்தம் 2004 உயிரினங்கள் உள்ளன.

(ஆ) சராசரியாக 2300 பேர் ஒரு நாளைக்கு பார்வையிட வருகிறார்கள்.

(இ) 2000-2001ஆம் ஆண்டிற்கு உரிய ஆண்டு வருமானம் ரூ.45,46,670/- ஆகும்.

45—

## பசுமை வனம்

**வினா 8389—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் பசுமை வளம் குன்றியுள்ளதா?

(ஆ) அதைப் பெருக்க அரசிடம் என்ன திட்டம் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) குறைந்தளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(ஆ) நீலகிரி மாவட்டத்திலுள்ள மொத்த நிலப்பரப்பளவில் சுமார் 58 சதவீதம் காடுகள், பசுமை மாறா காடுகள், பரந்த புல்வெளிகள், இலையுதிர்க்காடுகள் என பலவகையான காடுகள் உள்ளன. இம்மாவட்டத்தில் மக்கள்தொகை பெருக்கத்தாலும், அதிகமான பயணிகள் வரவினாலும் காடுகளுக்குக் குறைந்தளவில் பாதிப்பு ஏற்படுவது நடைமுறையில் காணப்படுகிறது. இருந்தாலும், நீலகிரி மாவட்டத்தில்



2002 ஏப்ரல் 26]

பசுமை வளம் குன்றாமலிருக்க கடந்த ஐந்து ஆண்டுகளில் பின்வருமாறு சோலா மற்றும் சீகை நாற்றுக்கள் தோட்டங்கள் உருவாக்கப்பட்டு நீலகிரியில் பசுமை வளம் குன்றாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது:

| | | | நடப்பட்ட பரப்பளவு (ஹெக்) 1997-98 முதல் 2001-2002 வரை |
|---|---|---|---|
| (1) | சீகை நாற்றுக்கள் | - | 310.81 ஹெக்டேர் |
| (2) | சோலா நாற்றுக்கள் | - | 194.04 ஹெக்டேர் |
| | மொத்தம் | - | 504.85 ஹெக்டேர் |

மேலும் வனத் துறை, சோலா காடுகளுக்கு கம்பிவேலி அமைத்தல், காலியாக உள்ள நிலங்களில் புதிதாக சோலா நாற்றுக்கள் நடுதல், பொதுமக்களுக்கு மலிவு விலையில் விறகுகள் விநியோகம் செய்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு, இயற்கையை பாதிக்காமல் சுற்றுலாத் தலங்களை கண்டுகளிக்கத் தேவையான வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு நீலகிரியில் பசுமை வளம் குன்றாமலிருக்க பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

46—

## கடைகள் அமைத்தல்

**வினா 8874—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் அகத்தியர் அருவியை ஒட்டி உள்ள இடங்களில் சிமெண்ட் மைதானமாக அமைந்த வனத் துறை இடத்தில் வனத் துறை மூலம் கடைகள் அமைக்க அரசு முன்வந்து வருமானம் பெருக்க ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

உத்தேசம் ஏதும் இல்லை.

[2002 ஏப்ரல் 26

47—

## சான்றிதழ் வழங்குதல்

**வினா 9806—திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, தேனி வட்டாட்சியர், உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்திலும், தேவர் இனத்தவர்களுக்கான ஆப்பநாடு கொண்டயம் கோட்டை மறவர் சான்றிதழ் மற்றும் தெலுங்குப்பட்டி செட்டி சான்றிதழ் வழங்கப்பட்டு வந்ததைப் போல மறுபடியும் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டத்தில் தேனி மற்றும் உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள ஆப்பநாடு கொண்டயம் கோட்டை மறவர் மற்றும் தெலுங்குபட்டி செட்டி வகுப்பினருக்குச் சாதிச் சான்றிதழ் வழங்க தேனி மற்றும் உத்தமபாளையம் வட்டாட்சியர்களுக்கு தேனி மாவட்ட ஆட்சித் தலைவரால் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

48—

## ஊனமுற்றோர் வேலைவாய்ப்பு

**வினா 12897—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைக்காக பதிவு செய்து காத்திருக்கும் உடல் ஊனமுற்றோர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) எந்த ஆண்டு வரையில் பதிவு செய்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது?



2002 ஏப்ரல் 26]

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 31-12-2001 முடிய சேலம் மாவட்டத்தில் வேலைக்காக பதிவு செய்து காத்திருக்கும் உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை 3,43. ஆகும்.

(ஆ) பொதுவாக அனைத்து நியமனங்களுக்கும் அரசால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், காலியிடங்கள் அதிக அளவில் பெறப்படுவதில்லை. 8ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்கள், 1979 மற்றும் 1980-ல் பதிவு செய்தவர்கள் தற்போது நேர்முகப் பேட்டிக்காக அனுப்பப்பட்டு வருகின்றனர். இடைநிலை ஆசிரியர்கள் போன்ற பணியிடங்களுக்கு உடல் ஊனமுற்றோர்கள் பதிவு செய்தவுடன் வேலைவாய்ப்பு பெறும் நிலை உள்ளது.

49—

## பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு பதிவு செய்தல்

**வினா 16148—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருப்போர் பட்டியலில் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு முடித்து பதிந்துள்ளவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 31-12-2001 நிலவரப்படி பதிவு செய்து காத்திருப்போர் பட்டியலிலுள்ள பட்டம் மற்றும் பட்டயதாரர்களின் விவரம்:

| | | |
|---|---|---|
| 1. பட்டப் படிப்பு | - | 6,045 |
| 2. பட்டயப் படிப்பு | - | 1,404 |

50— [2002 ஏப்ரல் 26

### அரசு விளம்பரங்கள்

**வினா 11432—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வெளியாகின்ற எந்தெந்த நாளிதழ்களில் அரசு விளம்பரங்கள் வெளியாகின்றன?

(ஆ) எதன் அடிப்படையில் விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், அரசு சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை வெளியிட தமிழ்நாடு அரசின் அங்கீகாரப் பட்டியலில் தமிழ், ஆங்கிலம், இந்தி, குஜராத்தி, உருது, தெலுங்கு, கன்னடம், மலையாளம் நாளிதழ்கள் மற்றும் வாரம், மாதமிருமுறை, மாத பருவ இதழ்கள் போன்று மொத்தம் 245 இதழ்கள் உள்ளன. இவற்றில் அரசு விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

(ஆ) அரசு விளம்பரங்களின் தன்மைக்கேற்ப அவை சென்றடைய வேண்டிய மக்கள், இடம் ஆகியவற்றின் அடிப்படையில் விளம்பரங்கள் வெளியிடப்பட வேண்டிய நாளிதழ்கள் தேர்வு செய்யப்படுகின்றன. அதிக எண்ணிக்கையில் விற்பனையாகும் பத்திரிகைகளுக்கு மட்டுமின்றி சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரங்கள் அளிக்கப்படுகின்றன. பத்திரிகைகளின் அணுகுமுறை மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றையும் கருத்திற்கொண்டு அரசு விளம்பரங்கள் அளிக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### கிருஷ்ணா நதிநீர்த் திட்டப் பணி—ஆந்திரத்திற்கு மத்திய அரசு நிதி உதவி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்குக் குடிநீர் வழங்கக்கூடிய தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு, ஆந்திர அரசுக்கு மத்திய அரசு 60 கோடி ரூபாய் வழங்கியுள்ளதாக, ஆந்திர பொதுத் துறை அமைச்சர் மாண்புமிகு சந்திரமோகன் ரெட்டி அவர்கள் நெல்லூரிலே ஒரு பேட்டியிலே கூறியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசும் ஏற்கெனவே இதற்கான முழு முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு நம்முடைய பகுதிக்கு மத்திய அரசு ஏதாவது நிதி உதவியை—அந்த 60 கோடி ரூபாயிலே நமக்கு ஏதாவது பங்கு உண்டா அல்லது நமக்குத் தனியாக மத்திய அரசு— கொடுக்குமா; ஒருவேளை மத்திய அரசு கொடுக்கவில்லையென்று சொன்னால், நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி நாமும் 60 கோடி ரூபாயை இந்தத் திட்டத்திற்குப் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்குக் குடிநீர் வழங்குகின்ற கிருஷ்ணா திட்டத்திற்கோ, அதனுடைய பணிகளுக்கோ அல்லது மேம்பாட்டுப் பணிகளுக்கோ மைய அரசிலிருந்து தமிழக அரசுக்கு எந்தவித நிதியொதுக்கீடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கிட்டத்தட்ட அதனுடைய பராமரிப்புச் செலவிற்காக, ஒரு வாரத்திற்கு முன்பாக, 84 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் ...

**திரு. வி.கே. லட்சுமணன்:** பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அறையிலே வந்து சொல்கிறேன்.

[2002 ஏப்ரல் 26

## 3. அறிவிப்பு

### கவன ஈர்ப்பு ஒத்திவைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-இன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு, உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மதிப்பீட்டுக் குழு, தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கல்லூரிக் கல்வி குறித்த குழுவின் ஆறாவது அறிக்கையினையும், குடிநீர் வழங்கல் குறித்த குழுவின் ஏழாவது அறிக்கையினையும், குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2001-2002ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 68 முதல் 75 வரையிலான 8 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



2002 ஏப்ரல் 26]

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை நடத்தாமல் கால நீட்டிப்புச் செய்வது என்பது சரியாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அறிமுகம்தான்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அறிமுக நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அதை எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதோடு முடித்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2002 ஏப்ரல் 26

## 6. மானியக் கோரிக்கைகள், 2002–2003, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**கோரிக்கை எண் 43–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 43-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.411,11,50,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 5262, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சத்துணவுத் திட்டத்தில் வாரம் ஒருமுறை முட்டை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 631, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சத்துணவுத் திட்டத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு கோழி, ஆட்டு மாமிசம், முட்டை, பால் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2002 ஏப்ரல் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7442, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3820, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6594, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3933, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

53-115—6a

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3955, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1375, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7767, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர், திருவாலங்காடு, திருத்தணி ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் திருத்தணி பேரூராட்சியில் இயங்கிவரும் குழந்தைகள் காப்பகத்திற்கு உரிய கட்டட வசதி இல்லை என்பதால் உடனடியாகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6659, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1976, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2562, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாரமங்கலம் தொகுதி, முத்துநாய்க்கன்பட்டி ஊராட்சி, புதூர் காடம்பட்டியில் சமுதாயக் கூடம் ஒன்று அரசு கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7070, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5838, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7207, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 855, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7184, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னையில் சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்துவதில் புதிய நடைமுறைகளைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1860, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7004, திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சத்துணவுத் திட்ட அலுவலகங்களுக்கு உடனடியாகக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1037, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8287, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7040, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5896, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முதியோர், விதவைகள், ஊனமுற்றோர் ஆகியோருக்கு வழங்கப்படும் மானியத் தொகைக்குரிய கணக்குகளைக் கணினியில் பதிவு செய்ய வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1449, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7791, திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6103, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2725, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதரவற்ற விதவைகளுக்குத் தையல் மிஷின் இலவசமாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5144, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாளையங்கோட்டை தொகுதி, உடையார்குளம் ஊராட்சியில் புதியதாகச் சத்துணவுக் கூடம் அமைப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5532, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே. என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சத்துணவுத் திட்டத்தில் வழங்கப்படுகிற சத்துணவு விகித அளவினை உயர்த்துவது பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4744, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6338, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 6006, திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், களியல் வருவாய் கிராமத்தில் மோதிரமலை பகுதியிலுள்ள பழுதடைந்த சத்துணவுக்கூடக் கட்டடத்திற்குப் பதிலாக புதிய சத்துணவுக்கூடக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8187, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '6-9-2001 அன்று நடைபெற்ற சத்துணவு மானியக் கோரிக்கையில் சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் பட்டதாரிகளுக்கு, அவர்களது கல்வித் தகுதிக்கேற்றவாறு பிற துறைகளில் பணி நியமனம் செய்யப்படும் என்று மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் உறுதி அளித்தார்கள். அந்த உறுதிமொழியின்படி அவர்களுக்குப் பிற துறைகளில் பணி வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3851, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுரை மாவட்டத்தில் காலியாக உள்ள சத்துணவு மைய அமைப்பாளர் பணியிடங்களை நிரப்ப வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 347, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6526, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7127, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4488, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 419, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறையில் உள்ள கருமலை, முடிஸ், ஹைபாரஸ்ட் சிங்கோன் போன்ற இடங்களிலுள்ள பள்ளிகளில் பாதுகாப்பற்ற முறையில் உள்ள சத்துணவுக் கூடங்களைச் சீர்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4616, செல்வி .க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல்லில் உள்ள முதியோர், விதவைகள், வறியவர்களுக்கு நிவாரண உதவி பெறுவதற்கு வயது, வருமானம் குறித்த தகுதி



நிர்ணயிப்பதில் விதிகளைத் தளர்த்த வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7347, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகாசி சட்டமன்றத் தொகுதியில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பெண்கள், சிறு தொழில்கள் தொடங்க கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8087, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மூன்று சக்கர சைக்கிள் வழங்கக் கோரி ஊனமுற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கும் கோரிக்கைக்குத் தக்கபடி, உடன் சைக்கிள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.411,11,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு பேரவையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அறிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின் மீதான விவாதம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லட்சுமணன், சொல்லுங்கள்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அழகான கொள்கை விளக்கக் குறிப்பிலே இரண்டாவது பக்கத்திலே ஒரு கவிதை வரி குறிப்பிடப்பட்டிருக்கிறது. "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கவிதைகளின் சொந்தக்காரார் பாரதியார். ஆனால் இங்கே பாரதிதாசன் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்தத்தை ஏற்றுக்கொள்ளச் சொல்வோம். இரண்டு பேரும் சண்டைக்கு வரப்போவதில்லை. மானியக் கோரிக்கையின்மீது விவாதம், திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை கோரிக்கை எண் 43, மானியத்தில் என்னைப் பேசப் பணித்த எனது ஞானத்தந்தை உலகத் தமிழ் மக்களின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கும் என்னை வழி நடத்திச் செல்லும் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், எனது வழிகாட்டி, எனது அரசியல் ஆசான் அண்ணன், சென்னை மாநகர மேயர் அவர்களுக்கும், இந்த அவையிலே பேச அழைத்த தங்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 202 முதல் 294 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் குறிப்பாக வரவேற்றுப் பேசும் வகையில் எந்த அம்சமும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கொள்கை விளக்கப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள திட்டங்கள், திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் யாவும் சென்ற ஆண்டைவிட மிகக் குறைந்த அளவில்தான் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், திட்டத்தில் அடையவேண்டிய இலக்குகளும் சென்ற ஆண்டைவிடக் குறைந்த மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள நிதி கடந்த ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கு முழுமையாகக் கிடைக்குமா என்பதுதான் என் கேள்வி. 1989-ல் கலைஞர் அரசால் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் கொண்டு வரப்பட்டதன் நோக்கம் விண்ணப்பதாரர்கள் கல்வித் தகுதியாக 5-ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் என்பது பெண்கள் கல்வி அறிவு இல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காகவும் திருமண உதவித் திட்டம் பெறுவதற்காக வேண்டி இவர்கள் படிப்பார்கள் என்ற நல்ல எண்ணத்துடனும் தொடங்கப்பட்ட திட்டம்; இப்பொழுது முடக்கப்பட்டுள்ளது. 1985-ல் தொடங்கிய அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் நிதி உதவித் திட்டத்தில், சேர்க்கப்படுபவர்கள் அநாதைகளாக இருக்க வேண்டும் என்று செயற்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அநாதைப் பெண்கள் என்று எப்படி இனம் கண்டுகொள்வது? அவர்கள் ஏதாவது பாதுகாப்பு மையங்களில் வளர்ந்து வருபவர்களாக இருந்தால்தான் அநாதை என்று கணக்கிட முடியும். இத்திட்ட அமைப்பில் சாத்தியக் கூறு எப்படி இருக்கும் என்று புரியவில்லை. இத்திட்டத்தில் ஏகப்பட்ட குளறுபடிகள் இருக்கின்றன. மகளிருக்கு வழங்கப்படும் அந்தத் தையல் இயந்திரங்கள் கடந்த ஆண்டு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

முற்பகல் 11-30

தீபாவளி மற்றும் பொங்கல் நன்னாட்களில் இலவச வேட்டி, சேலை மட்டும் வழங்கப்படுவதாகச் செயற்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தீபாவளிக்கும் பொங்கலுக்கும் யாருக்கும் இலவச வேட்டி, சேலை வழங்கப்படவில்லை, ஏன்? அடுத்து உடல் ஊனமுற்றோர் நலன்....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, மொத்தமாகப் பதிலுரையில் சொல்லி விடுங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மற்றவற்றைப் பதிலுரையில் சொல்கிறேன். இது முக்கியமான பிரச்சினை. சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். திரு. அன்பில் பெரியசாமி, கொஞ்சம் உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தையல் இயந்திரங்கள் வழங்கப்படவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் பொய்யாமொழி அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பில் பெரியசாமி என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** திரு. அன்பில் பெரியசாமி அவர்கள் இங்கே சொன்னார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற இந்த விஷயம் பற்றிப் போனமுறை நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தில் நான் பதில் அளித்துப் பேசுகிறபோது பல்வேறு புள்ளிவிவரங்களையெல்லாம் இதே மன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறேன். ஆனால் இந்த முறை தி.மு.க. ஆட்சியிலே ஒப்பந்தம் செய்யப்பட்டு தையல் இயந்திரங்கள் வழங்கப்படாமல் என்ன காரணத்தினாலோ நிலுவையிலே நிறுத்தி வைக்கப்பட்டன. அந்த தையல் இயந்திரங்களைப் பற்றி, இப்போது எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராகப் (மேசையைத் தட்டும் ஒலி) பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து தையல் இயந்திரங்கள் வழங்கப்படாத விதத்தை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு தையல் இயந்திரங்கள் சப்ளை செய்யக்கூடிய ஐதராபாத் நிறுவனத்தோடு பேசி, விளக்கங்களைக் கேட்டுப் பெற்று இந்த ஆண்டு கடந்த நான்கு மாதங்களாகத் தையல் இயந்திரங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. அன்பில் பெரியசாமி:** அடுத்து உடல் ஊனமுற்றோர் நலன். உடல் ஊனமுற்ற பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை கடந்த ஆண்டு முதல் வழங்கப்படவில்லை என்பதையும், உடல் ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு வந்த பராமரிப்புத் தொகையும் கடந்த ஆண்டு முதல் வழங்கப்படவில்லை என்பதையும் வருத்தத்துடன் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



நேற்றையதினம் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த உடல் ஊனமுற்றோர் அமைப்பினர் எல்லா உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் மனுவைத் துண்டுப் பிரசுரமாகக் கொடுத்துள்ளார்கள். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கும். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு முழுக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல கல்லூரிப்படிப்புப் படித்துள்ள பட்டதாரி பார்வையற்றோர் சங்கத்தினர் கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். அதுவும் அரசின் கவனத்திற்கு வந்திருக்கும். அவர்களின் கோரிக்கையிலும் அரசு கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வை வளமாக அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டத்திற்கு வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தைச் சிறப்பாக்கும் வகையிலே பிரதான சத்தான முட்டையை வாரம் ஒருமுறை சத்துணவுடன் வழங்கிட கலைஞர் அரசு ஆணை பிறப்பித்துச் செயல்படுத்தியது. ஆனால் அந்தத் திட்டத்தைத் தலைவர் அவர்கள் கொண்டுவந்த காரணத்தாலோ என்னவோ இன்று மாற்றி ஏழை எளிய, அந்தச் சத்துணவுப் பள்ளியில் படிக்கும் சிறார்களுக்கெல்லாம் கொண்டைக் கடலையும் அதைப்போல உருளைக் கிழங்கும் வழங்கி, இது சிறப்பான சத்துணவு என்று கூறிக் கொடுக்கிறார்கள். ஆனால் வாரத்துக்கு ஒருமுறை உருளைக்கிழங்கு வழங்குகிற இந்தத் திட்டத்தில் ஓர் உருளைக்கிழங்கை வாங்கி ஐந்தாறு துண்டுகளாக வெட்டி ஏழை மாணவர்களுக்கு அளிக்கிறார்கள். இத்திட்டத்தை எப்படிச் செயல்படுத்தப் போகிறார்கள் என்று அரசு கவனத்தோடு கண்காணிக்க வேண்டும்.

மேலும் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த முட்டை உற்பத்தியாளர்கள் மாதம் ஒன்றுக்கு 1.5 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வருகிற வகையில் செயல்படுத்தி வந்த இத்திட்டத்தை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால் இந்தத் தமிழக அரசு ஏழை எளிய மக்களுக்குப் பயன்படுகின்ற திட்டங்களை வகுத்திருக்கிற இந்த வேளையிலே இந்த முட்டை வழங்குகிற திட்டத்தைப் பற்றி மறுபரிசீலனை செய்து ஏழை எளிய மாணவர்களுக்கு வழங்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குத் தேவையான சில கோரிக்கைகளை இந்த அவையில் பதிவு செய்ய விழைகிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மகளிர் மீதான

குற்றங்களை விசாரிப்பதற்கு என்று சென்னை மற்றும் கோவையில் மகளிர் நீதிமன்றங்கள் அடுத்த ஆண்டில் தொடங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தின் மையப் பகுதியாக இருக்கிற திருச்சியிலும் ஒரு மகளிர் நீதிமன்றம் அதே நிதியாண்டில் அமைக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாநகரம் பல விஸ்தரிப்புப் பகுதிகளைக் கொண்டது. அதன் காரணமாக மக்கள் தொகை அதிகரிக்கும்போது அவர்களுக்குத் தேவையான குடிநீர் மாநகராட்சி மூலம் முறையாகக் கிடைக்க வழியில்லை. எனவே அதைச் சமாளிக்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் மாநகராட்சி பல மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டி முடிக்கும் தறுவாயில் உள்ளது. அதை நிரப்ப வேண்டுமானால் தற்போதுள்ள காவிரியாற்றுப் படுகையில் உள்ள கம்பரசம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து இறைக்கும் நீர் நிச்சயமாகப் பற்றாத நிலையில் உள்ளது. எனவே, எல்லாப் பகுதிகளுக்கும், குடிநீர் தங்குதடையின்றிக் கிடைத்திட, திருச்சி மாநகர மக்களுக்கென்று காவிரியாற்றுப் படுகையிலோ அல்லது கொள்ளிடம் ஆற்றுப் படுகையிலோ புதிய 2 நீரேற்று நிலையங்கள் அமைத்திட அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

திருச்சி மாநகரில், பெண்கள் பட்ட மேற்படிப்புப் பயில கல்லூரிகள் இருப்பினும், தனியார் மற்றும் சுயநிதிக் கல்லூரிகள்தான் மிகவும் அதிகம். வறுமைக் கோட்டிற்குக் கீழே, மிகவும் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த, மேற்படிப்புப் படிக்க ஆர்வம் உள்ள மகளிர், குறைந்த கட்டணத்தில் பயில, அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை திருச்சி நகரின் மையப் பகுதியிலே தொடங்கிட அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கிட்டத்தட்ட 30 அல்லது 40 ஆண்டுகளுக்கு மேலாகச் சொந்த இடத்தில் வாழும் மக்களுக்கு, இதுவரை பட்டா கிடைக்காதவர்களுக்குப் பட்டா வழங்கவும், கோயில் நிலங்களில் 20 வருடங்களுக்கு மேலாக வாழ்பவர்களுக்கும் குடிசைவாழ் பாமர மக்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கவும் அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். திருச்சி; தலைமை நீதிமன்றம் அருகில், டாக்டர் எம்.ஜி.ஆர். சிலையையொட்டி





உள்ள உய்யகொண்டான் ஆற்றின் குறுக்கே உள்ள குறுகிய ஆற்றுப்பாலம் மற்றும் உறையூர்-குளமுனி ரோட்டில், குடமுருட்டி ஆற்றின் குறுக்கே உள்ள குறுகிய ஆற்றுப் பாலம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க பாலங்களை அகலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்து, விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மாநகராட்சிப் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் உள்ளனர். அரசு தனிக் கவனம் செலுத்தி, அவர்களை நிரந்தரமாக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்வரும் காலங்களில் திருச்சியில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்த, ரூ.50 கோடி செலவில் தடுப்பணை கட்ட கடந்த அரசு, அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. அதேபோல், 2001-2002 நிதிநிலை அறிக்கையிலேயும் குறிப்பிட்டுள்ளீர்கள். அந்தத் திட்டத்தின் பணி எந்த அளவில் உள்ளது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

நான் நிறைய நேரம் பேச இருந்தாலும், கொள்கை விளக்கக் குறிப்புகள், நேற்று இரவுதான் எனக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஏனென்று கேட்டால், இதற்கு முன்னால் வந்த மானியக் கோரிக்கைகளுக்கெல்லாம், 2, 3 தினங்களுக்கு முன்பாக எங்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைத்தன....(குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அதற்கு நான் சொல்லிவிடுகிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று...(குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் காலையிலேயே சட்டமன்ற வளாகத்திற்கு உள்ளேயே டேபிளில் வைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவையிலே இல்லை. பாதி நேரம் வெளிநடப்புச் செய்துவிட்டு, வெளியிலே போய்விட்டார்கள். ஆகவே, படிப்பதற்குக் கால அவகாசம் இருந்திருக்காது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையிலேயே வைத்தாகிவிட்டது. (குறுக்கீடு) திரு. அன்பில் பெரியசாமி, காலையிலேயே பேரவையிலே வைத்து விட்டார்கள்.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை புத்தகத்தைக் காலையிலேயே வைத்துவிட்டார்கள். செயற்குறிப்புத் திட்டம் எங்களுக்கு இரவுதான் கிடைத்தது. அதையும் நீங்கள் கவனத்திலே கொண்டு, வருங்காலங்களிலே அதுபோலக் குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்த அளவுக்கு என்னை இந்த மானியக் கோரிக்கையிலே பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமிக்கு மிகவும் பாராட்டுகள், திரு. கே.பி. அன்பழகன்.

***திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, சின்னதொரு கிராமச் சூழ்நிலையில் இருந்துவிட்டு, கழகப் பணி செய்து கொண்டிருந்த எனக்கு, 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலிலே, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராகும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தவர் எங்கள் அன்புத் தாய். அதன்பின், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா பேரவையினுடைய மாவட்ட இணைச் செயலாளராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் எங்கள் அன்புத் தாய். அதற்கு அடுத்தாற்போல, காரியமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் எங்கள் அன்புத் தாய். அதற்கடுத்து, தருமபுரி தெற்கு மாவட்ட கழகச் செயலாளராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பினை நல்கிய எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள்தான்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே, பாலக்கோடு தொகுதியில், என்னை வெற்றிபெறச் செய்வதற்காக வருகை தந்தபோது, தேர்தல் கமிஷன் அனுமதி நேரத்திற்கு மேலாகிவிட்ட நிலையிலும், பேசுகின்ற வாய்ப்பு இல்லையென்றாலும், வழிநெடுக இருந்த தாய்மார்களையும் பொது மக்களையும் பார்த்து, ஒவ்வோர் இடத்திலேயும் நிறுத்தி, மக்களைச் சந்தித்துவிட்டுச் சென்றதன்மூலம், கிட்டத்தட்ட 40 ஆயிரம் வாக்குகளுக்கு மேல் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்து, சட்டமன்ற உறுப்பினராக ஆகின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தவர் எங்கள் அன்புத் தாய். இந்த மாமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்புக்கு அடிக்கல் எடுத்து வைத்த எங்கள் அன்புத் தாயை வணங்கி, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை அவர்களின் பொற்பாதங்களிலே சமர்ப்பித்து வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், தொகுதியைச்



சேர்ந்த பொது மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடையாளம் காட்டிய நபர்களையும், தருமபுரி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட 5 தொகுதிகளிலும் வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், உறுதுணையாக இருந்து பணியாற்றிய கழக உடன்பிறப்புகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பு அளித்தமைக்குத் தங்களுக்கு நன்றியைக் கூறி...

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனையோபேர் ஆளும் கட்சியிலே கன்னிப் பேச்சையே இன்னும் தொடங்காமல் இருக்கிறார்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** தத்தித் தத்தி வரும் தன் குஞ்சுகளைத் தாய்ப் பறவை பொத்திப் பொத்திக் காப்பதுபோல இந்த இயக்கத்தையும், இதன் மூலம் தாய்த் திருநாட்டையும் காப்பாற்ற இராப்பகலாகச் சிந்திக்கும் தெய்வத் தாய் நம் புரட்சித் தலைவி அவர்கள். அதனால் தானோ என்னவோ நமது முன்னோர்கள் 'தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை' என்று அன்றே சொல்லி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

காலக் கள்வனால் டாக்டர் புரட்சித் தலைவர் கவர்ந்து செல்லப்பட்ட நிலையில், மாலுமியை இழந்த கப்பலாய், மன்னனை இழந்த இராஜ்ஜியமாய், குடும்பத் தலைவனைப் பறிகொடுத்த இல்லமாய் தவித்துத் தடுமாறிய நிலையில், அன்பு பொழியும் தாயாய், ஆற்றல் மிகுந்த தலைவியாய் இந்த இயக்கத்தையும் இலட்சோப இலட்சம் தொண்டர்களையும் காத்திடத் துணிந்து முன்வந்தவர் நமது இலட்சியத் தாய். (மேசையைத் தட்டும் ஒலி)

தாயுள்ளத் தலைவியின் ஐந்தாண்டுகால நல்லாட்சி தமிழகத்தின் பொற்கால ஆட்சியாகத் திகழ்ந்தது. தாய்மார்கள், குழந்தைகள், தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், சிறுபான்மைச் சமுதாயத்தினர் நன்மை பெற்றனர். இத்தனைக்கும் மேலாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு 69 சதவீத இட ஒதுக்கீடு கிடைக்கத்தக்க வகையில் அரசியல்

[திரு. கே.பி. அன்பழகன்] [2002 ஏப்ரல் 26

சட்டப் பாதுகாப்பைப் பெற்றுத்தந்த பெருமாட்டி நம் புரட்சித் தலைவிதான் என்பது சரித்திரச் சிறப்புக்குரிய ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

'உலகின் உன்னதப் பெண்மணி' என்றும் 'மகிள சிரோண்மணி' என்றும் 'இரும்பு மனுஷி' என்றும் போற்றப்படும் நமது மாண்புமிகு அம்மா புரட்சித் தலைவி அவர்கள் பெண்களுக்காகக் கொண்டு வந்த 15 அம்சத் திட்டத்தையும், தொட்டில் குழந்தைத் திட்டத்தையும் குறித்து, உலகப் புகழ் பெற்ற நோபல் பரிசு பெற்றவரும் லோகமாதா என்று உலக மக்களால் புகழப்படுபவருமான அன்னை தெரசா அவர்கள், புரட்சித் தலைவி அவர்கள் இல்லத்திற்கே வந்து நேரில் பாராட்டிப் புகழ்ந்து வாழ்த்தியது வேறு யாருக்குமே கிடைக்காத பேறாகும்; பெருமையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்தனை பெருமைகளுக்கும் சிறப்புகளுக்கும் உரிய கீர்த்தி பெற்ற ஒருவரைத் தலைவியாய்ப் பெற்ற நமக்கெல்லாம் பெறற்கரிய பெரும் பேறாகும்!

தாய்மையின் தலைமையில்தான் இனித் தமிழகம் செழிக்கப் போகிறது; தமிழினம் தழைக்கப்போகிறது!

உலக அரங்கில் இந்தியாவின் பெருமையும், இந்திய அரங்கில் தமிழகத்தின் பெருமையும் உயர அம்மா, நீங்கள் பல்லாண்டு வாழ வேண்டும்; நல்வாழ்வு வாழ வேண்டும்.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் காண விரும்பிய ஆட்சி மாற்றத்தைப் புத்தாயிரம் ஆண்டான இந்த 21 ஆம் நூற்றான்டிலே உருவாக்கிக் காட்டிய புரட்சித் தாய் எங்கள் அம்மா அவர்கள்.

'கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக' என்றார் வள்ளலார். எந்த ஆட்சி கருணையிலாத ஆட்சி என்று நான் சொல்லத் தேவையில்லை. அது ஒழிக்கப்பட்டுவிட்டது! (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்த வரியிலேயே 'அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க' என்றார் வள்ளல் பெருமான்.

அருள் மாதாவாகவும், நன்மார்க்கம் காட்டுபவராகவும் உள்ள மக்கள் சக்தியின் மறுவடிவாகவும், தாயுள்ளத்தின் தலைசிறந்த எடுத்துக்

V2ll,31'P02 P02.25.1



2002 ஏப்ரல் 26] [திரு. கே.பி. அன்பழகன்]

காட்டாகவும் விளங்கிவரும் எங்கள் அம்மா புரட்சித் தலைவி ஆள வந்துள்ளார்.

துன்மார்க்கர் ஆட்சி ஒழிந்து நன்மார்க்கர் ஆட்சி மலர வழி வகுத்த தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வது எங்கள் நீங்காத கடமையாகும்.

சகிப்புத் தன்மை கொண்டவர்களால்தான் சாதிக்க முடியும்; பொறுமையுள்ளவர்கள் பெருமை அடைவார்கள்; எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்களே தலைமை தாங்கும் தகுதியைப் படைத்தவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டிய பெருமை எங்கள் புரட்சித் தலைவிக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

எத்தனை சோதனைகள், எத்தனை வேதனைகள், எத்தனை சங்கடங்கள், எத்தனை சதி வழக்குகள், தனிப்பட்ட அரசியல் கோப தாபங்களைத் தீர்த்துக்கொள்ள தனி நீதிமன்றங்கள், பழிவாங்கும் நோக்கத்தோடு பின்னப்பட்ட பொய் வழக்குகள், அத்தனையையும் தாங்கி தகர்த்து எறிந்து சதி வலைகளைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்தவர் தான் புரட்சித் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி)

பொய் வழக்குகளை எல்லாம் நீதிமன்றத்தில் சந்திப்பேன், நான் நிரபராதி என்பதை நிரூபித்துக் காட்டுவேன் எனச் சபதம் செய்து, சபதத்தை நிறைவேற்றிக் காட்டினாரா; இல்லையா?

குற்றமற்றவர் என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததன் மூலம் சத்தியம் வெற்றி பெற்றது.

ஆண்டிப்பட்டி மக்களால் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு மீண்டும் முதலமைச்சர் ஆனதன் மூலம் ஜனநாயகம் வெற்றி பெற்றுவிட்டது.

எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத காலத்திலே, தருமபுரி மாவட்டம், அரூர் ஒன்றியம், வேப்பம்பட்டிக்கு அருகில் வசித்து வந்த சுதந்திரப் போராட்டத் தியாகி திரு. பொன்னுசாமி அவர்கள் சாப்பிடுவதற்கு உணவு இல்லாமல் வருத்தப்பட்ட நிகழ்ச்சியை தொலைக்காட்சி [illegible] எடுத்து ஒளிபரப்பியபோது, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தொலைக்காட்சியில் அதைப் பார்வையிட்டவுடன் அந்தக் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியை ஆட்சிப் பொறுப்பில் இல்லாத நேரத்திலே வழங்கிய தியாகச் செம்மல் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை [illegible] நான்

தமிழ்நாடு ... காப்பகம் 224377

[திரு. கே.பி. அன்பழகன்] [2002 ஏப்ரல் 26

கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அத்தோடு இல்லாமல், சமுதாயத்தில் உயர் கல்வி படிப்பதற்காக வாய்ப்புக் கிடைத்தும், அதற்கான பொருளாதாரம் இல்லாத நிலையிலே இருந்தவர்களுக்கு அந்த நேரத்தில் பண உதவி செய்து, அவர்களுக்கு மேல் கல்வி படிப்பதற்காக உண்டான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களே.

*முற்பகல் 11-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு'**

எனப் பாடிய திருவள்ளுவர் இன்று இருந்திருந்தால்,

**'அம்மா முதல நாமெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு'**

என்றுதான் பாடியிருப்பார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அந்த அளவுக்கு இன்றைக்கு நமக்கும், இந்த நாட்டுக்கும் முதலாக, முதல்வராக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவிலேயே முதல்தர மாநிலமாக்கிட முனைந்து உழைக்கின்றார்கள்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' எனப் பாடினார் வடலூர் வள்ளலார். ஆனால், வாடிய இளஞ்சிறார்க்கு வயிறார சத்துணவு வழங்கினார் எட்டாவது வள்ளலாம் நமது புரட்சித் தலைவர். அந்த வள்ளலின் கலை வாரிசாய், அரசியல் வாரிசாய், ஒரே வாரிசாய் விளங்கும் நமது மாண்புமிகு அம்மா அவர்களோ ஆலயங்களில் அன்னதானத் திட்டத்தை அறிமுகப்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) அன்னபூரணியாய், அமுதசுரபியாய் நம் முன்னே காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மா அவர்களின் ஆட்சி அன்பின் ஆட்சியாய், அருளின் ஆட்சியாய், கருணையின் ஆட்சியாய், நம் மக்களின் கண்ணீர் துடைக்கும் ஆட்சியாய் மலர்ந்திருக்கிறது. அம்மா அவர்களின் நல்லாட்சி அளித்துள்ள வரவு-செலவுத் திட்டங்கள் நாட்டுக்குக் கிடைத்த வரப்பிரசாதம்.

கஜானாவையே காலி செய்துவிட்டுப் போனது கடந்த கால ஆட்சி; கருணையே இல்லாத ஆட்சி. கஜானா காலியான நிலையிலும்,



2002 ஏப்ரல் 26] [திரு. கே.பி. அன்பழகன்]

நிதி நெருக்கடி மிகுந்த நிலையிலும், நாட்டு மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் நல்லதோர் நிதிநிலை அறிக்கையைத் தந்துள்ள அம்மா அவர்களுக்கு நாடே நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறது. நல்லவர்கள் எல்லாம் அம்மா அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்தின் நிதிநிலையைச் சரிகட்டவும், நம்முடைய நிகழ்காலத் திட்டங்களை சரிவர நிறைவேற்றவும், அதன்மூலம் மக்கள் நலம் பெறவும் மத்திய அரசு தமிழகத்திற்கு மூவாயிரம் கோடி ரூபாய் அளிக்க வேண்டுமென்று கோரிக்கை எழுப்பியுள்ளார். அதுமட்டுமல்ல, நிதிப் பற்றாக்குறையால் நம்மைப்போலத் தவித்துக் கொண்டிருக்கிற வேறு சில மாநிலங்களுக்கும் மத்திய அரசு நிதி உதவி செய்ய வேண்டும், அதுகுறித்துக் கலந்துபேச முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று முதன்முதலாகக் குரல் கொடுத்திருப்பவர் நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அம்மா அவர்களின் கருத்தை கர்நாடக முதல்வரும், ஆந்திர முதல்வரும், பிற மாநில முதல்வர்களும் வரவேற்கின்றனர். ஆக, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக நமது முதல்வர் அம்மா அவர்கள் விளங்கி வருவது நமக்கெல்லாம் எல்லையில்லாத மகிழ்ச்சியைத் தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லாத் துறைகளையும் போலவே, சமூக நலத் துறையிலும் பல்வேறு சாதனைகளைச் செய்து கொண்டிருப்பது இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு. இந்தியாவிலேயே தமிழகத்தை ஈடு இணையற்ற, முதல்தரமான மாநிலமாக்க பதினைந்து அம்சத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். 2006 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பமே இல்லை என்ற நிலையை எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கிக் காட்டுவார்கள்.

அதேபோல, அனைவருக்கும் கல்வி என்ற புதுமையான, புரட்சிகரமான மாற்றுக் கல்வித் திட்டத்தின்மூலம் கல்வி அறிவு இல்லாதவர்களே தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையையும் உருவாக்குவார்கள். எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் வேலை, எல்லோருக்கும் நல்வாழ்வு என்பதே எங்கள் அம்மா ஆட்சியின் இலட்சியமாகும். அந்த அடிப்படையில் ஊரகப் பகுதிகளில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் வகையிலே தரிசு நிலங்களை மேம்படுத்தவும், தோட்டக்கலை வளர்ச்சி பெறவும், தொடர் பசுமைப்

புரட்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏராளமான கிராம மக்கள் தொழில் வாய்ப்பைப் பெறுவார்கள்.

ஊரகப் பகுதிகளில் வணிகப் பயிர்களை உற்பத்தி செய்வோருக்கு 3 ஆண்டுகாலப் பயிற்சியளிக்கும் புதிய திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள் அனைவருக்கும் சத்துணவு வழங்க வேண்டும், அதுவும் வாழ்நாள் முழுவதும் சத்துணவு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.282 கோடியை ஒதுக்கிய ஆட்சி கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்பார்களே அதுபோல, புரட்சித் தலைவர் பதினாறு அடி பாய்ந்ததால் அறுபதடி பாயும் வேங்கையாக புரட்சித் தலைவி அவர்கள் திட்டங்களைத் தீட்டிச் செம்மையாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

குறை சொல்வதையே கொள்கையாகக் கொண்ட சில கோணல் புத்திக்காரர்கள் கொடை வள்ளல் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த சத்துணவுத் திட்டத்தைக்கூடக் குறை சொன்னார்கள். பிள்ளைகளை எல்லாம் தட்டு ஏந்த வைக்கும் திட்டம் என்றார்கள். டாக்டர் புரட்சித் தலைவர் சினிமாப் படங்களைப்போல 50 நாள் ஓடுமா, 100 நாள் ஓடுமா என்றெல்லாம் கேட்டார்கள். 50 நாளல்ல, 100 நாளல்ல, நான் சாகிறவரைக்கும் இந்தப் பிள்ளைகளுக்குச் சத்துணவுப் போடுவேன் என்று புரட்சித் தலைவர் அறிவித்தார். அறிவித்தபடி அவர் கண்மூடும் வரை கனிமழலைப் பிள்ளைகளுக்குச் சத்துணவு வழங்கினார். அவர் மறைந்த பிறகு அவரது வாரிசாய், எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்கள் அந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி உறுதியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். புரட்சித் தலைவரால் தொடங்கப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வரும் புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டம் தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய திட்டமாகும்.



எவராலும் அழிக்கமுடியாத, ஏழைகளின் பசிப்பிணி போக்கும் புரட்சிகரமான திட்டமாகும்.

அதேபோல தாய்க் குலத்தின் மாணிக்கமாக விளங்கும் எங்கள் அம்மா அவர்கள் மகளிர் முன்னேற்றத்தில் பெரும் அக்கறை காட்டி வருகிறார்கள். பால் பண்ணைத் துறையில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் பயன் பெறத்தக்க வகையில் புதிதாகப் பால் பண்ணைத் திட்டங்களை உருவாக்கி, 145 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்தப் புதிய திட்டத்திற்காக ரூ.6.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எங்கள் மாவட்டமான தருமபுரி, சேலம், ஈரோடு, கோவை, வேலூர், விழுப்புரம் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் இதனால் பெரும் பயனடைவார்கள்.

முற்பகல் 11.50

மகளிர் குற்றங்களை விசாரிக்க அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உலகத்திலேயே முதன்முதலாக ஏற்படுத்தியவர்கள் எங்கள் அம்மா அவர்கள். அதேபோல எதிலும் முதல்வராக விளங்கும் எங்கள் அம்மா அவர்கள் மகளிர் மீதான வழக்குகளை விசாரிக்க சென்னையிலும், கோவையிலும் மகளிர் நீதிமன்றங்களை உருவாக்கி இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே முன்னுதாரணமாக விளங்கி வருகிறார்கள்.

பிளஸ் 1, பிளஸ் 2 படித்து வரும் ஆதிதிராவிட, பழங்குடி மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை அறிவித்து அவர்களின் வாழ்வில் விளக்கேற்றி வைத்துள்ளார்கள். பெண்களையும் குழந்தைகளையும், தங்களின் இரு கண்களென மதிக்கின்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அந்த வகையிலே, கடந்த முறை அவர் ஆட்சி இருந்தபோது குழந்தைகள் நலனில் பெரிதும் அக்கறை காட்டிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் 'பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' என்ற புரட்சிகரமான திட்டத்தை 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார்கள். அதேபோல 1993 ஆம் ஆண்டு டாக்டர் அம்மா அவர்கள் '15 அம்ச குழந்தைகள் நலத் திட்டம்' என்ற பெயரால் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இத் திட்டம் இப்போது 'தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

[திரு. கே.பி. அன்பழகன்] [2002 ஏப்ரல் 26

அதேபோல, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத புதுமையான திட்டமாக, பெண்ணுலகமே போற்றிப் பாராட்டி வரவேற்கும் திட்டமாக எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்களால் கொண்டு வரப்பட்ட 'தொட்டில் குழந்தைத் திட்டம்'. இந்தத் திட்டத்தின் மூலம் தமிழக அரசால் தத்து எடுக்கப்பட்ட பெண் குழந்தைகள் இன்று மிக நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள். பெற்றவர்களால் கைவிடப்பட்ட பெண் குழந்தைகளுக் கெல்லாம் தெய்வத்தாயாய் விளங்கிவருபவர் எங்கள் புரட்சித் தலைவி அவர்கள். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிதான் பெண் குழந்தைகளின் பொற்கால ஆட்சியாகும்.

தற்போது இந்தத் திட்டத்திற்கு புரட்சித் தலைவி அவர்கள் மேலும் புத்துயிர் கொடுத்துள்ளார்கள். மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ரூ. 12.96 இலட்சம் செலவில் புதிய வரவேற்பு மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

மாவட்ட சமூக நல அலுவலகங்களிலும், ஆரம்ப சுகாதார, துணை ஆரம்ப சுகாதார மையங்களிலும் மொத்தம் 188 இடங்களில் தொட்டில்கள் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது வரவேற்கத் தக்கது.

பெண் சிசுக் கொலையைத் தடுத்து நிறுத்த எங்கள் பெண்குலப் போராசி அம்மா அவர்கள் ஆட்சி, பரந்த அளவிலே நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆதாரவற்ற குழந்தைகள் நலனுக்காக புதிதாக 25 குழந்தைகள் காப்பகங்களை இந்த அரசு நடத்தி வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பரிட்சார்த்தமாக சென்னை, தளி நிலக்கோட்டையில் மட்டுமே 3 திட்டங்களாகத் தொடங்கப்பட்ட இத் திட்டம், தற்போது 10,420 மையங்களைக் கொண்டு 113 திட்டங்களாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அதேபோல ஊட்டச்சத்து அளிக்கும் திட்டம் உன்னதமான திட்டமாகும். இதன்மூலம் குழந்தைகள் மட்டுமல்ல, வளரும் மகளிர் அனைவரும் பயன்பெற முடியும். ஊட்டச்சத்துக் குறைவு இல்லாத மக்கள் உள்ள மாநிலமாகத் தமிழகத்தை மாற்றவும் நம்முடைய அம்மாவின் ஆட்சி தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.



2002 ஏப்ரல் 26] [திரு. கே.பி. அன்பழகன்]

சுகாதாரத் துறையுடன் இணைந்து, வளரும் இளம் பெண்களின் நலத்தை மேம்படுத்த இரும்புச் சத்து, போலிக் அமில மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. 1999-2004 ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டுகளுக்கு ரூ. 86.95 கோடி உலக வங்கி நிதி உதவி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 18 மாவட்டங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்காக ரூ.34.25 இலட்சம் செலவில் 8,563, குழந்தைகள் எடை எடுக்கும் கருவிகள் வாங்கப்படும். பழுதடைந்த எடை எடுக்கும் கருவிகளுக்குப் பதிலாக ரூ. 9.22 இலட்சத்தில் புதிய எடைக் கருவிகள் வாங்கப்படும். ரூ. 390 இலட்சம் செலவில் 19,500 மையங்களுக்காக உணவு பரிமாறும் பாத்திரங்கள் வாங்கப்பட உள்ளன.

புதிதாக 82 அங்கன்வாடிகள் ரூ. 102.50 இலட்சம் செலவில் கட்டப்பட உள்ளன. இந்த ஊட்டச் சத்துப் பிரிவுக்கு மட்டும் ரூ. 978.87 இலட்சம் புரட்சித் தலைவி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பினரின் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஓய்வூதியம் பெறும் முதியோர்கள் இத்திட்டத்தினால் பயன்பெற வழி வகுக்கப் பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். நடப்பு நிதியாண்டில் இதற்கென ரூ.2,225.10 இலட்சம் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்ற ஆண், பெண் இரு பாலருக்கும் உதவும் வகையிலே இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.101 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பெண்கள் சமூகத்தில் உயர்வு பெற வேண்டுமானால் அவர்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் பெற வேண்டுமென்பதற்காக அம்மா அவர்கள் புதிய பல திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-55

தருமபுரி மாவட்டம் கர்நாடக மாநிலத்திற்கு அருகில் அமைந்திருக்கிற மாவட்டம். இங்கே உள்ள விவசாயிகள், மழை சரிவர இல்லாத காரணத்தாலும், நீர்ப் பாசனத்திற்கு வசதியில்லாத காரணத்தாலும், அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூர் சென்று, கூலித் தொழிலாளியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பஞ்சபள்ளி

[திரு. கே.பி. அன்பழகன்] [2002 ஏப்ரல் 26

அணையிலிருந்து வாய்க்கால் மூலம் ஜெர்த்தலாவ் ஏரிக்கு வருகின்ற தண்ணீரை அங்கே இருந்து புலிகரை ஏரி, பாப்பாரப்பட்டி ஏரி, பேகார அள்ளி ஏரி, பைசு அள்ளி ஏரி இப்படிப்பட்ட ஏரிகளுக்குக் கொண்டு செல்வதன் மூலமாக 18 ஏரிகளில் தண்ணீர் நிரம்புகின்ற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதய தெய்வம் அம்மா அவர்கள் தருமபுரி மாவட்ட மக்களும், பாலக்கோடு தொகுதி மக்களும், பெண்ணாகரம் தொகுதி மக்களும் பயன் அடைகின்ற வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி அணையிலிருந்து வலது புறக் கால்வாய் பையூர் வழியாகச் செல்லும் வாய்க்காலிலிருந்து பொம்மசமுத்திரம் ஏரி, காரிமங்கலம் பெரிய ஏரி வழியாக திண்டல் ஏரிக்குத் கொண்டு வருவதன் மூலம் கிட்டத்தட்ட 34 ஏரிகள் நிரம்பி காவேரிப்பட்டினம் தொகுதி, பாலக்கோடு தொகுதி ஆகிய இரண்டு தொகுதி மக்களும் பயன்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது.

அதேபோன்று தும்பலஅள்ளி அணையிலிருந்து செல்லும் சனத்குமார் நதியின் குறுக்கே வகுரப்பட்டி ஊராட்சி பட்டகப்பட்டி அருகில் கூட்டாறு என்ற இடத்தில் ஒரு சிறிய அணை கட்டினால், அது அங்கேயுள்ள அந்தப் பகுதி மக்களுக்கு நன்மையாக இருக்கும். அவ்வாறு அணைக்கட்டு கட்டித் தண்ணீரைத் தேக்கினால், பாலக்கோடு தொகுதி, மொரப்பூர் தொகுதி ஆகிய இரண்டு தொகுதி மக்களும் அதைப் பெறுகின்ற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அங்கே குடிகொண்டிருக்கிற மக்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையினால் வெளி மாநிலங்களுக்குச் சென்று கூலி வேலை செய்கிற நிலைமையை மாற்ற இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் அவர்கள் சொந்த நிலத்திலே உழுகின்ற வாய்ப்புக் கிடைக்கும் என்பதை அம்மா அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முருக்கம்பட்டி ஊராட்சி நாகசமுத்திரம் என்ற ஊரிலிருந்து பந்தாரஅள்ளி பள்ளியில் படிக்கின்ற குழந்தைகள் வரும் வழியிலே சனத்குமார் நதியானது குறுக்கே இருக்கிறது. சாலை வசதி உள்ளது. கிட்டத்தட்ட 2 மாத காலம் அந்த ஆற்றின் குறுக்கே தண்ணீர் செல்லும்போது. குழந்தைகள் 8 கிலோ மீட்டர் தூரம் சுற்றிக் கொண்டுதான் அந்தப் பள்ளிக்குச் செல்ல வேண்டும். அங்கே பாலம் ஒன்று கட்டிக்கொடுத்தால் 2 கிலோமீட்டரில் அந்தப் பள்ளிக்கு அந்தக்



2002 ஏப்ரல் 26] [திரு. கே.பி. அன்பழகன்]

குழந்தைகள் செல்லுகின்ற வாய்ப்புக் கிடைக்கும். ஆகவே, இதையும் அம்மா அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாலக்கோடு மருத்துவமனை ரொம்பப் பழமை வாய்ந்தது. அதைச் சுகாதார அமைச்சர் அவர்கள் நேரிலே பார்வையிட்டார்கள். அவர்கள் வந்திருந்தபோது, தாய்மார்கள் 5 பேர் குழந்தையை ஈன்றெடுத்து, படுப்பதற்கு வசதியில்லாமல், இருந்ததைப் பார்த்தார்கள். அந்த மருத்துவமனை ஒரு வீடுபோல் அமைந்திருக்கிறது. அதற்கு 5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இடம் தயாராக உள்ளது. ஆகவே, அந்த பாலக்கோடு மருத்துவமனையை விரிவுபடுத்திக் கொடுக்க வேுண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் நிர்வாகத்தின்கீழ் பாலிடெக்னிக் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த பாலிடெக்னிக் கடந்த ஆட்சி முடிகின்ற நேரத்திலே நிறுத்தப்பட்டது. இதய தெய்வம் அம்மா ஆட்சி வந்தவுடன் மீண்டும் அதைத் தொடந்து நடத்துகின்ற வாய்ப்புக் கிட்டியது. மேலும் இந்த ஆண்டு முதல் தொடந்து நடைபெற வேண்டுமென்று அம்மா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், காவல் நிலையமும், காவலர் குடியிருப்பும் அங்கே இல்லை. காவல் நிலையம் கட்டுவதற்கு இடம் இருக்கிறது. அதனால் காவல் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்பு நிலையமும் வாடகை இடத்தில்தான் இருக்கிறது. அதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் தீயணைப்பு நிலையத்தையும் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலக்கோடு தொகுதிக்கு உட்பட்ட, காரிமங்கலம் பேரூராட்சிக்கு உட்பட்ட இடத்தில் 1922 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காவல் நிலையம், ஒரு சிறிய இடத்திலே இருக்கிறது. காரிமங்கலம் பேரூராட்சியிலே 3.51 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காவல் உதவி ஆய்வாளர் தங்குவதற்கு 2 வீடுகளும், காவலர் குடியிருப்புகள் பத்தும் கட்டப்பட்டிருக்கின்றன, 35 சென்ட் இடத்தில். அங்கே 3 ஏக்கர் 16 சென்ட் இடம் மீதம் இருக்கிறது. அங்கே காவல் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் காவல் நிலையத்தில் ஆண்டுக்கு 1,600 வழக்குகளுக்கு மேல் பதிவாகின்றன.

தேசிய நெடுஞ்சாலையில் கிட்டத்தட்ட 18 கி.மீ. தூரம் இந்தக் காவல் நிலையத்திற்கு உரித்தாக இருக்கிறது. ஆகவே, சாலை விபத்து ஏற்படுகின்ற நேரத்திலே விரைவிலே செயல்பட முடியாத வகையிலே அமைந்திருக்கிறது. ஆகவே மாட்லாம்பட்டி என்ற இடத்தில் ஒரு காவல் நிலையத்தை அமைத்துக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

காரிமங்கலமானது பாலக்கோடு தாலுகாவில் இருக்கிறது. ஆகவே, காரிமங்கலத்தை மையமாகக் கொண்ட பாலக்கோடு தாலுகா 67 கிராம நிர்வாகிகளைக் கொண்டதாகவும், கிருஷ்ணகிரி 103 கிராம நிர்வாகிகளைக் கொண்டதாகவும் இருக்கிறது. காரிமங்கலத்தை மையமாகக் கொண்டு ஒரு தாலுகா சென்டரை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பாலக்கோடு தொகுதிக்கு 4 பேரூராட்சிகள் உட்பட்டிருக்கின்றன. அந்த 4 பேரூராட்சிகளிலே ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில் தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க வாய்ப்பு இல்லாத நிலையால் அவர்கள் அதிகமாகச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அம்மா அவர்கள் அந்தத் தொகுப்பு வீடுகளைப் பேரூராட்சிகளில் கட்டிக் கொடுப்பதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வளவு நேரம் பேச அனுமதி கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இதயதெய்வம் அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மனமார்ந்த நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகிற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். கர்ம வீரர் காமராஜர் அவர்கள் தமிழகத்தில் முதன்முதலாகக் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தின் அடிப்படையில், பின்னாலே அந்தத் திட்டம் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் முடிவெடுக்கப்பட்டு, சத்துணவுத்



திட்டமாகத் தமிழகத்திலே படித்துக் கொண்டிருக்கிற குழந்தைகள் மற்றும் சத்துணவு மையங்களில் படித்துக் கொண்டிருக்கிற மாணவ, மாணவியர்கள் பயன்பெறக்கூடிய வகையில் இன்று நிறைவேற்றப்பட்டு கொண்டிருக்கிறது. அந்தச் சத்துணவுத் திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிற organisers, அதேபோலச் சமையலர்கள், உதவியாளர்கள் இவர்களெல்லாம், பகுதிநேர ஊழியர்களாக அங்கீகரிக்கப்பட்டு மிகக் குறைந்த சம்பளத்திலே தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் இந்தத் துறையில் முழுமையாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு 1,126 ரூபாய் அல்லது 1,200 ரூபாய்க்குள்ளே சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு அவர்கள் வாழ்நாளைக் கழிப்பது மிகவும் கடினமான ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த அரசு ஆட்சியிலே இல்லாத காலகட்டத்திலும் சரி, இதற்கு முன்னாலே ஆட்சியிலே இருந்த காலத்திலும் சரி, இவர்களுக்கெல்லாம் நல்வாழ்வினை ஏற்படுத்தி அவர்களை முழுநேரப் பணியாளர்களாக மாற்றுவோம் என்கின்ற உறுதியினை முன்னாலே அளித்தீர்கள். ஆனால் அவர்கள் பின்னாலே பகுதிநேர ஊழியர்களாக மட்டுமே ஆக்கப்பட்டார்களே ஒழிய, இன்றுவரை அவர்கள் முழு நேர அரசு ஊழியர்களாக ஆக்கப்படவில்லை. அதேபோல அவர்கள் பணி வரன்முறையும் இல்லாமல் இருக்கிறார்கள். organiser-களுக்கு 1,200 ரூபாய் மாதச் சம்பளம் என்றும், அதேபோல சமையலர்களுக்கு 600 ரூபாய் என்கிற அளவிலும் , உதவியாளர்களுக்கு 450 ரூபாய் என்கிற அளவிலும் தொகுப்பூதியத்தைப் பெற்றுக் கொண்டு இன்று அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிற அந்தச் சூழ்நிலையை மாற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அதேபோல மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்து அவர்களை முழுநேர ஊழியர்களாக மாற்றி, அவர்கள் பணியை regularise செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இந்தத் தேர்தலிலேகூட, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அறிவிப்பை ஏற்கெனவே தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருந்தது. சமூக நலத் துறை, கல்வித் துறை, சுகாதாரத் துறை உள்ளிட்ட அரசுத் துறைகளில் காலிப் பணியிடங்கள் ஏற்படுகிறபோது, இட ஒதுக்கீடு அடிப்படையிலும், கல்வித் தகுதி அடிப்படையிலும், சத்துணவுப்

பணியாளர்களை அக்காலிப் பணியிடங்களில் பணியமர்த்துவது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்கள் தேர்தலுக்கு முன்னாலே சொல்லியிருக்கிறார்கள். இன்று ஆட்சிப் பீடத்திற்கு வந்து, முதலமைச்சராகக் கோலோச்சிக் கொண்டிருக்கிற இந்த வேளையில், தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற இந்த விஷயத்தை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சத்துணவுத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் எம்.ஏ., எம்.எஸ்ஸி.., பி.ஏ., பி.எஸ்ஸி., என்று உயர் படிப்புப் படித்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கான தகுதியுடையவர்களாகவும் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் நீங்கள் கொடுத்திருக்கிற அந்தத் தேர்தல் அறிக்கையினுடைய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அதே தேர்தல் அறிக்கையிலேகூட, 'டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்களுடைய கோரிக்கைகளை பரிவுடன் ஆய்ந்து, அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்கள் குறைந்தது எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதி பெற்றிருந்தால் அவர்களுக்கு இடைக்கால ஆசிரியர் பயிற்சி அளித்து, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாக நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்' என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். இதிலே 90 சதவீதம் பேர் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள்தான். நீங்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்னதுபோல, இடைக்கால ஆசிரியர் பயிற்சியைத் தந்து, இவர்களை நீங்கள் ஆசிரியர்களாகப் பணியமர்த்தவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-05

இந்தச் சத்துணவுத் துறையிலே, இப்போது எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்ற ஒன்று இருக்கிறது. அதைப்போல, ஊரக வளர்ச்சி மூலம்





இயங்கிக்கொண்டிருக்கிற பள்ளி மையங்கள், நகராட்சித் துறை மூலம் இயங்கி வருகின்ற பள்ளி மையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் - இது உலக வங்கி நிதி உதவியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது - இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து நீங்கள் சத்துணவுத் திட்டத் துறை என்று தனியாக ஒரு துறையையே ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ஐ.சி.டி.எஸ். என்றால் தனியாக அதற்காக ஓடவேண்டும். சத்துணவுத் திட்டம் என்றால் அதற்காகத் தனியாக ஓடவேண்டும். எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து நீங்கள் ஒரு சத்துணவுத் திட்டத் துறை என்று வைத்து, தனியாக ஒரு இயக்குநரைப் போட்டு, தனியாக ஒரு செயலாளரை நியமித்து இயக்குவது என்பது பொருத்தமான ஒன்றாக இருக்கும். அந்தத் துறையிலே பணியாற்றக்கூடியவர்கள் ஒரே இடத்தில் வந்து எல்லா சந்தேகங்களையும் நிவர்த்தி செய்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பும் இருக்கும். ஆகவே அரசாங்கம் இதைச் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சத்துணவுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தையும் நீங்கள் கொண்டுவரவேண்டும். மத்திய அரசு அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு எல்லாம்கூட, விவசாயிகளுக்கு எல்லாம் கூட, இப்படி ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிற வேளையில் இந்தத் துறையிலே இருபது ஆண்டு காலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய—குழந்தைகளை இன்று உருவாக்கிக்கொண்டிருக்கக்கூடிய—organisers, உதவியாளர்கள், சமையலர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் நீங்கள் ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டுவந்தால்தான், அவர்களுக்கு எதிர்காலத்தில் ஒரு நம்பிக்கை இருக்கும்; அவர்கள் முழு மனதோடு பணியாற்றக்கூடிய ஒரு வாய்ப்பும் இருக்கும். எனவே ஓய்வூதியத் திட்டத்தை நீங்கள் நிச்சயமாகக் கொண்டுவரவேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல, அவர்களுக்கு, G.P.F. பிடிக்கும் அந்தத் திட்டத்தையும் நீங்கள் தொடங்கி வைத்து அவர்களிடமிருந்து அந்தப் பணத்தைப் பிடித்து அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறபோது முழுமையான

ஒரு தொகையை அவர்கள் பெறுவதற்கான ஒரு சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். G.P.F. பிடிக்கும் திட்டத்தை அவர்களுக்கு உருவாக்குங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலச் சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் யாராவது இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்தினருக்குக் கருணை அடிப்படையிலே வேலையளிக்கக்கூடிய ஒரு திட்டம் முன்பு இருந்தது. ஆனால் இப்போது அந்தத் திட்டம் ஏனோ சென்ற ஆட்சிக் காலத்திலிருந்து நிறுத்தப்பட்டது. இந்த ஆட்சியிலும் தொடர்ந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் கருணை அடிப்படையிலே வேலை அளிப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டப் பணியாளர்களைத் தற்காலிக வேலைநீக்கம் செய்கிறபோது, அவர்களுக்கு subsistence allowance—பிழைப்பூதியம்—கொடுக்கப்படுவது இல்லை. எல்லாத் துறையினரும் பிழைப்பூதியத்தைப் பெற்று அவர்கள் பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கிறபோது, இவர்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? இவர்கள் மீது ஏதாவது விசாரணை என்று வருகிறபோது suspension செய்தால், இவர்களுக்கும் subsistence allowance நீங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சத்துணவுத் திட்டத்தில் சில்லறைச் செலவுக்கு மாதம் 20 ரூபாய் என்று கொடுக்கிறீர்கள். ஏதாவது ஒரு பஸ்ஸிலே ஏறி அவர்கள் தலைமை ஆபீசுக்குப் போய்வந்தாலே அந்த 20 ரூபாய் அவுட். பிறகு மாதம் பூராவும் அந்த 20 ரூபாயை ஒரு சில்லறைச் செலவு என்று வைத்துக்கொண்டு 40 ரெகார்டுகளை அவர்கள் எப்படி maintain செய்வார்கள்? எப்படி ஒரு அலுவலகத்திற்கு அவர்கள் போய் வருவார்கள்? ஆகவே அந்த 20 ரூபாய் என்பதை 100 ரூபாயாகவாவது, நீங்கள் சில்லறைச் செலவு என்று அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்தச் சத்துணவு தயாரிக்கிறபோது, காய்கறிக்கு, மண்ணெண்ணெய்க்கு, உப்புக்கு என்று மானியமாக 23 பைசா கொடுக்கிறீர்கள் ஒரு குழந்தைக்கு. 23 பைசா - எப்படி போதும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 23 பைசா என்பது நிச்சயமாகப் போதாது. எந்தக் காய்கறியை அதிலே போய் வாங்குவது?



ஒரு ஆளுக்கு எவ்வளவு வரும்? அதேபோல மண்ணெண்ணெய்க்கு எப்படிப் பயன்படுத்தமுடியும்? உப்புக்கு அரை பைசா கொடுக்கவேண்டும். இவற்றையெல்லாம் நீங்கள் பார்க்க வேண்டும். இந்த மானியத்தைக் குறைந்தது ஒரு குழந்தைக்கு 50 பைசா என்றாவது நீங்கள் உயர்த்தினால்தான் அந்தக் குழந்தைகள் உண்மையான ஒரு சத்துணவைப் பெறமுடியும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-10

அதேபோல, அலிகள், அரவாணிகள் என்று அழைக்கப்படுகிறவர்களுக்கு இந்தத் தமிழகத்திலே ஒரு சரியான அங்கீகாரம் இல்லை. சென்ற தேர்தலிலேகூட எங்களுடைய சத்துவாச்சாரி பேரூராட்சியிலே சல்மா என்று அழைக்கப்படுகிற பாபு என்கிற ஒருவர் வந்து எனக்கு இடம் கொடுக்கவேண்டும், சைக்கிள் சின்னத்தைக் கொடுத்து கவுன்சிலர் ஆக்க வேண்டுமென்று வந்தார்கள். அதுவும் பெண்கள் ஒதுக்கீட்டிலே இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள், voter list-லே பெண் என்று குறிக்கவில்லையென்றும் தனக்கு பெண் ஒதுக்கீடு quota-விலேதான் இடம் கொடுக்கவேண்டுமென்றும் என் வீட்டு அருகில் வந்து அரை நாள் போகவே மாட்டேன் என்று இருந்தார்கள் எவ்வளவு சொன்னாலும் போகவில்லை. காரணம் voter list-லே ஆண் பெண் என்று இருந்தால்தான் இடம் கொடுக்கமுடியும். இதிலே பெண் ஒதுக்கீட்டிலே உங்களுக்கு நான் கொடுக்கவே முடியாது என்று எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சரையும் அதேபோல சமூக நலத் துறை அமைச்சரையும் கேட்டுக்கொள்வதெல்லாம் அரசர்கள் ஆண்ட காலத்திலே ஒரு மரியாதையோடு வாழ்ந்து வந்தார்கள். அந்த அலிகள், இப்போது பாவம் அந்த அரவாணிகள், எந்தவிதமான பாதுகாப்பும் இன்றி வாழ்கிறார்கள். கூவாகத்தில் திருவிழா எடுக்கின்றபோது மட்டும் அவர்கள் மனமகிழ்ச்சியோடு தங்கள் காலத்தை 2,3 நாட்களுக்குக் கழிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறதேயொழிய மற்ற இடங்களிலே அந்தச் சூழ்நிலை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு பாதுகாப்புக்காக பென்ஷன் கொடுங்கள், இல்லையென்று சொன்னால் அவர்களுக்கு ஏதாவது ஒரு பாதுகாப்பு இல்லத்தை..

[2002 ஏப்ரல் 26

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மகளிர் நிறையப் பேர் பேச இருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் மகளிர் பேச இருக்கிறார்கள் என்று என்னை முடிக்கச் சொல்கிறீர்கள். எனக்கு இன்னும் கொஞ்சம் நேரத்தை அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அரவாணிகளுக்கு நீங்கள் ஒரு பாதுகாப்பு இல்லத்தையோ அல்லது ஒரு பென்ஷன் திட்டத்தையோ உருவாக்க வேண்டும். சில மாநிலங்களிலே அவர்கள் எம்.எல்.ஏ.-க்களாகக்கூட வந்திருக்கிறார்கள். மும்பை போன்ற பகுதிகளில் இருக்கிறார்கள். ஆனால் இங்கு அவர்கள்...

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மும்பையிலே, மகாராஷ்டிர மாநிலத்திலே பல்வேறு மாநகர மன்ற உறுப்பினர்களாக, நகர்மன்ற உறுப்பினர்களாக அரவாணிகள் போட்டியிட்டு வெற்றி பெற்று இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை நானே சொல்லிவிட்டேன். மும்பையிலே அவர்களுக்கு செய்து கொடுத்திருப்பதைப் போல நம்முடைய தமிழகத்திலேயும் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பை நீங்கள் உருவாக்கிக் கொடுங்கள். ஏனென்றால் இப்போதுகூட ஒரு கோரிக்கை வைத்து இந்தத் துறையினுடைய செயலாளர் அவர்கள் தொலைக்காட்சியிலே பேட்டி கொடுத்திருந்தார்கள். ஆனால் இதற்காகச் சிந்தித்து ஒரு திட்டத்தை வகுங்கள். அவர்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல இந்த இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம். அது இப்போது இருக்கிறதா; இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே கொஞ்சம் வெளிப்படையாகவே தெரிவிக்க வேண்டும். காரணம் சட்டமன்ற உறுப்பினர்களிடம் 2 செட் பேப்பரைக் கொண்டு வந்து பல பேர் கையெழுத்து வாங்கியவண்ணமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை நான் முழுக்க, முழுக்கப் புரட்டிப் பார்த்துவிட்டேன். இதிலே பார்த்தால் விதவையர் மறுமண உதவித் திட்டம் இருக்கிறது. விதவையர் மகளிர் திட்டம் இருக்கிறது.



2002 ஏப்ரல் 26] [திரு. சி. ஞானசேகரன்]

அதாவது ஈ.வே.ரா. மணியம்மை பெயரிலுள்ள அந்த விதவையர் மகளிர் திட்டம். அதேபோல அன்னை தெரசாவினுடையபெயரிலுள்ள அந்த ஆதரவற்றப் பெண்கள் திருமண உதவித் திட்டம். தர்மாம்பாள் விதவைகள் மறுமணத் திட்டம். அதேபோலக் கலப்புத் திருமணத் திட்டம் என்றெல்லாம் இருக்கிறது. ஆனால் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் என்பது அதாவது, முன்பு 8-வது வகுப்பு வரை படித்த பெண்கள் திருமணம் செய்துகொள்கிறபோது அவர்களுக்கு நீங்கள் உதவி வந்த பணம், பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, முந்தைய ஆட்சியிலே 10 ஆம் வகுப்பு வரை படித்தால் தான் அந்தத் திருமண உதவி கிடைக்கும் என்கிற ஒரு நிலையை அவர்கள் உயர்த்தினார்கள். பிறகு...

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 8 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கியது 1989-ல் இருந்த கலைஞர் ஆட்சி. பிறகு மீண்டும் 1996-ல் 10 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் திருமண உதவித் திட்டத்தைக் கொடுத்ததும் கலைஞருடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புகழேந்தி ஒன்றை..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. புகழேந்தி, மாண்புமிகு உறுப்பினர் சொல்ல வந்தது வேறு. நீங்கள் சொல்வது வேறு.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 8 ஆம் வகுப்பு படித்தாலே அந்த அளவிற்கு உதவி கிடைத்திருந்த பெண்கள், சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 10 ஆம் வகுப்பு படித்தால்தான் அந்த உதவி என்கிற நிலைமையை நீங்கள் ஜி.ஓ. போட்டு மாற்றினீர்கள். (குறுக்கீடு) பிறகு அதைக் கொடுத்தீர்கள், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் 8 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரையில் படித்து இடையிலே நின்றுவிட்டவர்கள் உங்கள் காலத்தில் நட்டாற்றில் விடப்பட்டார்கள். அதற்குத்தான் நான் கேட்கிறேன். அப்போது அந்தப் பெண்களுக்கு 8 ஆம் வகுப்புப் படித்தவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். தேர்தல் காலத்திலே தொலைக்காட்சியிலே பல செய்திகள் எல்லாம் போட்டு, நாங்கள் எல்லாம் ஓட்டு கேட்டோம். ஆனால் திடீரென்று பார்த்தால்

இப்போது இந்தத் திட்டத்தைப் பற்றி மூச்சே விடாமல் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பைத் தயாரித்து இருக்கிறார்கள். மற்றவற்றிற்கெல்லாம் திடீர், திடீரென்று பதில் சொல்லக்கூடிய அமைச்சர் இதற்கு என்னவோ பதில் சொல்லாமல் அமர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். இப்போது அந்தத் திட்டம் உண்டா; இல்லையா என்பதை அவர் வெளிப்படையாக இந்த அவையிலே தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொட்டில் குழந்தைத் திட்டம் என்ற ஒன்றைத் துவக்கி இருக்கிறார்கள். சேலத்திலே நேற்றுக்கூட ஒரு சிசு கொலை நடந்திருக்கிறது. நாம் எவ்வளவுதான் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தித் தொட்டில் குழந்தைத் திட்டம் கொண்டு வந்து, தொட்டிலை வைத்துக் கொண்டு நீங்கள் கவலைப்படாதீர்கள், குழந்தை வேண்டாம் என்றால் கொண்டு வந்து இந்தத் தொட்டிலில் போட்டு விடுங்கள், பாதுகாத்துக்கொள்கிறோம் என்று சொன்னாலும்கூட, சிசு கொலை ஒன்று நேற்று கூட சேலம் பகுதியிலே ரிப்போர்ட் ஆகியிருக்கிறது. இவற்றில் எல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுத்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். பொதுவாகக் குழந்தை சாகாமல் இருந்தால்தான் தொட்டிலுக்கு வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, 5 நிமிடம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு குழந்தைகள் காப்பகம். எல்லா மாவட்டங்களிலும் அரசுக் குழந்தைகள் காப்பகத்தை வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-15*

அதற்குப் பிறகு தத்து எடுப்பது. அதாவது தொட்டில் குழந்தைத் திட்டம் மூலமாகக் குழந்தைகளைப் ஏற்றுக்கொள்கிற அந்த நிலையை நீங்கள் எல்லா மாவட்டங்களிலும் உருவாக்கினீர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும். நிறையப்பேர் இப்போது குழந்தை இல்லாத பெற்றோர்கள் இருக்கிறார்கள், கணவன்கள் மனைவிகள் இருக்கின்றார்கள், அவர்களுக்கெல்லாம் எப்படித் தத்து எடுப்பது என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் அதிலே சட்ட திட்டங்கள் எல்லாம்



கொஞ்சம் கடுமையாக இருக்கின்றன. அதைக் கொஞ்சம் எளிமைப்படுத்த வேண்டும். நீங்கள் உள்நாட்டில் இருக்கக்கூடிய 19 நிறுவனங்களுக்கு உரிமத்தைக் கொடுத்திருக்கின்றீர்கள். அதேபோல, 8 நிறுவனங்கள் வெளிநாட்டிலேகூடக் குழந்தையைத் தத்துக் கொடுக்கலாம் என்று நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அதிலே மாவட்டந்தோறும் ஒரு நிறுவனத்தை நீங்கள் ஏற்படுத்தி, இல்லையென்றால் தாலுகா அளவில்கூட ஏற்படுத்தினீர்கள் என்று சொன்னால், நிறையக் குழந்தைகளைத் தத்து எடுப்பார்கள். அவர்களைப் பெற்று அநாதையாகப் போட்டுவிட்டாலும்கூட, அந்தக் குழந்தைகளைத் தொட்டில் குழந்தைத் திட்டம் மூலமாக நீங்கள் சேகரித்து அதைத் தத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தீர்கள் என்று சொன்னால், நிறைய, குழந்தை இல்லாத பெற்றோர்கள் இந்தக் குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்த்து ஆளாக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீருடையைப் பொறுத்தளவில் 1 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரை படிக்கிறவர்களுக்கெல்லாம் சீருடை கொடுக்கிறோம். இந்த ஆண்டு கொடுக்கப்பட வேண்டிய சீருடையைக் கொடுக்க சில நேரங்களில் 8 ஆம் வகுப்பு படித்துவிட்டு அந்தக் குழந்தை வேறு பள்ளியிலே உயர்நிலைப் பள்ளியிலோ, மேல்நிலைப் பள்ளியிலோ போய் சேர்ந்திருக்கும் போது அந்த நேரத்திலே — குழந்தைகளைத் தேடிப் பிடிக்க வேண்டியிருக்கிறது. ஓராண்டு கழித்துத்தான் சில நேரங்களில் சீருடை வருகிறது. சில நேரங்களில் சீருடையில் காலே உள்ளே போகாது ஆண்களுக்கு. பெண்களுக்கு பாவம், முட்டிக்கால் வரைகூட இந்தப் பாவாடை வராது. அளவு சரியில்லாமல் பல நேரங்களிலே தைத்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையைத் தவிர்த்து அளவு சரியானவற்றை நீங்கள் தைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல, அந்தந்த ஆண்டு, பள்ளி திறந்த 1½ மாதத்திற்குள் துணி நிச்சயமாகக் குழந்தைகளுக்குப் போய்ச் சேர வேண்டுமென்கிற நிலையை நீங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் சென்னையிலே Working Women's Hostel இரண்டு வைத்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு தூத்துக்குடி, கடலூர், மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, ஓசூர் போன்ற இடங்களிலே மட்டும் இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் ஏன் வைக்கக் கூடாது என்று நான் அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன். 150 ரூபாய், 100 ரூபாய்க்கு ஏழைகள், ஏதோ வேலைக்குப் போகிறவர்கள், மாணவிகள் அந்த

Working Women's Hostel-லில் அவர்கள் தங்கிப் பயன்பெறக்கூடிய அவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். ஆகவே, எல்லா மாவட்டங்களிலும் இந்தப் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளை அமைப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலவச தையல் மெஷின் நீங்கள் கொடுக்கிறீர்கள், இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் அது போதாது. 20 percent-கூட அது satisfy ஆகமாட்டேன் என்கிறது. எங்களிடம் வரக்கூடிய மனுக்கள், வரக்கூடிய கோரிக்கைகள் இவற்றையெல்லாம் பார்க்கும்போது இதற்காக நீங்கள் ஒதுக்கியிருக்கிற அந்த ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மட்டும் போதாது. குறைந்தபட்சம் ரூ. 10 கோடியாவது இதற்காக நீங்கள் ஒதுக்கி இலவச தையல் மெஷினை யாரெல்லாம் வறுமைக்கோட்டிற்குக்கீழே இருக்கிறவர்கள், மனு கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு எல்லாம் கொடுத்தீர்கள் என்று சொன்னால், அது நிச்சயமாகப் பயனுள்ளதாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, ஓர் ஒன்றியத்திற்கு ஒரு தொழிற்சாலையை உருவாக்கப் போவதாக இப்போது அரசு அறிவித்திருக்கிறது. பொதுவாக, நாம் எத்தனையோ தொழிற்சாலைகளை உருவாக்கி, பிறகு மார்க்கெட்டிங்குக்கு படாத அவஸ்தை பட வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, சத்துணவுத் திட்டத்திற்காக முழுக்க முழுக்க அதாவது bread தயாரிக்கக்கூடிய தொழிற்சாலையாவது இல்லை வேறு ஏதாவது தொழிற்சாலையை உருவாக்க வேண்டும். சத்துணவுத் திட்டத்திற்கு தேவையான சத்துணவுப் பொருட்கள் எல்லாம் நிறைய வெளியிலேயிருந்து வாங்குகின்றோம். அவ்வாறு இல்லாமல் சத்துணவு குழந்தைகளுக்கு வழங்கக்கூடிய (மணியடிக்கப்பெற்றது) பொருட்களை நாமே கொள்முதல் செய்யக்கூடிய அளவுக்கு ஒரு திட்டத்தையாவது தீட்டி, ஒன்றியத்திற்கு ஒன்று என்று எப்படியாவது நீங்கள் ஒரு தொழிற்சாலையை உருவாக்க வேண்டும்.

முட்டை கொடுப்பதை நிறுத்திவிட்டிருக்கிறீர்கள். அதற்குப் பதிலாக பாலையாவது கொடுங்கள். தமிழ்நாடு முழுவதும் பால் உற்பத்தியாளர்கள் இன்று நிறையப் பேர் பால் உற்பத்தியை செய்துவிட்டு என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2 ஆம் தேதி வருகின்ற மானியக் கோரிக்கையிலே அதைப் பற்றிப் பேசலாம்.



**திரு. சி. ஞானசேகரன்:** முட்டைக்கு பதிலாக நீங்கள் இப்போது உருளைக் கிழங்கு அதற்குப் பிறகு கொண்டைக்கடலை, பச்சை பயறு என்று வைத்திருக்கிறீர்கள். இந்த உருளைக் கிழங்கு விலை திடீரென்று மார்கெட்டில் ஏறிவிட்டது. 8 ரூபாய் என்று நீங்கள் கொடுக்கிறீர்கள். திடீரென்று பார்த்தால் ஒரு நாளைக்கு 15 ரூபாய் என்கிறான் கிலோ. ஒரு நாளைக்கு 17 ரூபாய் கிலோ என்கிறான். அவன் இஷ்டத்திற்கு விலையை ஏற்றிவிடுகிறான். இப்படியெல்லாம் இருக்கக்கூடிய சூழ்நிலையில் - இந்த உருளைக் கிழங்கை எப்படிப் புட்டுக் கொடுப்பது? ஏனென்றால் எடை மெஷின் எல்லாம் ஒன்றும் கிடையாது. குழந்தைகளுக்கு ஏதோ, கொத்துக் கொத்தாக கொடுக்கும்போது ஒரு குழந்தைக்கு நிறையப் போய்விடும், ஒரு குழந்தைக்குக் குறைவாகப் போய்விடும். இப்படிப்பட்ட சூழ்நிலை எல்லாம் வருகிறது. அதனால், இவற்றையெல்லாம் தவிர்க்கின்ற வகையில் நீங்கள் பாலையே கொள்முதல் செய்து குழந்தைகளுக்குச் சத்துணவுப் பாலாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம் குறித்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறியும், இம்மாமன்றத்திலே பேச வாய்ப்பு அளித்த தமிழினப் போராளி டாக்டர் அய்யா அவர்களுக்கும், டாக்டர் சின்ன அய்யா அவர்களுக்கும், எங்களுடைய தலைவர் ஜி.கே.எம். அவர்களுக்கும் என் நன்றியைக் கூறியும் என் உரையைத் தொடங்குகிறேன்.

சத்துணவு, ஊட்டச் சத்து, குழந்தைகளுக்கு நலக் காப்பகம் ஆகிய சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றக்கூடிய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் அனைவரும் குறைவான சம்பளம் பெற்று 20 ஆண்டு காலம் அவதிப்பட்டு வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே இவர்களை முழு நேரப் பணியாளர்களாக ஆக்கி ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கும் பணிப் பாதுகாப்பு வேண்டும். அவர்களில் பட்டதாரிகளும் பணிபுரிகிறார்கள். அவர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டும். அவர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். இன்றுகூட

உண்ணாவிரதம் உள்ளார்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சத்துணவுப் பணியாளர்கள் கோரிக்கைகளை முன் வைக்கிறேன். அதனை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

சத்துணவு மையங்களுக்கு விறகு, மளிகை, காய்கறி வாங்க 23 பைசா மானியம் வழங்கப்படுகிறது. இது ஒரு நாளைக்குப் போதாது. விலைவாசி உயர்வுக்கேற்ப இதை 50 பைசாவாக உயர்த்தி வழங்க வேண்டும். இரண்டு, மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஊதியம் வழங்குவதைத் தவிர்த்து கருவூலம் மூலம் மாதா மாதம் ஊதியம் வழங்க வேண்டும். தேர்தல் வாக்குறுதியில் அறிவித்ததுபோல் முழுநேர அரசு பணியாளர்களாக ஆக்கவும், கல்வித் தகுதிக் கேற்ப பணி மூப்பு அடிபபடையில் பதவி உயர்வு வழங்கிடவும் வேண்டும். சில்லறைச் செலவுக்கு மாதம் ஒரு முறை வழங்கும் ரூ.20 என்பதை ரூ. 100 ஆக உயர்த்துதல் வேண்டும். மானியம் எரிபொருளுக்குத் தனியாக வழங்குதல் வேண்டும். G.P.F.-பிடிக்கும் திட்டம் துவங்க வேண்டும். குழுவை மறுபரிசீலனை செய்து ரத்து செய்தல், சமையலர், உதவியாளர்களுக்கு ஊதிய வேறுபாடுகளையும் களைந்து பள்ளி, மையப் பணியாளர்களுக்கு சம ஊதியம் வழங்கிட வேண்டும். பட்டதாரி சத்துணவு அமைப்பாளர்களைக் கல்வித் தகுதிக்கேற்ப பணியில் அமர்த்த வேண்டும்.

எனது தொகுதியான சங்கராபுரம், விழுப்புரம் மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். மலையைச் சார்ந்த தொகுதியாகும். இது ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் பெருமளவு உள்ள தொகுதியாக உள்ளது. இங்குள்ள மக்கள் குடிநீர், சுகாதாரம், போக்குவாத்து வசதி இல்லாமல் அவதிக்குள்ளாகிறார்கள். மேலும், இப்பகுதியில் உள்ள சர்க்கரை ஆலையைப் பயன்படுத்தி காகித ஆலை ஒன்றை அமைத்து இந்தப் பகுதி மக்களும் மேம்பாடு அடைய வழிவகை செய்ய சிறப்புக் கவனம் செலுத்துமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொள்கின்றேன்.

சங்காராபுரம் வட்டம் உதயமாகி 10 ஆண்டு காலமாகி நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று விதிமுறை இருந்தும், இதுநாள் வரை அமைக்கப்படவில்லை. மேலும், அரசு போக்குவரத்துக் கழக பணிமனையும் அமைப்பதாக இருந்தது. அதுவும் இதுநாள் வரையிலும் அமைக்கப்படவில்லை. மேலும், கள்ளக்குறிச்சி-மூங்கில்துறைப்பட்டு தார்ச்சாலை மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளது. அவ்வழித் தடம்



திருப்பதி, பெங்களூர், மைசூர் செல்லும் வழித்தடமாக இருப்பதால், அதைச் சீர் செய்து தரும்படி இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன். சங்கராபுரத்தில் அரசு மருத்துவமனை இருந்தும் போதிய மருத்துவர்கள் இல்லை. மலைப் பகுதியாக இருப்பதால் விஷக்கடி அதிகமாக ஏற்படுகிறது. அதற்குப் போதிய மருந்தும் இல்லை என்பதால் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் சென்ற வாரம் அந்தப் பேப்பரைக் கொடுத்துள்ளேன். இதற்கு அமைச்சர் அவர்கள் போதிய அளவுக்கு டாக்டரையும் மருந்தையும் அளிக்குமாறு அவரிடம் கேட்டுக் கொள்கிறேன். மலையில் நீண்டகாலமாக வாழ்கின்ற மக்களுக்கு நீண்டகாலமாக மழை இல்லாத காரணத்தால் வீட்டுமனைப் பட்டா, நிலப் பட்டா இதுநாள் வரையில் வழங்கப்படவில்லை. பட்டா வழங்க நடப்பாண்டிலாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போதிய மழை இல்லாத காரணத்தால் சங்கராபுரம் கிழக்கே மலையில் வாழ்கின்ற மக்கள் தினமும் மைசூர், பெங்களூர், கேரளா, பம்பாய் ஆகிய இடங்களுக்குப் பிழைப்பைத் தேடிச் செல்கிறார்கள். ஆகையால், சங்கராபுரம் தொகுதியை வறட்சித் தொகுதியாக அறிவிக்கும்படி இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன். மலைப் பகுதியில் ஊனமுற்றோர் அதிகமாக உள்ளதால் அவர்களுக்குக் கல்வியறிவு இல்லாததால் அவர்களுக்குச் சேரவேண்டிய அரசுச் சலுகைகள் சென்று அடைவது இல்லை. அதேபோல் அங்கே நிறைய மகளிர், மன்றங்கள் அமைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இதேபோல நம்முடைய அரசின் சலுகைகள் சென்று சேருவது இல்லை என்பதையும் சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினராக இருக்கக்கூடிய ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்த பெண் குழந்தைகள், விதவைகள், முதியோர்கள், உடல் ஊனமுற்றோர் ஆகியோரின் நலனைப் பெருக்கி தன்னம்பிக்கையை ஊட்டி அவர்களையும் சமுதாயத்தில் ஒரு முக்கிய மனிதர்களாகவும், அங்கமாகவும் மாற்ற வேண்டியது அரசின் சமூகப் பணியாக அமைகின்றது. தமிழக அரசு போன்ற நல்ல அரசுக்கு இப்பணி மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது. சென்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கை பக்கம் 35-ல் நிதியமைச்சர், சமூகப் பாதுகாப்பைப் பற்றிக் கூறும்போது "மகளிர், சிறார், ஏழ்மையுற்றோர் மற்றும் முதியோர் நலனில் இவ்வரசு ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது" என்று

கூறியுள்ளார். இந்த ஆண்டின் தனது உரையில் தமிழக ஆளுநர் அவர்கள் அமைவந்தும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே இவ்வரசின் இலக்காகும் என்று கூறியுள்ளார்கள். சமூக நலனில் அக்கறை காட்டும் தமிழக அரசுக்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், நடைமுறையில் பார்க்கும்பொழுது இந்த அரசின் செயல்பாடுகள் சமூக நலனை உயர்த்தும் வகையில் அமையவில்லை என்பதை இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக, இந்தியாவிலேயே தமிழகத்தைச் சிறந்த மாநிலமாக விளங்கச் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள 15 அம்சத் திட்டத்தில், சமூகப் பாதுகாப்பு ஓர் அம்சமாகச் சேர்க்கப்படவில்லை.

*பிற்பகல் 12-25*

அதேபோல இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில்கூட, சமூக நலன் பற்றியோ சமூக நலத் துறைக்கு, இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள நிதி அளவையோ பார்க்கும்போதுகூட, இந்த அரசு சமூக நலனுக்குக் குறைந்த முக்கியத்துவம் அளித்துள்ளதையே காட்டுகிறது.

2002-2003 ஆம் ஆண்டில் நிதிநிலைக் குறிப்பு பகுதி 2, பக்கம் 371-ஐப் பார்க்கும்போது சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடு சென்ற ஆண்டின் நிதி ஒதுக்கீட்டைவிட குறைவாக இருப்பதைக் காண முடிகிறது. இத்துறைக்குச் சென்ற ஆண்டு ரூபாய் 539.40 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூபாய் 411.11 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூபாய் 128.29 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல, பல துறைகளுக்கும் இந்த ஆண்டில் நிதி குறைக்கப்பட்டுள்ளது.

மகளிர் நலனுக்காக 2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 82.80 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால், அது இந்த ஆண்டில் ரூபாய் 32.30 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய மகளிர் நலனுக்கான நிதி ஒதுக்கீடு 60.9 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. மகளிர் நலனுக்கான திட்டப் பணிகளுக்கான தொகையும், திட்டத்தில் சேராத பணிகளுக்கான செலவும் மிகக் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஒருபுறம் மகளிர் மேம்பாடு, மகளிர் முன்னேற்றம், பாலின நேர்மை நெறி, மகளிர் மனித உரிமை என்றெல்லாம் கூறிக் கொண்டு, மறுபுறம் மகளிர்த் திட்டங்களுக்கான தொகையை இந்த அளவுக்குக் குறைத்தால் மகளிர் நலன் எவ்வாறு மேம்படும்? எனவே, மகளிர் நலனுக்கான நிதி ஒதுக்கீட்டை ரூபாய் 100 கோடியாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



இதேபோல் குழந்தைகள் நலனுக்கான நிதி ஒதுக்கீடு 50 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, 2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இருந்த நிதி ஒதுக்கீடானது ரூபாய் 28.33 கோடியிலிருந்து இந்த ஆண்டு ரூபாய் 14.15 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதுவும் ஒரு நியாயமற்ற செயல். நல்வழிப் பணிகள், பழங்குடியினர்ப் பகுதிகள் துணைத் திட்டம் ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடு இந்த ஆண்டு குறைக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கு எந்த நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. சத்துணவும், பானங்கள் வழங்குதலும் என்ற தலைப்பின்கீழும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின் ஒதுக்கீடு ரூபாய் 201.8 கோடியிலிருந்து ரூபாய் 187.79 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. மதிய உணவுக்கான ஒதுக்கீடு ரூபாய் 132.81 கோடியிலிருந்து ரூபாய் 71.71 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. எனவே, நிதி ஒதுக்கீட்டினைப் பார்க்கும்போது சமூக நலனை உயர்த்தும் பல முக்கியத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு கணிசமாகக் குறைக்கப்பட்டதனால், சமுதாயத்தில் நலிவடைந்தவர்களுக்கு எந்த அளவிற்குப் பலன் கிட்டப்போகிறது என்று தெரியவில்லை.

நிதிச் சீர்திருத்தங்கள், செலவைக் குறைக்கும் திட்டம் என்று கூறிக்கொள்வது, மகளிர், குழந்தைகள், முதியோர், ஆதரவற்றோர், பழங்குடியினர் ஆகியோரின் நலனைக் குறைக்கும் நடவடிக்கையாக உள்ளது. அரசு அக்கறை கொண்டிருக்குமேயானால், இந்த ஆண்டின் நிதி ஒதுக்கீட்டைச் சென்ற ஆண்டின் அளவிற்காவது உயர்த்த வேண்டும். புதிய திட்டங்கள் அரசின் கைவசம் இல்லையென்றாலும், பழைய திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். சமூக நலன் மற்றும் சத்துணவு சம்பந்தமாக பின்வரும் ஒரு சில கருத்துகளைச் சொல்ல விழைகின்றேன்.

மாநிலத்தில் மகளிர், மக்கள் தொகையில் பாதியாக இருந்தும், சமூக முன்னேற்றத்திற்குப் பலவகையில் பாடுபடுகின்றனர். இவர்களின் நிலையை மேம்படுத்த நலத் திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

[திருமதி காசாம்பு பூமாலை] [2002 ஏப்ரல் 26

பெண்களை மையமாக வைத்துத் திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும். அரசின் ஒவ்வொரு திட்டத்திலும் பெண்கள் சிறப்புக்கூறுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, திட்டத்தின் 40 சதவீதம் பெண்களுக்காகச் செலவிடப்பட வேண்டும். அனைத்துச் சட்டங்களும், கொள்கைகளும், திட்டங்களும், விதிகளும் வரவு-செலவுத் திட்டங்களும் பாலினக் கருத்தினை உட்கொண்டிருக்க வேண்டும்.

அனைத்துக் கல்வி நிலையங்களிலும் மற்றும் பொதுத் துறை, தனியார் துறையிலும் உருவாகும் பணியிடங்களில் 33 சதவீதத்தைப் பெண்களுக்காக ஒதுக்க வேண்டும். அட்டவணை மற்றும் சீர்மரபினப் பெண்களிடையே எழுத்தறிவைப் பெருக்க சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்கு என்று விடுதி வசதி கொண்ட பயிற்சி மையங்கள் ஏற்படுத்தி, இந்திய மற்றும் மாநில உயர் தேர்வுகளில் வெற்றி பெறச் செய்து, அவர்களைச் சிறந்த பணிகளுக்கு எடுத்துச் செல்வதுதான் பெண்களின் சமுக முன்னேற்றத்திற்கு உதவும்.

மேலும், பெண்களின் திறன், வேலைவாய்ப்பு, வருமானம் ஆகியவற்றைப் பெருக்குவதற்கான சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு தற்போது நடைமுறையில் உள்ள சுய வேலைவாய்ப்பு, பயிற்சி, சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் போன்ற திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

தற்போது உள்ள திட்டங்கள் எவ்வாறு செயல்படுகின்றன, திட்டத்தின் செலவு எவ்வாறு மகளிருக்குச் செல்கிறது என்பதைப் பற்றி மதிப்பிட வல்லுநர் குழு ஒன்றினை அமைக்க வேண்டும்.

பெண்களைக் கௌரவிக்கும் முறையில் ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையை அன்னையர் தினமாக அறிவிக்க வேண்டும்.

*பிற்பகல் 12-30*

பெண்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு, ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்படுத்த வேண்டும். விதவைகள் மற்றும் ஆதாரவற்ற பெண்களுக்கான சேவை இல்லங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தி அவர்களுக்கு இருப்பிடம், பாதுகாப்பு, கல்வி, பயிற்சி ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும். அதேபோல மாநிலத்தில் மேலும் பல மகளிர் விடுதிகளை ஏற்படுத்த வேண்டும்.



2002 ஏப்ரல் 26] [திருமதி காசாம்பு பூமாலை]

பெண்களின் உரிமையைப் பாதுகாக்கும் எண்ணத்தில் சட்ட அறிவு பயிற்சித் திட்டங்களையும் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுத்துதல் வேண்டும். பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தெருமுனைப் பிரச்சாரங்கள், நாடகங்கள் ஆகியவற்றை நடத்த வேண்டும்.

குழந்தைகள் நலன் காண அரசு தற்போது நடத்திவரும் அநாதை இல்லங்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும். இந்த இல்லங்களில் பெரும்பாலான இல்லங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்குவதால், அவை குழந்தைகளின் தரமான வாழ்விற்குப் போதுமானதாக இல்லை. எனவே அரசு இக்காப்பகங்களுக்குத் தேவையான கட்டடங்களைக் கட்டி அவற்றில் அக்கட்டுமான வசதிகளைப் பெருக்கித் தர வேண்டுகிறேன்.

தற்போது நடைமுறையில் உள்ள குழந்தைகள் காப்பகம், பால்வாடிகள் ஆகியவற்றில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் ஒரு மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும். சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகள், சூழ்நிலையால் குற்றவாளிகளாக மாறும் சிறுவர்களின் மறு வாழ்விற்கு அடிகோலுகின்றன. அவர்களுக்கு அளிக்கப்படும் பொதுக்கல்வி மற்றும் தொழிற்கல்வி முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

சமூக நலத் திட்டங்களின்கீழ், முதியோர் இல்லங்கள் அமைப்பதால், பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடையே உள்ள உறவு பாதிக்கப்படுகிறது, அநாதையாக உள்ள முதியோர்களுக்கு வேண்டும் என்றால் இந்த இல்லங்கள் பயன்பெறலாம். மற்றவர்களுக்கு இந்த இல்லங்களால் எந்த பயனும் இல்லை.

உடல் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு மையங்களை அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்த வேண்டும். உடல் ஊனமுற்றவர்களுக்கு சுயதொழில் செய்வதற்கு வேண்டிய பயிற்சியும், நிதி உதவியும் அளிக்க வேண்டும். இவர்கள் விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தமிழகத்தில் உள்ள ஊனமுற்றவர்களின் எண்ணிக்கையை அறிவதற்கு ஒரு கணக்கெடுப்பு நடத்த வேண்டும். அதன் அடிப்படையில் அவர்களுக்கு அடையாள அட்டைகள் அளிக்க வேண்டும். அந்த

அட்டைகளின் அடிப்படையில்தான் அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும் என்று கூறிக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி சி.எம். சூரியகலா. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது ஒன்றை விட்டுவிட்டேன். உடல் ஊனமுற்றோர் அனைவருக்குமே பாஸ் வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

அதேபோல, விழி இழந்தோருக்குக் கொடுக்கின்ற Scholarship-ஐ நிறுத்தியதன் காரணமாக, விழி இழந்தோர் பள்ளியில், கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்கள் எல்லாம் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். போராட்டம் எல்லாம் நடத்தியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அவர்களுக்கும் உடனடியாக அந்த ஊதியத்தைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் உரையிலே சொல்லுவார்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசும்போது விட்டுப்போனதற்கு எல்லாம் பின்னாலே வாய்ப்புகள் வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசாமல் விட்டதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

* **திருமதி சி. எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். கடந்த கால தி.மு.க. ஆட்சி தந்த பொய் வழக்கு என்ற துன்ப மலைகளைப் பொடிப்பொடி ஆக்கி. நீதியின் சிகரங்களில் காலடி வைத்து, வெற்றிக் கொடி பறக்க வைத்த, வீர நாச்சியார். அம்மா அவர்களின் தமிழகத்தில் நல்லாட்சி தரவந்த அம்மா அவர்களின் விண்ணுக்கும் மண்ணுக்கும் புகழ்கொண்ட விசுவரூபத்தை வணங்கி என் உரையைத் துவங்குகிறேன்.



சமூக நலத் துறை மானியக் கோரிக்கை மீதான இந்த விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு எனது குடியாத்தம் தொகுதி மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 85 சதவிகித மக்கள் கிராமங்களிலே வாழ்கிறார்கள்.. அவர்களுடைய வாழ்க்கையிலே முன்னேற்றமும், சிறந்த எதிர்காலமும் அமைய வேண்டும் என்று மக்களை நேசிக்கும் மாணிக்கச் சுடராக அம்மா அவர்கள், தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களை அறிவித்து உள்ளார்கள் என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படி அழுத்தமாகக் குறிப்பிடக் காரணம் என்னவென்றால், ஒரு நல்ல ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பது சிதம்பர ரகசியம் அல்ல. அது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகத்தான் இருக்கிறது. நோபல் பரிசு பெற்ற இந்தியப் பொருளாதார மேதை திரு. அமர்த்தியாசென் அவர்கள் கருத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆட்சியும் அரசு நிர்வாகமும் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கடமையைத்தான் வைத்துக்கொள்ள வேண்டும். வர்த்தகமும், வியாபாரமும் தரமான போட்டிக்கு உட்பட்ட தனியார் வசம் இருக்க வேண்டும் என்பதாகும். ஆதலால்தான் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டத்தை அம்மா அவர்களின் அரசு கொண்டு வந்துள்ளது.

மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலேயும், மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பேச்சிலேயும், நிதிநிலை அறிக்கையிலேயும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 15 அம்சத் திட்டம்தான் தமிழகத்திலே ஒரு நல்ல ஆட்சிதான் நடக்கிறது என்பதைப் பதிய வைக்கப்போகிறது. தொலைநோக்குப் பார்வையுடன் உள்ள இந்த 15 அம்ச திட்டமானது அம்மா அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போல இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றிக் காட்டப் போகிறது. அம்மா அவர்களின் ஆட்சியிலே அது நடக்கும் என்று தமிழக மக்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். இந்த இடத்திலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

நம்முடைய இந்திய அரசானது பல்வேறு காலகட்டத்தில், வெளிநாட்டில் நடந்த பல்வேறு மாநாடுகள், ஒப்பந்தக் கூட்டங்கள் என்பதில் கலந்துகொண்டு W.T.O. எனப்படும் உலக வர்த்தக மைய ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட்டுள்ளது. அதற்கும் முன்பாக 'காட்' எனப்படும் ஒப்பந்தத்திலும் கையெழுத்துப் போட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்களால் விவசாயம் பாதிக்கப்படும், வேலைவாய்ப்பு பாதிக்கப்படும், சிறுதொழில் பாதிக்கப்படும், உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்படும் என்றெல்லாம் கருத்துகள் பல்வேறு பிரிவினரிடையே நிலவுகின்றன. தாராளமயம், உலகமயம் ஆக்கல் என்பதால், நமது அடிப்படைத் தேவைகளை, அரசாங்கம் நிறைவேற்றி வைக்காதோ; பூர்த்தி செய்யாதோ என்ற பயம் சமுதாயத்தின் சில பிரிவினரிடையே உள்ளது. அப்படிப்பட்ட பயம் தேவை இல்லாதது. மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நான் இருக்கிறேன்; எனது அரசு இங்கே இருக்கிறது என்று காக்கின்ற காவல் தெய்வமாய் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

புகழ்வாய்ந்த தலைவர்கள், நாட்டுக்காகப் பாடுபட்டவர்கள் பெயர்களிலே, சமூக நலத் துறையில் திட்டம் தொடங்கி, தனது கட்சிக் காரர்களை அதிலே இலாபம் சம்பாதிக்க, கொள்ளையடிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த முந்தைய தி.மு.க. அரசுபோல அம்மா அவர்களின் அரசு செய்யவில்லை. ஆட்சியிலேயிருந்தாலும் இல்லையென்றாலும் அதிலே எப்படிக் கொள்ளை அடிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் தி.மு.க.-வுக்கு "மொட்டைத் தாதன் குட்டையிலே விழுந்தான்" என்று அம்மா அரசின் நிதிநிலை அறிக்கை தெரிவதற்கு அதுதான் காரணம்.

உண்மை என்னவென்றால், ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் திட்டங்களின் பெயர்கள் மட்டும் உள்ளன; நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. அது எங்கே போய்ச் சேர்ந்தது என்றுதான் கண்டுபிடிக்க முடியாது. வீடு, நிலம் வைத்திருப்பவர்கள் தங்கள் கட்சிக்காரர்கள் என்றால், அவர்களுக்கு O.A.P. எனப்படும் முதியோர் உதவித் தொகையை வழங்கிவிடுவார்கள். ஆனால், சமூகநலன் என்பது கட்சிக்காரர்களை மட்டும் காப்பாற்றுவதல்ல; ஒட்டுமொத்தத் தமிழகத்திற்கு அதன் வேர்களாகத் திகழும், கிராமப்புற மக்களுக்கு அனைத்துத் திட்டங்களையும் கொண்டு சேர்ப்பதாகும். ஆதலால்தான், மக்கள் நலம் காக்கும் மாதரசி அம்மா



அவர்கள், அவர்களுடைய அரசு வெளியிட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் பாதுகாப்பு என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

இறக்குமதிக் கொள்கையாலும், தாராளமயத்தாலும், உலகமயம் ஆக்குவதில் பின்னிச் செல்லவேண்டிய அவசியத்திலும் இருக்கின்ற அம்மா அவர்கள் அரசு, மக்களின் பாதுகாப்பு பறிபோய் விடுமோ என்று பயப்படும் கம்யூனிஸ்டுகளுக்கும், சமூகப் பாதுகாப்பு பறிபோனால் என்ன, இருந்தால் என்னவென்று இருக்கும் தி.மு.க.-வுக்கும், மைய அரசில் இருந்தபோதும், இப்போது இருக்கும்போதும், எங்களுக்கு இதைப்பற்றித் தெரியாது என்றிருக்கும் காங்கிரசுக்கும், பி.ஜே.பி.-க்கும், மட்டுமல்ல, தமிழக விவசாயிகளுக்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் 35 சதவீத தமிழக மக்களுக்கும், இன்னமும் கல்வி பெறாமலிருக்கும் 35 சதவீத மக்களுக்கும், மக்கட் தொகையில் சரிபாதி இருக்கும் பெண்களுக்கும், எல்லோருக்கும் பாதுகாப்பை உறுதி செய்து இருக்கிறது.

தொடர் பசுமைப் புரட்சி மூலம் வேளாண்மைப் பாதுகாப்பு, அதன் மூலம் உணவுப் பாதுகாப்பு, சுமார் 2900 கோடி செலவில் நீர்வளப் பாதுகாப்பு, அடுத்ததாகப் பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு, வாழ்வு ஆதாரப் பாதுகாப்பு, உறைவிடப் பாதுகாப்பு, உயிரினப் பாதுகாப்பு, எரிசக்திப் பாதுகாப்பு என்று குறிப்பிட்டுள்ளார்கள். மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, கல்வி, உடை, இருப்பிடம், குடிநீர், சுகாதாரம், மின்சாரம், சுற்றுச் சூழல் ஆகியவைகளை வழங்கிட, இந்தச் சமூகத்தின் நலன்களைக் காத்திட, பாதுகாக்க, இந்த நிதியாண்டில் கோடிக் கணக்கில் செலவு பிடிக்கிறது. அப்படிப்பட்ட நல்ல திட்டமாக 15 அம்சத் திட்டம் உள்ளது. அதோடு தொடர்புடையதாக சமூக நலத் துறையில் 18 அம்சத் திட்டம் உள்ளது. சுமார் ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி, சிறு தொழில் நடத்த ஊனமுற்றோருக்கு உதவிகள், இலவச சைக்கிள் உட்பட, 15 அம்சத் திட்டத்தின் உள்ளடக்கமாக, ஏராளமான திட்டங்களை அம்மா அவர்களின் அரசு அறிவித்துள்ளதை — மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களாலே அறிவிக்கப்பட்டிருப்பதை — வரவேற்கிறேன்.

சமூக நலத் துறை கொண்டு வந்துள்ள 18 அம்சத் திட்டத்தால் பயன்பெறும் குழந்தைகளும், தாய்மார்களும், பெண்களும் பயனாளிகளும் காலாகாலத்திற்கும் அம்மாவை நன்றியுடன் எண்ணிப் பார்ப்பார்கள் என்று பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

வருங்காலம் 21ஆம் நூற்றாண்டு தமிழ்ச் சமுதாயம் ஒரு நல்ல வாழ்க்கைக்கு அடித்தளமாக 15 அம்சத் திட்டத்தை அமைத்துத் தந்த அம்மா அவர்களை நன்றியுடன் எண்ணிப் பார்க்கும் என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பைபிள் சரித்திரத்திலே குறிப்பிடும்படி, மோசசின் பத்துக் கட்டளைகளுக்குக் காலங்களைக் கடந்த புகழ் உண்டு. மேக்னகார்ட்டா ஒப்பந்தம் என்பதைப்போல, சூயஸ் கால்வாய் ஒப்பந்தம் என்பதைப் போல, புகழ் பெற்றதாக, தரணிபோற்றும் தமிழர்குல மாதரசி அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ள 18 அம்சத் திட்டமும் புகழ்பெறும்; வரலாற்றிலே பொன் ஏட்டிலே பதித்து வைக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையை ஒருங்கிணைந்த முறையிலே வேறு எந்த மாநில அரசும் செய்ததாகத் தெரியவில்லை.

*பிற்பகல் 12-40*

இந்தியாவிலேயே அஞ்சுவது ஒன்றும் இல்லை, அஞ்ச வருவதும் ஒன்றும் இல்லை எனப் பிரகடனப்படுத்தியுள்ள, சங்கநாதமாய் முழங்கியுள்ள அம்மா அவர்களின் அரசுதான் முதல்முதலாகச் செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்தப் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையில் ஆதிதிராவிடர்களையும், மிகப் பின்தங்கிய பிரிவினரையும் ஆராய்ச்சித் திறன் மிக்கவர்களாக வளர்க்க விரும்பும் அம்மா அவர்கள் அதற்காக வேலூர் மாவட்டத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளதை வரவேற்கிறோம்.

குடியாத்தம் வட்டம், கண்டிப்பேடு, ஒட்டன்தாங்கல் கிராம எல்லைகளுக்கு உட்பட்ட நிலங்கள், இந்தப் பல்கலைக்கழகம் அமைய வாய்ப்புள்ளதாகக் கண்டறியப்பட்டு முதல்கட்ட நடவடிக்கைகள் முடிந்துள்ளன. நிலத்திற்கான கையகப்படுத்தல் வேலை நிலுவையிலே உள்ளது. கல்விச் செல்வம் வளர வாய்ப்புத் தரும் கலியுக சரஸ்வதி அம்மா அவர்கள், அதனைச் சீக்கிரமாக நிறைவேற்றும்படி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுகிறேன்.

குடியாத்தம் வட்டத்திலே இப்பல்கலைக்கழகம் அமைய நடவடிக்கை எடுத்த அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பிலேயும், என் சார்பிலேயும் இரட்டிப்பு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இதிலே படிக்க வாய்ப்பும், ஆய்வு செய்ய வாய்ப்பும் பெறப்போகும் இளைய தலைமுறை சார்பிலேயும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குடியாத்தம் தொகுதியிலே வறுமை காரணமாக வயதான முதியவர்களை அவர்களது வாரிசுகள் காப்பாற்றாமல் ஒதுக்கிவிடுகிறார்கள். அந்த முதியவர்களைக் காப்பாற்ற கருணையின் மறு உருவம், அன்பின் மறு வடிவம் என்ற புகழுக்குரிய அம்மா அவர்கள் குடியாத்தம் நகரில் ஒரு முதியோர் இல்லம் அரசின் சார்பிலே திறந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வறுமை காரணமாக குடியாத்தம் தொகுதியில் உள்ள பெற்றோர்கள் சிலர் தாங்கள் பெற்ற குழந்தைகளைத் தாங்களே குப்பையிலே போட்டுவிடுகிறார்கள். இதுவரை ஏழு குழந்தைச் செல்வங்கள் குப்பையிலேயிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எட்டாவதாக ஒரு குழந்தை, அதன்மீது தாயின் கர்ப்பப்பை வாசனைகூட வறண்டு போகாத நிலையில், நாய்களும் பன்றிகளும் கடித்து இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மணிகளாய், காவியச் செல்வமாய் கல்விக் கடலாய், வளர வேண்டிய குழந்தைகள், கண்ணே, மணியே, தங்கமே, செல்வமே, பேசும் பொற் சித்திரமே என்று தாலாட்டி, சீராட்டி, பாராட்டி வளர்க்கப்பட வேண்டிய குழந்தைகள் நாதியற்ற நிலையில் குப்பையிலே வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் துயரமான நிலை உள்ளது.

தூய தொண்டில் அன்னை தெரசாபோல் ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஆதரவுக் கரம் தந்து தொட்டில் குழந்தை பாதுகாப்புத் திட்டம் தந்த தெய்வத்தாய் அம்மா அவர்கள், வானம் பார்த்த பூமி என வாடிடும் குழந்தைகளுக்கு அன்புமழை பொழியும் ஆகாயப் பொன் மேகமாய், கருணையுள்ளம் கொண்ட காமதேனுவாய், பாச மலராய், காட்சிக்கு எளியவராய், கடும் சொல் அற்றவராய், பெரும் கருணைப் பேராறாய் இருக்கிற அம்மா அவர்கள் குடியாத்தம் தொகுதியிலே தொட்டில் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் தொடங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி சூரியகலா, முடித்துவிடுங்கள். சசிகலா, அவர்களுக்குச் சொல்லுங்கள்.

**திருமதி சி.எம். சூரியகலா:** அம்மா அவர்களின் புகழுக்குப் புகழ் சேர்த்து குடியாத்தம் தொகுதி மக்கள் நன்றியுடன் எண்ணிப் பார்க்க மிக, மிக அவசியமானதும், தி.மு.க. ஆட்சியினால் ஒதுக்கப்பட்டதும் நிராகரிக்கப்பட்டதுமான கோரிக்கைகள்; குடியாத்தம் நகருக்கு ஒரு

பைபாஸ் சாலையும், குடியாத்தம் நகரிலே பாதாளச் சாக்கடைத் திட்டமும் ஆகும். அதனை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

பொதுமக்கள் வசதிக்காக கவுண்டன்னிய மகாநதி மேலே மேம்பாலம் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகரில் நீதிமன்றங்கள் தனித் தனியாக உள்ளன. இது பொதுமக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டித்தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மோர்தானா அணையில் இருந்து பாக்கம் ஏரிக்கும், நெல்லூர்பேட்டை ஏரிக்கும், புதிய கால்வாய் அமைத்து நிலத்தடி நீர்வளம், விவசாயம் ஆகியவை பெருகிட அம்மா அவர்களின் அரசு முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் தொகுதியிலே கைத்தறி நெசவாளர்கள் 75,000 பேர் உள்ளனர். மத்திய அரசு விதித்துள்ள 9.2 சதவீதம் கலால் வரி காரணமாக, கைத்தறித்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. அம்மா அவர்களின் அரசு இந்த வரியை நீக்க மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தத்தில் கைத்தறி ஏற்றுமதி வளாகம் அமைப்பதற்கு அம்மா ஆட்சியில் 1991-ல் ஒப்புதல் அளித்தார்கள். ஆனால், கடந்த தி.மு.க. அரசு அந்தத் திட்டத்தை அமலாக்கவில்லை. கைத்தறித் தொழிலாளர்கள் வயிற்றிலே மண்ணை அள்ளிப் போட்டது தி.மு.க. அரசு. ஆகவே, அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தை அமலாக்கி கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வானம் பொய்க்கலாம், வளம் தந்த நிலம் வெடித்துப் போகலாம், நீர் ஆதாரம் வறண்டு போகலாம், அம்மா அவர்களின் அரசின் திட்டங்கள் பொய்த்துப் போகாது. வாரி வழங்கி தமிழகத்தை வாழ்விக்க வந்த மாரி என அம்மா அவர்கள் உள்ளார்கள். மாரியால் வளம் பெறுவது விவசாயம். அம்மா அவர்களின் ஆட்சியால் வளம் பெறுவது தமிழ்நாடு என்று கூறி, பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி.





பிற்பகல் 12-45

* **திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குள் வருமுன் கடந்த செவ்வாய் அன்று இப்பேரவையிலே ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுத்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் என் சார்பாகவும் நான் சார்ந்திருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை நிறைவோடு சமர்ப்பித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு பெண்ணாக இருந்தும்கூட, எந்த ஓர் ஆண் மகனுக்கும் இல்லாத அதிரடித் துணிவோடு, அதிலும் குறிப்பாக அவர்களுக்கே அச்சுறுத்தல் இருக்கின்ற நிலையிலும்கூட, என்னுடைய உயிருக்கு அதனைப்பற்றி ஒரு சிறிதும் பொருட்படுத்தாது, என்னுடைய உயிருக்கு எத்தகையதோர் ஆபத்து நேர்ந்தாலும் பரவாயில்லை; இந்திய தேசத்தின் இறையாண்மைக்கு எந்த ஓர் ஆபத்தும் நேர்ந்து விடக்கூடாது என்கிற அக்கறையோடும் ஆதங்கத்தோடும் இந்த அற்புதமான தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களை இந்திய தேசிய காங்கிரஸ் மட்டுமல்ல; தமிழக மக்கள் மட்டுமல்ல, இந்த தேசத்தின் ஒவ்வொரு பிரஜையும் இறுமாப்போடு, ஏறிட்டுப்பார்த்து, நன்றியோடு நினைவுகூரக் கடமைப்பட்டு இருக்கின்றோம் என்பதைச் சொல்லிக் கொள்கின்றேன்.

*"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்"*

என்று வள்ளுவம்கூடப் பகர்கிறது. ஆக, குறள்நெறியிலே பார்க்கும் காலத்தும் நாம் ஒரு அறிவார்ந்த தீர்மானத்தைத்தான் இந்தப் பேரவையிலே நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால் பேதைமை காரணமாகப் புரியாதவர்கள் சிலர் புலம்பிக் கொண்டிருக்கின்றார்கள். தெரிந்தே பாம்பிற்குப் பாலை வார்க்க வேண்டும் என்று அடம் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள்; புலிகளுக்கு வடம் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அறிந்தே அடம் பிடிக்கிற அசட்டு கறுப்புப் பூனைகள் பற்றியும், மதில் மேல் பூனைகளாக நின்று நடுநிலை என்று பசப்பிக் கொண்டிருப்பவர்கள் பற்றியும், கள்ளத் தோணி ஏறியே காலத்தைக் கழித்து வருபவர்களைப் பற்றியும் நாம் கடுகளவும் கவலைப்படத் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையிலே, இந்த உன்னதமான தீர்மானத்தை நிறைவேற்றியதன் வாயிலாக இதுகாறும் ஒரு தலைசிறந்த அரசியல்வாதியாக அடையாளம்

காணப்பட்ட நமது முதல்வர் அவர்கள் அன்றையதினம் முதல் ஒரு தலைசிறந்த தேசியவாதியாக நிலை உயர்ந்து நிற்கின்றார் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொண்டு அதற்காக அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை தலை வணங்கி இன்றைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குள் வருகின்றேன்.

என்னைப் பொறுத்தமட்டிலும், சமூக நலத் துறை என்பது ஒரு அரசாங்கத்திற்குத் தனது குடிமக்களிடையே எத்தகைய அக்கறை இருக்கிறது என்பதைத் துல்லியமாகக் காட்டுகின்ற ஒரு காலக் கண்ணாடி என்பதாகத்தான் கருதுகின்றேன். அந்த வகையிலே பார்க்கும் காலத்து, இந்த அரசிற்குத் தமிழக மக்களின் நலனிலே அதிகப்படியான அக்கறையும் அதீதமான* அன்பும் இருக்கிறது என ஏற்றுக்கொள்ளும் வகையிலே, எண்ணத் தூண்டும் வகையிலே, சிந்தைக் தனி நம் சீரிய திட்டங்களையெல்லாம் தொகுத்து, நலத் திட்டங்களாகத் தொடுத்து, கொள்கை விளக்கக் குறிப்பாக்கி நம் கையிலே கொடுத்திருக்கும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நிறைவான திட்டங்கள் பல கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, ஆங்காங்கே சிற்சில நெருடல்கள் இருக்கின்றன. அவற்றையும் தாங்கள் தவிர்த்துக் கொடுப்பீர்களேயானால் சமூக நலத் துறையானது ஒரு தன்னிறைவான துறையாக மட்டுமின்றி ஒரு தன்னிகரற்ற துறையாகவும் உயர்ந்து நிற்கும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பாராட்டப்பட வேண்டிய அம்சங்கள் நிறைய இருக்கின்றன; நிறைவாக இருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாகப் பாராட்ட வேண்டுமென்று சொன்னால், காலமும் சரி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் சரி, இடம்தரமாட்டார்கள் என்கின்ற காரணத்தினால், அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாகப் பாராட்டிவிட்டு ஒன்றிரண்டு திட்டங்களை மட்டும் விரிவாக விவாதிக்க விழைகின்றேன்.

முதலிலே, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம். பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்னும் ஒரு புதுமையான திட்டத்தை, புரட்சிகரமான திட்டத்தை அறிவித்திருக்கின்றீர்கள்.

*"மங்கையராய்ப் பிறப்பதற்கே—நல்ல*
*மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"*



என்கின்ற கவிமணியின் கனவு மெய்பட்டுப் போனதோ என்கின்ற எண்ணம் தோன்றுகின்ற அளவிற்கு மிக அற்புதமான திட்டம். ஒரு பெண் குழந்தை மட்டுமே இருந்து, வேறு குழந்தைகள் இல்லாத குடும்பங்களிலே பெற்றோர்களில் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால், அந்தப் பெண் குழந்தையின் பெயரிலே 22,200/- ரூபாய் தொடக்க வைப்பு நிதியாக வைக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. 2 பெண் குழந்தைகள் மட்டும் இருந்து, ஆண் குழந்தை இல்லாவிட்டால், பெற்றோர்களில் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு செய்கின்றபட்சத்திலே, அந்தக் குழந்தைகளின் பெயரிலே தலா 15,200/- ரூபாய் தொடக்க வைப்பு நிதியாக வைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தத் திட்டத்தின் கீழே இதுவரையிலும் எத்தனை பெற்றோர்கள் அல்லது பெண் குழந்தைகள் பயனடைந்து இருக்கின்றார்கள் என்பதைத் துறை அமைச்சர் அவர்கள் தங்களது விளக்க உரையிலே சொல்வார்களேயானால், அது பெண் சிசுவதைக்கு எதிரான விழிப்புணர்வைத் தூண்டுவதாக அமையும் என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, பெண் குழந்தைப் பாதுகாப்பு திட்டம், தொட்டில் குழந்தை திட்டம் போன்ற திட்டங்களையெல்லாம் இன்னும் மக்கள் முழுமையாக அறிந்துகொள்ளவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்தத் திட்டங்களின் உயரிய நோக்கங்களை மக்கள் புரிந்துகொள்ளும் வகையிலே, இந்தத் திட்டங்களைப் பற்றிய செய்தியை ஒரு விளம்பரப் படமாகத் தயாரித்து, சின்னத் திரைகளிலும் நமது தொலைக்காட்சிகளிலும், திரைப்பட அரங்கங்களிலேயும்கூட நீங்கள் திரையிடலாம். ஏனென்றால் அறியாமை காரணமாகத்தான் இதுபோன்ற கொடுமைகள் எல்லாம் தொடர் கதையாக, சங்கிலித் தொடர்களாக நடந்து வருகின்றன என நான் கருதுகிறேன். ஒரு மாத காலத்திற்கு முன்புகூட ஒரு செய்தியைப் படித்தேன். குப்பைத் தொட்டியிலே ஒரு பெண் குழந்தை பிணமாகக் கிடந்திருக்கின்றது. அந்தப் பிஞ்சுக் குழந்தையின் கை, கால்களை ஒரு நாய் குதறிக்கடித்திருக்கின்றது. அதைப்போல சமீபத்திலேகூட எங்கள் கோவையிலே, அரசு மருத்துவமனைக்கு முன்புறம் இருக்கின்ற சாக்கடையிலே ஒரு பெண் குழந்தை பிணமாகக் கிடந்திருக்கிறது. அத்தோடு பெண்மை வாழ்கவெனக் கூத்திடும் தேசத்தில் பெண் சிசுக்களுக்குத் தாய்ப் பால் பஞ்சம்; எருக்கம் பால் ஊட்டி, எமனுக்குத் தாரை வார்க்கும் தாய்மையற்ற பேய்களின் வஞ்சம் கூட ஒருபுறம்

தொடர் கதையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற சோகங்களுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமேயானால், நான் ஏற்கெனவே சொன்னது போல, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல் பெண் சிசு வதையில் ஈடுபடும் பெற்றோர்கள் மீதும் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-50*

அடுத்து, மகளிர் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக 18 அம்சத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த 18 அம்சங்கள் என்னென்ன, எவையெவை என்று சொல்லப்படவில்லை. அவ்வாறு சொல்லியிருந்தால், இன்னும் சிறப்பாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"**

என்னும் வள்ளுவரின் வழிநின்று, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள், முதியோர்கள் ஆகியவர்களுக்கு அளிக்கப்படும் சத்துணவுத் தேவைகளிலே சிறப்புக் கவனம் செலுத்தும் வகையில் வாழ்நாள் முழுமைக்கும் சத்துணவுப் பாதுகாப்புத் திட்டம் என்னும் சீரிய திட்டத்தை நிதிநிலை அறிக்கையிலே இந்த அரசு சொல்லியிருக்கின்றது. அருந்தலைவர், பெருந்தலைவர், கருந்தலைவர், கர்மவீரர், காமராஜர் அவர்கள் விட்டுச்சென்ற, வித்திட்டுச்சென்ற மதிய உணவுத் திட்டத்தைத் தாங்கள் படிப்படியாக உயர்த்தி இப்போது வாழ்நாள் முழுமைக்கும் சத்துணவுப் பாதுகாப்புத் திட்டம் என்ற உன்னதத் திட்டத்தை அளித்திருக்கிறீர்கள். நான் உள்ளபடியே அதை வரவேற்கின்றேன். சத்துணவுத் திட்டத்திலே உள்ள ஒரு குறைபாட்டினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் நேரடியாக அவர்களது அறைக்குச் சென்று தெரிவித்தேன். அமைச்சர் அவர்களும் அதனைக் கனிவோடு கேட்டு என் கண் எதிரிலேயே அக்குறையை நிவர்த்திசெய்திட உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்திலே வழங்கப்படும் அரிசியானது, கடந்த ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்ட அரிசியைக் காட்டிலும் மிக மிகத் தரமானதாக இருப்பதாக எல்லோருமே பாராட்டிச் சொல்கின்றார்கள்.





அதே நேரத்திலே, பருப்பு மட்டும் சற்றுத் தரம் குன்றி இருப்பதாகச் சொல்கின்றார்கள். இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். பன்னெடுங்காலமாக மைசூர் பருப்பு என்ற ஒரு வகையை நாம் வழங்கி வருகின்றோம். மைசூர் பருப்பு என்பதால் நரம்புத் தளர்ச்சி ஏற்படும், முடக்குவாதம் ஏற்படும் என்றெல்லாம் ஒரு கருத்து நிலவி வருகிறது. அந்தக் கருத்திலே உண்மை இருக்கிறதா என்பதைத் தாங்கள் ஆய்ந்து அறிய வேண்டும். அவ்வாறு உண்மை இருந்தால், அதனை நீங்கள் மாற்றவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உருளைக்கிழங்கு வாங்குவதற்கு அளிக்கப்பட்டு வரும் தொகையானது போதவில்லை என்று ஒரு குறை இருக்கின்றது. பணம் போதாத காரணத்தால், கழித்துவிட்ட காய்கறிகளை அவர்கள் வாங்கவேண்டிய ஒரு நிலை இருப்பதாகச் சொல்கின்றார்கள். அதைக்கூடப் போதுமான அளவுக்கு வாங்க முடியவில்லை, குழந்தைகளுக்கு வழங்க இயலவில்லை என்று ஒரு குறை இருக்கின்றது.

அடுத்து, இந்த சத்துணவுக்கூடங்கள் எல்லாம் மிக மிகப் பழமையாக, எந்த ஒரு அடிப்படை வசதியுமின்றி இருக்கின்றன. இன்னும் பல இடங்களிலே பார்ப்போமேயானால், பொதுக் கழிப்பறைக்கும், இந்தச் சத்துணவுக் கூடங்களுக்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. அதேபோன்று அந்த மேல்கூறைகள்கூட, இன்று விழுமோ, நாளை விழுமோ அல்லது மற்றென்று விழுமோ அறியேன் என் கோவே என்று சொல்லக்கூடிய பரிதாப நிலையிலே இருக்கின்றன. இதனால் உயிர்ச்சேதங்களும், பொருள் சேதங்களும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இந்தச் சத்துணவுக் கூடங்களையெல்லாம் முழுமையாக அகற்றிவிட்டு, புதிதாக அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய சத்துணவுக் கூடங்களை தாங்கள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கொள்கை விளக்கக் குறிப்பிலே சத்துணவுக் கூடங்களைப் பழுதுபார்க்க 1210 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் Performance Budget-ஐப் பார்க்கும் போது Revenue Expenditure-க்கு மட்டுமே கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய Capital Expenditure அதாவது மூலதனச் செலவிற்கு, எந்தத் தொகையும் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே ஏன் இந்த முரண்பாடு என்பதற்கான விளக்கத்தைத் தாங்கள் அளிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி எஸ். மகேஸ்வரி] [2002 ஏப்ரல் 26

பணிபுரியும் பெண்கள் விடுதிகள் கட்ட 2002-2003 ஆம் ஆண்டிலே ரூ. 31.53 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை நான் வரவேற்கின்றேன்.

"ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவ ளன்னை."

என்று பாரதியார் சொன்னார். ஆனால் இப்போது ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் பொருளாதாரத் தேடலிலே, இன்னும் சொல்லப்போனால் பெரும்பங்கை வகிப்பது பெண்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் இப்போது எந்த ஆண் மகனும் வேலைக்குப் போகாத பெண்களைத் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இல்லை. ஆண்களின் உள்ளப்பாங்கை மிகச்சரியாக உணர்ந்து கொண்ட காரணத்தினால்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட நேற்றைக்குக் காவல் துறை மீதான மானியக் கோரிக்கையின்போது பெண்களுக்கான வேலைவாய்ப்பினை உயர்த்துவதற்காக நல்ல பல திட்டங்களை அடுக்கடுக்காக எடுத்துச்சொன்னார்கள். இங்கே உள்ள ஆண் உறுப்பினர்கள் கூடப் பொறாமையால் கடுப்பாகிப் போகின்ற அளவிற்கு அதீதமான திட்டங்களையெல்லாம் சொன்னார்கள். ஆகவே அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி சொல்லிக்கொண்டு, இப்போது "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது பெண்களுக்குத்தான் வெகுவாகப் பொருத்தமாக இருக்கிறது. (மணியடிக்கபெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஆண்களுக்கெல்லாம் பொறாமையில்லை. எங்களுக்கு சந்தோஷம்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்களெல்லாம் ஆண் சிங்கங்களாக இருக்கவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். பெண் சிங்கங்கள் பாடுபட்டு இறை தேடிக்கொண்டு வந்தால், ஆண் சிங்கங்கள் அலட்டிக்கொள்ளாமல் ஆனந்தமாக உணவு அருந்தலாம். ஆகவே நீங்களெல்லாம் ஆண் சிங்கங்களாக வாழவேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாங்கள் எல்லாம் பெண் வாரிசைப் பெற்றிருக்கிறோம். ஆகவே நாங்கள் எல்லாம் சந்தோஷப் படுகிறோம். (சிரிப்பு)



2002 ஏப்ரல் 26]

**திருமதி எஸ். மகேஸ்வரி:** ஆகவே, இப்போது இருக்கின்ற இந்த காலக்கட்டத்திலே பெண்கள் வெளியூர்களிலே அதிகமாகத் தங்கி வேலை பார்க்கவேண்டிய கட்டாயத்திலே, சூழ்நிலையிலே இருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கான இடம் தேவை. ஆகவே மாவட்டந்தோறும், பணிபுரியும் மகளிர் விடுதி கட்டித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மகளிர் நலத் திட்டங்களைப் பற்றிச் சொல்லும்போது, திருமண நிதி உதவித் திட்டங்களுக்கான மனுவினைக் குறைந்தபட்சம் 45 நாட்களுக்கு முன்பே நாங்கள் கொடுக்கவேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. ஆனால் குறுகிய காலத்திலேகூடத் திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. ஆகவே, இதுபோன்ற காலக்கெடு விதிக்காமல் திருமணத் தேதிக்கு முன்பு, எந்தத் தேதியிலே அவர்கள் மனு கொடுத்தாலும், அதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை வரவேண்டும். திருமணம் நடந்து விட்டது என்பதற்காக மனுவினை நிராகரிக்கக்கூடாது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

விதவை மறுமணத் திட்டத்திற்காக 10,000 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையை 20,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இப்போது ஆண்களுக்குப் பரவாயில்லை, பெண்டாட்டி செத்தால் புதுமாப்பிள்ளை என்ற நிலை அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் பெண்களுக்கு இப்படிப்பட்ட நிலை இன்னும் வரவில்லை. ஆகவே, நான் விதவை விவாகங்களை ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த உதவித் தொகையை உயர்த்தி வழங்கவேண்டும். விதவைப் பெண்களுக்கு பணி வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கணவனை இழந்த மற்றும் ஆதரவற்ற கிராமப்புற மகளிர்க்கு குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் நிலம், நீர்ப்பாசன வசதிகளுடன் இலவசமாகத் தரப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெண்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்களிலே, மகளிர் சுயநிதிக் குழுக்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால் கோவை போன்ற பெருநகரங்களிலே இந்தத் திட்டம் இன்னும் நிறைவாகச் செயல்படுவதில்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நாங்

ஏற்கெனவே சொன்னதைப்போல, வேலையில்லாத் திண்டாட்டம் என்பது நகர்ப்புறங்களிலே மிகப் பெரும் கடுமையான, கொடுமையான பிரச்சினையாக இருந்து வருகிறது. நான் ஏற்கெனவே பட்டறைத் தொழில்கள் எல்லாம் பட்டுப் போன பரிதாப நிலையைப் பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, தங்க நகைத் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சார்ந்த 1000 பெண்களுக்குக் கடன் உதவி கோரி, கோவை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் நான் ஏற்கெனவே மனு கொடுத்தேன். இதிலே 470 மனுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும் என்றும் சொன்னார்கள். ஆனால் வெறும் 10 மகளிர்க்கு மட்டுமே அங்கே பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, அரசின் திட்டங்களிலேயே மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுகின்ற ஒரு சூழல் இருக்கிறது. ஆகவே, இந்தச் சூழலையும் நீங்கள் களைய வேண்டும். இதுகுறித்து மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் கூட மனு கொடுத்துள்ளேன். ஆகவே, மனுதாரர்கள் அனைவருக்கும் விரைவாகக் கடனுதவி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி க. பாலபாரதி. (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, time ஆகிவிட்டது.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் தேவை என்றால், அதற்கு அடிப்படையான பெண் கல்வி மேம்படவேண்டும். இந்த உயரிய நோக்கோடு ப்ளஸ் 1, ப்ளஸ் 2 படிக்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியர்க்கு இலவச மிதிவண்டி வழங்கப்பட்டு வருகிறது. இது மிகமிகப் போற்றுதலுக்குரிய திட்டமாகும். இத்திட்டத்தை இவ்வரசு வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அனைத்து நலிவுற்ற ஏழை மாணவியருக்கும் இன வேறுபாடின்றி நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நலிவுறற ஏழையெளிய பெண்களுக்கு இலவச உயர்கல்வி அளிக்கவும் இவ்வரசு உரிய திட்டங்களைத் தீட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்கள் சமூகப் பாதுகாப்புப் பற்றிச் சொல்லும்போது, மகளிர் காவல் நிலையங்களைக் கொண்டு வந்ததிலே முன்னோடியாக இருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் தற்போது மகளிர் நீதிமன்றங்கள் ஏற்படுத்துவதிலும் முன்னோடியாக இருக்கிறார். அதற்காக அவர்களை வாழ்த்துகிறேன்.



மகளிர்க்கு எதிரான குற்றங்கள் இப்போது ஆண்டுக்காண்டு, நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகின்றன. ஒவ்வொரு 7 நிமிடத்திற்கும் ஒரு குற்றம் நிகழ்ந்து வருவதாகப் புள்ளியியல் கணக்குகள் சொல்கின்றன. அதிலே குறிப்பாக வரதட்சணைக் கொடுமை என்பது 21 ஆம் நூற்றாண்டிலேகூடத் தாலிகட்டக் கூலி கேட்கும் கயமைத்தனங்கள், தொடர்ந்து கொண்டிருக்கின்றன. என்னைப் பொறுத்தமட்டிலும், வரதட்சணைத் தடுப்புச் சட்டம் என்பது ஒருவழிப் பாதையாக, one way traffic-ஆகத்தான் இருக்கிறது. எப்படி இலஞ்சம் வாங்குவதும் குற்றம், கொடுப்பதும் குற்றம் என்று இருக்கின்றதோ, அதேபோன்று, வரதட்சணை வாங்குவதும் குற்றம், கொடுப்பதும் குற்றம் என்ற வகையிலே சட்டத் திருத்தத்தை நாம் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் இதுபோன்ற பிரச்சினைகளைத் தவிர்க்க இயலும். எந்தப் பெற்றோரும் தன் பிள்ளைகளுக்கு, தங்கள் பெண் குழந்தைகளுக்கு திருமணம் ஆகாது என்று கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால், ஆண் மக்களால் ஒருகாலும் இன்று தனித்து இயங்க முடியாது. சிவம் இல்லையேல் சக்தியில்லை என்பதெல்லாம் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டது. சக்தியில்லையேல் சிவம் இல்லை என்பதுதான் சத்தியவாக்கு. இன்னும் சொல்லப்போனால், சக்தி இல்லையேல் சிவன்கள் எல்லாம் சவங்களாகி விடும். ஆகவே, நாம் தைரியமாக இந்தச் சட்டமாற்றத்தைப் புகுத்தலாம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, பெருகிவரும் பாலியல் பலாத்காரங்கள்; நாம் ஒரு மிகப் பெரும் சமுதாயப் பேரழிவை நோக்கி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி, (குறுக்கீடு) முடித்து விடுங்கள். (குறுக்கீடு) செல்வி க. பாலபாரதி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** நாம் மிகப் பெரும் சமுதாயப் பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை— .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இன்னும் 3 நிமிடங்கள் கொடுங்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2 நிமிடங்கள் கொடுங்கள். அதைப்போன்று விழுப்புரம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த உறுப்பினரும் மகளிர்தானே. செல்வி க. பாலபாரதி, பேசுங்கள். (குறுக்கீடு).

**திருமதி எஸ். மகேஸ்வரி:** ஒரு நிமிடம் கொடுங்கள். அதைப்போன்று விழுப்புரம் மாணவி ஓடும் இரயிலிலே கற்பழித்துக் கொல்லப்படுகின்றாள். கரூரிலே 8 வயதுள்ள படிக்கும் மாணவி கற்பழிக்கப்பட்டு, பிளேடால் அறுக்கப்பட்டு காவிரி ஆற்றிலே வீசப்படுகின்றாள் என்கின்ற செய்திகள் எல்லாம் நாளுக்கு நாள் வந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், குழந்தைகளும் இதற்கு விதிவிலக்காக இல்லை. 8 வயது குழந்தை, 5 வயது குழந்தை, 3 வயது குழந்தை எனப் பால்மணம் கொண்ட பச்சிளம் குருத்துகளைக்கூட, பால் சுகம் காண, பாழாக்கும் பாதகமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்று சொன்னான் பாரதி. ஆனால், இப்போது மாதர்களுக்கு இழிவல்ல, அழிவு நடந்து கொண்டிருக்கிறது. 2001 ஆம் ஆண்டிலே மட்டும் கற்பழிப்புத் தொடர்பான குற்றங்கள் 1999 குற்றங்கள் நிகழ்ந்துள்ளதாகக் காவல் துறை மானியக் கோரிக்கையிலேயே தாங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். ஆகவே, இந்த நேரத்திலே அவசரமான, அவசியமான முடிவுகளை நாம் ஏற்க வேண்டியிருக்கிறது. கற்பழிப்புக் குற்றத்திலே ஈடுபடுபவர்களுக்கு வெறும் தண்டனை போதாது என நான் கருதுகிறேன். அத்தகைய குற்றத்திலே ஈடுபடும் ஈனர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்து, அவற்றை விற்பனை செய்து, அந்த விற்பனைத் தொகையைப் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணமாக வழங்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு Criminal Procedure Code-ல் 357-வது... *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1.00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி 5 நிமிடத்திற்குள் பேசி முடித்து விடுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் பத்திரிகையில் வந்த ஒரு செய்தியை நான் குறிப்பிட விரும்புகின்றேன். நிறைமாதக் கர்ப்பிணிப்பெண்ணை நிற்பதற்கும், சுவாசிப்பதற்குமே திணறிக் கொண்டிருந்த அந்த கர்ப்பிணிப் பெண்ணைச் சுற்றி, மத வெறியர்கள் வாளுடன் சூழ்ந்து கொள்கிறார்கள். அந்த கர்ப்பிணிப் பெண்ணினுடைய வயிற்றைத் தங்களது வாளால் கிழித்து, உள்ளே இருந்த சிசுவை வெளியிலே எடுக்கிறார்கள். எடுத்த சிசுவை, அந்தத் தாயின் முன்னால் குற்றுயிரும், குலையுயிருமாகத் துடித்துக் கொண்டிருந்த சிசுவின் கழுத்தைச் சீவிவிடுகிறார்கள். பிறகு, அந்தத் தாயையும் வெட்டிக் கொன்று





விடுகிறார்கள். இத்தகைய வெறித்தனமான சம்பவம் 18 ஆம் நூற்றாண்டிலே நடக்கவில்லை. 21 ஆம் நூற்றாண்டில், கோத்ரா இரயில் சம்பவத்திற்குப் பிறகு குஜராத் மாநிலத்தில் மத வெறியர்கள் இப்படிப்பட்ட சம்பவங்களை — நிகழ்த்தினார்கள். வரலாற்று நெடியுமுண்டு; கடந்த காலங்களிலே சுதந்திரப் போராட்ட நாட்களிலேகூட, அரசியல் ஆயுதமாகப் பெண்களைப் பலாத்காரம் செய்வது, அவர்களை வெட்டிக் கொல்வது என்ற கொடூரச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆகவேதான், மதவெறிச் சம்பவங்கள் வளர்ந்தால், முதல் பலி குழந்தைகளும் பெண்களும்தான். ஆகவே, அத்தகைய சம்பவங்களின்போது, தமிழகத்தில் அதனுடைய நிழல்கூடப் படரவிடாமல் தமிழகம் முழுவதும் அமைதியை நிலைநாட்டிய அந்தத் தன்மைக்கு, அரசினுடைய செயல்பாட்டிற்கு முதற்கண் எனது வணக்கத்தையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த நிகழ்ச்சியின் தொடர்ச்சியாகப் பாராளுமன்றத்திலே வாக்கெடுப்பு என்பது வர இருக்கிறது. இந்தச் சம்பவம் எங்கும் நடந்துவிடக்கூடாது என்ற மனித நேயத்தை, அங்கே நிச்சயமாக நீங்கள் நிலைநாட்டுவீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கின்றது.

அதேபோன்றுதான், தமிழகத்தில் சத்துணவு ஊழியர்களினுடைய பிரச்சினை பற்றி எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஊழியர்களின் ஊதியம் 1,276 ரூபாய். சமையலர்களுக்கு 630 ரூபாய், உதவியாளர்களுக்கு 490 ரூபாய். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுடைய வருமானம் 2,500 ரூபாயாக நிச்சயிக்கப்படுகிறது. ஆனால், இந்தச் சத்துணவு ஊழியர்களெல்லாம் அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே எந்தக் கோட்டிலே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது இன்னமும் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே, இந்த 1,276 ரூபாயை, தயவுசெய்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுடைய வருமானமான 2,500 ரூபாயாகவாவது நீங்கள் நிச்சயம் உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில், அ.தி.மு.க. அரசாங்கம் Scale of Pay-ஐக் கொண்டு வந்து பெருமையைச் செய்திருக்கிறார்கள். இந்தச் சத்துணவுத் திட்டத்தை நாங்கள் சாதாரணத் திட்டமாகப் பார்க்கவில்லை. மிட்டாக்கள், மிராசுகள், ஜமீன்தார்களுடைய வெள்ளித் தட்டுகளிலேயிருந்த அரிசிச் சோற்றை கிராமப்புற ஏழையினுடைய சாதாரணத் தட்டுக்களிலே கொண்டு வந்து சேர்த்த ஒரு அரிய பெருமை இந்தத் திட்டத்திற்குச் சேரும். ஒரு பள்ளியில் உயர்கல்வி எஸ்.எஸ்.எல்.சி. அல்லது 10-வது வகுப்பு படித்த பெண்களுக்கு வேலைவாய்ப்புக்

கிடைத்திருக்கிறது. குறிப்பாக, விதவைப் பெண்களுக்கு, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கெல்லாம் வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது. ஆகவே, இவர்களுடைய ஊதியத்தைத் தயவுசெய்து உயர்த்த வேண்டும். மதிப்பே இல்லாத ஊதியத்திற்கு மதிப்பூதியம் என்று அழைத்தால் வரலாறு நம்மையெல்லாம் கேலி செய்துவிடுமோ என்ற ஓர் அச்சத்தில் இருந்துதான் நான் இதைச் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். அதேபோன்று, தேர்தல் காலத்தில், இடைக்காலமாக ஆசிரியர் பயிற்சி வழங்கி, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாக உயர்த்தப்படுவார்கள் என்ற வாக்குறுதியை வழங்கியிருக்கிறீர்கள்.

கரும்பு விவசாயிகளுக்கு வாக்குறுதி கொடுக்கவில்லை என்று ஒரு விவாதம் நடந்தது. ஆனால், சத்துணவு ஊழியர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படுமா, நிறைவேற்றப்படாதா? இந்த வாக்குறுதி எங்கள் நினைவிலாவது இருக்கிறது என்ற ஓர் ஆறுதல் வார்த்தையையாவது நீங்கள் தெரிவித்தால்தான் அவர்கள் தங்களது பணிகளை உற்சாகமாகச் செய்வார்கள். இத்தகைய சூழ்நிலையில், அவர்களுடைய பணியைப் பராமரிப்பதற்கு, கவனிப்பதற்கு, 4 பேர் கொண்ட குழுக்களை நியமித்திருக்கிறார்கள். இந்தக் குழுக்கள், பெண் பணியாளர்கள் மத்தியிலே வேண்டாத ஒன்றாக முடியும். கடந்த காலங்களில் இப்படிப்பட்ட அனுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து 100 மூட்டை அரிசி, 95 மூட்டையாக, 85 மூட்டையாகத்தான் இப்போதும் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் இவற்றையெல்லாம் கண்காணிப்புச் செய்யாமல், அங்கு வழங்கக்கூடிய உணவை மட்டுமே கண்காணிப்புச் செய்வது என்பது சரியாகப்படவில்லை. இது அவர்களுக்கு உதவிகரமாக இல்லை. (மணியடிக்கபெற்றது) ஆகவே, இதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

அதேபோன்று, சத்துணவுத் திட்டத்தில் உருளைக்கிழங்கு என்பது வழங்கப்படுவதில்லை. ஒரு கிலோ உருளைக்கிழங்கு 16 ரூபாய்க்கு விற்கிறது. ஆகவே, இத்தகைய சூழ்நிலையில் அவர்களுக்கு அதை வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



இதுமட்டுமல்லாமல், வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்கப்படுவதாகக் கடந்த காலங்களிலே வாக்குறுதி வழங்கப்பட்டது. அவ்வாறு அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. சாதாரண சமையலர்களை மிரட்டி, எங்கே வேண்டுமானாலும் இடம் மாற்றம் செய்வோம் என்று அவர்களிடம் எழுதி வாங்கக்கூடிய நிலைமை இருப்பதாகத் தகவல் வருகிறது. தயவு செய்து அதையும் நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய திருமதி மகேஸ்வரி, பெண்களினுடைய பிரச்சினைகளைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். பெண் கவிஞர் தாமரை அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஆண்களுக்குச் இந்தச் சமுதாயத்தில் ஐந்து பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொன்னால், பெண்களுக்கு அந்த ஆணையும் சேர்த்து ஆறு பிரச்சினைகள் இருக்கின்றன என்ற முறையிலே தெரியப்படுத்தினார்கள்.

அதேபோன்றுதான், eve-teasing காதலித்து ஏமாற்றுதல், பெண்ணை ஏமாற்றித் திருமணம் செய்தல், வரதட்சணை கேட்டுக் கொடுமை, தற்கொலைக்குத் தூண்டுதல், கொலை செய்தல், பாலியல் பலாத்காரங்கள், பெண்களைக் கடத்துதல், போலிச் சாமியார்கள் பெண்களை ஏமாற்றுதல், போலி டாக்டர்கள் பெண்களை ஏமாற்றி முறைகேடாகப் பயன்படுத்துவது, தலித் பெண்களை தலித் என்ற முறையிலேயே பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவது, இதுபோன்ற எண்ணற்ற கொடுமைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றைக் குறைப்பதற்கு அமைக்கப்பட்ட பெண்கள் ஆணையத்திற்கு என்ன அதிகார வரம்பு இருக்கிறது என்று இந்தக் கொள்கைக் குறிப்பேட்டில் குறிப்பிடப்படவில்லை. அதிலே சொல்லப்பட்டிருப்பது பயிலரங்கம் நடத்துவோம், கருத்தரங்கம் நடத்துவோம் என்பதுதான். ஆகவே, இத்தகைய குற்றங்கள் பெருகி வரக்கூடிய காரணத்தினால், வெறும் பயிலரங்கம், கருத்தரங்கம் மட்டுமே நடத்துவதற்குத்தான் இந்தக் கமிஷனுக்கு அதிகாரம் இருக்கிறதா; வேறு ஏதாவது அதிகாரம் கொடுக்க முடியுமா என்ற முறையிலே, அந்தப் பெண்கள் கமிஷன் உயிரோட்டமான ஓர் ஆணையமாக செயல்படவேண்டுமென்று சொன்னால், அதிகாரத்தை நீங்கள் நிச்சயமாகக் கொடுக்க வேண்டும். ஓர் இடத்திலே பாலியல் பலாத்காரம், குறிப்பாக, சிறுமியிடம் பாலியல் பலாத்காரம் நடக்கிறபோது, அந்தச் சிறுமியிடம் எப்படி விசாரணை செய்ய வேண்டும்; நடவடிக்கை எப்படி எடுக்க வேண்டும் என்பது போன்று அதிகாரங்கள் கொடுத்தால்தான் இந்தப் பெண்கள் கமிஷன், பெண்கள்மீது, வளர்ந்து வரக்கூடிய வன்முறைகளைத் தடுத்து

நிறுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும் என்ற முறையிலே, அதிகாரத்தை நீங்கள் நிச்சயம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பணியிடங்களிலே பாலியல் வன்முறை சம்பந்தப்பட்ட ஒரு புகார் கமிட்டி என்பது கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவை ஏற்று அமல்படுத்தியது. ஆனால் உச்ச நீதிமன்றத்தில் சொல்லாத ஒரு ஷரத்தையும் ஏற்று இருக்கிறார்கள். அதாவது, பெண்கள் புகார் கொடுத்தால், புகார் உண்மையென்று நிரூபிக்கப்படாத பட்சத்தில், புகார் கொடுத்த பெண் மீதே நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்ற ஷரத்தை நீதிமன்றம் சொல்லாமலேயே சேர்த்து இருக்கிறார்கள். அது மிகவும் தவறானது. அந்த ஷரத்தை இந்த அரசாங்கம் உடனடியாக நீக்கிவிட வேண்டும். ஏனென்றால், உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தில் பல வழக்குகளைக் கொண்டு போகிறார்கள். பொய் வழக்கு, அது நிரூபிக்கப்பட முடியவில்லையென்ற காரணத்திற்காகக் குற்றவாளிக்குத் தண்டனை கொடுக்க எந்த நீதிபதியும் முன்வரவில்லை. அப்படியிருக்க, புகார் கொடுத்த பெண்ணின் மீதே நடவடிக்கை எடுக்கக்கூடிய விதமாகச் சொல்வது, இந்தப் பணியிடங்களில் பாலியல் வன்முறைகளை விசாரிக்கக்கூடிய இந்தக் கமிட்டியைச் செயல்படாமல் முடக்குவதற்குத்தான் உதவி செய்யும். ஆகவே, அந்த ஷரத்தை இரத்துச் செய்து தீர்மானிக்கக்கூடிய ஓர் இடத்தில், ஒரு ஆண் அதிகாரி தவறு செய்திருந்தால், அவரை இடைக்காலப் பணி நீக்கம் செய்யக்கூடிய ஒரு அதிகாரத்தையும் அந்த உத்தரவிலேயே இணைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, பெண்களுடைய வேலைவாய்ப்பு. கூடை பின்னுவது, மாவு அரைப்பது, இதுதான் நமது சமூக நலத் துறையின் மூலமாகக் கடந்த காலங்களிலிருந்து சொல்லப்படுகிறது. இந்தத் தொழில்களைத் தயவுசெய்து மாற்ற வேண்டும். மாற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. பல அரசு அலுவலகங்களில் வாகன ஓட்டுநர்கள் ஆண்கள்தான் இருக்கிறார்கள். ஒரு வாகன ஓட்டுநரிடம் ஊதியத்தைக் கேட்டபோது, அவர் சொன்னார், நான் டிரைவர் இல்லை. அசிஸ்டெண்ட் இன்ஜினியர் என்று சொன்னார். பல வாகனங்களுக்கு ஓட்டுநர்களேயில்லை. அப்படிப்பட்ட ஓட்டுநர்களாகப் பெண்களை ஏன் நியமிக்கக்கூடாது, தமிழகத்தையே ஒரு பெண், முதலமைச்சராக ஆட்சி செய்ய முடிகிறது. பெண் காவலர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அலுவலகங்களில் ஆண் காவலர்கள்



தான் இருக்கிறார்களே தவிர, பெண் காவலர்கள் இல்லை. ஆகவே, பெண்களை அலுவலகங்களில், காவலர்களாக நியமிப்பதற்கும் அட்டெண்டர்களாக நியமிப்பதற்கும், இதுபோன்ற 4-ஆம் நிலையில், 3-ஆம் நிலையில் இருக்கக்கூடிய அரசுப் பணி இடங்களில் பெண்களை நியமிப்பதற்கும் இந்த அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுத்தால், பெரியார் அவர்கள் வலியுறுத்திய பெண் உரிமையை, ஒரு நல்ல செயல்பாட்டில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது என்ற ஒரு பெருமை இந்தத் தமிழக அரசாங்கத்திற்கு நிச்சயமாகச் சேரும்.

ஆகவே, பெண்களுக்கு 33 சதவீதம் அரசு வேலைகளில் ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்து, உத்தரவாதம் செய்து, அந்தப் பெண்களைப் பணிகளிலே அமர்த்தவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோன்றுதான், பெண்களுக்கான பெயர்களுக்கு முன்பு திரு, திருமிகு என்று போடுவதில் பெண், ஆண் என்ற பாரபட்சம் பல இடங்களிலே நிலவிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, பல பெண் அமைப்புகள் எல்லாம் திருமணம் ஆகாத ஆண்களைத் திரு. என்று அழைக்கிறார்கள். பெண்களைத் திருமிகு என்ற ஒரு புதிய வார்த்தையிலே அழைக்கிறார்கள். ஆனால் சட்டமன்றம் போன்ற அமைப்புகளிலே திருமணம் ஆகாத ஆண்களை சட்டமன்ற உறுப்பினர்களே திரு. என்று தான் சொல்கிறார்கள். ஆனால் திருமணம் ஆகாத பெண்களைச் செல்வி என்றே சொல்கிறார்கள். 60 வயதான கடந்த கால நமது கவர்னர் அவர்களைக்கூடச் செல்வி என்றே அழைத்தார்கள். ஆனால், திருமணம் ஆகாத நமது பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களை செல்வன் என்று எந்த மீடியாவுமே சொல்வது இல்லை. ஆகவே, இதுபோன்ற ஒரு பாலியல் — பாலின ரீதியாக அவருக்கும் திருமணம் ஆனதா, ஆகவில்லையா என்று சொல்லக்கூடிய இந்தக் கலாச்சாரத்தை மாற்றுவதற்கு, தந்தை பெரியார் அவர்கள் சொல்லிய, தோழர் லெனின் இதுபோன்ற ஒரு புதிய கருத்துகளோடு திரு, திருமிகு என்று எல்லோருக்கும் இப்படிப்பட்ட புதிய வார்த்தைகளை, புதிய எழுத்துகளை கற்றுக்கொடுத்த பெரியார் அவர்களுடைய வழியில் தமிழகத்திலே புதிய வார்த்தைத், திருத்தங்களை புதிய பெண் உரிமை வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இந்த மாமன்றம் உள்வாங்கி கொண்டு வருவது உதவி சேர்க்கும் என்று தெரிவித்துக்கொண்டு, எனக்கு நல்ல வாய்ப்புக் கொடுத்த அனைவருக்கும் நன்றி, கூறி அமைகிறேன். நன்றி வணக்கம்.

[2002 ஏப்ரல் 26

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் பதில் உரை. (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம் உட்காருங்கள். 5 நிமிடம் என்று சொல்லிவிட்டு, 10 நிமிடம் பேசுகிறார்கள். எனக்கு ஒன்றும் இல்லை. உங்களுக்குப் பசிக்கவில்லையென்றால் நானும் உட்கார்ந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் முதலிலே, எனது தொகுதி கோரிக்கைகள் சிலவற்றை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் குடிநீர்ப் பற்றாக்குறை வேகமாக உருவெடுத்து இருக்கிறது. அரசு போர்க்கால அடிப்படையில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தென்படாமலே போய்விட்டிருக்கிறது. எங்கள் தருமபுரி மாவட்ட மக்களின் நீண்டகாலத் தேவையும், கோரிக்கையுமான இத்திட்டத்தை அமல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு நாடு உண்மையான வளமுடையது என்றால் அரசியல், பொருளாதார, கலை மற்றும் உயர்ந்த கலாச்சாரம் கொண்ட மனித வளம் நிறைந்த நாடாக அது இருக்க வேண்டும். இதைத்தான் பாரதி நம்நாட்டில் விடுதலைக்குமுன்.

"முப்பது கோடி ஜனங்களின் சங்க முழுமைக்
கும்பொது உடைமை"

என்று வலியுறுத்தியிருக்கிறான். சத்துணவுத் திட்டம் என்பது மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் 1982-ல் கொண்டுவந்த திட்டமாகும். எப்படிப்பட்ட ஆட்சிகள் மாறினாலும், முட்டைகள் போடுவது, உருளைக்கிழங்கு போடுவது போன்றவற்றில் மாறுதல் இருந்தாலும், அதில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான மாறுதலும் இல்லை. அவர்களுக்குப் பணி நிரந்தரம் செய்யப்படவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஒரு குறை இருந்துகொண்டே இருக்கிறது. அதாவது Part time permanent என்கின்ற முறை இருந்துகொண்டிருக்கிறது. அதை மாற்றி அமைத்து அவர்கள் பணியை முழுநேரமாக்கி, அவர்களுக்கான தேவைகள் பூர்த்தி



2002 ஏப்ரல் 26] [திரு. வே. கிருஷ்ணமூர்த்தி]

செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். B.D.O. அலுவலகங்கள் மற்றும் காலி இடங்களிலுள்ள அரசுப் பணிகளிலே அவர்களை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்திட்டத்தில் சாப்பிடும் குழந்தைகளுக்கு 1982-ல் ஈயத்தட்டு, டம்ளர், என்று ஒரு முறை கொடுத்ததோடு சரி, அதன் பிறகு பல இடங்களில் அவை கொடுக்கப்படாமல் இருக்கின்றன. இப்பொழுது டம்ளர், தட்டு போன்றவை எல்லாம் எவர்சில்வரிலே வாங்கிக்கொடுத்து, அந்தப் பிள்ளைகளினுடைய குறைகளைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் குழந்தைகளுக்கு வாந்தி, மயக்கம் போன்றவைகள் வருவதற்கு அடிப்படைக் காரணம் சுகாதாரம் இல்லாமல் இருப்பதுதான். ஆகவே, அப்படிப்பட்ட சுகாதார முறைகேடுகளைப் போக்கி, நல்ல சுகாதார முறைகளை கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டம் ஊட்டச்சத்து, குழந்தைகள் நலப் பராமரிப்பு, சத்துணவு போன்ற 3 வகையில் செயல்படும் திட்டமாக மத்திய அரசு மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படும் திட்டமாக இருக்கிறது. தற்போது முட்டையை மாற்றி, திங்கட்கிழமை உருளைக்கிழங்கும், புதன்கிழமை கொண்டைக்கடலையும் மற்றும் வெள்ளிக்கிழமை பாசிப்பயறும் போடப்படுகிறது. "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்பதைப்போன்று, உப்புக் கொடுக்கின்ற ஒரு திட்டம் இதிலே கொண்டுவரப்படவில்லை. இவற்றுக்கு மூன்று முறை எரிபொருள் பயன்படுத்தப்படுகின்றது. அதற்குத் தேவையான விறகு போன்றவற்றை வாங்குவதற்கான திட்டங்கள் இதிலே கொடுக்கப்படவில்லை.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

*பிற்பகல் 1-15*

மேலும், இந்தப் பணியாளர்களுக்குச் சம்பளம் மாலை நேரத்தில்தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் இரவில்தான் வீடு திரும்புகிறார்கள். இதை மாற்றி, கருவூலத்தில் முன்கூட்டியே அந்தப் பணத்தை எடுத்துவந்து பகல் நேரத்தில் சம்பளம் வழங்கி, அவர்கள் மாலை நேரத்திலேயே வீடு திரும்ப வாய்ப்பு அளிக்க வேண்டும்.

சத்துணவுக் கூடத்திற்கு ஆகும் செலவில் பெரும்பகுதி பணத்தை அவர்கள் முன்கூட்டியே வட்டிக்குப் பெற்றுச் செலவு செய்து பின்னர் பணத்தைப் பெறும் முறை இருக்கிறது. அதை மாற்றி சத்துணவுக்கு ஆகும் செலவை முன்பணமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க்

கேட்டுக்கொள்கிறேன். ஒரு குழந்தைக்கு 23 பைசா மட்டுமே செலவழிக்கின்ற நிலை இருக்கின்றது. இப்போது இருக்கின்ற விலைவாசிக்கேற்ப ஒரு குழந்தைக்கு 50 பைசா வீதம் அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊட்டச்சத்து மற்றும் சத்துணவுத் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மீட்டிங் என்று வந்தால், இரவு வரை கூட்டம் நடக்கிறது. கூட்டம் முடிந்து அவீர்கள் நள்ளிரவில்தான் கிராமங்களுக்குத் திரும்ப வேண்டியிருக்கிறது. அதை மாற்றி, அந்தக் கூட்டங்களை எல்லாம் பகலில் வைத்து நடத்தி முடித்தால், அவர்கள் வீட்டுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியும். இத்தகைய ஊழியர் கூட்டங்களுக்கு சத்துணவுப் பெண் ஊழியர்கள் வந்தால், அவர்களுடைய கணவன்மார்களும் வந்து காத்திருக்கவேண்டிய நிலை இருக்கிறது. இதில் மாறுதல் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயத்தின் கீழ்த்தட்டில் இருக்கும் திருமண வயது வந்த பெண்களுக்குத் திருமணம் செய்ய வசதியில்லாமல் இருக்கும்போது, அவர்களுக்குத் திருமண உதவி வழங்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் மூலம் ரூ. 10 ஆயிரம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதில் குறைகள் இருக்கின்றன. அவை போக்கப்படவேண்டும். அந்தப் பெண்கள் தனியார் பள்ளிகளில் படித்திருந்தால் இந்தத் திட்டத்தின் பலன் கிடைக்காது என்ற நிலை இருக்கிறது. அதை மாற்றி, குறிப்பிட்ட படிப்பு படித்த அனைவருக்கும் பணம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு, திருமண நிதி உதவியானது, அந்தப் பெண்ணுக்குக் குழந்தை பிறந்தபின், அதை எடுத்துக்கொண்டு போய்ப் பெறவேண்டிய தாமத நிலை ஏற்படுகிறது. அதை மாற்றி, அந்தப் பெண்ணின் திருமணத்திற்கே அந்தப் பணம் உதவுகிற வகையில் ஏற்பாடு செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மலைப் பகுதியில் உள்ள சத்துணவுக் கூடங்களில் பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு பயணப்படி என்று 15 ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தது மாற்றப்பட்டிருக்கிறது; தொகுப்பு ஊதியம் என்ற பெயரால் அது மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே அதோடு சேர்த்து 15 ரூபாய் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பார்வையற்றோர், உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கென வெளியிடப்பட்ட ஆணை எம்.எஸ். 68, நாள் 2-2-1996-ன்படி, பார்வையற்றவர்களை இடைநிலை



ஆசிரியர்களாகவும், மாநகராட்சிகளில் இயங்கும் மண்டல மறுவாழ்வு மையங்களில் மக்கள் தொடர்பு அதிகாரிகளாகவும், பயன்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பார்வையற்றோருக்கான பள்ளிகளில் புதிய வகுப்புகள், மேல்நிலை வகுப்புகள் துவக்குவதற்கும், இதுபோன்ற முறைகளில் அவர்களைப் பயன்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அப்படிப்பட்ட வாய்ப்புகளை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொட்டில் குழந்தைத் திட்டம் என்பதை - உண்மையிலேயே, பாராட்டுவதற்கு எனக்கு வார்த்தையே தெரியவில்லை. ஏனென்று சொன்னால், ஒரு தாயின் மடியில் இருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தையைப் பெற்றோரோ, உறவினர்களோ வந்து தூக்கிக் கொஞ்சுவதற்கு எடுக்கிறபோது, அந்தக் குழந்தை, ஏதோ நம் தாயிடமிருந்து நாம் பிரிந்து விடுவோமோ என்ற ஒரு மன உளைச்சலோடு கத்துகிறது, பதறுகிறது, அழுது கூச்சல் போட்டு கூக்குரல் இடுகிறது. ஆனால் ஒரு குழந்தை பிறந்தவுடனேயே தாயின் பாசம் இன்னது என்றே அறியாமல் இந்த உலகத்தில் தன்னந்தனியாகத் தூக்கியெறியப்பட்டு அநாதையாக நிர்க்கதியாகக் கிடக்கிற குழந்தைகளுக்கு, இப்படி ஒரு மாபெரும் திட்டத்தை, மனித உள்ளம் கொண்ட இந்த மாபெரும் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையிலேயே மனித உள்ளம் படைத்த அவ்வளவு பேரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அப்படிப்பட்ட மிக உயர்ந்த சீரிய ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற இந்த அரசை நான் உண்மையிலேயே மனதாரப் பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உயிரில், உணர்வில், உதிரத்தில் கலந்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, சூழ்ச்சி வலையினை சூதுமதியினை வீழ்த்தி; பகை முடித்த எங்களின் வீரத் தமிழே, வெளிச்ச நதியே, விடியலின் தவமே, இத்தோடு சரி என்ற இறுமாப்பின் வாய்ப்பறை கிழித்த வரலாற்று வாளே, அம்மா, உங்களின் திருவடிக்கு என்னுடைய வணக்கம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆரம்ப கால வரலாற்றில், தியாக மறவர்கள் சிந்திய இரத்தத்தால் சிவந்த செம்மண் பூமி. வெட்டிப் பேச்சு பேசியோரின் விலா எலும்பை முறித்த வீர மண் எங்களின் அரசியல் புண்ணியதலம் ஆண்டிப்பட்டி என்னும் அரசிப்பட்டி இருக்கும் திசை நோக்கி நான் தொழுது என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, இது உங்களுக்கு இரண்டாம் அத்தியாயம். உங்களின் எதிரிகளுக்கோ இறுதி அத்தியாயம். மூதறிஞர்களும், போறிஞர்களும் இருந்த இந்தச் சபையில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசியபோதும் சரி, நேற்றையதினம் காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோதும் சரி, ஜான்சி ராணியைப் போல, வீர மங்கை வேலுநாச்சியாரைப் போல, எங்கள் தாய் முழங்கிய முழக்கத்தைக் கேட்க, "ஈன்ற பொழுதினும் பெரிதுவக்க" எங்களின் தாயின் தாய், உயிரோடு இல்லாமல் போனாரே என்றுதான் நினைத்தேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-20

புரட்சித் தலைவி பேசியபோதுதான், அவர் புடவை கட்டிய புலவன் பாரதி என்பதை இந்தச் சபை புரிந்து கொண்டது. டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பேச்சாற்றல் எப்படி இருக்கும் என்பதைத் தெரியாதவர்கள், அவர் பேச்சைக் கேட்ட பின்னால், மூச்சற்றுப் போனார்கள். அம்மா, உங்களின் பேச்சு, போர்க்களத்து வாள் வீச்சோ, பொன் மழையின் தூறலோ, பூ ஒன்று வாய் திறந்து போருக்கு அழைக்கிறதோ? நீங்கள் தோகை விரித்தபோதுதான், வான்கோழிகள் வாலை மடக்கிக் கொண்டன. சிலபேர் நினைத்தார்கள்; புரட்சித் தலைவி அவர்கள் மீது பொய் வழக்குப் போட்டால், சிறையிலே அடைத்தால், சித்திரவதை செய்தால், தாக்குப் பிடிக்க மாட்டார் என்றெல்லாம் தப்புக் கணக்குப் போட்டார்கள். வீட்டைச் சோதனையிடுகிறோம் என்ற பெயரில், வீதியையே சோதனை போட்டார்கள். அவசாம் அவசரமாய் அங்குலச் சோதனைகள்; சுடுகின்ற சாம்பாரும் சோதிக்கப்பட்டது. சாவி துவாரத்தையும் சந்தேகித்தனர். இப்போதோ முன்னாள் அமைச்சர்களின் வீடுகளைச் சோதனையிட்டதும், புரட்சித் தலைவியின் செருப்பு விலைகூட எங்கள் சொத்து மதிப்பு இருக்காது என்கிறார்கள். ஆமாம், எங்கள் தாயின் செருப்பு, பாதுகாக்கப்பட வேண்டிய பாதுகைதான். அதற்கு ஏது விலை?



யாருடைய தமிழுக்கு முன்னால், தர்க்கத்துக்கு முன்னால், சாணக்கியத்துக்கு முன்னால், எங்கள் புரட்சித் தலைவி முடங்கிப் போய்விடுவார், மூர்ச்சையாகி விடுவார் என்று கணக்குப் போட்டார்களோ, அவர்கள்தான் ஓடிப்போனார்கள். அன்றைக்கு ஒருநாள் வந்தார். வராவிட்டால், உள்ளதும் போய்விடும் என்பதால்; வந்தாரோ, என்னவோ தெரியாது. வந்தவர், குற்றம் புரிந்தேன்; கொடும் பாதகம் இழைத்தேன்; பொய் வழக்குப் போட்டேன் என இரத்தக் கண்ணீர் வடிப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், எங்கள் பாராசக்தியைப் பார்த்ததும் பயந்து ஓடிப் போனார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது வக்கனை பேசுவோர், வாய்ஜாலம் காட்டுவோர், அன்றைக்கு அவர் ஓட்டத்தைத் தடுத்து, வாட்டத்தைப் போக்கியிருக்க வேண்டும். ஒரு உண்மை தெரியுமா? எங்கள் தாய்க்கு அழத் தெரியாது. ஆமாம், கோழையைப் போல அழத் தெரியாது. அவர் மீதும்தான் வழக்குப் போட்டார்கள்; காவல் துறை வந்தது; கைது செய்தது. கூச்சல் போடவில்லை; குழப்பம் விளைவிக்கவில்லை: குகையைவிட்டு வெளியே வருகின்ற பெண் சிங்கம்போலக் கம்பீரமாக வந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரும்தான் சிறைக்குப் போனார். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருமே முன்னுரையாகச் சில கருத்துகளைச் சொல்லிவிட்டு, மானியக் கோரிக்கையைக் கோருவது வழக்கம். இதிலே ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தாயை, எங்கள் தாய்க்கு ஏற்பட்ட சோதனைகளைத்தான் சொல்லிக்கொண்டு வருகிறேனே தவிர, நான் யார்மீதும் குற்றம் சுமத்த வேண்டும் என்று பேசவில்லை (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னுரையாகச் சில கருத்துகளைச் சொல்லிவிட்டு தாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற தலைமைக்கு வணக்கம் சொல்லிவிட்டு, மானியக் கோரிக்கையைத் தொடங்குவது என்பது வழக்கம்; அதில் ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடுகள்) இப்போது நீங்களும் பேசுகிறபோது, உங்களுடைய தலைவருக்கு வணக்கம் சொல்லிவிட்டுத் தொடங்குகிறீர்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, அந்த முறையைத்தான் அமைச்சர்

கையாள்கிறார். (குறுக்கீடுகள்) இதில் ஒன்றும் வித்தியாசம் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, பொன்முடி (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடு) என்ன உங்களுடைய கோரிக்கையைச் சொல்லுங்கள்...(குறுக்கீடு) என்ன பொன்முடி, என்ன? சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத்திலே பேசுகிறபோது, ஓர் அமைச்சர், அவருடைய முதலமைச்சரையோ, தலைவியையோ புகழ்வதுபற்றி எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால், ஒரு வழக்கிலே இருக்கிற செய்திகள். அதனைப் பற்றியெல்லாம் மறுபடியும் இங்கே வந்து பேசுவது இது பல தடவை பேசியாகிவிட்டது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கிலே உள்ள செய்தியைச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** அதைத் திரும்பத் திரும்பப் பேசுகிறபோது, தேவையில்லாத பிரச்சினைகள் எழுகின்றன. மானியத்தின்மீது பேசுவது என்கிற...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையிலே எழுப்பப்பட்ட பிரச்சினைகளை நான் பேசிக்கொண்டு வருகிறபோதே, எங்களுடைய தாயைப் போற்றி, அவர் பட்ட சோதனைகளைப் பற்றிச் சொல்லக்கூடிய வேளை இது; சொல்லி கொண்டிருக்கிறேன். மானியத்தைப் பற்றித்தான் தொடர்ந்து வருகிறேன்.

அவரும்தான் சிறைக்குப் போனார். யாருடைய காலடியில் மண் பட்டதில்லையோ, யாருடைய தலைமுடியில் வெயில் பட்டதில்லையோ, அவர் சிறைக்குப் போனார். அவர் ஒன்றும் கிழிந்த ஜிப்பாவுடன், பழைய தகரப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு



சென்னைக்கு வந்தவர் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) தங்க நிலா தரைக்கு வந்ததைப் போல...., (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1-25*

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்).

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்).

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, எதற்கு நீங்களாகப் பதறுகிறீர்கள்? (குறுக்கீடுகள்). கிழிந்த ஜிப்பாவோடு பழைய தகரப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்ததென்பது யாரைக் குறிக்கிறது? (குறுக்கீடுகள்) நீங்களாக ஏன் பதறுகிறீர்கள்?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புரட்சித் தலைவி அவர்களுடைய பெருமையைத்தான் பேசிக்கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புரட்சித் தலைவி அவர்களுடைய பெருமைகளைத்தான் பேசிக்கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. புகழேந்தி, என்ன என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கை விவாதத்தில் தொடர்ந்து பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் சொல்லியதைப் போல, முதல்வர் அவர்களைப் புகழ்வதையோ அல்லது அவர்களுடைய தலைவியைப் புகழ்வதையோ,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் அவர்களைத்தான் புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. இ. புகழேந்தி:** அவர்களைப் புகழ்வதற்காக, எங்களுடைய தலைவரை இகழ்வாகப் பேசுவதும், அவரைக் குறிப்பிட்டு மறைமுகமாகச் சொல்வதும் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, கிழிந்த ஜிப்பாவுடன் பழைய தகரப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு நான் சென்னைக்கு வந்தவள் அல்ல என்றுதான் இங்கே குறிப்பிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) யார் அப்படி வந்தார்கள் என்று அமைச்சர் சொல்லவில்லையே. அவர்களுடைய தலைவர்தான் என்று அவர்கள் ஏன் வாக்குமூலம் அளிக்கிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி).

**டாக்டர் க. பொன்முடி:** நாங்களும் அதேமாதிரி பேசுவோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வந்து வாதத்திற்கு வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம். இதுமாதிரி எல்லோருக்கும் பேசத் தெரியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வாதத்திற்கு வைத்துக் கொள்ளலாம். பேசுகிறபோது நளினமாக, நாசுக்காகக் கருத்துகளைச் சொல்வது ஒன்றும் தவறு கிடையாது. யாரையும் அவர் நேரடியாகக் குறிப்பிட்டு, இவர்தான் கிழிந்த ஜிப்பாவோடு பழைய தகரப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தார் என்று சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) ஒரு தலைவியைப் புகழக்கூடிய அந்தச் சூழ்நிலையில், அவர் ஒன்றும் கிழிந்த ஜிப்பாவோடு வரவில்லை; பழைய தகரப் பெட்டியோடு வரவில்லை; செல்வத்தோடு வந்தார்; செல்வாக்கோடு வந்தார் என்று புகழ்வதிலே ஒன்றும் தவறு கிடையாது; அதிலே ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நீங்கள் சொல்கிற தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறோம். (குறுக்கீடுகள்).

**திரு. பரிதி இளம்வழுதி:** ஒரு சமுதாயத்தைக் கேவலப்படுத்துகிற மாதிரி சொல்லக்கூடாது...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சமுதாயத்தை ஒன்றும் கேவலப்படுத்தவில்லையே! (குறுக்கீடுகள்) சமுதாயத்தை ஒன்றும் கேவலப்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்) வீணாக வம்பு வளர்க்காதீர்கள்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் யாரையும் பெயரைச் சொல்லியோ, அங்க அடையாளங்களைச் சொல்லியோ அவர் குறிப்பிட்டுப் பேசவில்லை. எங்களுடைய தலைவி அந்தமாதிரி வரவில்லை என்றுதான் சொன்னார்கள். ஏன், இவர்கள் மூளி என்றதும் காதைத் தொட்டுப் பார்க்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கநிலா தரைக்கு வந்தது போல, பிறக்கும் போதே வெள்ளிக் கரண்டியோடு பிறந்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) அவரும்தான் சிறைக்கு போனார்; நான்கு சுவர்களுக்குள்ளே தன்னை குறுக்கிக் கொண்டார்; எங்களுக்கு வரம் தர, அவர் தவம் இருந்தார். சுற்றிச் சுற்றி அனல் அடித்தாலும், அந்தத் தியாக மெழுகு தீய்ந்திடவில்லை. சிறைச்சாலை எப்போதுமே சிறைச்சாலைதான் என்பதைப் புரிந்து எங்கள் சீதா பிராட்டி தவம் இருந்தார். பூனையோடு சில நாள், அணிலோடு கொஞ்ச நாள் என்று பாளையங்கோட்டை சிறைச்சாலையை மிருகக்காட்சி சாலையாக மாற்றியவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை சிறைச்சாலையின் வாசலில் குழந்தை குட்டியோடு உட்கார்ந்துகொண்டு ஜெயிலுக்குப் போகமாட்டேன் என்று அழுது அடம் பிடித்து, அசிங்கம் பிடித்த அரசியல்வாதிகள்..... (குறுக்கீடுகள்)

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி, யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) யாரையும் நேரடியாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**திரு. பரிதி இளம்வழுதி:** நாங்களும் அதேமாதிரி பேசுவோம்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள். இதேமாதிரி பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** பொதுக்கூட்டத்தில் பேசுகிறமாதிரி பேசுகிறார்கள். நாங்களும் அதேமாதிரி பேசுவோம்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரையும் நேரடியாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் பேசுங்கள். எல்லோரும் கோரஸாக பண்ணினால் எப்படி? திரு. புகழேந்தி சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உள்நோக்கம் வைத்துக் குறிப்பிட்டுப் பேசுவதனால் தான் எங்களுக்கு அந்த வேகம் வந்ததே தவிர, வேறு ஒன்றுமில்லை. சென்னை சிறைச்சாலை முன்பு, சரியான முறையான சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்காமல் காவல் துறை அழைத்துக்கொண்டு சென்றதைக் கண்டித்து, போர்க் குணமிக்க தலைவனாக அங்கே தனியொரு மனிதனாகப் போராடி அமர்ந்தாரே தவிர, இவர்கள் சொல்வதைப்போல அலட்சியமாக, கேவலமாக அவர் அமரவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) திருமதி வளர்மதி குறிப்பிட்டுச் சொல்வது பூராவும் உங்கள் தலைவரைத்தான் என்று நீங்களே ஒப்புக்கொள்கிறீர்கள் என்ற அளவுக்கு வந்துவிடும். (குறுக்கீடுகள்) வேண்டாம், வேண்டாம். அவர் பேசட்டும். உட்காருங்கள், உட்காருங்கள்.

பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைக் கேளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் பேச வேண்டும் என்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி பேசக்கூடிய ஒவ்வொரு பேச்சிற்கும், நீங்கள் பொழிப்புரை எழுதுவதுமாதிரி எழுதினீர்கள் என்றால் சரியாக வராது. அவர் பேசக்கூடிய ஒவ்வொன்றுக்கும் பொழிப்புரை எழுதுவதுமாதிரி எழுதக்கூடாது. அவர் ஒரு தலைவியைப் புகழ்ந்து சொல்ல வேண்டிய சில கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். இதிலே எங்கள் தலைவரைத்தான் குறிப்பிடுகிறார் என்று நீங்களே எதற்காகச் சொல்கிறீர்கள்?



(குறுக்கீடுகள்) அந்த முறையில்தான் பேசுகிறார். (குறுக்கீடு) சொல்லவில்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் எல்லாம், வாழ்நாள் எல்லாம் சிறையில் இருந்த நெல்சன் மண்டேலா பற்றிப் பத்திரிகையிலே அறிக்கை விடுவதும் மேடையிலே பேசுவதுமாக இருக்கிறார்கள். அதுமட்டும்தானா? இது சமூக நலன் மற்றும் பெண்கள் நலன் குறித்த மானியக் கோரிக்கை. இதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்ந்த கருத்துகளையெல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எப்போது பேசினாலும் சரி, சமூக நலத் துறையாக இருந்தாலும், பட்ஜெட் விவாதமாக இருந்தாலும், ஆளுநர் உரையாக இருந்தாலும், பெண்கள் நலனிலே அக்கறை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தியது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டே வருகிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் பெண்களை இழிவுபடுத்தியே பேசியும் பழக்கப்பட்டவர்கள்; எழுதியும் பழக்கப்பட்டவர்கள். இதே சட்டமன்றத்திலே நடந்த சம்பவம் மார்ச் 25, கறுப்பு நாள் என்பது இந்த நாடே அறிந்த ஒன்று. பெண்களைக் கேவலப்படுத்தி, அசிங்கப்படுத்தி, அவர்களை ஒரு அவமானச் சின்னமாகக் கருத்துரு வைத்து கவிதை எழுதியிருப்பவர் முன்னாள் முதலமைச்சர்; இந்த மன்றத்தினுடைய உறுப்பினர், திரு. கருணாநிதி அவர்கள். இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள்கூட ஒருமுறை பேசுகின்றபோது இங்கே Gender equity-ஐப்பற்றிச் சொன்னார்கள். அதேபோல மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசுகிறபோதுகூட பெண்கள் நலனிலே மிகவும் அக்கறையோடு இருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிதான்; பெண் உரிமைப் போர் வெற்றி பெறுவதற்கு நாங்கள்தான் பாடுபட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், பெண்களை இழிவுபடுத்தி இருப்பவர் முன்னாள் முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், இந்த மன்றத்தினுடைய உறுப்பினர் திரு. கருணாநிதி அவர்கள். அவர் எழுதிய ஒரு கவிதையை நான் இங்கே படிக்கிறேன்.

தந்தையின் ஆணையை ஏற்று இராமன் காட்டுக்குப் புறபட்டான்; அதிலிருந்து தொடங்குகிறது அந்தக் கவிதை. கொஞ்சம் தயவுசெய்து கவனிக்க வேண்டும். பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்திருக்கிற உறுப்பினர்கள், இந்த அவையிலே இல்லை என்று கருதுகிறேன்.

'சின்னவனாம் இலக்குவனும் சீதையெனும்
மனையாளும் பின்தொடரப் புறப்பட்டான்
இராமன் என்னும் மன்னன்;
தம்பிக்குக் கேடிழைத்து முடிசூட முனைந்த
நம்பிக்கைத் துரோகியென நாடெல்லாம்
இகழ காடேகிவிட்டவன் அந்த
இராமன் என்னும் மனிதன். அவன் ஒரு நாள்
காட்டோரம் திரியும்போது கரும்பனைய
முத்துநகை—முத்துநகை சூர்ப்பனகை
களைப்பினாள் தூங்குகின்றாள், கனிமரச்
சோலையோரம்; காமத்தால் கருத்திழந்த
கசடனவன், கமலமலர் கண்மூடி
தூங்குகின்ற தூயவளை துன்மார்க்கத்தால்
கெடுத்திடவே தம்பி துணையோடு
அருகே போனான். காவலுக்குக்
கைகாரி சீதாதேவி!'

'காவலுக்குக் கைகாரி சீதாதேவி' என்று வருகிறது.

இது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கருணாநிதி அவர்கள் எழுதிய கவிதை. மாரீசன் மானைத் தேடி இராம இலக்குவர்கள் போனதும் இராவணன் சீதையைத் தேடி வருகிறான். அப்போது சீதை சொல்வதுபோல சில வரிகள்:

'மூத்தவனும் இளையவனும் ஓடிவிட்டார்
மூத்தவனும் இளையவனும் ஓடிவிட்டார்
எனக்கேற்றவன் நீ வந்துவிட்டாய்
என்னை உனக்குத் தந்துவிட்டேன்
எனத் தழுவினாள்



*பிற்பகல் 1-35*

'இராவணன் தடந் தோளில்
படர் முல்லை போலே
பைங்கொடி சீதாதேவி'

அடுக்குமா? இந்தக் கவிதை அடுக்குமா? சீதாதேவியை மூத்தவனும் (குறுக்கீடு) கவிதை ஆதாரம் இருக்கிறது. இல்லாத ஒன்றைப் பற்றி, நான் இங்கே பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, என்ன?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** பெண்களை இழிவுபடுத்துவது என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தொடர்ந்து கைவந்த கலை. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் அனுமதிக்கவே மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடிக்கட்டும். பிறகு நான் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், 'தென்னவன் காதை' என்கிற தலைப்பிலே எழுதி இருக்கிறார். 'தென்னவன் காதை' என்பது 1985 ஆம் ஆண்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, தலைவர் எழுதியதைப் பற்றி வாசிக்கிறார்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** நான் காவியப் புத்தகத்தை நாளை கொண்டு வந்து சமர்ப்பிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேடிப் பிடித்து வாசிக்கிறார்கள், அவர்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது, என்னுடைய தலைவர் பெண் குலத்தை இழிவுபடுத்துவதாக எல்லாம் சொல்லி, கவிதை நடையிலே சொல்லுகிறார். கம்பராமாயணத்தைப்பற்றியும், அவருடைய கதைகளைப் பற்றியும்

பல்வேறு அறிஞர்கள் பல கருத்துக்களை கூறி இருக்கலாம். கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், கம்ப ரசமே எழுதிப் படித்து இருக்கிறார்கள். இந்த இடத்திலே பெண் குலத்தினுடைய பெருமையைப் போற்றுகின்ற கவிதைகளையும், 'மறக்க முடியுமா' போன்ற திரைப்படங்களுக்கு வசனம் எழுதி, பெண் குலத்திற்குப் பெருமை சேர்க்கின்ற 'பூமாலை' படைத்த கலைஞரை, பெண் குலத்தை இழிவுபடுத்துவதாகச் சொல்வது தவறு. சொத்துரிமை வழங்கிய கலைஞரைத் தாய்க்குலம் ஆதரிக்கிறது. ஆதரிக்கும்; அதுதான் உண்மை.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். திரு. புகழேந்தி, அமைச்சர் படித்த கவிதையும் இருக்கிறது; நீங்கள் சொன்ன கருத்தும் இருக்கிறது. (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராவணன் தோளில் சீதையாம். இப்படிக் கவி எழுத எப்படி மனம் வந்தது என்று எனக்குப் புரியவில்லை. குறை சொல்ல ஒருவன் இருந்துவிட்டால் கண்ணகி வாழ்விலும் களங்கம் உண்டு என்றார் கவியரசர் கண்ணதாசன். கற்பில் சிறந்தவர் கண்ணகியா, சீதையா என்று பட்டிமன்றம் நடத்திப் பார்த்து மகிழ்ந்த நாடு இந்த நாடு. பத்தினி தெய்வமாம் சீதை, நெருப்பிலே குளித்து, தன் நேர்மையை நிரூபித்தவள். பூமாதேவியின் அவதாரமான அந்தச் சீதையை அசிங்கப்படுத்தி, கொச்சைப்படுத்தியவர்கள், இப்போது பெண் குலத்திற்கு நன்மை செய்ததாக இதே அவையிலே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இராமனோ ஓர் இல், ஓர் வில், ஒரு சொல் என வாழ்ந்த மனிதருள் மாணிக்கம். ஏகபத்தினி விரதன். ஆனால் தம்பிக்குக் கேடிழைத்து முடிசூட முனைந்த இராமன் நம்பிக்கைத் துரோகி என்று எழுதியிருக்கிறார்.

அடுத்து, முத்தான மூத்தவனைப் புறக்கணித்துவிட்டு இளைய தம்பிகளை அழைத்து, வடக்கு மண்டலம் உனக்கு, தெற்கு மண்டலம் உனக்கு என்று கூறு போட்டுக் கொடுத்தாலும், உங்களுக்குக் குறை தீரவில்லை. இதற்கெனத் தனியாக ஐ.நா. சபையே அமைக்கலாம் போல இருக்கிறது. அத்தனை சுற்று பேச்சுவார்த்தை தொடர்ந்து இருக்கிறது. முத்தான மூத்தவனை விட்டுவிட்டு, இளைய தம்பிகளை அழைத்து, நம்முடைய தமிழ்நாட்டைக் கூறு போட்டுக் கொடுத்ததை இந்த நாடு



மறக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) இனியும் நடக்கப் போகிறது. வி[illegible]ால் அவுரங்கசீப், ஷாஜகான், கதையெல்லாம் அரங்கேற ஆரம்பித்துவிடும். ஆனால் தந்தை சொன்னார் என்ற ஒரே காரணத்திற்காக கண்ணை மூடிக்கொண்டு காட்டுக்குப் போனவன் இராமன். ஓராண்டு அல்ல, இரண்டாண்டு அல்ல; 14 ஆண்டு காலங்கள் வனவாசம். மண்ணிலே கிடைத்தாலும் ஜனகன் கண்ணிலே வளர்ந்த கற்பரசியை அந்தத் தியாகப் பூவை இப்படித் தீயால் சுட்டவர்கள், இப்போது பெண்மையைப் பற்றிப் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி, திரு. பொன்முடி, இப்படி உட்கார்ந்து பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். உங்களுக்கு அனுமதி கொடுத்து இருக்கிறேன். நீங்கள் விமர்சனம் பண்ணினீர்கள். திரு. புகழேந்தியைப் பேசச் சொன்னேன். ஏதாவது இருந்தால் எழுந்து அனுமதி கேட்க வேண்டுமே தவிர, உட்கார்ந்துகொண்டு முறைகேடாகப் பேசுவது, தரக்குறைவாகப் பேசுவது, அசிங்கமாகப் பேசுவது, முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உங்கள் இரண்டு பேரையும் மறுபடியும் எச்சரிக்கிறேன். உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மீண்டும் உங்களை எச்சரிக்கிறேன், உட்காருங்கள். அமைச்சர்.... (குறுக்கீடு) உட்காருங்கள்,. உட்காருங்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கைக்குச் செல்லுங்கள். நீங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். அமைச்சர் அவர்கள் பதிலுரையைத் தொடரலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுக்கு இதிகாசத்திலே பிடித்த கதா பாத்திரங்கள்..... (குறுக்கீடுகள்) இராவணன்..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள், (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசி முடிக்கட்டும். உங்களுக்கு விளக்கம் கேட்க வேண்டுமென்றால் வாய்ப்புத் தருகிறேன். இப்போது முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இராவணன், கும்பகர்ணன் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுக்க முடியாது. நீங்கள் நினைத்த நேரத்திலே வாய்ப்புக் கொடுக்க முடியாது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** சூர்ப்பனகை, இராவணன், இந்திரஜித் ஆகியோர்தான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுந்து நின்ற நேரத்தில், எல்லாம் தொழுவம் கட்ட முடியாது. உட்காருங்கள். அமைச்சர் பதிலுரையை முடித்த பிறகு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** நல்லவேளை, துரியோதனனும், துச்சாதனனும் தப்பித்தார்கள். விட்டால், இலங்கையில் இராவணன் பேரன்தான்..... (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு ஏதாவது விளக்கம் கேட்பதாக இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இலங்கையில் இராவணன் பேரன்தான்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்; பேசுங்கள். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1-40*

## 7. அரசினர் தீர்மானம்

### உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல்

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களோடு சண்டை போடுவது, பேரவைத் தலைவர் அவர்களையே மிரட்டுவது என்ற பாணியை, திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தொடர்ந்து கடைப்பிடிக்கின்ற முறை கண்டிக்கத்தக்கது. வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தக்க நடவடிக்கையை, பேரவைத் தலைவராகிய, நீங்கள் எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி அவர்களே, என்னைச் சீண்டிப் பார்க்காதீர்கள். நீங்கள் கிண்டல் பண்ணுவதுபோல், நான்



திரும்பக் கிண்டல் பண்ணினால், உங்களுக்கும், உங்களைச் சார்ந்தவர்களுக்கும் தூக்கமே பிடிக்காது. ஆண்டுக் கணக்கில் தூக்கம் பிடிக்காது. உட்காருங்கள், என் தலைமைக்கு கட்டுப்பட்டு, இந்தப் பதவி, பொறுப்புக்குக் கட்டுப்பட்டு, நான் அமைதியாக இருக்கிறேனே தவிர, என்னைச் சீண்டாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களை மிரட்டுவதும், விரட்டுவதும், எதிர்ப்பதும் என்ற பாணியை, அச்சுறுத்துகிற பாணியை மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர், அவையினுடைய நடவடிக்கையைத் தொடர்ந்து தடுத்து வருகின்ற காரணத்தால், அலுவல்கள் நடத்துவதற்குத் தடையாக இருக்கின்ற காரணத்தால், அவைத் தலைவரை, தொடர்ந்து கொச்சைப்படுத்தி, கேவலமாகப் பேசிக்கொண்டும், மிரட்டிக் கொண்டும் வருகின்ற காரணத்தால், 'அவரை அவையை விட்டு எஞ்சிய நாட்களுக்கு நீக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**திரு. பரிதி இளம்வழுதி:** இந்தக் கூட்டத் தொடர் முடிகின்ற வரையுள்ள எஞ்சிய நாட்களுக்கு அவையை விட்டு நீக்கப்படுகிறார். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள், அவரை அவையை விட்டு வெளியேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*(திரு. பரிதி இளம்வழுதி, அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)*

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, நான் உங்களுக்குரிய வாய்ப்பு எதையும் மறுக்கவில்லை. அமைச்சர் அவர்கள் பேசிக்

[2002 ஏப்ரல் 26

கொண்டிருக்கிறபோது, இரண்டு, மூன்று முறை நீங்கள் குறுக்கிட்டீர்கள். உங்களைப் பேச அனுமதித்தேன். திரு. பொன்முடி பேச விரும்பினார். குறுக்கிடுவதற்கு அனுமதித்தேன். நீங்கள் உங்கள் கருத்தைச் சொன்னீர்கள். உங்களுடைய தலைவர் எழுதிய கவிதையை அமைச்சர் வாசித்துக் காட்டினார். நீங்கள் பதிலுக்கு ஒரு பதிலுரை சொன்னீர்கள். அந்தப் பதிலுரையும்கூடக் குறிப்பேட்டில் இருக்கட்டும் என்று அனுமதித்தேன். இத்தனைக்குப் பிறகும், வீணாக என்னிடத்திலே எதற்காகச் சண்டை போடுகிறீர்கள்? எதற்காகத் தேவையில்லாமல் வம்பு வளர்க்கிறீர்கள்? என்னுடைய தலைமைக்குக் கட்டுப்பட்டு, இந்தப் பதவி, பொறுப்புக்குக் கட்டுப்பட்டு, நான் முடங்கிப் போயிருக்கிறேன். என் சுய சொரூபம் என்ன என்பது உங்களுக்குத் தெரியும். உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்மீது இப்போது சொல்லப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்ப்பின்படி நான் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நான் தீர்ப்பின் உள்ளே போகவில்லை. ஆனால், எதுவாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சோ அல்லது அவர் சொல்லியிருந்த வார்த்தைகளோ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, பலமுறை எச்சரித்தாகி விட்டது. (குறுக்கீடு) பலமுறை எச்சரித்தாகி விட்டது. அன்றைக்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டாகி விட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, முதலமைச்சர் அவர்கள், எஞ்சிய கூட்டத் தொடர் என்பதையெல்லாம் நீக்கி, ஒருநாள் மட்டும் என்று மாற்றுங்கள் என்று சொன்னார்கள். அவருடைய பெருந்தன்மையை ஏற்றுக்கொண்டு, நானும் அனுமதித்தேன். மறுபடியும் அதே பாணியில் கிண்டல் பண்ணுவது, கேலி பண்ணுவது என்பது முறையற்றது. (குறுக்கீடுகள்)

திரு. பரிதி இளம்வழுதி, லாபியிலே இருந்துகொண்டு குழப்பம் செய்வதுபோல் தெரிகிறது. அங்கே இருந்தும் அவரை நீக்க வேண்டுமென்று அவைக் காவலர்களுக்குக் கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....



2002 ஏப்ரல் 26]

## 6. மானியக் கோரிக்கைகள், 2002–2003, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### கோரிக்கை எண் 43—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை-*தொடர்ச்சி*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவர் எழுதிய கவிதையைத்தான் படித்திருக்கிறேன். பெண்களை இழிவுபடுத்தியிருக்கிற கவிதையைத்தான் படித்திருக்கிறேன். இன்னும் ஒருபடி அதைக் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகு வேண்டுமானால் வெளியே போவதும், உள்ளே இருப்பதும் அவர்களுடைய விருப்பம். இதற்கு அணிந்துரை எழுதியிருப்பது யார் என்று கேட்டால், இந்த மன்றத்தினுடைய உறுப்பினர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் தாய் பெரிதும் வணங்கக்கூடிய பேராசிரியர் அவர்கள் இந்தப் புத்தகத்திற்கு அணிந்துரை எழுதியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், இந்த மன்றத்தினுடைய உறுப்பினர், திரு. கருணாநிதி அவர்கள் எழுதிய, பெண்களைக் கேவலப்படுத்தி எழுதிய கவிதைக்கு அணிந்துரை எழுதியிருப்பவர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்...

*பிற்பகல் 1-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** என்னைப் பேசவிடுங்கள், நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** கவிதையிலே, கருத்து வேறுபாடுகளின் காரணமாக, காலங்காலமாக நடந்து வருகிற போராட்டம் இது. இராமாயணத்திற்கு இரண்டுவிதமான interpretations இருக்கின்றன. இராவண காவியம் எழுதியவர்களும் உண்டு. அந்த அடிப்படையிலே இது திராவிட இயக்கத்தினுடைய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கவிதையே தவிர, பெண்களை இழிவுபடுத்த வேண்டுமென்பதற்காக அல்ல. ஆனால் அதையே வைத்துக் கொண்டு ஒரு twist பண்ணி—அவர்களெல்லாம் பெரியார் வழி, அண்ணா வழி என்று சொல்லிக் கொண்டிப்பவர்கள்—இந்தக் கவிதையைப்பற்றிப் பேசுகிறபோது, அதிலே எந்தப் பெண்ணையும் தவறாகச் சொல்ல

வேண்டுமென்ற எண்ணத்தில் அல்ல. கதாபாத்திரங்களை வைத்துக் கொண்டு வரலாற்றின் அடிப்படையில் அந்த இனப் போராட்டத்தினுடைய எழுச்சியாக எழுதப்பட்ட கவிதைதான் அந்தக் கவிதை. ஆகவே. இதில் ஏதோ...(குறுக்கீடு) நான் சொல்கிறேன், தயவுசெய்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, நீங்கள் விளக்கம் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். திராவிட இயக்க வரலாறும் தெரியும், மரபும் தெரியும். இராவண காவியம் பற்றியும் தெரியும். அமைச்சரவர்கள் சொன்ன கவிதை, அவர், அவருடைய கருத்தைச் சொல்லி, அந்தக் கவிதையை இவர் சொல்கிறார் என்று சொன்னார். உங்களுடைய கருத்தைச் சொல்கிறீர்கள். இரண்டும் குறிப்பேட்டிலே இருக்கப் போகிறது. அவ்வளவுதான். ஏற்கெனவே திரு. புகழேந்தி சொல்லிவிட்டார். அதுவும் குறிப்பேட்டிலே இருக்கப் போகிறது. உட்காருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ரொம்ப முறைகேடானது. பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இதுபோன்ற தரமற்ற பேச்சுக்களை நான் கேட்டுக்கொள்வதற்கு அனுமதிக்கமாட்டேன். திரு. பொன்முடி பேசியது அவ்வளவும் நீக்கப்படுகிறது. திரு. பொன்முடி பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (கூச்சல்-குழப்பம்) இனிமேல் அனுமதிக்க முடியாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** இதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (கூச்சல்-குழப்பம்)

*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களும், திரு. இரா. திருமாவளவன் அவர்களும் அவையைவிட்டு வெளியேறினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். (கூச்சல்-குழப்பம்) அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக அமருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அறிவார்ந்த கருத்துகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்கள், 18 அம்சத் திட்டம் என்றால் என்னவென்று தெரிவிக்க வேண்டுமென்று கேட்டார்கள். 18 அம்சத் திட்டமென்பது கர்ப்பக்கிரகத்தில் குழந்தை இருக்கிற காலம் முதல், திருமண வயதுக் காலம் வரை, அந்தக் குழந்தையினுடைய கல்வி, சுகாதாரம், தொழில் என அந்தக் குழந்தையினுடைய வளர்ச்சி சம்பந்தமான அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடிய 18 அம்சங்கள்.

ஒன்று, வளர் இளம்பருவத்தினரின் அந்த நிலைகளையெல்லாம் உயர்த்துவது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதுசம்பந்தமான குறிப்புகளை நான் தரத் தயாராக இருக்கிறேன். எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1991-1996 வரைக்கும் முதல்வராக இருந்த காலத்தில் 15 அம்சத் திட்டம் என்று கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு, 1996-க்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அந்த 15 அம்சத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். அந்தத் திட்டம் என்ன ஆனது என்றே தெரியவில்லை. அதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு மூன்று இனங்களைச் சேர்த்து 18 அம்சமாக உருவாக்கினார்கள். இப்படி பெண்களுக்கு 18 அம்சத் திட்டத்தின்மூலம் ஒரு பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தித் தந்திருப்பவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். ஒரு தாய் அந்தக் குழந்தையைக் கவனிக்காவிட்டாலும், காப்பாற்றாவிட்டாலும், அந்தக் குழந்தையைக் காக்க, எங்கள் தாய், அன்புத் தாய், புரட்சித் தலைவி இருக்கிறார்.

*பிற்பகல் 1-50*

சில நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவத்தை நான் இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரிப்பூம்பட்டினத்தில் சிவபக்தி மிகுந்த ஒரு குடும்பத்தில் ஒரு பெண் பிறந்தாள். வயதுக்கு வந்ததும் அந்தப் பெண்ணை திருச்சியிலே மணம் செய்து கொடுத்தார்கள். பெண்ணுக்குப் பிரசவ காலம் வந்தது: தன்னுடன் தாயும் இருக்க வேண்டுமென்று மகள் அழைத்தாள். தாயும் வந்தாள். ஆனால் காவிரியில் வெள்ளம்; கரையைக் கடக்க முடியவில்லை. தாய் அப்படியே தவித்து நின்றாள்; பெண்ணை எண்ணித் துடித்தாள். பெண்ணோ தாயை எண்ணித் தவித்தாள். திருச்சியிலே காவிரிக்

கரையிலே கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானைத் தாயாக நினைத்து, விரைவில் தன்னுடைய தாயை அனுப்பி வைக்க வேண்டுமென்று மனமுருக வேண்டினாள். வெள்ளம் காரணமாக, தாயோ அக்கரையில்; மகளோ இக்கரையில்; மனம் இரங்கினார் சிவபெருமான். அந்தப் பெண்ணின் தாயைப்போல வடிவம் பூண்டு, மருந்து, எண்ணெய் முதலியன கொண்டுவந்து அந்தப் பெண்ணுக்குப் பிரசவம் பார்த்தார். ஏழாம் நாள் குழந்தையைத் தொட்டிலில் போட்டார்கள். ஆற்றில் வெள்ளம் வற்றி, பெண்ணின் தாய் மகளிடம் வர, அதுவரை தாயாக இருந்த இறைவன் மறைந்து, ரிஷப வாகனத்தில் காட்சி கொடுத்தார். தெய்வமே தனக்குத் தாயாக வந்த உண்மை தெரிந்ததும், எனக்குத் தாயும் ஆனாயா? தெய்வமே! என்று மகள் கண்ணீர் விட்டுக் கதறினாள். அன்று முதல் திருச்சி சிவபெருமான், தாயுமான சுவாமி ஆனார் என்பது சைவ வரலாறு. தாய் இருந்தாலும், இல்லாவிட்டாலும், தாய் வந்தாலும் வராவிட்டாலும், தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தாயுமான சுவாமியாக விளங்கிக் கொண்டிருப்பவர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தாய், புரட்சித் தலைவி அவர்கள். அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் இந்த 18 அம்சத் திட்டம்.

தொட்டில் குழந்தைகள் திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை உலகத்திலே இருக்கிற அத்தனை தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். அன்னை தெரசா அவர்கள்கூட எங்கள் தாய் இல்லத்திற்கு வந்து எங்கள் தாயைப் பாராட்டிவிட்டுப் போனார் என்பது வரலாறு. இந்தத் தொட்டில் குழந்தைகள் திட்டம், எங்களுடைய தாய் அவர்கள், 1991-96-ல் முதலமைச்சராக இருந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட திட்டம். அந்தக் குழந்தைகள்-அன்றைக்குக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள்-தொட்டிலிலே போடப்பட்ட பிள்ளைகள், மகாராணிகளாக இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 1996-க்குப் பிறகு 2001 வரைக்கும் ஒரு குழந்தைகூடத் தொட்டிலிலே கொண்டுவந்து போடப்படவில்லை. காரணம், முந்தைய ஆட்சியாளர்கள் தொட்டில் குழந்தைகள் திட்டத்தைக் கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தி, தெருவிலே வீசிய குழந்தைகளுக்கு, புதுக் காரணத்தைக் கண்டுபிடித்து அந்தக் குழந்தைகளைப் பராமரிக்காமல் விட்டுவிட்டுச் சென்றார்கள். ஆனால், இப்போது எங்கள் அம்மா அவர்கள், மறுபடியும் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, தொட்டில் குழந்தைகள் அதிகமாக வந்திருப்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். 1996-க்குப் பிறகு, குழந்தைகள் வராததற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தபோது, அப்போதைய ஆட்சியாளர்கள்



இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டதாக ஆங்காங்கு அறிவிக்கப்பட்டு அந்தத் திட்டம் செயலற்றுப் போனது. ஆனால் இப்போது சேலத்திலே மட்டும் 82 குழந்தைகள் தொட்டிலிலே கிடத்தப்பட்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்கள், நான் அங்கே சென்று பார்த்தபோது, அவர் வேடிக்கையாகச் சொன்னார்கள். நான்கு பெண் குழந்தைகளைப் பெற்றதற்குப் பிறகு, ஐந்தாவது குழந்தை பிறந்தவுடன் கொண்டுவந்து கொடுத்து, 'இந்த நான்கையும் எப்படியாவது நான் வளர்த்து விடுகிறேன். இந்த ஒரு பிள்ளையைக் கொண்டுபோய் அம்மாவிடத்திலே கொடுத்துவிடுங்கள்' என்று ஆட்சித் தலைவரிடத்திலே கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனதாகத் தகவல் சொன்னார்கள். தருமபுரி மாவட்டத்திலேகூட 11 குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கிற தாய், இதே காரணத்தைக் கலெக்டரிடத்திலே சொல்லி, அந்தப் பிள்ளைகளைக் கொண்டு வந்து தொட்டிலிலே போட்டுவிட்டுப் போயிருக்கிறார். நாங்கள்கூடக் கடுமையாக அறிவுறுத்தியிருக்கிறோம். குடும்பக் கட்டுப்பாட்டினுடைய அவசியத்தைப் பொதுமக்கள் மத்தியிலே விளக்கிக் சொல்லி, அதற்காகப் பிரச்சாரம் மேற்கொள்ளவேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறோம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், மாவட்டத்தினுடைய தலைநகரங்களிலே எல்லாம் தொட்டில் வைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கும் ஒருபடி மேலேபோய், எங்களுடைய அம்மா அவர்கள் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலேயும் இதேபோல ஒரு தொட்டில் வைக்கச்சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைகளை வளர்க்க முடியாதவர்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி, அது சேலமாக இருந்தாலும், நாமக்கல்லாக இருந்தாலும், ஈரோடாக இருந்தாலும், தருமபுரியாக இருந்தாலும், மாவட்டம் என்று பிரித்துப் பார்க்காமல், குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்கிற அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட மருத்துவமனை அலுவலகங்கள், இதுபோன்ற இடங்களிலே குழந்தைகளைக் காக்கவேண்டுமென்று அம்மா அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

அதேபோல, இரண்டு பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்புத் திட்டம். இதுவரை இந்தத் திட்டம் இந்தியா மட்டுமல்ல; உலகத்திலே எந்த மாநிலமும், எந்த நாடும் செயல்படுத்தாத ஒரு திட்டம். பெண் குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டுமென்பது ஒன்று; இரண்டாவது பெண் சிசுக் கொலையைக் கட்டுப்படுத்துவதற்கு இது மிகமிக முக்கியமான திட்டம். அந்தத் திட்டத்தின் மூலமாக கேட்டார்கள். எவ்வளவு பேர்

பயன் அடைந்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்கள் இங்கே கேட்டார்கள். திட்டம்-1-ன் கீழ் ஒரே குழந்தை இருந்து யாராவது ஒருவர் கருத்தடை செய்து கொண்டால் அதன்மூலம் பயன் பெற்றிருப்பவர்கள் மொத்தம் ஏழே பேர்கள்தான். காரணம், அவர்கள் கருத்தடை செய்துகொள்ள விரும்பவில்லை. இரண்டாவது, ஏதாவது ஒரு ஆண் குழந்தை பிறந்துவிடுமோ என்கின்ற ஆதங்கத்தின் காரணத்தால் யாரும் வர முன்வரவில்லை. திட்டம்-2-ன்கீழ் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றவர்கள் யாராவது ஒருவர் கருத்தடை செய்து கொண்டால், அதன்மூலம் இதுவரை பயன் பெற்றிருப்பவர்கள் 1164 பேர் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1-55*

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் முட்டையைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் அன்பில் பொய்யாமொழி அவர்கள் பேசுகிறபோது .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பில் பெரியசாமி.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அன்பில் பெரியசாமி அவர்கள் பேசுகிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொய்யாமொழியினுடைய சகோதரர்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அவர் பேசுகிறபோது சொன்னார்; ஏதோ எங்களின் அம்மா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் கொண்டு வந்த காரணத்தால்தான் இந்த முட்டையை நிறுத்திவிட்டார்கள் என்று அபாண்டமாக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். உண்மை அது அல்ல. எங்களின் தாய், தமிழகத்தினுடைய முதலமைச்சர், மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த முட்டை திட்டம் தேவையில்லாத ஒன்று என ஏற்கெனவே 1990 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசாங்கத்தைக் கண்டித்து ஓர் அறிக்கை தந்திருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகள் முட்டை சாப்பிடுவதன் மூலம், பெரும் பாதிப்பை அடைந்திருக்கிறார்கள்; இது அம்மா அவர்களின் அறிக்கை; பத்திரிகையிலே வந்த செய்தி; ஆதாரம் வைத்திருக்கிறேன். சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு அழுகிய முட்டைகள் தரப்படுவதாகக்



கூறப்படுகின்றன. அப்படியானால் கடந்த கால கருணாநிதி ஆட்சிக் காலத்தில் சத்துணவில் முட்டை வழங்காமல் வெறும் கணக்கை மட்டும் எழுதி முட்டை வழங்கியதாகக் கூறிவிட்டார்களோ என்கின்ற சந்தேகம் எனக்கு வருகிறது. எங்கள் அம்மா அவர்கள் இந்த முட்டைத் திட்டத்தை ஏற்கெனவே கண்டித்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது வந்ததற்குப் பிறகுதான் நிறுத்தினார்கள் என்பது அல்ல. அதேபோல 'தினமலர்' பத்திரிகையிலே, இதுசம்பந்தமாக, 1990 ஜனவரி 18-ல் முட்டை வழங்குவதிலே மீண்டும் பிரச்சினை என்கிற பெயரிலே ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. அதிலே சில அமைப்பாளர்களை விசாரித்த போது, அவர்கள் கொடுத்திருக்கிற தகவலை அப்படியே வெளியிட்டிருக்கிறார்கள். 'சத்துணவு வழங்குவதில் பிரச்சினைகள் இருப்பது என்பது எம்.ஜி.ஆர். காலத்திலேகூட எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏன் இப்படி பிரச்சினை ஏற்படுகிறது என்று கிளறும்போது, பிரச்சினையை ஏற்படுத்தித் தொல்லை கொடுத்தால் அமைப்பாளர்கள் வேலையை விட்டுப் போய்விடுவார்கள்; அந்தப் பழைய எம்.ஜி.ஆர். ஆட்களை எல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, புதிதாக தி.மு.க. ஆட்களை போட்டுக்கொள்ளலாம் என்று தி.மு.கவில் சில உயர்மட்டங்கள் கருதுவதாகத் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 'தினமலர்' பத்திரிகையிலே 1990 ஜனவரி 18-லே கொடுக்கப்பட்டிருக்கிற தலையங்கம்.

அடுத்து, முட்டையினுடைய தரத்தைப் பற்றி மைசூரிலே பரிசீலனை செய்துவிட்டு, கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்தினுடைய் தலைவர் ஓர் அறிவிப்புச் செய்திருக்கிறார். முட்டை வழங்குவதை நிறுத்திய காரணத்தால் முட்டை உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று இந்த மாமன்றத்திலே பல பேர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தினுடைய தலைவரே ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். "உற்பத்தி செய்யப்படும் முட்டைகளில் 10% மட்டுமே சத்துணவிற்கு விநியோகம் செய்யப்படுகின்றன; மீதமுள்ள 90% வெளிச் சந்தை ஏற்றுமதிக்கு அனுப்பப்படுகின்றன; வெளிச் சந்தைகளில் விற்பனையாகும் முட்டைகளில் எந்தவிதமான புகாரும் இல்லை என்பது பொதுமக்கள் அறிந்ததே. இதனால் எந்த பாதிப்பும் இங்கே ஏற்படவில்லை". இது 24-7-1998 'தினமலர்' பத்திரிகையிலே வந்திருக்கின்ற குறிப்பு, எங்கள் அம்மா அவர்கள் முட்டையின் மீதிருந்த வெறுப்பின் காரணத்தால் நிறுத்தவில்லை. முட்டை சம்பந்தமாகப் பல்வேறு கருத்துக்கள் எல்லாம் இங்கே சொன்னார்கள். காழ்ப்புணர்ச்சியோடு அல்ல. இதே அவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் இந்த அவையிலே பேசிய கருத்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு பள்ளிக்கூடத்திற்கு

ஆய்வுக்குச் சென்றபோது முட்டைகள் எல்லாம் அவித்து வைக்கபபட்டிருந்தன; நான் போய்த் தட்டிப் பார்த்தேன்; தட்டிப் பார்த்த நோத்திலே அத்தனையும் நீராகக் கொட்டியது. ஆகவே முட்டையை நிறுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் இதே அவையிலே பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசியதோடு மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள், சத்துணவுத் துறையினுடைய அமைச்சராக இருந்தபோது திரு. சித்திக் என்பவர் பேசியிருக்கிறார். அதேபோல, அண்ணா தி.மு.க.-வில் அன்றைக்கு இருந்த திரு. உகம்சந்த் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகவே, முட்டையை நிறுத்த வேண்டுமென்பது இப்போது எங்கள் அம்மா அவர்கள் மட்டும் எடுத்த முடிவல்ல. மாண்புமிகு உறுப்பினர்களால் ஏற்கெனவே இந்த அவையிலே பல முறை சொல்லப்பட்டு, பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் பேசப்பட்ட கருத்துக்கள்தான். ஆக, முட்டை நிறுத்தம் என்பதில் உள்நோக்கம் இல்லை ' என்பதைமட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, முட்டை ...

*பிற்பகல் 2-00*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் தெரிவித்த கருத்துகளோடு இன்னொரு செய்தியையும் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு துறையைப் பற்றியும் நான் ஆய்வு நடத்தினேன். சமூக நலத் துறையைப் பற்றி ஆய்வு நடத்தியபோது குழந்தைகளுக்கு முட்டை வழங்குகின்ற திட்டத்தைப் பற்றி நான் அமைச்சரிடத்திலே விசாரித்தேன். இது கடந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்ட உடனேயே நடந்த ஆய்வு. அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்குத் தெரிவித்த தகவல் என்னவென்றால்; தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு முதலில் வாரம் ஒரு முறை முட்டை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். பின்னர், இரண்டு வாரத்திற்கு ஒருமுறை முட்டை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், நடைமுறையில், உண்மையாக இரண்டு மாதத்திற்கு ஒருமுறைகூட அந்தக் குழந்தைகளுக்கு முட்டை வழங்கப்படவில்லை என்பதைத்தான் அந்த ஆய்வில் எனக்குத் தெரிவித்தார்கள். அப்படி இரண்டு மாதத்திற்கு ஒருமுறை முட்டை வழங்குகிறபோதுகூட, பெரும்பாலான சத்துணவு மையங்களுக்கு





முட்டைகள் போய்ச் சேரவில்லை. சில முட்டைகள் வழியிலேயே உடைந்து போய்விடும். அதனால், பெரும்பாலான இடங்களுக்கு அழுகிய முட்டைகளைத்தான் அவர்கள் சப்ளை செய்தார்கள். பல சத்துணவுக் கூடங்களுக்கு, மையங்களுக்கு முட்டைகள் சென்று சேரவேயில்லை. ஆகவே, வாரம் ஒருமுறை அல்லது இரு வாரங்களுக்கு ஒருமுறை குழந்தைகளுக்குச் சத்துணவுடன் முட்டை என்பது ஏட்டளவிலே இருந்த திட்டம்தானே தவிர, நடைமுறையில் தி.மு.கழக ஆட்சி அதை வெற்றிகரமாக, உண்மையாகச் செயல்படுத்தவே இல்லை. அதற்கு மாறாக, இப்போது ஏட்டளவிலே முட்டை என்று அறிவிக்காமல், அதை நிறுத்திவிட்டு, வாரத்திற்கு மூன்று முறை நல்ல சுத்த சத்துணவை, நல்ல ஊட்டச் சத்துள்ள பதார்த்தங்களைக் குழந்தைகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், திருச்சி, மேட்டுப்பாளையம், மேட்டூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில் கடந்த ஆட்சி காலத்தில் 1998 ஆம் ஆண்டு குளிர்ப்பதன அறையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 82 இலட்சம் முட்டைகளை அழுகிப்போன முட்டைகள் என்று அழித்திருக்கிறார்கள். அதன் அழிக்கப்பட்டவீதம்கூடக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 26 லாரிகள் மூலம் சேலம் மாவட்டம், சூரியன்கரடு என்ற இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, 30 அடி நீளம், 10 அடி அகலம், 6 அடி உயரம் கொண்ட மூன்று குழிகளில் பாலிதீன் காகிதத்திலான விரிப்பு போடப்பட்டு, அதன் மேல் களி மண் கொட்டப்பட்டு, அதன் பிறகு முட்டையும், அதன் மேல் ஒரு அடுக்கு மண்ணும் கொட்டப்பட்டு, இவ்வாறு நான்கு அடுக்குகளாக முட்டை, மண் கொட்டப்பட்டு, இறுதியாக சிமெண்ட் தளத்தால் குழிகள் மூடப்பட்டன என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. 82 இலட்சம் முட்டைகளை—26 லாரிகள்—அழிப்பதற்கு 30 அடி நீளம், 10 அடி அகலம், 6 அடி உயரம் கொண்ட 3 குழிகளைத் தோண்டி அதற்கு மேல் பாலிதீன் கவர் போடப்பட்டு நான்கு அடுக்குகளாக முட்டை அடுக்கி வைத்து, அதற்குப் பிறகு முட்டையை அழித்து இருக்கிறார்கள். சுற்றுப்புறத்திலே இருக்கிறவர்கள் எல்லாம் வந்து, இங்கே எரிக்கக் கூடாது, அழிக்கக் கூடாது என்று அச்சுறுத்தியும்கூட, அதிகாரிகள் அழித்திருக்கிறார்கள். அரசுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பை, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-05

அடுத்து, சத்துணவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே சொன்னார்கள். சத்துணவு என்பது இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மிகவும் பெருமையாக, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே கொண்டு வரப்பட்ட திட்டம் என்று சொன்னார்கள், நன்றி. ஆனால், சத்துணவுத் திட்டம் என்பது 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் 1921 முதல் 1924 வரையிலான காலங்களில் அப்போதைய நீதிக் கட்சியினரால் ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் நடைமுறை, மக்களிடையே எடுத்துரைக்கப்பட்டு செயலாக்கப்பட்டு வந்திருக்கிறது. இதற்கு முன்பு ஆங்காங்கே சிற்சில இடங்களில் ஏழை பள்ளிக் குழந்தைகளுக்கு செல்வந்தர்களால் உணவு அளிக்கும் நடைமுறை 1921 to 1924 வரைக்கும் பின்பற்றப்பட்டு வந்ததை மாண்புமிகு மூத்த உறுப்பினர்கள் எல்லாம் அறிவார்கள். அதற்குப் பிறகுதான் இதே அவையிலே பலமுறை பேசப்பட்டிருக்கிறது. குறிப்புகளைப் பார்த்தபோது நான் இவற்றைத் தெரிந்து கொண்டேன். மாண்புமிகு அம்மா அவர்கள்கூட இதைப் பார்த்தார்கள். 1950-க்குப் பிறகு, ஆதிதிராவிட நலப் பள்ளிகளுக்கும், சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த சிற்சில பள்ளிகளுக்கும்தான் மேற்படி திட்டம் விரிவாக்கப்பட்டு செயலாக்கத்திலே செயல்பட்டு வந்தது. மறைந்த முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால், 1956 ஆம் ஆண்டு முதல், தேர்வு செய்யப்பட்ட சில பள்ளிகளில், அரசின் செலவினம் ஏதுமின்றி, இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. பின்னர் 1957 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் அரசு மானியத்துடன் இத்திட்டம் மேலும் விரிவாகச் செயல்படுத்தப்பட்டது. அந்தச் சமயம் ஒரு மாணவரின் உணவுக்கான மொத்தச் செலவினம் 10 பைசாதான். ஒரு மாணவருக்கு 10 பைசா என்று நிர்ணயம் செய்யப்பட்டு அதிலே 6 பைசா அரசால் மானியமாக வழங்கப்பட்டு 2 பைசாவை சம்பந்தப்பட்ட ஊராட்சி நிதியிலிருந்து அளிக்கப்பட்டது. எஞ்சிய 2 பைசா உள்ளூரிலே இருக்கிற பணக்காரர்கள், பொதுமக்களிடத்திலே இருந்து நன்கொடையாகப் பெற்று, பள்ளித் தலைமையாசிரியர் இடத்திலே ஒப்படைக்கப்பட்டு, உணவு வழங்கப்பட்டது. அந்தச் சமயம் 8270 மையங்களிலே மட்டும்தான் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு, 2,28,844 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து ஆதிதிராவிடப் பள்ளிகள், சென்னை மாநகராட்சியின் சில பள்ளிகளில்—293 பள்ளிகளிலே—இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, 1961 ஆம் ஆண்டு 'CARE' என்கிற நிறுவனத்தாரால் பால் பவுடர், சோயா மாவு, கோதுமை



உணவுப் பொருட்களை அவர்கள் இலவசமாக இந்தப் பிள்ளைகளுக்குக் கொடுக்க ஆரம்பித்தார்கள். இதுதான் நடைமுறைப்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டம். ஆனால், முன்னாள் முதல்வர், எங்களுடைய அம்மா அவர்களின் அரசியல் ஆசான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலேதான், சத்துணவுத் திட்டம்—1982 முதல் இந்தத் திட்டம்—விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாக இப்போது சத்துணவு சாப்பிடுகிற பிள்ளைகளுக்கு வழங்கக்கூடிய உணவை—மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே சொன்னார்கள்—சத்தோடு உள்ள உணவாகக் குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென்பதற்காக அம்மா அவர்கள், உருளைக்கிழங்கு, பச்சைப்பயறு, கொண்டைக் கடலை வழங்கவேண்டுமென்று உத்தரவிட்டு, அதன்மூலம் இப்போது தொடர்ந்து பிள்ளைகள் விரும்பிச் சாப்பிடுகிறவிதத்திலே வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒரே கருத்தைத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். சத்துணவுப் பணியாளர்களுக்கான சம்பள விகிதத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். நிரந்தரப் பணியாளர்களாக மாற்றுவது பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். நம்முடைய தமிழ்நாட்டிலே மொத்தப் பணியாளர்கள் 2,26,503 பேர். அதிலே, அமைப்பாளர்கள் 1,02,751 பேர் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். சமையல் செய்பவர்கள் 41,798 பேர். உதவியாளர்கள் 81,954 பேர். இவ்வளவு பேரையும் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவது என்பது நல்ல நோக்கம்தான். முழுக்க, முழுக்க பெண்கள் வேலை செய்கிறார்கள். அம்மா அவர்கள் கருணைப் பார்வையோடு அவர்களை எல்லாம் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கவேண்டும் என்பதிலே—உங்களை விட எங்கள் அம்மா அவர்களுக்கு—அதிகமான ஆர்வம் உண்டு. அள்ளியள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிற குமணனின் வாரிசாக இருக்கிற எங்களுடைய அம்மா அவர்கள், நிச்சயமாக இதைக் கருத்திலே எடுத்துக்கொண்டு அவர்களை நிரந்தரமாக்குவதற்கு நிதிநிலைமையைக் கருத்திலே கொண்டு ஆய்ந்து செயல்படுத்துவதற்கு உதவி புரிவார்கள்.

பிற்பகல் 2-10

சத்துணவுப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய அம்மா அவர்கள்தான், 1995-லே வேலூர் மாநாட்டிற்குப் போனபோது இந்தப் பணியாளர்களையும் மனிதநேயத்தோடு பார்க்க வேண்டும் என்று

சொல்லி, அம்மா அவர்கள் காலத்திலேதான்—சத்துணவுத் திட்டத்தினுடைய பணியாளர்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், ரூபாய் ஒரு இலட்சம் வழங்குதல் சத்துணவு அமைப்பாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையிலே பணி நியமனம், சத்துணவுப் பணியாளர்களுக்குக் கைத்தறித் துணி வாங்குவதற்கு முன்பணக் கடன், சத்துணவுச் சமையலர், உதவியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையிலே பணி நியமனம், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, சத்துணவு மைய ஊழியர்களுக்குக் கோடை விடுமுறை ஊதியம், சத்துணவு ஊழியர்களைச் சிறப்புச் சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்திலே சேர்த்தல், ஓய்வு பெறுகிற வயதை 55-லேயிருந்து 58 ஆக உயர்த்துதல், இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை எல்லாம் அம்மா அவர்கள் ஆளுகிறபோதுதான், அங்கே வேலை செய்கிறவர்கள் எல்லாம் பெண்கள் என்கிற அடிப்படையிலே, நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அம்மா அவர்கள் அறிவிக்கச்சொல்லியிருக்கிற அறிவிப்புகளை அறிவிக்க இன்னும் அரை மணி நேரம் தேவை என்று நான் கருதுகிறேன். காரணம், இந்தச் சமூக நலத் துறை என்பதை அம்மா அவர்கள் தத்து எடுத்துக் கொண்டிருக்கிற தொட்டில் குழந்தைகள் திட்டத்தின்மூலமாக—இந்தத் துறையையும் அம்மா அவர்கள்—தத்தெடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இன்னும் பல்வேறு கருத்துகளையெல்லாம் இங்கே பேசியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சத்துணவுக் கூடங்கள் எல்லாம் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அது உண்மைதான். காரணம் 5 ஆண்டு காலத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் அந்த போர்டிலே இருக்கிறது என்ற காரணத்திற்காகவே அந்தத் திட்டத்தை அப்படியே கைவிட்டுவிட்டு—எக்கேடு கெட்டுப்போனால் என்ன என்று விட்டுவிட்டுப்—போன திட்டத்திற்கு அம்மா அவர்கள் உயிரோட்டம் கொடுத்து, ஏற்கெனவே 25 கோடி ரூபாய்களைத் தந்து சத்துணவுக் கூடங்களைப் பழுது பார்ப்பதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டு, மிகவும் மோசமடைந்திருக்கிற நிலையிலே இருக்கிற சத்துணவுக் கூடங்களெல்லாம் கண்டறிந்து பழுது பார்க்கப்பட்டு வருகின்றன என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற அறிவிப்புகளை நான் இப்போது தெரிவிக்க விரும்புகிறேன்.



(1) மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்தபடி, தமிழ்நாடு மாநிலத்தை ஊட்டச்சத்துக் குறைவில்லா மாநிலமாக உருவாக்கவும், சுமார் 12 இலட்சம் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், வளரிளம் பெண்கள் மற்றும் முதியவர்கள் பயன் பெற ஏதுவாக ஒரு விரிவான செயலாக்கத் திட்டம் வகுக்கப்படவுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நடப்பு ஆண்டில் ரூபாய் 63 கோடியே 11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) வளரிளம் பெண்களுக்கு முத்தடுப்பூசி - M.M.R.—போடுவதன் மூலம் அவர்கள் திடகாத்திரமாக வளரவும், இரத்தசோகை நோயிலிருந்து காத்திடவும் திட்டம் ஒன்று வகுக்கப்படவுள்ளது. நடப்பு 2002-2003 ஆம் நிதியாண்டில் ரூபாய் 6 கோடியே 62 இலட்சம் செலவில் 10 ஆம் வகுப்பு, பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளில் பயிலும் மாணவிகள் இந்தத் திட்டத்தின்மூலம் பயன் பெறக்கூடும். இந்தத் திட்டத்தின் மூலம் இரத்தசோகை இல்லாத பெண்கள் கிராமப்புறங்களிலே உருவாக வேண்டும் என்பதுதான் அம்மா அவர்களின் நோக்கம். அதற்காக 6 கோடியே 62 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் செய்யும் வழக்கம், இம்மாநிலத்தில் பல இடங்களிலும் சமுதாயத்தின் பல பிரிவுகளிலும் இன்னமும் நடைமுறையில் இருப்பது மாண்புமிகு அம்மா அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டதனைத் தொடர்ந்து, இவ்வாறான இளம் வயது திருமணத்தினைத் தடை செய்யும் நோக்குடன், செய்தி, கல்வி, தகவல் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்திட ரூபாய் 3 கோடியே 81 இலட்சம் செலவில் ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) குழந்தைகளிடையே ஆரம்ப நிலையிலேயே ஏற்படும் உடல் ஊனங்களைக் கண்டறிந்து அதனைக் களையும் வகையில் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியோருக்கு ரூபாய் 2 கோடியே 81 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கும் திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர் பயிற்சி

பெற்ற, தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டவாறு வேலைவாய்ப்பகம் மூலம் பதிவு செய்தல் மற்றும் பணியில் சேருவதற்கான உச்ச வயது வரம்பு ஆகியவற்றிலிருந்து விலக்களித்து ஆசிரியர் தேர்வாணையம்மூலமாக ஆசிரியர்களாகவும் மற்றும் பணியாளர்களில் உள்ள இதர பட்டதாரிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலமாக அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணி இடங்களுக்கான சிறப்புத் தேர்வும் நடத்திட அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் சுமார் 5500 சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

பிற்பகல் 2-15

(6) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்காத, அங்கீகாரம் பெற்ற தனியார்ப் பள்ளிகளிலும் இந்த நிதியாண்டிலிருந்து ரூபாய் ஒரு கோடியே 20 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்மூலம் 120 பள்ளிகளில் பயிலும் சுமார் 13,200 மாணவ/மாணவிகள் பயனடைய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(7) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடி மையங்களின் செயல்பாட்டைச் சீரிய முறையில் கண்காணிக்க அலுவலர்கள் மட்டுமின்றி பொதுமக்களின் பிரதிநிதிகளும் பயன்படுத்தப்படுவர். இதற்கென பஞ்சாயத்து அமைப்புகளின் அங்கத்தினர்களும் ஈடுபடும் வகையில் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(8) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் காய்கறிகள், மசாலா சாமான்கள், எண்ணெய் மற்றும் உப்பு ஆகியவை வாங்க ஒரு பயனாளிக்கு ஒரு நாளைக்கு வழங்கப்படும்—மாண்புமிகு அம்மா அவர்கள் நேற்றைக்கு காவல்துறை மானியத்தின்போது ஒரு நல்ல கருத்தை அனைவரும்—இன்று காலையில்கூட பார்க்கிறவர்கள் எல்லாம்—பாராட்டுகிற ஒரு கருத்தைச் சொன்னார்கள். சம்பளம், இரேடு எதுவாக இருந்தாலும் வயிறு என்பது ஒன்றுதான், பசி என்பது ஒன்றுதான், அந்தப் பசியைப் போக்க வேண்டுமென்று சொல்லி, நானேதான் 80 ரூபாய் என்று முடிவெடுத்து அறிவித்திருக்கிறேன் என்று அம்மா அவர்கள் இங்கே சொன்னார்கள். இன்றைக்குப் பாராட்டாதவர்கள் யாருமே இல்லை.



அதேபோலச் சத்துணவுத் துறையின் சார்பிலே ஆய்வு நடந்தபோது, அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டே வந்தார்கள். முதலிலே இது சம்பந்தமாக மசாலா சாமான்கள் வாங்கக்கூடிய பணத்தைப்பற்றிப் பேசுகிறபோது அம்மா அவர்கள் கேட்டுவிட்டு விட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு 15 நிமிடங்கள் கழித்து—எதை நினைத்துக் கொண்டிருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால்—அம்மா அவர்கள் கூடியிருந்த அத்தனை அதிகாரிகள் முன்னிலையில் சொன்னார்கள். எதை எதையோ பேசிக் கொண்டிருக்கிறீர்களே, சாப்பாடு விஷயம் அதைப் பேச மறுத்துக் கொண்டிருக்கிறீர்களே என்று சொல்லி உடனே அதைப்பற்றிப் பேசுங்கள்; எவ்வளவு பணம் செலவாகும் என்று கணக்குப் போட்டுப் பாருங்கள் என்று சொன்னார்கள். அப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்து அம்மா அவர்களே ஒரு முடிவெடுத்தார்கள். இந்த ஏழைப் பிள்ளைகளுக்காகச் செலவிடுகிற பணத்தை—அம்மா அவர்கள் காவல் துறைக்கு மட்டுமல்ல சமூக நலத் துறைக்கு மட்டும் அல்ல—தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற எந்த ஏழையாக இருந்தாலும் பசி என்பது ஒன்றுதான் என்பதைப் புரிந்துகொண்டு அள்ளித் தந்திருக்கிற கொடைவள்ளல் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மசாலா சாமான்களுக்கு—பசி என்பதே தகப்பனை விட தாய்க்குத்தான் தெரியும். அந்தத் தாய், எங்களின் தாய், அன்புத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—ஒரு பயனாளிக்கு ஒரு நாளைக்கு வழங்கப்படும் 23 பைசாவினை 35 பைசாவாக உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே காய்கறிக்கு 11.5 பைசா, தாளிதங்கள் 4.5 பைசா, எரிபொருள் 7.0 பைசா. 23 பைசா அப்போது. ஆனால் இப்போது அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற இந்தப் புதிய திட்டத்தின் மூலமாக காய்கறிக்கு 15 பைசா, தாளிதங்களுக்கு 9 பைசா, எரிபொருளுக்கு 11 பைசா, ஆக 35 பைசாவாக அம்மா அவர்கள் கூட்டித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோலத் தட்டு, டம்ளர்பற்றி எல்லாம் சொன்னார்கள். உடைந்து, நெளிந்து போய் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அதற்கும் எங்கள் அம்மா அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இவையெல்லாம் அம்மா அவர்களாக இந்தக் கோப்புகளை எல்லாம் படித்துப் பார்த்துவிட்டு உத்தரவிட்ட திட்டங்கள்.

(9) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் மையங்களில் எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வாங்குவதற்கென இந்த நிதியாண்டில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அலுமினியமே வேண்டாம் என்று சொல்லி எவர்சில்வர் தட்டு வாங்கவேண்டும்; அவர்களும் குழந்தைகள்தான் என்பதை உணர்ந்து அம்மா அவர்கள் மிகவும் தாய் உள்ளத்தோடு அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-20

(10) சிறு தொழில் முனைவோராக மகளிரை ஊக்குவிக்கும் மாநில அரசின் திட்டத்தின் அங்கமாக, 5 ஆண்டு கால அளவில் சுய உதவிக் குழுக்களில் 2.5 இலட்சம் மகளிருக்கு தொழில் மற்றும் திறனுறு பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றினை அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவுறுத்தியிருந்தார்கள். இந்தப் பயிற்சித் திட்டத்தின்கீழ் 2002-2003-ல் ஒரு கோடி ரூபாய் செலவிலே சுமார் 50,000 மகளிருக்குப் பயிற்சி அளிக்கலாம் என்று அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

(11) மாநிலத்தில் படிப்பறிவு பெற்ற ஆண்கள் 82.33 சதவீதம், படிப்பறிவு பெற்ற பெண்டிர் 64.55 சதவீதம் மட்டும் உள்ளதை மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டு இதை ஈடு செய்யும் வண்ணம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் 15 இலட்சம் பேருக்கு ஐந்து ஆண்டுகால அளவில் படிப்பறிவு புகட்டுவதற்கான திட்டத்தை வகுக்குமாறு ஏற்கெனவே அறிவுறுத்தி, இந்தத் திட்டத்திற்கு 3 கோடியே 80 இலட்சம் ரூபாயை அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(12) ஊராட்சிகள் அளவில் தற்போது அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பினைத் தொடர்ந்து, வட்டார அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பினை அமைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகளைக் கொண்டு வட்டார அளவிலான கூட்டமைப்புகளை ஏற்படுத்தலாம். சுய உதவிக் குழு இயக்கத்திலிருந்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் படிப்படியாக விலகிக் கொள்வதற்கு இது இறுதியில் வழிவகை செய்ய அம்மா அவர்கள் உத்தரவு இட்டிருக்கிறார்கள்.



(13) மகளிருக்கான மாநிலக் கொள்கைக்கு முழு வடிவாக்கம் கொடுக்குமாறு அம்மா அவர்கள் ஆணையிட்டதுடன், உரிய தருணத்தில் அம்மா அவர்களே மகளிருக்கான மாநிலக் கொள்கையை வெளியிட இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(14) பத்தாம் வகுப்பு, பதினோராம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும், அரசு நடத்தும் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்களில் வசிக்கும் அநாதை மற்றும் ஆதரவற்ற மாணவிகள் சுமார் 1000 பேருக்கு இலவசமாக மிதிவண்டிகள் வழங்க ரூபாய் 12 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(15) முதியோருக்கான மாநிலக் கொள்கை ஒன்றை விரைவில் வெளியிடுவதற்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

(16) சமூக நலத் துறையினரால் நடத்தப்படும் ஆதரவற்ற, சமூகப் பாதுகாப்பு இல்லங்களின் மாணவ மாணவியர் தொழில் நுட்பக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆகியவற்றில் மேற்படிப்பினைத் தொடர ஏற்கெனவே அம்மா அவர்கள் சமூகப் பாதுகாப்பு இல்லங்களிலே படிக்கக்கூடிய மாணவ மாணவியர்களுக்கு 5 சதவீத இட ஒதுக்கீட்டைத் தந்து அந்த மாணவர்கள் பொறியியல் படிப்பில் 4 பேர் படித்துக் கொண்டிருக்கிறார்கள்; மருத்துவம் 4 பேர் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்போது அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற அறிவிப்பு, 2002-2003 ஆம் கல்வி ஆண்டிலிருந்தே கீழ்க்கண்டபடி:—

பொறியியல் 10 இடம், மருத்துவம் 5 இடம், ஆசிரியர் பயிற்சி 10 இடம், பொது செவிலியர் 10 இடம், இளமறிவியல் (செவிலியர்) 5 இடம். தொழில் நுட்பம் 10 இடம், பல் மருத்துவம் 2 இடம், உடலியக்க மருத்துவம் 5 இடம், கால்நடை மருத்துவம் 5 இடம், இளமறிவியல் வேளாண்மை 5 இடம். இந்தக் கருத்துருக்களெல்லாம் உருவாக்கப்பட்டு ஆதரவற்ற, சமூகப் பாதுகாப்பு இல்லங்களிலே படிக்கக் கூடிய மாணவ மாணவியர்களுக்கு இந்த ஒதுக்கீட்டைச் செய்து தர அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(17) இந்த ஆண்டில் கூடுதலாக 1000 குழந்தைகள் காப்பகங்களைத் தொடங்குவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(18) மத்திய அரசின் சம்பூர்ண கிராம ரோஜ்கார் யோஜனா என்ற திட்டத்தின்கீழ், முதியோர் இல்லங்கள்; காது கேளாதோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோர் போன்ற ஊனமுற்றோருக்கான பள்ளிகள் மற்றும் இல்லங்களுக்கான ஊரகக் கூட்டமைப்புகளை ஏற்படுத்திட வழி வகைகளை உருவாக்குவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

(19) ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள், முதியோர் இல்லங்கள், சாலையோரச் சிறார்களுக்கான இல்லங்கள், பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் முதலியன கட்டுவதற்கு, தொண்டு நிறுவனங்களுக்கு, தேவை அடிப்படையில் எங்கெங்கு முடியுமோ அங்கு அரசு நிலத்தை இலவசமாக வழங்க அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள், பணிபுரியும் மகளிர் விடுதி குறைவாக இருக்கிறது; மாவட்டந்தோறும் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இங்கே அறிவிப்பிலே வருகிற காரணத்தினால் உங்களுக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆய்வின்போதே, இதை எந்தெந்தத் தொண்டு நிறுவனங்கள் முன் வருகின்றனவோ, அங்கெல்லாம் ஆரம்பிக்கலாம் என்று அம்மா அவர்கள்—கேட்காமலே கொடுக்கிற தெய்வம், எங்கள் அம்மா அவர்கள்—கொடுத்திருக்கிறார்கள்.

(20) மத்திய அரசின் "கிஷோரி சக்தி யோஜனா" என்னும் வளரிளம் பெண்களுக்கான திட்டத்தை 2002-2003-ல் 37 வட்டாரங்களில் 40 இலட்சத்து 14 ஆயிரத்து 500 ரூபாய் ஒதுக்கீட்டிலே செயல்படுத்துவதற்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 2-25

(21) கோயம்புத்தூரிலே ரூபாய் 32 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு புதிய சேவை இல்லத்தைத் தொடங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(22) சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் பயன்பெறத்தக்க வகையிலும் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விற்பனை நிலையங்களாக அமையும்பொருட்டும் ரூபாய் 16 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் மாவட்ட அளவிலான 6 பயிற்சி மற்றும் விற்பனை மையங்களை ஏற்படுத்தும் கருத்துருவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



(23) சென்னையில் சுமார் ரூபாய் 100 இலட்சம் மதிப்பீட்டில் பணி செய்யும் மகளிருக்கான இரண்டு தங்கும் விடுதிகள், தொண்டு சாரா நிறுவனங்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவை இணைந்து ஏற்படுத்தும் திட்டத்திற்கும் அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

(24) 23 அரசு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்களில் ரூபாய் 1 இலட்சத்து 38 ஆயிரம் செலவில் தொலைபேசி வசதி செய்து தருவதற்கான கருத்துருவையும் அம்மா அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள்.

(25) ரூபாய் 19 இலட்சத்து 98 ஆயிரம் செலவில் இளைஞர் நீதிச் சட்டம் 2000-ன்கீழ் இளைஞர் நீதிக் குழுமங்களை நிறுவுதல் தொடர்பான செயற்குறிப்பிற்கும் அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

(26) தற்போதுள்ள இளைஞர் நலக் குழுமங்களுக்குப் பதிலாக ரூபாய் 17 இலட்சத்து 28 ஆயிரம் மதிப்பீட்டில் குழந்தைகள் நலக் குழுமங்களை நிறுவுவதற்கும் அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

(27) சென்னை மாநகராட்சி எல்லையில் மட்டுமின்றி, மாநகராட்சிக் குட்பட்ட பிற இடங்களிலும் சாலையோரச் சிறார்கள் காணப்படுகிறார்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஆய்வின்போது, அம்மா அவர்களிடத்திலே இந்தப் பிரச்சினை சம்பந்தமாகச் சொல்கிறபோது, சாலையோரச் சிறுவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதாகப் பேசுகிறபோது அம்மா அவர்கள் சொன்னார்கள்; அம்மா அவர்கள் வீட்டிலிருந்து கோட்டைக்கு வருகிறபோது, ஏதோ ஒரு பகுதி பாலத்தில் நின்று கொண்டு, 20,25 பிள்ளைகள் (குறுக்கீடு) நடுக்குப்பம் பகுதியிலே 20 பிள்ளைகள் நின்றுகொண்டு அம்மா போகும்போதும், வரும்போதும் நின்று கையாட்டிக் கொண்டே இருப்பார்களாம். அம்மா பார்த்துவிட்டுப் போவார்களாம். உடனே அம்மா அவர்கள் என்னிடத்திலே கேட்டார்கள், ஆய்வு நடத்தியபோது, இவ்வளவு பிள்ளைகள் ரோட்டிலே நின்று எனக்கு டாட்டா சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் சாலையோரச் சிறுவர்களுக்கு என்ன நன்மை செய்கிறீர்கள், அங்கே போய் அந்தப் பிள்ளைகளையெல்லாம் அழைத்து பள்ளிக்கூடத்திற்கு அனுப்பச் செய்யுங்கள்; எனக்கு டாட்டா காட்டுவதைவிட கல்வி கற்றுக்கொள்ள வேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எங்களிடத்திலே அறிவுறுத்தி இருக்கிறார்கள். தாங்களும் அந்தப் பகுதியிலே முகாம்களை

நடத்தி,. குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டுமென்று அவர்களுக்கெல்லாம் பயிற்சி கொடுப்பதற்காக ஒரு பயிலரங்கம் போல நடத்தி, அவர்களை அறிவுறுத்துவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். யூனிசெப் நிறுவனத்தோடு கலந்து கணிப்பு, மாதிரி எடுத்தல் போன்ற ஆராய்ச்சி முதலியன செய்து 6 இலட்சம் ரூபாய் செலவிலே எல்லா மாநகராட்சிகளிலும் சாலையோரச் சிறார்கள் நிலைகுறித்து ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பள்ளிக்கு அனுப்புவதற்கு அறிவுறுத்த வேண்டுமென்று அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(28) சமூகப் பாதுகாப்புத் துறையிலே பழுதாகக் கிடக்கின்ற வாகனங்களை மாற்றிவிட்டு இரண்டு புதிய வாகனங்கள் வாங்குவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

(29) சாலையோரச் சிறார்களின் நலனுக்காக பல நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக சிறுசேமிப்பு இயக்ககத்தின்மூலம் "சிறப்பு பம்பர் பரிசுச் சீட்டு" நடத்துவதற்கான செயற்குறிப்பு உருவாக்கப்பட்டு, இந்தச் சிறப்புக் குலுக்கல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் அன்று நடத்த வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் தந்து, அதன்மூலம் சாலையோரச் சிறார்களைக் கவனிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

(30) தற்போது தமிழக அரசு ஊனமுற்றோருக்கு, அடையாள அட்டையை இலவசமாக வழங்கி வருகிறது. இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அடையாள அட்டை சம்பந்தமாகச் சொன்னார்கள். அவர்களுக்கு வழங்கக்கூடிய தொகை சம்பந்தமாகச் சொன்னார்கள். 2001-2002 ஆம் ஆண்டில் ஊனமுற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு 92.45 இலட்சம்போல் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தத் தொகை எல்லா மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது. ஒரே மாதிரியான அடையாள அட்டைகள் ஊனமுற்றோருக்கு வழங்கும்வண்ணம் வழிவகைகளை அரசு ஏற்படுத்தி இருக்கிறது. இந்த முறையில் வழங்கப்படும் அடையாள அட்டை உடையவர்கள் பிற தகுதிகளுக்கு உட்பட்டு, மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்படும் சலுகைகளைப் பெற முடியும். இந்தப் புதிய முறைப்படி, தமிழ்நாடு மின்னணு நிறுவனம்மூலம் தயாரிக்கப்படவுள்ள அடையாள அட்டைகள் மற்றும் அடையாளப் புத்தகங்கள் ஊனமுற்றவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தி, 10 இலட்சம் ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து, ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் ஊனமுற்றவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.



பிற்பகல் 2-30

(31) அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் எழும் காலியிடங்களில் 1-வது, 33-வது, 66-வது காலியிடங்களை ஊனமுற்றோருக்குத்தான் ஒதுக்கி, வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டு, அதன்மூலம்தான் வேலைவாய்ப்பிலே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று அம்மா அவர்கள் கட்டாயமாக உத்தரவிட்டு அனுமதித்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(32) குறைவாக மற்றும் ஓரளவு ஊனத்தினால் பாதிக்கப்பட்ட ஊனமுற்றோரை, இதர நல்ல உடல் நிலையில் உள்ள குழந்தைகளோடு ஒருங்கிணைத்து கல்வியளித்துத் தயார் செய்திட, தேவையான இடங்களில் முன்பருவக் கல்வி வகுப்புகள் தொடங்கப்பட வேண்டுமென்று அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

(33) ஊனமுற்றோருக்கான பயிற்சி மையத்தினை ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் சென்னையிலே அமைப்பதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

(34) ரூபாய் 12 இலட்சத்து 59 ஆயிரம் செலவில் அரசு காது கேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளில், குழுக் காதொலிக் கருவிகள் வழங்கப்பட உள்ளன. இந்தக் குழுக் காதொலிக் கருவிகளால், ஆசிரியர் மற்றும் செவித் திறன் குறையுடைய குழந்தைகள் தடையின்றி நடமாட இயலும். இந்தக் குழுக் காது கேட்கும் கருவியின் மூலம் ஆசிரியர் தனது சட்டையில் மிகச் சிறிய பேசும் கருவியைப் பொருத்தி, கையில் வைத்துப் பேசினால், 50 மீட்டர் தூரம் வரை இந்தச் சிறப்பு காது கேட்கும் கருவியைப் பொருத்திய காதுகேளாத மாணவர்களும் அறிந்துகொள்ளும் வகையில்—ஆசிரியர் மற்றும் மாணவர் இடையே எந்தவிதமான ஒயர் மூலமான இணைப்பும் தேவை இல்லாமல், 10 மாணவர்கள் பயனடையும் இந்தக் கருவிக்காக—இந்தக் கருவியின் மதிப்பு ரூபாய் 58 ஆயிரம்—செலவழிப்பதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(35) சிறப்பு பரிசுச் சீட்டு விற்பனை நிதியினைக் கொண்டு ரூபாய் 5 இலட்சம் செலவில் பார்வையற்றோருக்கான பிரெய்லி நூலகம் மற்றும் ஆராய்ச்சிப் பயிற்சி மையத்தினை உருவாக்கும் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள்.

[திருமதி பா. வளர்மதி] [2002 ஏப்ரல் 26

(36) 2002-2003 ஆம் ஆண்டில் ஊனமுற்றோருக்கென கீழ்க்காணும் தொழில்நுட்பக் கல்வி வகுப்புகள் துவங்குவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்:—

கை, கால், உடல் ஊனமுற்றோர் மற்றும் காது கேளாத பேசும் திறனற்றோர் 1000 நபர்கள் பயனடையத்தக்க வகையில் 12 மாதங்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சி;

100 நபர்கள் பயனடையத்தக்க வகையில் ஆறு மாத கணினிப் பயிற்சி;

60 நபர்கள் பயனடையத்தக்க வகையில் தொழில்நுட்பப் பயிற்சி, 12 மாத கால சிறப்புப் படிப்புப் பிரிவு, இவையெல்லாம் உருவாக்குவதற்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

(37) பரிசுச் சீட்டு விற்பனை நிதியிலிருந்து ரூபாய் 4 இலட்சத்து 4 ஆயிரம் செலவில் சிறிய பிரெய்லி அச்சக அறையினை கணினி மயமாக்குவதற்கும் மேல்நிலை உருப்பெருக்கி படம் காட்டும் கருவி அமைக்கவும் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

(38) அரசுத் துறைகளிலுள்ள படிப் பெருக்கி இயக்குபவர், மின் பயனீட்டுக் கருவி அளவீடு படிப்பவர், வரவேற்பாளர், நூலக எழுத்தர், கிடங்குக் காப்பாளர், நேரக் காப்பாளர், தொலைபேசி இயக்குபவர், புத்தகம் கட்டுபவர், நாற்காலி ஒயர் பின்னுபவர், பாட்டு ஆசிரியர், அனுப்புகை எழுத்தர், அறிவிப்பாளர், சுற்றுலா வழிகாட்டி ஆகிய பணியிடங்களை ஊனமுற்றோருக்கென பிரத்யேகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அம்மா அவர்கள் கட்டாயமாக உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(39) ஊனமுற்றோர் நலனுக்கென நடத்தப்படும் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து பெறப்படும் ரூபாய் 10 இலட்சத்து 76 ஆயிரம் செலவில் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் சிறப்புக் காப்பு மையங்கள் அமைக்கப்படும் என்கிற திட்டத்திற்கு அம்மா அவர்கள் ஒப்புதல் தந்துள்ளார்கள்.

(40) 30 கணினிகளை நன்கொடையாகப் பெற்று அனைத்து மாவட்ட மறுவாழ்வு அலுவலகங்களிலும் தகவல் மையத் தொடர்பு ஏற்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் தந்துள்ளார்கள்.

(41) சமூக நலத் துறையின்மூலம் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் ஊராட்சி மன்றங்களின் பங்கு மற்றும் அடிப்படை



2002 ஏப்ரல் 26] [திருமதி பா. வளர்மதி]

மட்டத்தில் பல்வேறு சேவைகளை ஒருங்கிணைப்பதற்கு கையேடு ஒன்றை 24 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் செலவில் வெளியிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் தந்துள்ளார்கள்.

(42) சமூக நலத் துறையின் கட்டடங்களைக் கட்டுவதற்கு ஊராட்சி மன்ற நிறுவனங்கள், கிராம சபைகளிடம் ஒப்படைப்பது சுய உதவிக் குழு உறுப்பினர்களால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் தொழில் நுட்ப வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் மூலம்தான் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அம்மா அவர்கள் ஒப்புதல் தந்துள்ளார்கள்.

பிற்பகல் 2-35

(43) அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலுள்ள சிறப்பு உதவி ஆட்சியர் அலுவலகம், பொதுமக்கள் குறை தீர்க்கும் பிரிவு ஆகியவற்றுக்கு நிகரி வசதியுடன்கூடிய நேரடித் தொடர்பு தொலைபேசி வசதி, கணினி மற்றும் இணையதளம் ஆகிய வசதிகள் அமைக்கப்பட மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் தந்துள்ளார்கள்.

(44) சமூக நலத் துறையின் அனைத்து அளவிலும் மின்னணுத் தொடர்பு மையம் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் தந்துள்ளார்கள்.

(45) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் ஓராண்டுக்கு 25,000 சுய உதவிக் குழுக்கள் என்ற அடிப்படையில் 4 ஆண்டுகளில் 1 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பு நிதி ஆண்டிலேயிருந்து செயல்படுத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். சமூக நலத் துறையின்மூலம் 45 அறிவிப்புகளைச் செய்வதற்கு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டுத் திருக்கோவில்களில் ஒரு வேளை பூஜையாவது நடக்கட்டும் என்று உத்தரவிட்ட நீங்கள் இப்போது அன்னதானத் திட்டத்தை அறிவித்து, அட்சய பாத்திரத்தை ஏந்தி இருக்கிறீர்கள். கோவில் உண்டியலில் பணத்தைக் கொட்டுகிற ஆளைவிட, பசித்த வயிற்றில் பருக்கைகளைப் போடுகிறவன் எவனோ, அவனே மிக உயர்ந்த பக்தன் என்று ஏழைகளின் வயிற்றில் எரிகின்ற நெருப்பை முதன்முதலாய் அணைக்க வந்த முதல் அமைச்சர் நீங்கள். ஆண்டவன் படி அளப்பான்

என்ற காலம் போய், ஆள்வோர் அல்லவா படியளக்க வேண்டுமென்று முதன்முதலாய்ப் படியளந்த முதலமைச்சர் நீங்கள். அம்மா, நீங்கள் அரசியலில் அதிசயம், குருதியில் மலர்ந்த குங்குமத் தாமரை, சந்தையில் ஒலித்த சங்கீதம், ஒரு ரத்த நதிக்கரைக்கு பூ விதைகளோடு போனவர் நீங்கள். எங்கள் உறக்கம் களைய, கூவிய வைகறைச் சேவல் நீங்கள். பொதுவாய் சேவல் கூவினால் பொழுது புலரும். ஆனால் அரசியலில் உங்கள் குரல் ஒலித்தால்தான் பொழுது புலரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் சூரியன் உதிக்காது. உதித்த சூரியனும் அஸ்தமிக்கும். சந்திரன் மலரும். ஆமாம் இராமச்சந்திரனின் புகழ் மலரும் என்று கூறி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை பெண்கள், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர், சமுதாயத்திலே தவறிழைத்த சிறுவர்களையெல்லாம் நல்வழிப்படுத்தக்கூடிய இந்தத் துறைக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கின்ற அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பல்வேறு கருத்துகளைச் சொல்லி, 199 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறீர்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு உங்களுடைய தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டு, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னுமா சந்தேகம் தீரவில்லை?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சரிடம் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தைப்பற்றிக் கொள்கை விளக்கக் குறிப்பிலே எதுவும் சொல்லவில்லை என்று கேட்டிருந்தேன். பொதுவாக இப்பொழுதெல்லாம் 10ஆம் வகுப்பு படித்த பெண்கள், 8ஆம் வகுப்பு படித்த பெண்களெல்லாம் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னால், அவர்கள் வாழ்விலே ஒளியேற்ற வேண்டுமென்று சொன்னால், அந்தத் திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக இந்தத் திட்டத்தைத் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் தொடர்கிறதா, இல்லையா என்று அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.



## 8. மானியக் கோரிக்கைகள் விவாத இறுதியில் வெளியிடும் அறிவிப்புகளை அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்குதல்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அமைச்சரும் துறை மானியம் முடிந்த உடனே ஏராளமான அறிவிப்புகளைக் கொடுக்கிறார்கள். அவற்றையெல்லாம் அச்சிட்டு உறுப்பினர்களுக்குக் கொடுப்பதற்குத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்றால், அந்த ரிப்போர்ட் 7 மாதம் 8 மாதத்திற்குப் பிறகுதான் எங்களுக்கு வருகிறது. என்ன என்ன முடிவு என்று மக்கள் பலர் கேட்கிறார்கள். ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அச்சிட்டுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மானியக் கோரிக்கை மீதான விவாதம் முடிகின்ற நேரத்தில் அந்தந்தத் துறை அமைச்சர் பதிலளிக்கும்போது இங்கே இந்த அவையில் தெரிவிக்கின்ற அறிவிப்புக்கள் எல்லாம் அந்த மானியக் கோரிக்கை மீதான விவாதம் முடிந்துபிறகு அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒவ்வொரு மானியத்தின் மீதும் மக்கள் சாசனம் என்கிற ஒரு புத்தகம் போட்டு சிற்றூராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இது வரவில்லை. இன்றைக்கு வேண்டுமானால் வந்திருக்கலாம். இதற்கு முன்பு எந்த மானியத்திலும் வரவில்லை என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது, இந்த 2 பெண் குழந்தைகளைப் பெற்றவர்களுக்கு அளிக்கக்கூடிய சலுகைகள்; மனைவியோ அல்லது கணவனோ குடும்பக் கட்டுப்பாடு செய்த பின்னாலே, ஒரு பெண் குழந்தை இறந்துவிட்டால், இன்னொரு பெண் குழந்தைக்கு அந்தச் சலுகை இல்லை என்று இந்த சமூக நலத் துறையாலே மறுக்கப்படுகிறது. அப்படி 2 பெண் குழந்தைகள் பிறந்து, தகப்பனோ அல்லது தாயோ குடும்பக் கட்டுப்பாடு செய்து இருந்தால், அவர்களுக்கும் இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 2-40*

## 6. மானியக் கோரிக்கைகள், 2002–2003, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

### கோரிக்கை எண் 43–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** நான் கேட்டதற்கு பதில் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உங்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும் என்று அர்த்தம்.

**திரு. சி. ஞானசேகரன்:** அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் தொடருமா, தொடராதா என்று பொதுவாகச் சொல்லவில்லை. எல்லோரும் அப்ளிகேஷனிலே கையெழுத்துப் போட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகை வழங்கக்கூடிய நிலையில் இதிலே சில முதியோர் வயதான நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதியோர் என்றால் வயதானவர்கள்தானே?

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, அவர்கள் வயதான நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகள் எல்லாம் அவர்களை விட்டுவிட்டு வேறு மாநிலங்களுக்கு அல்லது வேறு மாவட்டங்களுக்குத் தொழில் செய்வதற்குச் சென்று விடுகிறார்கள். அந்த நிலையிலே அவர்களைக் கருணையோடு பரிசீலித்து—குழந்தைகள் இருந்தாலும்கூட, 18 வயது நிரம்பி இருந்தாலும்கூட, இந்தச் சூழ்நிலையைக் கருத்திலேகொண்டு அவர்களுக்கும் முதியோர் உதவித் தொகை—வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு, மானியக் கோரிக்கை எண் 43, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.



திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்கரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு.கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை. திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 26

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ. இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.



2002 ஏப்ரல் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை. திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை. திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.411,11,50,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (29-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

147. மிதிவண்டி (சைக்கிள்) டியூபுகளில் (Tubes) பயன்படுத்துகின்ற ஒட்டு பசையிலான ரப்பர் துண்டு தொடர்பாக 1990-91 முதல் 1994-95 வரையிலான கால அளவில் நடைபெற்ற விற்பனை மீது "திருவாளர்கள் யூனி பாட்ச் ரப்பர் நிறுவனம் (Uni Patch Rubber)" செலுத்தத்தக்க வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி வகையில் வேறுபாட்டுத் தொகையான மூன்று சதவீதம் மற்றும் எட்டு சதவீதத்திற்கும் இடையே வரக்கூடிய வேறுபாட்டுத் தொகையான மொத்தம் ரூ.3,31,377/-ஐ 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 3-1-2001 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 2-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

148. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிடப்பட்ட பொருட்கள் உள்ளூர் பகுதிகளுக்குள் கொண்டு வரப்படுகையில், அவற்றிற்குக் குறிப்பிடப்பட்டுள்ள வரி வீதங்களில் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருட்கள் கொண்டு வருவதற்கான நுழைவு வரிச் சட்டத்தின்கீழ் வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 30-11-2001 ஆம் நாளிட்ட 114 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருட்கள் கொண்டு வருவதற்கான நுழைவு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

173. மதிப்பீட்டுக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2001-2002)

174. மதிப்பீட்டுக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2001-2002)

175. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து எட்டாவது அறிக்கை. (2001-2002)

[2002 ஏப்ரல் 26

176. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

177. பொதுக் கணக்குக் குழுவின் எழுபதாவது அறிக்கை. (2001-2002)

178. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

179. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து இரண்டாவது அறிக்கை. (2001-2002)

180. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து மூன்றாவது அறிக்கை. (2001-2002)

181. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து நான்காவது அறிக்கை. (2001-2002)

182. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

183. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

184. மானியக் கோரிக்கை எண் 43 - சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

185. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் செயல்முறைத் திட்டம், 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

186. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் "மக்கள் சாசனம்" என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

187. மானியக் கோரிக்கை எண் 43 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.



## இணைப்பு

*(92 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## கோரிக்கை எண் 43

## சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

### அத்தியாயம் 1

**முன்னுரை**

கோரிக்கை எண் 43-ன்கீழ் 2002-2003-ம் ஆண்டிற்கு ரூ. 4,11,11,50,000 நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

ஒரு நாட்டின் உண்மையான வளம் என்பது அதன் மனித வளமே. மனித வளம் மேம்பாட்டால் அந்த நாட்டின் பொருளாதாரமும் மேம்பாடு அடையும். மனித வள மேம்பாடும் சமுதாய மேம்பாடும் அந்நாட்டின் பெண்களைப் பொறுத்தே அமையும். பெண்களே வருங்கால சமுதாயத்திற்கு வளம் மிக்க தூண்களாகத் திகழ்கிறார்கள்.

*"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*
*நிலத்தில் யார்க்குமஞ் சாத நெறிகளும்*
*திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவது இல்லையாம்"*

என்று மகாகவி பாரதியார் பாடியுள்ளார். கவிஞரின் கற்பனைக்கு எடுத்துக்காட்டாய் திகழ்ந்து கொண்டிருக்கும் புரட்சித் தலைவியின் இவ்வரசு பெண்ணுரிமையையும், பெண்டிர் நலத்தையும் பேச்சளவில், ஏட்டளவில் மட்டுமின்றி, நடைமுறையிலும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. பெண்களில் அன்பும் ஆதரவும் அதிகம் தேவைப்படுபவர்கள் கருவுற்ற மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் ஏழைப் பெண்கள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள் ஆவர். இவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும்,

[2002 ஏப்ரல் 26

பாதுகாப்பிற்கும் திட்டமிட்டு அவற்றை இவ்வரசு செவ்வனே செயல்படுத்தி வருகிறது. மகளிர் தமது வாழ்வில் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றம் அடைய, சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் உரிமையை நிலை நாட்டிட, அதிகாரப் பகிர்வினை அதிக அளவில் பெற்றிட இவ்வரசு அரிய பல திட்டங்களை இத்துறையின் மூலமாக செயல்படுத்தி வருகிறது.

வருங்கால சமுதாயத்தின் வளம்மிக்க தூண்களாகத் திகழ வேண்டியவர்கள் குழந்தைகள். சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரின் அன்பிற்கும், ஆதரவிற்கும் ஆளாக வேண்டியவர்கள் ஏலாமையுற்றோர், அவர்களுக்கு வாழ்வில் ஒரு பிடிப்பினை ஏற்படுத்திட பல சிறந்த திட்டங்களை இவ்வரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. வயோதிகம் என்பது தள்ளிப்போட முடியாத பரிணாம வளர்ச்சியாகும். முதியோர்களுக்கு அன்புக்கரம் நீட்டும் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மகளிர், குழந்தைகள், வளர் இளம் பெண்கள், ஆதரவற்றோர், ஏலாமையுற்றோர், முதியோர் என அனைத்துத் தரப்பினரின் நலனையும் பேணும் வண்ணம் சிறந்ததொரு திட்டமாக, நாட்டிற்கே முன்னோடித் திட்டமாக, "வாழ்நாள் முழுமைக்கும் சத்துணவுப் பாதுகாப்புத் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற பாரதியார் அவர்களின் கூற்றிற்கு இணங்க, இன்று மகளிர், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நல மேம்பாட்டிற்காகவும் ஏழை எளிய மக்கள் மற்றும் முதியோர் துயர் துடைக்கவும் எண்ணற்ற பணிகள் பல்வேறு துறைகள் மற்றும் திட்டங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்கள் கீழ்க்காணும் பரந்த இனங்களின்கீழ் அடங்கும்:

1. மகளிருக்கான பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள்
2. குழந்தைகள் நலத் திட்டங்கள்
3. சத்துணவுத் திட்டங்கள்
4. ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டங்கள்
5. இடர்பாடான சூழ்நிலையில் உள்ள மகளிர் மற்றும் சிறார்களுக்கான திட்டங்கள்
6. முதியோர்க்கான திட்டங்கள்



2002 ஏப்ரல் 26]

இவற்றைச் செயல்படுத்தும் இயக்ககங்கள்/நிறுவனங்களின் நோக்கங்கள், ஆற்றும் பணிகள், பயனாளிகள் விவரம் மற்றும் 2002-2003 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரங்கள் ஆகியவை பற்றி பல்வேறு தலைப்புகளின்கீழ் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 2

### மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

2.1. குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களது நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவ்வரசு, அவர்களின் உடல் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. பெண் குழந்தைகளின் சுகாதாரத்தை பேணிக் காத்திடவும், பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கிடவும், பாலியல் வேறுபாட்டினைக் குறைக்கவும், வளர் இளம் பெண்களின் நிலையினை மேம்படுத்தவும், பெண்களின் ஆரோக்கியமான உடல்நலத்தை பேணுவதற்கும் அரசு கொள்கைகளை உருவாக்கி, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

### 2.2. பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்

குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஊக்கமளித்து, பெண் சிசுக் கொலையை ஒழிப்பதற்காகவும், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பி பெற்றுக் கொள்ளும் போக்கை கட்டுப்படுத்துவதற்காகவும், *"புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்"* என்னும் புரட்சிகரமானதொரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார்.

தற்பொழுது இத்திட்டம் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு அதிக நிதிப்பயன் கிட்டும் வகையில் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரே ஒரு பெண் குழந்தை மட்டுமே இருந்து வேறு குழந்தைகள் எவரும் இல்லாத குடும்பங்களில் பெற்றோர் எவரேனும் ஒருவர் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டு 35 வயதிற்கு குறைவாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)-க்கும் குறைவாகவும் இருந்தால், அரசு அக்குழந்தையின் பெயரில் தமிழ்நாடு மின்வள நிதி நிறுவனத்தில் தொடக்க வைப்பீடாக ரூ. 22,200 செலுத்துகிறது. வைப்புத் தொகையிடப்பட்ட 5 ஆம் ஆண்டின்

இறுதியிலிருந்து 20ஆம் ஆண்டு முடியும் வரை ஊக்கத் தொகையாக மாதந்தோறும் ரூ.150 மட்டும் பெண் குழந்தையின் கல்விக்காக வழங்கப்படும். எனினும், முதிர்வுத் தொகையினை 10ஆம் வகுப்பு படித்து பொதுத் தேர்வினை எழுதியிருந்தால் அப்பெண் குழந்தைக்கு வழங்கப்படும்.

வைப்பு நிதி 20 ஆண்டுகள் முடிவுற்ற பின், திரள் வைப்பு நிதியில் உள்ளபடியே சேர்ந்த மொத்த தொகையினை அப்பெண் குழந்தை பெறுவார்.

இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருந்து ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில் பெற்றோரில் எவரேனும் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்டு, 35 வயதிற்கு குறைவாக இருந்து, குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 12,000 (ரூபாய் பன்னிரண்டாயிரம் மட்டும்)-க்கும் குறைவாகவும் இருந்தால், அரசு அப்பெண் குழந்தைகள் ஒவ்வொன்றின் பெயரிலும் தமிழ்நாடு மின்வள நிதி நிறுவனத்தில் ரூ. 15,200-ஐ தொடக்க வைப்பீடாக செலுத்தும். வைப்புத் தொகையிடப்பட்ட 5ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து 20ஆம் ஆண்டு முடியும் வரை ஊக்கத் தொகையாக மாதந்தோறும் ரூ. 150 மட்டும் பெண் குழந்தையின் கல்விக்காக வழங்கப்படும். முதிர்வுத் தொகையினை 10ஆம் வகுப்பு படித்து பொதுத் தேர்வு எழுதியிருந்தால், அப்பெண் குழந்தைக்கு வழங்கப்படும்.

வைப்புத் தொகை 20 ஆண்டுகள் முடிவுறுவதற்கு முன்பாக அப்பெண் குழந்தை 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை எழுதாமல் இருந்தால், அக்குழந்தை முதிர்வுத் தொகையினை பெற தகுதியற்றவராகிறார். அத்தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்படும்.

பெண் குழந்தை 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதியிருந்தால், வைப்பு நிதி 20 ஆண்டுகள் முடிவுற்ற பின், திரள் வைப்பு நிதியில் உள்ளபடியே சேர்ந்த மொத்த தொகையை பெறுவார்.

2002-2003ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 1270.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.3. தொட்டில் குழந்தை திட்டம்

தமிழ்நாட்டின் சில பகுதிகளில் கொடுஞ் செயலாக நடைபெற்று வரும் பெண் சிசுவதையைத் தடுக்கும் நோக்கத்துடன் 1992 ஆம் ஆண்டில்



தமிழக அரசால் "தொட்டில் குழந்தை திட்டம்" எனும் தன்னிகரில்லாத திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்படி சமூகச் சூழ்நிலை காரணங்களினால் பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் பெண் குழந்தைகளைப் பாதுகாத்து பராமரிக்கும் வண்ணம் மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், குழந்தைகள் இல்லம் மற்றும் காப்பகங்கள் ஆகிய இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டன. சேலத்தில் ஒரு வரவேற்பு மையமும் தொடங்கப்பட்டது. தற்பொழுது இத்திட்டம் புத்துயிர் அளிக்கப்பட்டு, மதுரை தேனி, திண்டுக்கல், மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் ரூ. 12.96 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளுடன்கூடிய வரவேற்பு மையங்கள் தொடங்க அரசு அனுமதி அளித்து அதன்படி தொடங்கப்பட்டுள்ளன. மேலும், சேலத்தில் தற்பொழுது உள்ள மையம் மேம்படுத்தப்பட்டுள்ளது. பாதிப்பு ஏற்படக்கூடிய மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களில் பெண் சிசுக்களை பெற அம்மையங்களின் வசதிகள் மேம்படுத்தப்படும். மாவட்ட சமூக நல அலுவலகங்களிலும் ஆரம்ப சுகாதார/துணை ஆரம்ப சுகாதார மையங்களிலும் மொத்தம் 188 இடங்களில் தொட்டில்கள் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொட்டில் மையங்களில் பெறப்படும் குழந்தைகள் வரவேற்பு மையங்களுக்கு அனுப்பப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்படும். பெண் சிசுவதை செய்யும் கொடுஞ்செயலுக்கு எதிராக மாநில அரசு பரந்த அளவில் பிரசாரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2002-2003ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 11.19 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.4. மகளிர் மற்றும் குழந்தைகளின் நலனுக்கான 18 அம்சத் திட்டம்

அரசு குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டினை 'முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ள இவ்வரசு 1993-ம் ஆண்டு "டாக்டர் ஜெ ஜெயலலிதா 15 அம்ச குழந்தை நலத் திட்டத்தினை" ஆரம்பித்து செயலாக்கியது. இத்திட்டத்தின் தொடர் நடவடிக்கையாக 2001-2002 ஆம் ஆண்டு திட்டம் மேம்படுத்தப்பட்டு "தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்" என மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 2010ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டும் 2003ஆம் ஆண்டு மற்றும் 2006 ஆம்

ஆண்டுக்கென இடைக்கால இலக்குகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. 18 அம்சத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு மாநில அளவிலான குழு, துறைத் தலைவர்கள் அளவிலான குழு மற்றும் மாவட்ட அளவிலான குழு என குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

## 2.5. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

### உணவு பாதுகாப்பு

குழந்தைகள் மற்றும் கருவுற்ற தாய்மார்களுக்கு மேம்படுத்தப்பட்ட சத்துணவு வழங்குவதற்காக பாராட்டத்தக்க நடவடிக்கைகள் பலவற்றை எடுத்ததன் மூலம், தமிழ்நாடு நாட்டிலேயே முன்னணியில் உள்ளது. இந்நிலையைத் தொடர்ந்து பேணி, வறுமைக் கோட்டுக்குக்கீழே உள்ளவர்களில், குறிப்பாக கருவுற்ற தாய்மார்கள், சிசுக்கள், முதியோர்களின் சத்துணவுத் தேவைகளில் சிறப்பு கவனம் செலுத்தும் வகையில் "வாழ்நாள் முழுமைக்கும் சத்துணவுப் பாதுகாப்புத் திட்டம்" என்ற சீரிய திட்டத்தை வகுத்து நாட்டிலேயே முதல் மாநிலம் தமிழகம் என்ற நிலையை உருவாக்குவதே அரசின் குறிக்கோளாகும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 1-7-1982 முதல் ஊரகப் பகுதியிலுள்ள குழந்தைகள் நல மையங்களில் 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட முன் பருவக்கல்வி பயிலும் குழந்தைகளுக்கும் 5 வயது முதல் 9 வயது முடிய உள்ள ஆரம்பப் பள்ளி குழந்தைகளுக்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 15-9-1982 முதல் இத்திட்டம் நகர்ப்பகுதிகளில் அமல்படுத்தப்பட்டது. மேலும் இத்திட்டம் 15-9-1984 முதல் 10 வயது முதல் 15 வயது வரையிலான பள்ளி மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 15-1-1983 முதல் ஓய்வூதியம் பெறும் முதியோர்களும் 6-12-1995 முதல் கருவுற்ற தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர்.



## நிதி ஒதுக்கீடு 2002–2003

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | துறையின் பெயர் | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் | ஒ.கு.வ.தி.* | உலக வங்கி உதவிபெறும் ஒ.கு.வ.தி.-3** | உதிஷா |
|---|---|---|---|---|---|
| 1 | சமூக நல ஆணையரகம் | 6004.38 | 8187.95 | – | – |
| 2 | உலக வங்கி உதவிபெறும் ஒ.கு.வ.தி.-3 | 700.00 | 14631.07 | 932.46 | 220.00 |
| 3 | ஊரக வளர்ச்சி இயக்குநரகம் | 16743.94 | – | – | – |
| 4 | நகராட்சி நிர்வாக ஆணையரகம் | 1019.20 | – | – | – |
| 5 | நுகர்பொருள் ஆணையரகம் | 11933.03 | – | – | – |
| | மொத்தம் | 36400.55 | 22819.02 | 932.46 | 220.00 |

*நிதி ஒதுக்கீடு மைய அரசு மற்றும் மாநில அரசு அளிக்கிறது
**நிதி ஒதுக்கீடு உலக வங்கியிடம் பெறப்படுகிறது.

[2002 ஏப்ரல் 26

ஒவ்வொரு திட்டத்தின்கீழும் உள்ள சத்துணவு மையங்களின் எண்ணிக்கை மற்றும் பயனடைந்தோர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

**1. குழந்தைகள் நல மையங்கள்**

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை — குழந்தைகள் — 6 முதல் 24 மாதம் வரை | 2 வயது முதல் 5 வயது வரை | கருவுற்ற தாய்மார்கள் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோர். | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 10420 (அங்கன் வாடி மையங்கள்) | 145379 | 294671 | 104586 (தாய்மார்கள்) | 544636 |
| 2 | உலக வங்கி உதவி பெறும் ஒகுவப-3 திட்டம் | 19500 (சமுதாய ஊட்ட சத்து மையங்கள் மற்றும் குழந்தைகள் நல மையங்கள்) | 237041 | 550206 | 56465 (மு.உ.தொ. பெறுவோர்) 236869 (தாய்மார்கள்) | 1080581 |
| 3. | புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகராட்சி பகுதி) | 718 குழந்தைகள் நல மையங்கள் | - | 30096 | 3105 (மு.உ.தொ. பெறுவோர்) | 33201 |
| | **மொத்தம்** | 30638 | 382420 | 874973 | 401025 | 1658418 |



2002 ஏப்ரல் 26]

**2. பள்ளி சத்துணவு மையங்கள்**

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (கிராமப்புறம்) | 38925 | 6015252 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகர்ப்புறம்) | 2087 | 476410 |
| | **மொத்தம்** | 41012 | 6491662 |

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது பொருளாதார நிலையில் பின்தங்கிய குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்கி உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும், மனம் மற்றும் உடல் ரீதியான திறனை வளர்க்கவும், பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்து இடையில் பள்ளி செல்லா குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதும் ஆகும்.

நகராட்சிகளில் செயல்படும் 718 குழந்தைகள் நல மையங்கள் நீங்கலாக அனைத்து குழந்தை நல மையங்களும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்-3 திட்டத்தின் கீழ் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

சத்துணவு மையத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படுகிறது. நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு 23 பைசா வீதம் காய்கறி (11.5 பைசா) தாளிதம் உப்பு உட்பட (4.5 பைசா) எரிபொருள் (7 பைசா) மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

அரசு அறிமுகம் செய்துள்ள புதிய திட்டத்தின் மூலம் புரதச் சத்து மிகுந்ததாக ஒரு பயனாளிக்கு வாரத்தில் ஏதேனும் 3 நாட்கள் முறையே, ஒரு நாள் 20 கிராம் உருளைக்கிழங்கு, மற்றொரு நாள் 20 கிராம் முழு கருப்பு கொண்டைக் கடலை மற்றும் பிறிதொரு நாள் 20 கிராம் முழு பச்சைப் பயறு ஆகியவற்றை சமைத்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் 18 மாவட்டங்களில் 1-11-2001 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

[2002 ஏப்ரல் 26

எஞ்சியுள்ள மாவட்டங்களில் இத்திட்டம் 1-4-2002 முதல் அமல் படுத்தபபட்டு வருகிறது. உருளைக்கிழங்கிற்காக ஒரு பயனாளிக்கு 16 பைசா ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. முழு கருப்புக் கொண்டைக் கடலை மற்றும் முழு பச்சைப் பயறு ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. இப்புதிய திட்டத்தின் மூலம் ஒரு பயனாளிக்கு சத்துணவுடன் 8.54 கிராம் புரதச் சத்தும் 158.2 கலோரி சக்தியும் கூடுதலாக ஒவ்வொரு வாரமும் கிடைக்கிறது.

நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் உணவு விகிதம் பின்வருமாறு:

| வ. எண் | உணவுப் பொருட்கள் | வயது (ஆண்டுகள்) | | | | கருவுற்ற தாய்மார்கள்/ முதியோர் ஓய்வூதியம் பெறுவோர் |
|---|---|---|---|---|---|---|
| | | 2-5 | 5-9 1 முதல் 5 ஆம் வகுப்பு முடிய | 10-15 6 முதல் 8 ஆம் வகுப்பு முடிய | 9 மற்றும் 10 ஆம் வகுப்பு முடிய | |
| | | அளவு கிராமில் | | | | |
| 1. | அரிசி | 80 | 100 | 100 | 120 | 200 |
| 2. | பருப்பு | 10 | 15 | 15 | 15 | 15 |
| 3. | எண்ணெய் | 2 | 1 | 1 | 1 | 1 |
| 4. | உப்பு | 1.9 | 1.9 | 1.9 | 1.9 | 1.9 |
| 5. | காய்கறி. தாளிதம் உட்பட எரிபொருள். | 23 பை | 23 பை | 23 பை | 23 பை | 23 பை |

இணை உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் சத்துமாவு விகிதம் பின்வருமாறு:



2002 ஏப்ரல் 26]

| ஊட்டச்சத்து நிலை | சத்துமாவு அளவு | | |
|---|---|---|---|
| | குழந்தைகள் (6-24 மாதங்கள்) | குழந்தைகள் (25-36 மாதங்கள்) | கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் |
| சாதாரண நிலை | 50 கிராம் | 100 கிராம் | 100 கிராம் |
| நிலை 1 மற்றும் 2 | 50 கிராம் | 100 கிராம் | |
| நிலை 3 மற்றும் 4 | 100 கிராம் | 150 கிராம் | |

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை சீர்படுத்தி அதன் தரத்தை மேம்படுத்தி செவ்வனே வடிவமைத்துத் திருத்தியமைக்க அரசு முடிவெடுத்துள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தை மேம்படுத்தும் வகையில், அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கடந்த ஆண்டில் 1102 சத்துணவு மையங்களை ரூ. 90.07 லட்சம் செலவில் பழுது பார்க்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிதியாண்டில் சத்துணவு மையங்களைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 1210.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சத்துணவு மையங்களுக்குத் தேவையான புதிய அலுமினியப் பாத்திரங்கள் வாங்கும் பொருட்டு ரூ. 1 கோடி 2002-2003 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.8. ஆரம்பப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு தேசிய திட்டத்தின் கீழ் இலவச அரிசி வழங்குதல்

இந்திய அரசு 15-8-1995 முதல் மனித வள மேம்பாடு மற்றும் கல்வித் துறையின் மூலம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆரம்பப் பள்ளி குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 100 கிராம் வீதம் மதிய உணவு வழங்குவதற்காக இலவச அரிசி வருடத்தில் 10 மாதத்திற்கு அளித்து வருகிறது.

தமிழகத்தில் ஏற்கெனவே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் உள்ளமைப்பு வசதிகள் உள்ளதால் இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி சமைத்து குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

[2002 ஏப்ரல் 26

## 2.7. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் 1975 ஆம் ஆண்டு கீழ்க்குறிப்பிட்டுள்ள உயரிய நோக்கங்களுக்காக தொடங்கப்பட்டது:

1. குழந்தை பிறப்பு முதல் 6 வயது வரை ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
2. குழந்தைகளின் மனவளர்ச்சி, உடல் வளர்ச்சி, சமுதாய உணர்வு ஆகியவற்றிற்கு அடித்தளம் அமைத்தல்.
3. குழந்தை இறப்பு, நோய்வாய்ப்படுதல், ஊட்டச் சத்து பற்றாக்குறை மற்றும் குழந்தைகள் பள்ளியில் இருந்து இடையில் விலகுதல் போன்றவற்றை குறைத்தல்.
4. குழந்தைகள் முன்னேற்றத்திற்காக செயல்படுகின்ற துறைகளுடன் இணைந்து திட்டமிடுதல், செயல்படுத்துதல்.
5. குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்துத் தேவைகளைப் பராமரிக்க ஏதுவாக ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி மூலம் தாய்மார்கள் அறியச் செய்தல்.

தமிழ்நாட்டில் சென்னை, தளி மற்றும் நிலக்கோட்டையில் சோதனை முறையில் 3 திட்டங்கள் தொடங்கப்பட்டு தற்பொழுது 113 திட்டங்களாக இது விரிவாக்கப்பட்டுள்ளது. அதில் 67 திட்டங்கள் கிராமப்புறங்களிலும் 44 திட்டங்கள் நகர்ப்புறங்களிலும் 2 திட்டங்கள் மலைவாழ் பகுதியிலும் உள்ளன.

இத்திட்டம் 10420 மையங்களைக் கொண்டு 113 திட்டப் பகுதிகளில் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய பயனாளிகள் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 1[illegible] முதல் 45 வயதிற்குட்பட்ட மகளிரும் ஆவர்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் குழந்தைகளின் வளர்ச்சி நிலையினைக் கண்காணித்து இணை உண[illegible] வழங்குவது, நோய்த் தடுப்பு சுகாதாரப் பணிகள், மருத்துவப் பரிந்துரைகள், ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, முறைசாரா முன்பருவக் கல்வி ஆகிய பணிகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகின்றன.



2002 ஏப்ரல் 26]

இந்த வழக்கமான பணிகளுடன், வளர் இளம் பெ[illegible]கள் மேம்பாட்டிற்கான பணிகள், சமுதாய பங்கேற்பினை ஊக்குவிக்கும் பணிகள், சுய உதவி குழுக்கள் மூலம் சிறு கடனுதவி அளித்து பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டமும் ஒரு இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு நகர்ப்புறத் திட்டமும் ஒரு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரின் தலைமையில் ஒரு மருத்துவ அலுவலர், நான்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் 4 துணை மருத்துவச் செவிலியர்கள் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமம் மற்றும் மலைப்புற திட்டப் பகுதிகளில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலருடன் 4 மேற்பார்வையாளர்களும், ஒரு நடமாடும் குழு பயிற்றுநரும் உள்ளனர். இப்பயிற்றுநர் திட்டப் பகுதிகளில் பயிற்சிப் பணிகளையும், மற்றும் தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார். இத்திட்டப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவர்கள் மற்றும் பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் மருத்துவ பணிகளை மேற்கொள்கின்றனர். மத்திய அரசின் அளவுகோலுக்கிணங்க ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் ஒரு அங்கன்வாடிப் பணியாளரும், ஒரு உதவியாளரும் உள்ளனர். ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் சுமார் 60 முதல் 130 வரையிலான அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அங்கன்வாடி மையமும் 1000 முதல் 1500 வரை மக்கட்தொகையைக் கொண்டது.

இத்திட்டம் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படும் திட்டமாகும். மாநில திட்ட அலுவலகம், மாவட்டம் மற்றும் திட்ட அளவில் பணிபுரியும் பணியாளர்கள் ஊதியம் உள்பட அனைத்து செலவினங்களும் (இணை உணவு செலவினம் நீங்கலாக) மத்திய அரசு நிதியின் மூலம் ஈடுகட்டப்படுகிறது.

இத்திட்டத்தை மேம்படுத்துவதற்காக கீழ்க்குறிப்பிட்டுள்ள பொருட்கள் வழங்கப்படுகின்றன:

* அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்குதல்.
* அங்கன்வாடி மையங்களுக்கு முன்பருவக் கல்விக்குத் தேவையான பொருட்கள் வழங்குதல்.

[2002 ஏப்ரல் 26

வளர் இளம் பெண்களுக்கான திட்டத்தின்கீழ் இரத்த சோகையினைக் கட்டுப்படுத்த இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் சுகாதாரத் துறையின் மூலம் வழங்குதல், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, சட்ட உரிமை, வீட்டை பராமரித்தல், குழந்தை பராமரிப்பில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த பயிற்சி அளித்தல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

சமுதாயப் பங்கேற்பினை மேம்படுத்த, தொடர்பு முகாம்கள் கிராமம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுவதுடன் குழந்தைகள் தின விழா, ஊட்டச்சத்து வார விழா போன்றவை ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் பணியாற்றும் அடிப்படை ஊழியர்களின் செயல்திறனை ஊக்குவிக்க, அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாநில அளவில் 26 விருதுகளும் மற்றும் தேசிய அளவில் ஒரு விருதும் வழங்கப்படுகின்றன.

இத்திட்ட செயலாக்கத்திற்காக 2002-2003 ஆம் நிதியாண்டில் ரூ. 5687.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.8. கிஷோரி சக்தி யோஜனா – வளர் இளம் பெண்களுக்கான திட்டம்**

வளர் இளம் பெண்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி முகாம் திட்டம் 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து கிஷோரி சக்தி யோஜனா என்ற புதிய திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் புதுக்கோட்டை, தர்மபுரி, மதுரை, விழுப்புரம், தஞ்சாவூர், நீலகிரி, சேலம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 37 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக ரூ. 40.145 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.9. பாரதப் பிரதமரின் கிராமோதய யோஜனா திட்டம்.**

பாரதப் பிரதமரின் கிராமோதய யோஜனா திட்டத்தின் மூலம் 6 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரை உள்ள குழந்தைகளுக்கு இணை உணவு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்திலுள்ள 10420 அங்கன்வாடி மையங்களிலும், உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்-3 திட்டத்தின்கீழ் உள்ள 24 மாவட்டங்களில் 318 குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் உள்ள 19500 அங்கன்வாடி மையங்களிலும் மற்றும்



2002 ஏப்ரல் 26]

செயல்படுத்தப்படாத, சென்றடைய முடியாத குக்கிராமப் பகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்திற்கு 2002-2003 ஆம் நிதி ஆண்டிற்காக ரூ. 2500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3 ஆவது திட்டம்**

**2.10. முன்னுரை**

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் ஊட்டச் சத்து திட்டங்களுக்கு உலக வங்கி நிதி உதவி அளித்து வருகிறது. இதில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் முக்கியமான திட்டமாகும். தமிழகத்தில் 24 மாவட்டங்களில் உள்ள 318 வட்டாரங்களில் நடைபெற்று வந்த இத்திட்டம் 31-12-1997-ல் முடிவடைந்தது.

அதனைத் தொடர்ந்து இத்திட்டம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் அடிப்படையில் 1-1-1998 முதல் அதே வட்டாரங்களில் தொடர்ந்து சிறு மாறுதல்களுடன் செயல்பட மைய அரசு அனுமதி அளித்தது. தமிழக அரசு ஆணை எண் 142, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 29-7-1999-ன்படி இது உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மூன்றாவது திட்டமாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம்-II செயல்பட்டு வந்த 24 மாவட்டங்களைச் சார்ந்த 318 ஊரக வட்டாரங்களில் 19500 ஊட்டச் சத்து மையங்களில் 1998-99 முதல் 2003-2004 வரை ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்த அனுமதியளித்துள்ளது.

**குறிக்கோள்கள்:**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம்-II-ல் அடைந்த பயன்களைத் தொகுத்து தேவை ஏற்படும் புதிய பகுதிகளின்மீது தனிக்கவனம் செலுத்தும் நோக்கத்தோடு, உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3 ஆவது திட்டத்தின் குறிக்கோள்கள் வகுக்கப்பட்டுள்ளன. முக்கியக் குறிக்கோள்கள் வருமாறு:-

* 0-6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச் சத்து, சுகாதாரம், மன மற்றும் சமூக வளர்ச்சியினை மேம்படுத்தி குறிப்பாக 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச் சத்து குறைபாட்டை தடுத்து, குழந்தை பராமரிப்புப் பழக்கத்தினை குடும்ப அளவில் மேம்படுத்துதல்.
* பெண்களிடையே குறிப்பாக கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச் சத்து மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்.
* குடும்பத்தின் ஊட்டச் சத்து, சுகாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமாக தேவையான பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை மேலோங்கச் செய்வது அதன் மூலம் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்களின் தன்னுரிமை மேம்பாட்டினை உயர்த்துதல்.

**திட்டத்தின் பயனாளிகள்**

* 0-3 வயது குழந்தைகள்
* 3-6 வயது குழந்தைகள்
* கர்ப்பிணித் தாய்மார்கள்
* பாலூட்டும் தாய்மார்கள்
* வளர் இளம் பெண்கள்
* சமுதாயக் குழுக்கள்/சமுதாய தலைவர்கள்

**அங்கன்வாடி மையத்தில் அளிக்கப்படும் திட்டப் பணிகள்**

* எடை எடுத்து வளர்ச்சி நிலையை உயர்த்துதல்
* தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இணை உணவு அளித்தல்
* குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி முன்பருவக் கல்வி அளித்தல்
* ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல்
* சுகாதாரப் பணியாளர்கள் மூலம் (கிராம நல செவிலியர்/ மருத்துவ அலுவலர்) சுகாதாரப் பணிகள் அளிப்பது
* மேல்மருத்துவ சிகிச்சைக்காக பரிந்துரைத்தல்



**திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள்**

* அங்கன்வாடி மையங்கள் மூலமாக ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பணிகள் ஒட்டுமொத்தமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு அளித்தல் பொருட்டு, இத்திட்டத்தைச் சார்ந்த பிற துறைகளுடன் சேர்ந்து செயல்படுவது.
* ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஒருங்கிணைந்து திட்டப் பணிகளை செயல்படுத்துதல்.
* சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து மேற்பார்வையாளர்கள் ஒருங்கிணைந்து இத்திட்ட செயல்பாடுகளைக் கண்காணித்தல்.
* வட்டாரம் மற்றும் மாவட்ட அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்களில் திட்டம் பற்றி ஒருங்கிணைந்து ஆய்வு செய்தல்.
* பயிற்சி மற்றும் தகவல் தொடர்புப் பிரிவுகளின் உறுதுணையுடன் திட்டம் செயலாக்கம்.

## 2002–2003-க்கான திட்டங்கள்

**தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைவற்ற மாநிலமாக மாற்றுதல்**

அங்கன்வாடி மையங்களின் மூலம் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி தமிழ்நாட்டை ஊட்டச் சத்து குறைவற்ற மாநிலமாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வங்கன்வாடி மையங்கள் மூலம் சிறார்கள், வளர் இளம் பெண்கள், மகளிர் மற்றும் குடும்பத்தினர் பயன்பெற முடியும். மாநிலம் முழுவதும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு முகாம்களை நடத்தி மக்கள் இயக்கத்தின் மூலம் ஊட்டச் சத்துக் குறைவினை அடியோடு போக்கலாம். மைய அரசு, உலக வங்கி உதவி நிதி ஆதார நிறுவனங்களால் செயல்படும் திட்டங்களை ஒருங்கிணைத்து குறைந்த செலவின உத்திகளைப் பயன்படுத்தி திட்டம் ஒன்று வரையப்பட்டு வருகின்றது.

திட்டம் செயல்படுத்தப்படும் வழிமுறைகளில் ஒரு முக்கிய மாற்றத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாட்டு நிலையைக் குறைப்பதற்குப் பதிலாக ஊட்டச் சத்துக் குறைபாட்டை முற்றிலும் தடுப்பதாகும். முக்கியமாக வளர் இளம் பெண்களின் ஊட்டச் சத்து மற்றும் சுகாதார நிலையில்

[2002 ஏப்ரல் 26

நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தி, இதன் மூலம் அவர்கள் திருமணமாகி குழந்தை பெறும் நிலை வரும்போது சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து குறைபாடானது தாய் சேய்க்கு ஏற்படா வண்ணம் தடுக்கப்படுகிறது.

பல்வேறு துறைகளின் மூலம் தனித்தனியாக அளிக்கப்படும் ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பணிகளினால் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம் காண முடியாது என்ற காரணத்தை மனதில் கொண்டு புதிய வழிமுறையாக ஒரே மாதியான ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பணிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்தப்பட்ட சுகாதார மற்றும் ஊட்டச் சத்துப் பணிகளாக அளிக்கப்படுகிறது.

* குழந்தைகளிடையே காணப்படும் குறைபாடுகளை ஆரம்ப காலத்திலேயே கண்டறிந்து அதற்குத் தக்க சிகிச்சை அளிக்கும் முன்மாதிரி மையங்களாக அங்கன்வாடி முன்பருவக்கல்வி மையங்கள் செயல்படுகின்றன.

* தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பணிகளை ஒத்த இக்குழந்தை ஊட்டச் சத்து திட்டமானது வறுமை நிலையில் உள்ள குடும்பங்களில் உள்ள குழந்தை மற்றும் வளர் இளம் பெண்களின் பொருளாதாரம் மற்றும் உணவு பழக்க வழக்கங்களில் முன்னேற்றத்தை அடையச் செய்கிறது.

* சென்னை தரமணியில் செயல்பட்டு வரும் தகவல் தொடர்பு மற்றும் பயிற்சிப் பிரிவு மையத்தினை முன்மாதிரியான மாநில ஆதார ஊட்டச் சத்து மையமாக மாற்றி அமைக்கும் பொருட்டு இந்தப் பயிற்சி மையத்தை சங்க விதிகளின்படி பதிவு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்தப் பயிற்சி மையத்தின் பணிகள் விரிவாக்கப்படுவதோடு மேலும் செம்மையாக செயல்பட வழிவகுக்கப்படும். இப்பயிற்சி மையத்தின் மூலம் ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரம் பற்றிய அறிவு மற்றும் பழக்க வழக்கங்கள் சார்ந்த பரிமாற்றமானது பல்வேறு அரசு துறைகள், அரசு சாரா நிறுவனங்கள், ஊராட்சி மன்றங்கள், மனையியல் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள். ஊரக வளர்ச்சி, சமூக நல ஆணையரகம், ஊனமுற்றோர் மறு வாழ்வுத் துறை போன்ற இப்படிப் பல நிறுவனங்களோடு மேற்கொள்ளப்படும். இம்முன்மாதிரி பயிற்சி மையத்தின் மூலம் சாத்தியக்கூறுகள்



2002 ஏப்ரல் 26]

உள்ள நிலையில் கட்டண அடிப்படையில் தனிநபரின் திறமையை மேம்படுத்தும் விதமாக பயிற்சி அளிக்கும் பொருட்டு சிறப்பான தகவல் தொடர்பு சாதனங்கள் தயாரிக்கப்பட்டு தமிழ்நாட்டை ஊட்டச் சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்றுவதற்கு உறுதுணையாக இருக்கும்.

* சுகாதாரத் துறையினருடன் ஒருங்கிணைந்து வளர் இளம் பெண்களின் நலத்தை மேம்படுத்தும் விதமாக இரும்புச் சத்து போஃலிக் அமில மாத்திரைகள் மற்றும் பூச்சி நீக்க மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தில் செயல்படும் முக்கியப் பிரிவுகளின் திட்டப் பணிகள் பின்வருமாறு:—

(அ) ஊட்டச் சத்துப் பிரிவு

இத்திட்டத்தின் மூலம் பல்வேறு நிலைகளில் உள்ள பயனாளிகளுக்கு இணை உணவு வழங்கும் பொருட்டு மாநில வரவு செலவு திட்டத்தின் கீழ் உரிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்-3 திட்டத்திற்கு 1999-2004 வரை உள்ள ஐந்து வருடங்களுக்கு ரூ. 86.95 கோடி உலக வங்கி நிதி உதவி அளித்துள்ளது. இந்த நிதியில் 2002-2003-க்கு பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன:

1. இத்திட்டத்தின்கீழ் வரும் 18 மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு ரூ. 34.25 இலட்சம் செலவில் 8563 குழந்தை எடை எடுக்கும் கருவிகள் வாங்கப்படும்.

2. பழுதடைந்துள்ள 2306 குழந்தை எடை எடுக்கும் கருவிகளுக்கு பதிலாக ரூ. 9.22 இலட்சம் செலவில் புதிய எடைக்கருவிகள் வாங்கப்படும்.

3. ஏற்கெனவே, ரூ. 415 இலட்சம் செலவில் 159 குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகம் கட்ட ஆரம்பிக்கப்பட்ட பணிகள் 2002-2003 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும்.

4. ரூ. 390 இலட்சம் செலவில் 19,500 மையங்களுக்கு சமையல் செய்ய மற்றும் உணவு பரிமாற பாத்திரங்கள் வாங்கப்பட உள்ளன.

5. இத்திட்ட மொத்த சேமிப்பு நிதியிலிருந்து ரூ. 102.50 இலட்சம் செலவில் 82 அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட உள்ளன.

6. புதிதாக செயல்பட உள்ள 5 மாவட்ட அலுவலகங்களுக்கு ரூ. 3 இலட்சம் செலவில் மரச்சாமான்கள் வாங்கப்பட உள்ளன.

7. ரூ. 24.90 இலட்சம் செலவில் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுடைய தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து பற்றிய கருத்தரங்கம் நடத்தப்படும்.

ஊட்டச் சத்து பிரிவிற்கு 2002-2003 ஆம் ஆண்டில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 978.87 இலட்சமாகும்.

**(ஆ) சுகாதாரப் பிரிவு**

இத்திட்டத்தில் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கான சுகாதாரப் பணிகளானது, பொதுச் சுகாதாரத் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது. குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்களிடையே ஏற்படும் சிறு நோய்களான இரத்த சோகை மற்றும் வயிற்றுப்பூச்சி நோய்களுக்கு மருந்து மாத்திரைகள் வழங்க ரூ. 500.58 இலட்சம் செலவு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய மருந்துகளை பாதுகாப்பாக வைப்பது மிகவும் அவசியம் என்பதனால் ரூ. 48.75 இலட்சம் மதிப்பில் மருந்து பெட்டிகள் வாங்கி வழங்கப்பட உள்ளன.

திட்டம் செயல்பட்டு வரும் 21 மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு மையங்களிலும் குழந்தைகள் கழிப்பறைகள் ரூ. 75 இலட்சம் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**(இ) முறைப்படுத்தும் பிரிவு**

கணினி மூலம் இப்பிரிவில் நவீன முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடுமையான ஊட்டச் சத்து குறைபாட்டை தடுத்து, ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தும் வகையில் சிறப்பு ஆய்வுகள் மேற்கொண்டு அதன் மூலம் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்தின் பணிகள்





செம்மையாக செயல்படுத்துவதற்கு புதிய முயற்சியாக கிராம அளவிலான கண்காணிப்புக்குழு படிப்படியாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் குழந்தைகளுக்கு மேல்மருத்துவப் பரிசோதனை செய்ய பரிந்துரை செய்வதற்கான பதிவேடுகள் மற்றும் படிவங்கள் அச்சடிக்க ரூ. 39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**(ஈ) நிர்வாகப் பிரிவு**

1. திட்டத்தில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள் இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க ரூ. 15,000 வட்டியில்லாக் கடன் பெற தகுதியிருந்தும் சில வரையறை காரணங்களினால் இத்திட்டம் சரிவர செயல்படுத்த இயலவில்லை. மேற்கூறிய வரையறைகளை மாற்றி அமைத்து மேற்பார்வையாளர்கள் தங்கள் பணிகளை செம்மையாகச் செய்ய அவர்களை ஊக்குவிக்கவும், அவர்கள் எளிதில் சென்று பணிகளை பார்வையிடும் பொருட்டும், இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க ரூ. 15,000 வட்டியில்லாக் கடன் வழங்க இருந்த தடைகளான உச்ச வயது வரம்பு, கடன் செலுத்தும் தவணையின் எண்ணிக்கை ஆகியவற்றை உயர்த்தி உத்தரவிட உத்தேசிக்கப்பட உள்ளது. இதற்காக இவ்வாண்டு ரூ. 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. திட்டப்பணிகளை செயல்படுத்துவதில் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்ற ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை உருவாக்கும் பொருட்டு, சிறப்பான முறையில் பணியாற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய ஆயிரம் நபர்களுக்கு ஊக்கப் பரிசுத் தொகை ரூ. 3 இலட்சம் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. புதிதாக உருவாக்கப்பட்ட ஐந்து மாவட்டங்களில் திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்கு, மாவட்ட அலுவலகங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக 5 ஈப்புகளுக்கு ரூ. 17.50 இலட்சமும், மரச்சாமான்களுக்கு ரூ. 3 இலட்சமும், இதர சாதனங்களுக்கு ரூ. 5.61 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 26.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 26

1. சென்னை, தரமணியில் தகவல் தொடர்பு மற்றும் பயிற்சி மைய வளாகத்தில் ரூ. 50 இலட்சம் செலவில் புதிய திட்ட அலுவலகக் கட்டடம் கட்ட, உலக வங்கி நிதி உதவி அளித்துள்ளது. இதன் மூலம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த திட்ட அலுவலகம் மாற்றப்படுவதால், வருடத்திற்கு, அரசிற்கு ரூ. 9 இலட்சம் சேமிக்கப்படும்.

**(உ) மக்கள் பங்கேற்பு மற்றும் தகவல், கல்வி, தொடர்புப் பணிகள் பிரிவு**

மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மற்றும் திட்டப் பணிகளுக்கான தேவையுணர்வை ஏற்படுத்த பற்பல தகவல் தொடர்பு மற்றும் மக்கள் பங்கேற்புப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதன் மூலம் மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, திட்டப் பணிகளைக் கேட்டு பெறும் நிலையை உருவாக்கி பயனாளிகளிடையே நாம் எதிர்பார்க்கும் பழக்கவழக்கங்களில் நல்ல மாறுதல்களை உருவாக்கிட முடியும். சத்துமிக்க சமையல் செய்முறை விளக்கம் மற்றும் ஆரோக்கிய குழந்தைகள் போட்டி, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட மையங்களுக்கு, இரும்பு அலமாரி வழங்குதல், 'சிட்டுக்குருவி சேதி தெரியுமா?' என்னும் மாதமிருமுறை இதழ் வெளியிடுதல், கரூர், திருவாரூர், பெரம்பலூர், நாமக்கல் மற்றும் தேனி மாவட்டங்களுக்கு ஒலி-ஒளி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் சுவரொட்டி அச்சடித்தல், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி அளித்தல், புதுமணத் தம்பதியருக்கு பணியரங்கம் நடத்துதல் போன்ற தகவல், கல்வி தொடர்புப் பணிகள் செயல்படுத்தப்படும். இதற்காக ரூ.276.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வளர் இளம் பெண்கள் தங்களுடைய உடல் வளர்ச்சியை நன்கு அறிந்து கொள்ளும் பொருட்டு அவர்கள் எடையையும், உயரத்தையும் தாங்களாகவே கண்காணிக்க பயிற்சியும், கல்வியும் அளித்து ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். அவர்களது ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும் பொருட்டு, ஆண்டுக்கு 100 இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகளும், ஆறு மாதத்திற்கொரு முறை வயிற்றுப் பூச்சி நீக்கும் மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன.

குடும்ப வாழ்க்கைக் கல்வி மற்றும் ஆளுமை திறன் வளர்ச்சி பற்றிய இரண்டு நாள் பகுதி அளவிலான பணியரங்கம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 1272 பகுதிகளில் பயிற்சி அளிப்பதற்காக ரூ.43.86 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கிராமப் பகுதிகளில் ஆங்காங்கு



2002 ஏப்ரல் 26]

காணப்படும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு புதுமையான உத்திகளைக் கையாள ரூ.97.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஊ) பயிற்சி பிரிவு**

**(i) உள்ளரங்கம் மற்றும் வெளியரங்க விளையாட்டுச் சாமான்கள் வாங்குதல்**

ஆரம்ப கால குழந்தை வளர்ச்சி, பராமரிப்பு மற்றும் முன்னேற்றம் சார்ந்த புது மாதிரியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி குழந்தைகள் விளையாட உள்ளரங்கம் மற்றும் வெளியரங்க விளையாட்டுச் சாமான்கள் வாங்கி 2925 அங்கன்வாடி மையங்களுக்குக் கொடுப்பதற்கு, ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.2000 வீதம், மொத்தம் ரூ.58.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ii) பள்ளி முன்பருவக்கல்வி உபகரணங்கள்**

இத்திட்டத்தில் செயல்பட்டு வரும் 19500 அங்கன்வாடி மையங்கள் ஒவ்வொன்றிற்கும், பள்ளி முன்பருவக் கல்வி உபகரணங்கள் அடங்கிய பெட்டி, ரூ.195 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**(iii) தரம் உயர சுதந்திர கருத்து வெளிப்பாடு (FREQI)**

திட்டப் பணிகளின் செயல்பாடுகளில் தரம் உயரும் வகையில் சுதந்திர கருத்து பரிமாற்றம் அவசியம். இதன்படி சுதந்திர கருத்து வெளிப்பாட்டு உத்தி அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும், புதிய கருத்துக்களைப் பெறவும், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கூட்டங்கள் நடத்துவதற்கு ரூ.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(iv) கல்வி சுற்றுலா**

களப்பணியாளர்களின் செயல்பாடுகளை மேம்படுத்தி அதன் மூலம் திட்டப் பணிகளை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் வகையில், அவர்கள் கல்விச் சுற்றுலா செல்ல வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டாரத்திற்கு வட்டாரம், திட்டப் பணிகள் சிறப்பாக செயல்படும் கல்விச் சுற்றுலா சென்று, விதத்தைக் கண்டறிந்து, அதை தங்கள் பகுதியில் செயல்படுத்துவதற்கு, இக்கல்விச் சுற்றுலா வழி வகுக்கிறது. இதற்காக 2002-2003-ம் ஆண்டிற்கு ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(v) **உடல் ஊன இயலாமை பயிற்சி** (Disability management Training)

குழந்தைகளிடையே காணப்படும் உடல் ஊன இயலாமையை ஆரம்ப நிலையில் கண்டறிந்து கொள்ளவும், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழி முறைகளை அறிந்து கொள்ளவும், அனைத்து மேற்பார்வையாளர்களுக்கும் புது மாதிரியான பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சிக்காக ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vi) **மாவட்ட தொழில்நுட்பக் குழு**

மாவட்டம் தோறும் நான்கு வல்லுநர்கள் அடங்கிய மாவட்ட தொழில்நுட்பக் குழு உருவாக்கப்பட்டு அக்குழுவின் மூலம் திட்டத்தில் பணிபுரிவோருக்கு தொடர்ந்து கல்வி அளித்து, 318 வட்டாரங்களைச் சார்ந்த அனைத்து கிராமங்களிலும் தகவல், கல்வி, தொடர்புப் பணிகளைத் தொடர்ந்து செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.101 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vii) **உதிஷா பயிற்சி:**

உலக வங்கியானது, மைய அரசின் மூலம் அளிக்கும் நிதி ஒதுக்கீட்டில், உதிஷா பயிற்சியானது திட்டமிடப்பட்டுள்ளது. இவ் உதிஷா பயிற்சி திட்டத்தின்படி அனைத்து பணியாளர்களுக்கும் பணிப்பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சியானது 2002-2003-ல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்காக ரூ.292 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பயிற்சி திட்டத்தின் கீழ், திட்டத்தில் பணிபுரிவோர் மற்றும் பயனாளிகளுக்கு, புது மாதிரியான பயிற்சி நடத்துவதற்கு ரூ.7 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி சார்ந்த தகவல் கல்வி தொடர்பு சாதனங்களை தயாரிப்பதற்கு ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.11 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயனாளிகளுக்கு அளிக்கப்படும் ஊட்டச்சத்து பயன்களை அடையச் செய்தல்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினர் 0-36 மாதங்கள் மற்றும் 37-60 மாதக் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர்கள், இத்திட்டத்தின் கீழ் பயன்பெற கொண்டுவரப்படுகிறார்கள். சுகாதாரம், தகவல் தொடர்பு, பயிற்சி முன்பருவக் கல்வி, இணை உணவு மற்றும் சத்துணவு வழங்குவது போன்றவை இவர்களுக்கு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.





சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் சுமார் 2 இலட்சம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இணை உணவு, மிகை இணை சத்துணவாக வழங்கப்படும். நடப்பு நிதியாண்டு 2002-2003-ல் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.2225.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகரம் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மிகுதியாக வாழும் பகுதிகளில், மேற்கண்ட பயனாளிகள் அதிக எண்ணிக்கையில் இத்திட்டத்தில் பங்கேற்பதைக் கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பயனாளிகளில் குறைந்த பட்சம் 30 விழுக்காடு ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பினராக இருப்பது உறுதி செய்யப்படவேண்டும்.

## 2.12. அரசு குழந்தைகள் காப்பகங்கள்:

தமிழக அரசு, சமுதாயத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளின் நலனுக்காக மொத்தம் 5500 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 25 அரசு குழந்தைகள் காப்பகங்களை நடத்தி வருகிறது.

இக்காப்பகங்களில் சேருவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள்:

பெற்றோரோ அல்லது உறவினரோ இல்லாத ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள்.

குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கும் குறைவாகப் பெறும் குடும்பத்தைச் சார்ந்த தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவர் இறந்துவிட்ட நிலையிலுள்ள குழந்தைகள், கணவனோ அல்லது மனைவியோ நீண்டநாள் கைதியாக இருப்பின், மனைவியால் அல்லது கணவனால் பாதுகாக்க முடியாத நிலையில் உள்ள குழந்தைகள், கணவனாலோ அல்லது மனைவியாலோ கைவிடப்பட்ட குழந்தைகள்.

தொழுநோய் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரால் கவனிக்க இயலாத குழந்தைகள்.

சத்யா அம்மையார் நினைவு குழந்தைகள் காப்பகங்கள் என அழைக்கப்படும் அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு, கீழ்க்கண்ட வசதிகளை அரசு அளித்து வருகிறது:-

ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.200 வீதம் உணவிற்குச் செலவிடப்படுகிறது. காப்பகத்திலேயே 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம்

[2002 ஏப்ரல் 26

வகுப்பு வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் வெளிப்பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இக்காப்பகக் குழந்தைகள் தன்னிறைவுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ்வதற்கு உதவும் வகையில், அவர்களுக்குத் தொழிற் கல்வியும் அளிக்கப்படுகிறது.

அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் கல்வி பயிலத் தேவையான புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் வாங்கி வழங்கப்படுகிறது. அரசு குழந்தைகள் காப்பகங்களில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் இரண்டு இணை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன. 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் 9 முதல் 12 வகுப்பு வரையிலும் வெளிப்பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு, ஆண்டு தோறும் முறையே ரூ.300 மற்றும் ரூ.400 மதிப்பில் இரண்டு இணை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன. அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.150 வீதம் படுக்கை செலவினத்திற்காக வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்ட அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு ஒரு குழந்தைக்கு ரூ.250 வீதம் படுக்கை செலவினத்திற்காக வழங்கப்படுகிறது.

அரசு குழந்தைகள் காப்பக, குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ.50 மதிப்புள்ள காலணிகள் வாங்கி வழங்கப்படுகின்றன.

10 அரசு குழந்தைகள் காப்பகங்களில் யோகா மற்றும் தற்காப்புக் கலைகளுக்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

20 அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.1000 வீதமும் 5 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.500 வீதமும் மருத்துவச் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குழந்தைகளுக்குத் தரமான நிறுவன பாதுகாப்பு வழங்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. காப்பகங்களை அவ்வப்போது ஆய்வுசெய்தல் மற்றும் கண்காணித்தல் மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு சிறந்த சேவை அளிக்கப்படுகிறது. இக்காப்பகங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்காக, ஆலோசனை அளிப்பதற்கென சமூக பணியாளர்களைக் கொண்ட குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.



2002 ஏப்ரல் 26]

இக்காப்பகங்கள் நல்ல நிர்வாக அமைப்புடன் இயங்க, ஒவ்வொரு மாவட்டத்திலும், கீழ்க்கண்ட 7 உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை அரசு ஏற்படுத்தி உள்ளது:—

1. மாவட்ட ஆட்சித் தலைவர் - தலைவர்
2. மாவட்ட கல்வி அதிகாரி - உறுப்பினர்
3. பகுதிநேர மருத்துவ அலுவலர் - உறுப்பினர்
4. மாவட்ட சமூகநல அலுவலர் - உறுப்பினர்
5. மாநில சமூகநல வாரிய உறுப்பினர் - அலுவல் சாரா உறுப்பினர்.

6 & 7. மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் சமூகப்பணியில் முன்னணியில் உள்ள இரண்டு சமூக சேவகர்கள் - அலுவல் சாரா உறுப்பினர்கள்.

இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி, காப்பகங்களின் முன்னேற்றத்தினையும், குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் குழந்தைகளை காப்பகத்தில் சேர்த்தல் ஆகியவை குறித்து கண்காணிக்கும். காப்பகங்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட சமூகநல அலுவலர்களுக்கு இக்குழு உதவும்.

அன்றாட வாழ்க்கையினைத் தொடர்வதற்குத் தேவையான வெளி உலகத் தொடர்புக்கு வாய்ப்பு நல்கும் பொருட்டும், குழந்தைகளை ஒரே மாதிரியான சூழ்நிலையில் வாழும் தினசரி வாழ்க்கையிலிருந்து வேறுபடுத்தவும், அவர்கள் அருகிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு ஆண்டிற்கொருமுறை சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

2002-2003 ஆம் நிதியாண்டிற்கு 25 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ரூ.473.59 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.13 குழந்தைகள் நலனில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு:

வளர்ந்து வரும் நகர சூழ்நிலை மற்றும் தொழில்மயமாதல் போன்ற காரணங்களினால் ஆதரவற்ற நிலைக்கு அதிகக் குழந்தைகள்

தள்ளப்படுகின்றனர். இதனால் இளம் சிறார்கள் தவறிழைக்கும் நிலை பெருகி வருகின்றது. பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, உணவு மற்றும் உடை போன்றவற்றிற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு, குழந்தை ஒன்றுக்கு, மானியமாக 80 சதவிகிதத் தொகையாக ரூ.200/-ஐ அரசு வழங்குகிறது. மீதமுள்ள 20 சதவீத தொகை ரூ.50/-ஐ தன்னார்வத் தொண்டு நிறுவனமே ஏற்றுக் கொள்கிறது.

2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.290.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.14 தத்து எடுத்தல்:**

தத்து எடுத்தல்-அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட, ஆதரவற்ற, ஒதுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தக்கதொரு குடும்ப சூழலை ஏற்படுத்திக் கொடுத்து அதன் மூலம் அக்குழந்தைகளுக்கு பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அன்பும், அரவணைப்பும், கிடைக்கவும் அவர்களிடமுள்ள செயல் திறன் மற்றும் உள்ளாற்றலை வெளிப்படுத்தவும் ஒரு முக்கியமான வாயிலாக உள்ளது. மேலும் குழந்தைகள் உடலாலும், உள்ளத்தாலும், இயல்பான வளர்ச்சியைப் பெறவும், அறிவாற்றலை வளர்க்கவும், பொருளாதார நிலையை உயர்த்தவும், தத்தெடுத்தல் உதவுகிறது. அத்துடன் இக்குழந்தைகள் சமுதாய மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கும் தத்தெடுத்தல் ஒரு கருவியாக உள்ளது.

உள் நாட்டில் தத்து. கொடுக்க 19 நிறுவனங்களுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, மதுரை, ஓசூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. உரிமம் பெற்ற 19 நிறுவனங்களில், 8 நிறுவனங்களுக்கு வெளிநாட்டில் தத்து கொடுக்கவும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் குறைந்த பட்சம், மாவட்டத்திற்கு ஒரு தத்து நிறுவனம் செயல்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



பொது மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கி தத்தெடுப்பதற்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. தத்து திட்டத்திற்கென மாவட்ட சமூகநல அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். புதியதாக உரிமம் பெற்ற நிறுவனங்களின் சமூகப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 19 தத்து நிறுவனங்களில், 15 தத்து நிறுவனங்களின் சமூகப் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

உரிமம் பெற்ற நிறுவனங்கள் தத்து கொடுத்தலை சட்ட பூர்வமாக்கும் அதிகாரம் பெற்றவர்கள் ஆவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு நிறுவனமாவது, தத்து கொடுக்கும் உரிமம் பெற்று இருக்க வேண்டுமென்ற நோக்கில், தத்து திட்டத்தை செயல்படுத்துவதற்காக அந்தந்த மாவட்டங்களில் உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் குறைந்தபட்சம் ஒன்றினையாவது கண்டறியுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**2.15 கருணை இல்லங்கள்:**

தமிழகத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் தற்போது 42 கருணை இல்லங்கள் இயங்கி வருகின்றன. திருக்கோயில்களால் நடத்தப்பட்டு வரும் கருணை இல்லங்களில் 1353 குழந்தைகள் உள்ளனர். சமூகநலத் துறையால் ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் ஒன்றுக்கு உணவு செலவிற்காக ரூ.200/-ம், நிர்வாக செலவிற்காக ரூ.267/-ம், வழங்கப்படுகிறது. படுக்கை செலவின வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.20 வழங்கப்படுகிறது. சீருடையைப் பொறுத்தமட்டில் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலமாகவும் பாடநூல் மற்றும் நோட்டுப் புத்தகங்கள், தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் மூலமாகவும் இக்கருணை இல்லங்களுக்கு வழங்கப்படுகின்றன.

[2002 ஏப்ரல் 26

2002-2003 ஆம் நிதியாண்டிற்கு ரூ.46.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.16 ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்:**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு சீருடைகள் வழங்கும் சிறப்பான திட்டத்தை 1985-86 ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சீருடைகளைத் தைத்து கல்வித் துறைக்கு வழங்கும் பொறுப்பினை சமூக நல ஆணையரகம் ஏற்று செயல்படுத்தி வருகிறது. சீருடைகள் தைக்கும் பணி சமூகநல ஆணையரகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மூலம் செய்யப்படுகிறது. சீருடைகளுக்குத் தேவையான துணி வகைகளை கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தமிழ்நாடு துணிநூல் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்து வழங்கும் பொறுப்பினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஏற்றுள்ளது. சமூகநலத் துறை கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் 78 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் மூலம் சீருடைகள் தைக்கப்பட்டு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு கல்வித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2001-2002-ம் ஆண்டு முதல் இலவச சீருடைகளை தைப்பதற்கான தையற்கூலி தற்போதுள்ள கூலி விகிதத்திலிருந்து 50 விழுக்காடு உயர்த்தப்பட்டு மாணவர்களுக்கான ஓர் இணை சீருடை தைப்பதற்கு ரூ.15.40 ஆகவும், மாணவிகளுக்கான ஓர் இணை சீருடை தைப்பதற்கு ரூ.14.10 ஆகவும் வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு 1,18,67,191 எண்ணிக்கை சீருடைகள் தைக்கப்பட்டன. துணிகளின் தரம் மற்றும் சீருடைகளின் அளவுகளை சோதனை மேற்கொள்ள மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு குறைந்தபட்சம் 10 விழுக்காடு



2002 ஏப்ரல் 26]

பள்ளிகளை சோதனை மேற்கொள்ள வேண்டும். மேலும் துணி வழங்கும் நிறுவனங்கள், ஒவ்வொரு மீட்டரிலும் "தமிழக அரசு இலவச சீருடைத் திட்டம்" என்னும் அச்சினைப் பதிவு செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டு அதன்படி செயல்படுத்தப்படுகிறது.

**2.17 ஏழை விதவை தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவச பாடப்புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்:**

ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு குறைவாகப் பெறும் விதவை தாய்மார்களின் குழந்தைகள் பயனடையும் வகையில் இத்திட்டத்தின் மூலம் பாடப்புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன. முதல் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை பயிலும் விதவை தாய்மார்களின் குழந்தைகளுக்கு, கீழ்க்கண்டவாறு இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன:—

| வகுப்பு | ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் புத்தகம் மற்றும் குறிப்பேடுகளின் மதிப்பு |
|---|---|
| 1 மற்றும் 2 ஆம் வகுப்பு | ரூ.50 |
| 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | ரூ.125 |
| 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | ரூ.175 |
| 9 முதல் 10 ஆம் வகுப்பு வரை | ரூ.300 |
| +1 மற்றும் +2 வகுப்பு | ரூ.600 |

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 10,000 குழந்தைகள் பயனடைகின்றனர்.

2002-2003 ஆம் நிதியாண்டிற்கு ரூ.16.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.18 வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகம்:**

வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் பெரும்பாலும் அக்குழந்தைகளுக்குப் பின் பிறந்துள்ள

[2002 ஏப்ரல் 26

மழலையர்களைப் பார்த்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதாலும் அல்லது சமூக விரோத செயல்பாடுகளில் ஈடுபடுத்தப்படுவதாலும், பள்ளிக்குச் செல்வது என்பது இயலாததாகிறது. அரசு இதனைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 185 குழந்தைகள் காப்பகங்களுக்கு, காப்பகம் ஒன்றிற்கு ரூ.25,410/- வீதம், தொடர் செலவினமாக வழங்கி வருகிறது.

2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.52.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அரசு அலுவலகங்கள்/பல்கலைக்கழகங்கள்/கல்வி நிறுவனங்கள்/அரசு சார்ந்த நிறுவனங்கள்/ தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பெண்களின் நலனுக்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் புதியதாக குழந்தைகள் காப்பகங்கள் நடத்தவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**2.19 மகளிர் நலத் திட்டங்கள்:**

தமிழக அரசு, பெண்களின் நல்வாழ்விற்காகவும், வருவாய் ஈட்டுவதற்காகவும் பல்வேறு நலத் திட்டங்களை வகுத்துள்ளது. பெண்களை சமுதாயத்தின் இன்றியமையாத அங்கமாக அங்கீகரித்து, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டில் அவர்களின் முன்னேற்றத்தைக் காண்பதே இத்திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். இது போன்ற நலத் திட்டங்கள், பெண்கள் சுதந்திரமாகவும், தன்னம்பிக்கையோடும், தங்களது வாழ்வினை அமைத்துக் கொள்ளவும், வழிவகை செய்கின்றன.

அரசு மற்றும் தனியார் முயற்சிகளில் மகளிரின் மேம்பாட்டுக்கான முழுமையான கொள்கை ஒன்றை இந்த அரசு வகுக்கும். மகளிர் மனித உரிமையையும், அடிப்படை உரிமைகளையும், உறுதிப்படுத்துதல், முடிவுகளை எடுக்கின்ற நடைமுறையில் சரிசமமாக மகளிரைப் பங்குகொள்ளச் செய்தல், ஆகியவற்றின் மூலம் பாலின நேர்மை ஊக்குவிக்கப்படும்.



2002 ஏப்ரல் 26]

**2.20 திருமண நிதியுதவித் திட்டங்கள்:**

தமிழ்நாடு அரசு பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:—

| திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் |
|---|---|---|
| 1. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண உதவித் திட்டம் | ரூ.10,000 (கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | விதவையரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின் வயது 20–30-க்குள் இருக்க வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும். |
| 2. அன்னை தெராசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம் | ரூ.10,000 (கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | ஆண்டு வருவமானம் ரூ.12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் மணப்பெண்ணின் வயது 20–30-க்குள் இருத்தல் வேண்டும். |
| 3. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம் | ரூ.10,000 (ரூ.7,000 தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ. 3,000 கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | மணப்பெண்ணின் வயது 20–30-க்குள் இருத்தல் வேண்டும். வருமான வரம்பு இல்லை. |
| 4. தமிழக அரசு கலப்பு திருமண நிதி உதவித் திட்டம் | அ) ரூ.20,000 (ரூ.10,000 தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.10,000 கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், முற்பட்ட வகுப்பினரை அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அல்லது மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைத் திருமணம் செய்தல். மணப்பெண்ணின் வயது 20–30-க்குள் இருத்தல் வேண்டும். வருமான வரம்பு இல்லை. |
| | ஆ) ரூ.10,000, (ரூ.7,000 தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.3,000 கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | ஆ) முற்பட்ட வகுப்பினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைத் திருமணம் செய்தல், வருமான வரம்பு இல்லை. |

[2002 ஏப்ரல் 26

*2002-2003* ஆம் ஆண்டிற்கு அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களுக்கென ரூ.400.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.21 சேவை இல்லங்கள்:**

விதவைகள், ஆதரவற்ற மற்றும் உதவிக்கு எவருமில்லாத பெண்களுக்கு நிறுவனப் பாதுகாப்பு தேவைப்படுகிறது. அத்தகைய பாதுகாப்பு அளித்திடவும் பெண்கள் வாழ்க்கையை மீண்டும் அமைத்துக் கொள்ள உதவவும், அரசு சேவை இல்லங்களை உருவாக்கியுள்ளது. இத்துறையின் மூலம் தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடி ஆகிய 6 இடங்களில் சேவை இல்லங்கள் இயங்கி வருகின்றன. இச்சேவையில்லங்கள் பெண்களுக்கு உணவு, உறைவிடம், கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவற்றை அளித்து வருகின்றன. பெண்களுடன் அவர்களது குழந்தைகளும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுவதுடன், அக்குழந்தைகளுக்கும் கல்வி வசதி செய்து தரப்படுகிறது.

தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில் கலைப்பாடங்களை கொண்ட மேல்நிலை வகுப்புகளும், தஞ்சாவூர் சேவை இல்லத்தில் அறிவியல் பாடத்தில் மேல்நிலை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. உணவூட்டுச் செலவினமாக மாதம் ஒன்றுக்கு, பெரியவர்களுக்கு தலா ரூ.300 வீதமும், சிறியவர்களுக்கு தலா ரூ.200 வீதமும் வழங்கப்படுகிறது. பெரியவர்களுக்கு ரூ.400 மதிப்பில் சீருடை வழங்கப்படுகிறது. இச்சேவை இல்ல சிறுவர்களுக்கு ஆண்டிற்கொரு முறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் சீருடை வழங்கப்படுகிறது. மற்றும் இவ்வில்லங்களில் பயிலும் மாணவிகளுக்குத் தேவையான பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திடமிருந்து வாங்கி இலவசமாக வழங்கப்படுகின்றன.

உடல் ஊனமுற்றோருக்கென தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்கி வருகிறது.

தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவையில்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பாடங்களில் பயிற்சி வழங்கும் செயலகப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது. ஆண்டொன்றிற்கு 65 மாணவிகளுக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது. ஓராண்டு பயிற்சிக்குப் பின் அவர்கள் அரசு தொழில் நுட்பத் தேர்வு எழுத தகுதியுடையவராகின்றனர். செவிலியர், துணி மற்றும் வடிவமைப்பு, ஆய்வக தொழில் நுட்பப் பயிற்சி போன்றவை திருநெல்வேலி, கடலூர், சேலம், காரைக்குடி மற்றும் தாம்பரம் ஆகிய சேவை இல்லங்களில் அளிக்கப்படுகின்றன. தஞ்சாவூரிலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு முடித்த சேவியில்ல



2002 ஏப்ரல் 26]

மாணவிகளுக்கு, நவீன தொழில் நுட்பத்தில் ஈடுபாடு கொள்ளும் வகையில், கணிப்பொறி பயிற்சி அளிக்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பு முடித்த பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்குப் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

*2002-2003* ஆம் நிதியாண்டிற்கென ரூ.202.59 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.22 தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்களுக்கு அரசு மானிய உதவி:**

அரசு நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபாய் சேவிகாஸ்ரமத்திலும், சென்னையிலுள்ள ஸ்திரி சேவா மந்திரிலும் இரண்டு சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

1. உள்ளுறைவோர்களுக்கு பயிற்சி உதவித் தொகையும், ஆசிரியர்களுக்கு ஊதியமும் மானியமாக வழங்கப்படுகிறது.
2. சமுதாயத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த பெண்களுக்காக ஸ்திரி சேவா மந்திரால் நடத்தப்படும் சேவை இல்லத்தில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தொழிற் பயிற்சி மற்றும் செயலக வகுப்பு நடத்தப்படுகின்றன.
3. காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு நிலையில் குறுகியகால பயிற்சி வகுப்பு நடத்தப்படுகின்றது.

*2002-2003* ஆம் ஆண்டிற்கென இத்திட்டத்திற்கு ரூ. 10.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.23. பணிபுரியும் பெண்கள் விடுதிகள்:**

பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இடவசதியின் தேவையும் அதிகரிக்கிறது. பெண்கள் அவர்கள் பணிபுரியும் இடம் அல்லது சுற்றுப்புறத்தில் தங்குவதற்கு தக்கவாறு இடவசதியினை நாட வேண்டியுள்ளது. எனவே இப்பெண்களுக்கு உதவும் வகையில், சென்னையில் 2, கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஓசூரிலும் தலா ஒன்று வீதம் 8 பணிபுரியும் மகளிர் விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. பணிபுரியும் மகளிர் விடுதியில் சேருவதற்கான மாத வருமான உச்ச வரம்பு ரூ.10,000 ஆகும். வாடகையாக மாதமொன்றுக்கு சென்னையில் ரூ.200ம் இதர

மாவட்டங்களில் ரூ.150 வீதமும் வசூலிக்கப்படுகிறது. தண்ணீர், மின்சாரம் மற்றும் உணவு ஆகியவற்றிற்கான செலவினங்கள் உள்ளுறைவோர்களால் சரிசமமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவ்விடுதியில் பணிபுரியும் கண்காணிப்பாளர், உதவியாளர், சமையலர், துப்புரவாளர் மற்றும் இதர பணியாளர்களின் ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

2002-2003 ஆம் நிதியாண்டில் ரூ.31.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.24. பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட நிதியுதவி அளித்தல்

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால், பணிபுரியும் மகளிருக்கு விடுதி கட்டடம் கட்டுவதற்கான மொத்த செலவில் 75 சதவீதம் மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. மொத்த மதிப்பீட்டில் 15 சதவீதம் அல்லது ரூ.35,000 இவற்றில் எது குறைந்த தொகையோ, அத்தொகை மானியமாக மாநில அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டடம் கட்ட சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இதே பணிக்காக பிற அரசிடமிருந்து உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50 சதவீதம் மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. இதுவரை 64 பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.0.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.25 மகளிர் மன்றங்கள்

மகளிர் மன்றங்கள் முதன்முதலில் 1961-ல் தொடங்கப்பட்ட கிராமப்புற பெண்களைக் கொண்ட குழுக்களாகும். மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான பல்வேறு திட்டங்களை அவரவர் பகுதிகளில் பரப்புவதற்கு இக்குழுக்கள் கருவியாக இருந்தன. மக்கள் பங்கு தேவைப்படும் இதர கிராம அளவிலான பிரச்சினைகளில் இக்குழு தன்னுடைய செயல்களை சிறிது சிறிதாக விரிவுபடுத்திக் கொண்டது. கிராம மகளிர் குழுவாக பணியாற்றும்போது அவர்களது தன்னம்பிக்கை மற்றும் விழிப்புணர்வு பன்மடங்காகப் பெருகுகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் 11,520 மகளிர் மன்றங்கள் உள்ளன. ஒவ்வொரு மகளிர் மன்றத்திலும் சுமார் 25 முதல்



30 வரையிலான உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் (மகளிர் மன்ற கன்வீனர் தொகையாக ரூ.10,800, பயிற்சி முகாமிற்கு ரூ.1,200, சமூகக் கல்விக்கு ரூ.360, மகளிர் சுற்றுலாவிற்கு ரூ.440, குழந்தைகள் கண்காட்சிக்கு ரூ.200) ரூ.13,000 ஆண்டுதோறும் ஒதுக்கப்படுகிறது. உணவு பதப்படுத்துதல், குழந்தை வளர்ப்பு, சுகாதாரம், சுற்றுப்புறத்தை சுத்தமாகப் பராமரித்தல் மற்றும் ஊட்டச்சத்து போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மகளிர் மன்றங்கள் நல்ல முறையில் செயல்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, ஆண்டுதோறும் மாநிலத்தில் சிறப்பாக செயல்படும் ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் ரூ.2000 வீதம் 75 மகளிர் மன்றங்களுக்கு பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

2002-2003 ஆம் நிதியாண்டில் ரூ.51.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.26 வழிகாட்டி மையம்

வழிகாட்டி மையம் 1979 ஆம் ஆண்டு முதல் 20 மாவட்டங்களில் மாவட்ட சமூகநல அலுவலரின் கீழ் செயல்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் மகளிரின் முன்னேற்றத்திற்காக அரசால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களை பெண்களிடையே விளக்கியும், அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதும் ஆகும். மேலும் சுயமாக சிறுதொழில் புரிய வங்கிக் கடன் பெற பலதரப்பட்ட வங்கிகளுக்குப் பரிந்துரை செய்துவருகிறது. ஆகவே இம்மையங்கள் அரசுக்கும் மக்களுக்கும் ஒரு பாலமாக அமைந்துள்ளன.

2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.57.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.27 இலவச தையல் இயந்திரம் வழங்குதல்

வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இருபாலருக்கும் வேலை வாய்ப்பினைப் பெருக்கும் நோக்கத்துடனும், அவர்கள் சமூகத்தில் நற்பாங்கான வாழ்க்கையினைத் தொடரவும், சத்யவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

2002-2003 ஆம் நிதியாண்டிற்கு ரூ.101.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 26

25 இணை உணவு தொழிற் கூட்டுறவு சங்கங்கள், 113 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டங்களிலும், 318 உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்-3 திட்டங்களிலும் உள்ள 6 மாதம் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் தேவையான அமிலேசு செயல்பாட்டுடன் கூடிய உயிர்ச்சத்துக்கள் சேர்க்கப்பட்ட இணை உணவினை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன. இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன.

17 எழுதுபொருள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அரசு அலுவலகங் களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் தேவையான பதிவேடுகளைத் தயாரிக்கும் பணி மேற்கொள்வதன் மூலம் சங்க அங்கத்தினர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றன.

2002-2003 ஆம் ஆண்டிற்கு அனைத்து மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகச் செலவிற்காக ரூ.92.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) அரசு, 46 பயிற்சி மையங்களையும் 5 உற்பத்தி நிலையங்களையும் செயல்படுத்தி வருகிறது. இப்பயிற்சி மையங்களில் ஆண்டொன்றுக்கு 980 மகளிர், பல்வேறு வகையான தொழிற்கல்வியினைப் பெற்று பயனடைகிறார்கள்.

இதற்காக 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.126.41 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) மலைவாழ் மகளிர் பயனடையும் வகையில் சேலம் மாவட்டத்தில் 2-ம் நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஒன்றுமாக, 4 தையற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இப்பயிற்சி மையங்களின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் 65 மலைவாழ் மகளிர், பயிற்சி பெற்று பயனடைகின்றார்கள்.

இதற்காக 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.6.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(v) பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினருக்காகக் குடிசைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.



2002 ஏப்ரல் 26]

இதற்காக 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.6.24 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(vi) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக தையல் நிலையங்கள் செயல்படுகின்றன.

இதற்காக 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.9.81 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.31. முதியோர் இல்லங்கள்**

(i) நமது முதியோர் கண்ணியத்துடனும் மதிப்புடனும் வாழ்க்கையை நடத்த ஏதுவாக முதியோருக்கான மாநிலக் கொள்கை ஒன்றை இவ்வரசு வகுத்துள்ளது. முதியோருக்கு நிறுவனம் சாரா சேவைகளை வழங்குவதற்குத் தன்னார்வ நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள முதியோருக்குச் சிறப்பு மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளைப் பெற்ற அரசு மருத்துவமனைகளில், தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் "மருத்துவ அட்டை" முறையை அறிமுகப்படுத்த அரசு கருதியுள்ளது.

(ii) நமது சமுதாயத்தில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகள், உடல் ஊனமுற்றோர், மூளை வளர்ச்சி குன்றியோர், முதியோர் போன்றவர்களின் நலனிலும், தனிக் கவனம் செலுத்தப்படும். அநாதை இல்லங்கள் அமைப்பதற்கும், முதியோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு காப்பகங்கள் அமைப்பதற்கும், தெருவில் சுற்றித் திரியும் குழந்தைகளும் இரவில் தங்க இடவசதி செய்து கொடுப்பதற்கும் தனியார் துறையை அரசு ஊக்குவிக்கும். மேலும் இலாப நோக்கின்றி இத்திட்டத்தை மேற்கொள்ள முன்வருவோர்க்கு இலவசமாக நிலம் அளிக்கவும் அரசு முன்வரும்.

(iii) முதியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வளர்ந்து வருவதால், வயது முதிர்ந்த காலத்தில் அவர்களைப் பராமரிக்கும்பொருட்டு தொண்டு நிறுவனங்கள் மூலம் முதியோர் இல்லங்கள் அரசு மானிய உதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது 6 முதியோர் இல்லங்கள் அரசு மானிய உதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் இல்லத்திலும் 40 முதியோர் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

[2002 ஏப்ரல் 26

(iv) நபர் ஒன்றுக்கு ரூ.250 வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்பட்டு வந்தது. இம்மானியத் தொகை ஒரு நபருக்கு ரூ.500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், 2001-2002-ல் அரசு மானியத்துடன் தொண்டு நிறுவனங்கள் மூலம் 4 புதிய முதியோர் இல்லங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

2002-2003 ஆம் நிதியாண்டில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.32. தமிழ்நாடு சமூக நல வாரியம், சென்னை**

தமிழ்நாடு சமூக நல வாரியம் தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் முன்னேற்றத்திற்காகத் தொண்டு நிறுவனங்கள் மூலம் சேவை அளிக்கும் நோக்கத்தில் 1954 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:—

1. சமூக நல தன்னார்வ அமைப்புகளை ஊக்குவித்து உயர்வடையச் செய்தல்.

2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்.

3. அரசு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

தமிழ்நாடு சமூக நல வாரியம் மாநில அரசிடமிருந்தும், மத்திய சமூக நல வாரியத்திடமிருந்தும் நிதியுதவி பெற்று, தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகள், மகளிர் மற்றும் ஊனமுற்றோர் நலனுக்காகவும் மற்றும் மேம்பாட்டிற்காகவும் பணியாற்றுகிறது. நிதியுதவி 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகை நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் நிதியுதவிகூட வழங்கப்படுகிறது.

மத்திய அரசின் மூலம் 610 தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கும் 942 தொண்டு மையங்களுக்கு ஏப்ரல் 2001 முதல் மார்ச் 2002 வரை ரூ.391.05 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் நிதியுதவியான ரூ.61.95 இலட்சம் 358 தன்னார்வ அலகுகளைக்கொண்ட 391 தொண்டு மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



2002 ஏப்ரல் 26]

போதை மருந்து பயன்படுத்துதல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களை ஒழிக்கும் வகையில் தொண்டு நிறுவனங்களுக்கும் அரசுத் துறையினருக்கும் ஒருங்கிணைப்பை தமிழ்நாடு சமூக நல வாரியம் ஏற்படுத்தி வருகிறது.

எய்ட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பாலியல் தொழிலாளர்களின் குழந்தைகளைப் பராமரிக்கவும் பகல் நேரத் தங்கும் இல்லங்கள் அமைக்கவும் வாரியத்தால் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.33 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

பெண்களின் நலன்களைப் பாதுகாக்கவும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993-ல் தொடங்கப்பட்டது. இவ்வாணையம் தலைவி மற்றும் 9 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இவ்வாணையம் மகளிர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களின் நிலையை மேம்படுத்துதல் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கி வருகிறது.

மகளிர் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு இவ்வாணையம் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:—

1. காவல் துறை அலுவலர்கள், சட்ட நடுவர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், மருத்துவர்கள் மற்றும் ஏனைய பிரிவினர்களுக்கு ஆண், பெண் பண்பு உணர்வு குறித்த பயிற்சி முகாம்கள் நடத்துதல்.

2. கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு சட்ட அறிவு விழிப்புணர்வு பயிற்சி முகாம்கள் நடத்துதல்.

3. கிராமப்புற மகளிருக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த கருத்தரங்கு மற்றும் பயிலரங்குகள் நடத்துதல்.

4. கோட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் சார் ஆட்சியர்களுக்கு வரதட்சணைக் கொடுமையால் இறக்கும் பெண்களின் பிரேத விசாரணை குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் காவல் துறையினரின் உதவியுடன் நடத்துதல்.

அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களையும் வரதட்சணை ஒழிப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. ஒவ்வொரு

மாவட்டத்திலும் அலுவல் சாரா 5 நபர்களை வரதட்சணை ஒழிப்புக் குழு உறுப்பினர்களாக நியமித்துள்ளது. இக்குழு காலமுறையில் கூடி வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகும் பெண்களிடம் மனுக்களைப் பெற்று அம்மனுக்கள்மீது காவல் துறை உதவியுடன் நடவடிக்கை எடுத்து வருகிறது.

2002-2003 ஆம் ஆண்டுக்கு ரூ.1.72 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.34. பாலின நேர்மை நெறி**

(Gender Equity) பாலினப் பாகுபாட்டை நீக்குதல், ஆண், பெண் விகிதாச்சார முரண்பாடுகளைக் களைதல், பணிபுரியும் மகளிரின் அன்றாட வாழ்க்கைச் சுமைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு ஆதரவான சேவைகள் அளித்தல் போன்றவை நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

**2.35. சட்டக் கல்வி**

சட்ட விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடத்துவதற்கு 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.36. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டம்**

ஈ.வெ.ரா. மணியம்மையார் விதவை மகள் திருமண உதவித் திட்டம், அன்னை தெரசா ஆதரவற்ற மகளிர் திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டம், தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், அன்னை சத்யா அரசு குழந்தைகள் காப்பகம், தமிழக அரசு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், சத்தியவாணிமுத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைகளில் 20.21 விழுக்காட்டிற்கு குறையாமல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டு நிதி மற்றும் செயல் பயன் அளிக்கப்படும்.





## அத்தியாயம்–3

### மகளிர் நல மேம்பாடு

**3.1** 1983 ஆம் ஆண்டு தமிழக அரசால், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மகளிரது மேம்பாடு மற்றும் அதிகார பகிர்வுக்காக நிறுவப்பட்டது.

**3.2. மகளிர் திட்டம்**

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) நிறுவன நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டம் பரிட்சார்த்த முறையில் தர்மபுரியில் தொடங்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டு முதல் சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கும் அதனைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 1995-96 ஆம் ஆண்டு முதலாக இத்திட்டம் மிகவும் சிறப்பாகவும் பயனுள்ள வகையிலும் செயல்படுத்தப்பட்டதால், மாநில வரவு செலவுத் திட்டத்தின்கீழ் இது கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து தற்போது அனைத்து ஊரக மற்றும் சென்னை நகரம் உட்பட அனைத்து நகர்ப்புற பகுதிகளுக்கும் பரவியுள்ளது. இத்திட்டம் பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம் என்ற பெயரில் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் ஆதரவுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் வளர்ச்சி கண்காணிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு முதற்கொண்டு இத்திட்டம் நிலைத்த தன்மையை அடையவும் மற்றும் குடியிருப்புகள் மற்றும் நகர்ப்புற பிரிவு/குடிசைப் பகுதிகளில் விரிவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்கள் எண்ணிக்கை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. 2002 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை, கிராமப்புறங்களில் 88,121 சுய உதவிக் குழுக்கள் (15,17,683 உறுப்பினர்கள்) மற்றும் நகர்ப்புறங்களில் 17,705 சுய உதவிக் குழுக்கள் (3,03,091 உறுப்பினர்கள்) ஆக மொத்தம் 1.05 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இச்சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 18.20 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

[2002 ஏப்ரல் 26

## அட்டவணை-1

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டத்தில் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சி:

31-3-2002 தேதியின்படி

| விவரங்கள் | மொத்தம் |
|---|---|
| சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1,05,826 |
| உறுப்பினர்களின் எண்ணிக்கை | 18,20,774 |
| குழு சேமிப்புத் தொகை | ரூ.175.85 கோடி |

கிராமப்புற சுய உதவிக் குழுக்களுக்காக மகளிர் திட்டமும், ஊரக வளர்ச்சித் துறையின் பொன் விழா கிராமப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதேபோன்று நகர்ப்புற சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் மகளிர் திட்டமும் பொன்விழா நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வசதி வங்கிகள் மூலம் அதிகரித்துள்ளது. மகளிர் திட்ட வரைமுறைப்படி, வணிக வங்கிகளில் மட்டும் அல்லாது தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் சுய உதவிக் குழுக்கள் கணக்குகள் தொடங்கி, கடன் பெற்று வருகின்றன.

தற்காலத்தில் பெண்கள் தங்களின் பலம் மற்றும் பலவீனங்கள், குடும்பத்தின் நிதி ஆதாரம் மற்றும் அவற்றை சமாளிக்கும் திறமை ஆகியவற்றை நன்கு அறிந்தவர்களாக உள்ளனர். மேலும் வங்கிக் கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு, குழு மற்றும் மகளிருடையதாகும். ஆகையால் எந்தத் தொழில்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும், பெறும் கடனின் அளவையும் குழு உறுப்பினர்களின் முடிவுக்கு விடுவதே நல்லதாக இருக்கிறது. திட்ட அமலாக்க அலுவலகங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆலோசகர்களாகவும் வழி நடத்துனர்களாகவும் மட்டுமே செயல்பட்டு, இறுதி முடிவுகள் குழுக்களிடமே விட்டுவிடப்படுகின்றன.



2002 ஏப்ரல் 26]

ஒரு சுய உதவிக் குழு கடன் பெற தகுதியுடையதாக இருந்தால், வங்கிகள் போன்ற பிற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுத் தரப்படுகிறது. 31-03-2002 நிலவரப்படி வேளாண்மை, தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, குடிசை மற்றும் கிராமத் தொழில் மற்றும் இதர சிறிய தொழில்கள் மேற்கொள்ள 5,54,909 சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு ரூ.26,210.26 இலட்சம் வங்கிக் கடன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1994-ல் மகளிர் "தொலைநோக்குத் திட்டம் 2000" என்ற மகளிர் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் திட்டத்தினை அரசு வெளியிட்டது. சேமிப்பு மற்றும் நிதி வசதிகளை சுய உதவிக் குழுக்களுக்கு அளித்து அதன் மூலம் மகளிர் சமூகப் பொருளாதார முன்னேற்றம் அடையவும், மக்களாட்சி நெறிமுறைகளில் சமத்துவம் ஏற்படுத்தவும் வழி வகுக்கப்படுகிறது. "மகளிர் தொலைநோக்குத் திட்டம் 2000"-த்தின் குறிக்கோளை முனைப்புடன் நடைமுறைப்படுத்துவதே 2002-2003 ஆம் ஆண்டின் முக்கிய குறிக்கோளாகும்.

தொலைநோக்குத் திட்டம் 2000-ன் எதிர்பார்ப்புப்படி சுய உதவிக் குழுக்களைக்கொண்டு ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் அளவிலான கூட்டமைப்புகளை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் தரப்படும். தற்சமயம் இக்குழுக்கள் அனைத்தையும் நிலையான தன்மையை அடையச்செய்வது மிக அவசியமாகிறது. இக்குழுக்களின் திறனை வளர்த்து அதன் மூலம் மகளிரின் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை பெறச் செய்தல், தொழிற் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி வழங்குவது ஆகியவை இந்த ஆண்டின் முக்கிய நோக்கங்களாகும்.

இந்தக் குழுக்களின் கூட்டமைப்பு தன்னம்பிக்கையோடு சுயமாக செயல்படும் அளவில் வளர்ச்சி அடையும்பொருட்டு, இக் கூட்டமைப்புகளுக்கு திறன் வளர்க்கும் பயிற்சியளிப்பதோடு, சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படும். மகளிர் திட்டச் செயல்பாடுகளை வட்டார அளவிலான கூட்டமைப்புகள், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து கண்காணிக்கும், வட்டார அளவிலான கூட்டமைப்புகள் காலப்போக்கில் திறன் பெற்று தொண்டு நிறுவனங்களின் பங்கினை மாவட்ட அளவில் ஏற்றுக்கொள்ளும். மேலும் இந்தக் குழுக்கள் சுய சார்பு நிலை அடையும் வகையிலும், இதுவரை திட்டத்தில் சேராத குடிசைப்புறங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினரைச் சேர்க்கும்

[2002 ஏப்ரல் 26

வகையிலும் உருவாக்கப்படும். இவற்றுடன் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் வெளிக்கடன் வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். 2001-2002 ஆம் ஆண்டு முதல் மகளிர் திட்டத்தினை மற்ற துறைகள் செயல்படுத்தும் திட்டங்களான மத்திய அரசு பொன்விழா கிராம வளர்ச்சித் திட்டத்துடன் (எஸ்.ஜி.எஸ்.ஒய்) இணைத்து ஊரகப் பகுதிகளிலும், நகர்ப்புற வளர்ச்சித் (எஸ்.ஜே.எஸ்.ஆர்.ஒய்) திட்டத்துடன் இணைத்து நகரப்பகுதிகளிலும், செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மகளிர் திட்டத்தினை 2002-2003 ஆம் ஆண்டில் செயல்படுத்த தற்போது ரூ.22.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற மாவட்டங்களுக்கு இணையாக சென்னை மாவட்டத்திலும் மகளிர் திட்டம் முழுவீச்சில் செயல்படுத்தப்படும். புவியியல் பரப்பு ரீதியில் அல்லாமல் தேவையின் சிறப்பு அடிப்படையில் நன்கு ஆய்ந்து சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்படவுள்ளன.

2002-2003 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:

(1) சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நிலைத்த தன்மை அடையும் வகையில் வளர்ச்சியடையச் செய்தல்.

(2) சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளான கிராம அளவிலான குழுமம் மற்றும் வட்டார அளவிலான குழுமங்களை உருவாக்க ஊக்கமளித்தல்.

(3) தகுதியுடைய சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் வழிகாட்டு முறைகளின்படி, தேவையின் அடிப்படையில் நடைமுறையிலுள்ள திட்டங்களில் குழு கடன் வசதி ஏற்படுத்தித் தருதல்.

(4) கிராம வளர்ச்சி குழுமங்களை ஏற்படுத்தி, சுய உதவிக் குழுக்கள் அரசுத் திட்டங்களின் பயனை ஒருங்கே பெற்றிடும் வகையில் பல்வேறு அரசுத் துறைகள், முக்கியமாக ஊராட்சிகள் மற்றும் இதர துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்தல்.

(5) தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி மற்றும் தொழில் பயிற்சித் திட்டங்கள் மூலமாக சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கு அதிக ஈடுபாடு கொள்ளச் செய்தல் மற்றும் அவர்களது திறமையை வளர்த்தல்.



2002 ஏப்ரல் 26]

(6) சுய உதவி குழுக்களில் உள்ள கல்வியறிவற்ற பெண்களை படிக்க மற்றும் எழுதச் சொல்தல்.

**2. அரசு சாரா தொண்டு நிறுவன ஆதார மையம்**

சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை பெருகிவரும் நிலையில், தொண்டு நிறுவனங்களின் திறனை வளர்த்து அவர்களை ஊக்குவிப்பது அவசியமாகிறது. மகளிர் திட்டத்தின் தரத்தினை நிலைப்படுத்த விருப்பமுள்ள தொண்டு நிறுவனங்களை ஊக்குவித்து அவர்களின் திறன் வளர்க்க அரசு உதவி செய்யும். மக்களிடையே இயல்பாகவே இருக்கும் தன்னார்வ முயற்சியை அரசு உதவியுடன் ஊக்குவிப்பது புதிய அணுகுமுறையாகும். 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தொண்டர்களின் ஆதார மையம் சுகாதாரம், கல்வி, சட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்தி, பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் போன்றவற்றில் தன்னார்வத் தொண்டினை ஊக்குவித்து வழி நடத்துகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை இந்நிறுவனம் ரூ.74.34 இலட்சம் மதிப்பீட்டு செலவில் மேற்கொள்ளும்:

1. தன்னார்வலர்களை ஒன்று சேர்த்து, அவர்களை ஒருங்கிணைத்து தன்னார்வத் தொண்டினை ஊக்குவித்தல்

2. தொண்டு நிறுவனம் மற்றும் தன்னார்வலர்களின் பயிற்சி மற்றும் திறனை வளர்த்தல்

3. புள்ளி விவரங்களைச் சேகரித்து அதன் அடிப்படையில் ஆராய்ச்சியும், கட்டுரைகளும் வெளிக்கொணருதல்

4. தொண்டு நிறுவனங்களுக்கு ஆலோசனையும் அறிவுரையும் வழங்குதல்

**3.3. மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் விற்பனை மையம்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினால் 29 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான தொழிற்பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் பயிற்சிகளை மாவட்ட அளவில் நடத்துவதற்கு சொந்தமாக பயிற்சி மையங்கள் இல்லை. எனவே இணைய தள வசதியுடன் கூடிய, 29 மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் விற்பனை மையங்கள் மாவட்ட தலைநகரங்களில், தலா

ஒன்று வீதம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டில் ஆறு மையங்கள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டிற்கு மேலும் 3 சமூக ஆதார மையங்கள் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தினால் மாவட்ட தலைமையிடம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள தாழ்த்தப்பட்ட/பழங்குடியின வகுப்பைச் சார்ந்த 10,000 இளம் பெண்கள் உட்பட மொத்தம் 50,000 இளம் பெண்கள் பயனடைவர்.

### 3.4. மகளிர் மனமகிழ் மையங்கள்

சத்தான உணவு, உடல் நலம், கல்வி மற்றும் பிற தேவைகள் அன்றி உழைக்கும் ஏழை பெண்களுக்கு மனமகிழ்ச்சியும் மிக இன்றியமையாத தேவையாகும். எனவே சுய உதவிக் குழுக்களில் பெண்களின் பயனுக்காக மனமகிழ் மன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. ஊராட்சியில் உள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் இந்த மையத்தில் கூடி தங்களுக்கு ஆர்வமுள்ள நல்ல கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும், சமூகப் பிரச்னைகளைக் கூடி விவாதிக்கவும், விளையாட மற்றும் பிறவற்றிற்கும் பயன்படுத்துகின்றனர். குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் இம்மையங்களில் செய்தித்தாள்கள் மற்றும் வார இதழ்கள், முற்றம் உட்பட மாத இதழ்களை படிப்பார்கள். இதுவரை 250 மனமகிழ் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.1.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி 25 புது மகளிர் மனமகிழ் மன்றங்கள் உருவாக்கப்படும். இத்திட்டத்தினால் 10,000 ஆதிதிராவிட/பழங்குடி மகளிர் உட்பட சுமார் 50,000 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன் பெறுவர்.

### 3.5. ஐந்து இலட்சம் மகளிருக்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்த தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல்

2001-2002 ஆம் ஆண்டு, அரசு 5 இலட்சம் பெண்களுக்கு சுயவேலை வாய்ப்புக்கான தொழில் திறன் வளர்க்கும் புதிய பயிற்சித் திட்டத்தினை ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படுத்தியது. இந்த இணையற்ற திட்டம் அரசு துறைகளான ஊரக வளர்ச்சி, வேளாண்மை, பட்டுப் பூச்சி வளர்ப்பு, தொழில் மற்றும் வணிகவியல், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வாரியம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைகள், குடிசைமாற்று வாரியம் போன்றவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், ஒருங்கிணைப்பு முகவராக





செயல்பட்டு இத்திட்ட செயலாக்கத்தை வடிவமைத்து, கண்காணித்து வருகின்றது. பெண்கள் குறைந்த வட்டிக்கு கடன்கள் பெற்று சிறிய தொழிற்கூடங்கள் அமைக்க வசதியாக அவர்களுக்கு மேலாண்மை மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 20,000 பெண்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளித்துள்ளது. 2002-2003-ல் மேலும் 20,000 பெண்களுக்கு இத்திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க ரூ.166.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் சுமார் 4,000 பெண்கள் ஆதி திராவிட/பழங்குடியின பயனாளிகளாவர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்ற துறைகளால் செயல்படுத்தப்படும் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்ட முன்னேற்றத்தினைக் கண்காணித்து வருகின்றது. இத்துறைகள் 1,04,484 மகளிர்க்குப் பயிற்சி அளித்துள்ளன. இத்திட்டத்தில் சொல்லப்பட்டதுபோல் பயிற்சி பெற்றவர்களில் 80 சதவிகிதம் பேர் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்தவர்கள் மற்றும் 20 சதவிகிதம் பேர் சுய உதவிக் குழு உறுப்பினராக இல்லாத மகளிர். இந்தத் திட்டப் பயிற்சியாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான, மாவட்ட அளவிலான தொழில்நுட்பக் குழு நன்னடத்தை உத்திகளை மையமாகக்கொண்டு பயன்படுத்தி பயனாளிகளைத் தேர்வு செய்தனர். இந்த பயிற்சியாளர்களுக்கு, கேட்பு மற்றும் தேவைக்கேற்ப பொருத்தமான தொழில் திறன் வளர்க்கும்/மேம்பாட்டுப் பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. அதேபோல் கடன் வசதிகளும் மற்றும் கடன் அதிகரிப்பு வசதிகளும் செய்து தரப்படுகிறது. மற்ற துறைகளால் பரிந்துரைக்கப்பட்ட 702 பயிற்றுநர்களுக்கு ஆதார பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் மொத்தம் 1,20,000 மகளிர்க்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.6. மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டு 2001

2001 ஆம் ஆண்டு மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது. தேசிய வளர்ச்சி நீரோட்டத்தில் பெண்களின் உரிய நிலையை வெளிப்படுத்தும் வகையில் 2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு பெண்கள் தொடர்பான பிரச்சனைகள் குறித்து மாதாந்திர நிகழ்ச்சி நிரல் தயார் செய்து தொடர் நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றது. இந்நிகழ்ச்சிகளை உரிய வழியில் மேற்கொள்ள

[2002 ஏப்ரல் 26

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஓர் ஒருங்கிணைப்பு நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் யுனிசெப் (UNICEF) நிறுவனத்துடன் கூட்டாக மகளிரின் தற்போதைய நிலையை ஆய்வு செய்து பெண்களுக்குச் சம உரிமை அளிக்கும் வகையில் மாநில பாலியல் கொள்கையை வரைவு செய்து வருகின்றது. மகளிர் அதிகாரப் பகிர்வின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, "மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டு 2001" நடைமுறைப்படுத்தல் ஜூன் 2002 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

### 3.7. அனைத்து குழுக்களிலும் பெண்களுக்கு 30 விழுக்காடு பிரதிநிதித்துவம்

பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கும் வகையில், சொந்தமாக சிந்தித்து முடிவு எடுப்பதில் பெண்களின் ஈடுபாடு கண்டிப்பாகத் தேவையெனக் கருதி, சட்டபூர்வமான மற்றும் சட்டபூர்வமல்லாத குழுக்களில் பெண்களுக்கு 30 விழுக்காடு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணை முறையாக செயல்படுத்தப்படுகிறதா என்பது குறித்து உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

### 3.8. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள புதுமணத் தம்பதிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு

விறகு அடுப்பில் சமையல் செய்யும் கிராமப்புற மகளிரது இன்னலைப் போக்கவும், உடல்நலம் மேம்படவும், உடல்நலக்கேட்டினை குறைக்கவும், காடுகள் அழிக்கப்படுவதைத் தவிர்க்கவும், மாதவிடாய் காலத்தில் விறகு சேகரிக்கும் இன்னலிருந்து அவர்கள் விடுபடவும் அரசு இத்திட்டத்தை உருவாக்கி 2001-2002 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இதன்படி அரசு திருமண உதவித் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறத் தகுதி இல்லாது போகும் புதிதாக திருமணம் ஆன சுய உதவிக் குழு உறுப்பினர் அல்லது அவர்களது மகள் முதல் முறையாக சமையல் எரிவாயு இணைப்புப் பெற வசதியாக ரூ.1000 வைப்புத் தொகையாக வழங்கப்படும். 2001-2002 ஆம் ஆண்டில் 5000 புதுமணத் தம்பதிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பு வழங்க ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பயனாளிகள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டுக்கு 1000 தாழ்த்தப்பட்ட/பழங்குடியின புதுமணத் தம்பதிகள் உட்பட 5000 புதுமணத் தம்பதிகளுக்கு உதவி செய்ய மேலும் ரூ.50.00 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 26]

## அத்தியாயம்–4

## ஊனமுற்றோர் மறுவாழ்வு

### 4.1. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகம்

ஊனமுற்றோருக்கான நல்வாழ்விற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் வகையில மாநில அரசால் கடந்த 1992-93-ல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. ஊனமுற்றோருக்கான சட்டம் 1995-ன்படி 16-4-1999 முதல் ஆணையர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

அனைத்துப் பிரிவு மக்களின் நல்வாழ்வுக்கு பொறுப்பேற்றிருப்பதே ஒரு நல்லரசின் கடமையாகும். அரசின் உதவிக்கரம் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களையும் ஊனமுற்றோரையும் சென்றடைதல் வேண்டும். பல்வேறு நவீன திட்டங்கள் பொதுவாக இந்த நோக்கத்தைச் சார்ந்தே உள்ளன.

ஊனமுற்றோருக்கான அரசுக் கொள்கை, ஊனத்தைத் தடுத்தல், உரிய நேரத்தில் அவர்களுக்கு உதவுதல் எனும் நோக்கத்துடனும் சாதாரண மனிதர்களைப்போல அவர்களும் சமுதாயத்திலும் குடும்பத்திலும் வாழ்க்கை நடத்த பிரதானமாக வகுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த கொள்கை, ஊனத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தேவையான மருத்துவ வசதி மற்றும் தொழில், பொருளாதாரம் மற்றும் சமூக அளவில் அவர்களை சுய சார்பு குடிமக்களாக முன்னேற்றி, சமுதாயத்தில் அவர்களையும் மற்றவர்களோடு ஒன்றிணைத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் அரசு, தொழில் முனைவோர், தயாள மனம் கொண்டோர் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உட்பட அனைத்து சமுதாயத்தினருக்கும் ஒருங்கிணைந்த பொறுப்புணர்ச்சி உண்டு.

மேற்காணும் அரசுக் கொள்கையின் அடிப்படையில் பின்வரும் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும்:

* ஊனமுற்றோர் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சிரமமின்றி சென்றுவரவும், அவர்கள் உடல் தகுதிக்கு ஏற்ப உதவி உபகரணங்கள் வழங்குதல் உட்பட ஊனத்தின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றைக் கண்டறிதல், ஊனத்தின் காரணத்தை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து நிவர்த்தி செய்தல்,

அதற்கான தடுப்பு நடவடிக்கையாக போலியோ, அம்மை, ருபெல்லா பொன்னுக்குவீங்கி போன்ற நோய்களைத் தடுப்பதற்கான தடுப்பூசி போடுதல்.

* மேலும், ஒவ்வோர் ஊனமுற்ற குழந்தையும் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி பெறவும் ஊனத்தின் அளவுக்கேற்றவாறு சிறப்புக் கல்வியோ, ஒருங்கிணைந்த கல்வியோ பெறவும் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

* ஊனமுற்றோரின் தகுதி, தேவை, அளவுக்கேற்ப அவர்களை சாதாரணமானவர்களோடு ஒன்றிணைந்து வாழும் அளவுக்கு உயர்த்துதல்.

* ஊனமுற்றோரின் பிரச்சனைகளைப் புரிந்து கொண்ட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்க உரிய ஆசிரியர் பயிற்சி மையங்கள் அமைத்தல்.

* மேலும், ஊனமுற்றோருக்கு உதவிடும் வகையில் கல்வி உதவித் தொகை, இலவசப் பயணச் சலுகை, கல்வி உபகரணங்கள், சிறப்பு உதவி உபகரணங்கள், சிறப்பு ஆசிரியர்கள் நியமனம், விடுதி வசதி ஆகியவற்றை அளித்து உயர்கல்வி பெற தேவையான உதவிகள் செய்தல்.

* ஊனமுற்றோருக்கான உரிய தொழிலைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய நிறுவனத்தில் பயிற்சி அளிக்க, பயிற்சி மையங்களை நடத்துதல்.

* இவர்கள் செய்யும் தொழிலுக்கேற்ற தேவையான உபகரணங்கள் வாங்கிட நிதி உதவிக்கு ஏற்பாடு செய்தல்.

* சுயதொழில் செய்திட கடன் பெறும் வகையில் வங்கி மற்றும் இதர நிறுவனங்களின் மூலமாக உதவிடல்.

* அனைத்து பொதுக்கட்டடங்களிலும் ஊனமுற்றோருக்கு கட்டட அமைப்பில் தடையற்ற சூழலை உருவாக்குதல் மற்றும் ஊனமுற்றோருக்கு ஏற்படும் அனைத்துத் தடைகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.





* சாதாரணமானவர்களைப்போல ஊனமுற்றவர்களும் சமூக கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வண்ணம் வழி வகைகள் செய்தல்.

இதுபோன்ற நிதியுடன் இணைந்த நலத் திட்டங்கள் மேலும் விரிவாக அடுத்து வரும் பத்திகளில் தரப்பட்டுள்ளன.

### 4.2. ஊனமுற்றோருக்கான சட்டம் 1995–ஐ அமலாக்குதல்

ஊனமுற்றோருக்கு சமவாய்ப்பு அளிக்கவும் அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் சமுதாயத்தினரோடு இணைந்து அவர்கள் முழுவதுமாக பங்கு பெறும் வகையில் கடந்த 1995-ல் ஊனமுற்றோருக்கான சட்டம் இயற்றப்பட்டது. தமிழ்நாட்டில், இச்சட்டம் மிகவும் சிறந்த முறையில் செயல்பட ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்கக இயக்குநரை மாநில ஆணையராக நியமித்து துறைத் தலைமைப் பதவியோடு இத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 4.3. மாநிலத்தில் ஊனமுற்றோரின் எண்ணிக்கை

தேசிய மாதிரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் 1.9 சதவிகிதம் ஊனமுற்றவர்கள். 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகையின் 1.9 சதவிகிதம் என்பது 10,61,320 பேர் என கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும் கடந்த 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஊனமுற்றோரின் தொகை கணக்கெடுக்கப்பட்டு அதன் விவரம் எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.4. ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வி

ஊனமுற்றோருக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்புப் பள்ளிகளின் மூலம் அவர்களுக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகள் நகராட்சிப் பள்ளி, அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் மானியம் பெறாத சிறப்புப் பள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு:—

[2002 ஏப்ரல் 26

| வ. எண் | பள்ளிகளின் வகை | அரசுப் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் | | நகராட்சிப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | மானியம் பெறும் பள்ளிகள் | மானியம் பெறாத பள்ளிகள் | | |
| 1 | பார்வையற்றோருக்கான பள்ளி | 11 | 11 | 5 | – | 27 |
| 2 | (a) பேச்சுத் திறன் குறைந்து செவித் திறன் இழந்தோர் பள்ளி | 10 | 20 | 37 | 2 | 71 |
| | (b) முன் பருவப் பள்ளி | 2 | | | | |
| 3 | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி | 1 | 12 | 74 | – | 87 |
| 4 | கடும் உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி | 1 | 14 | 41 | – | 56 |
| 5 | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான பள்ளி | – | 1 | – | – | 1 |
| | மொத்தம் | 25 | 58 | 157 | 2 | 242 |



2002 ஏப்ரல் 26]

**அரசு சிறப்புப் பள்ளிகள் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:**

| பார்வையற்றோருக்கான பள்ளிகள் | பேச்சுத்திறன் மற்றும் செவித் திறன் குறைந்தோருக்கான பள்ளிகள் | கடுமையான கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள் |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | கடலூர் | மதுரை | சென்னை |
| கடலூர் | தருமபுரி | | |
| தருமபுரி | ஈரோடு | | |
| மதுரை | காஞ்சிபுரம் | | |
| நாகர்கோவில் | தாம்பரம் | | |
| பூவிருந்தவல்லி | உதகமண்டலம் | | |
| புதுக்கோட்டை | புதுக்கோட்டை | | |
| சேலம் | சேலம் | | |
| சிவகங்கை | தஞ்சாவூர் | | |
| தஞ்சாவூர் | விருதுநகர் | | |
| திருச்சிராப்பள்ளி | | | |

அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன:—

(அ) இலவசக் கல்வி, உணவு மற்றும் உறைவிடம்.

(ஆ) ஆண்டிற்கு இரண்டு இணை இலவச சீருடை.

இந்த சிறப்புப் பள்ளிகளில் பயிலும் அனைத்து ஊனமுற்ற மாணவர்களும் இந்த வசதிகளைப் பெற்று வருகிறார்கள்.

பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கென 20 முன் பருவப் பள்ளிகள் கடலூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், சென்னை, உதகமண்டலம், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள அரசு காது கேளாதோருக்கான பள்ளிகளிலும், வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும்

இணைந்து இயங்கி வருவதுடன் இராமநாதபுரத்தில் உள்ள அரசு அனாதைக் குழந்தைகள் காப்பகத்திலும், கோயம்புத்தூரில் உள்ள அரசு பார்வையற்றோருக்கான பள்ளியிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

மதுரையிலுள்ள கடும் உடல் ஊனமுற்றோருக்கான அரசுப் பள்ளி தற்போது 5 ஆம் வகுப்பு வரை உள்ள ஆரம்பப் பள்ளியாக இயங்கி வருகிறது. இப்பள்ளி ரூ.6.94 இலட்சம் செலவில் 8 ஆம் வகுப்பு வரை நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

**4.5. ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை**

இத்திட்டத்தின்கீழ் பட்ட மேற்படிப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்றோருக்குப் படிப்பிற்கான பொருள்கள் வாங்குவதற்கு நிதியுதவி அளித்திட கீழ்க்கண்டவாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (அ) | 1-5 ஆம் வகுப்பு வரை | ரூ.25 (மாதம் ஒன்றுக்கு) |
| (ஆ) | 6-8 ஆம் வகுப்பு வரை | ரூ.75 (மாதம் ஒன்றுக்கு) |
| (இ) | 9-12 ஆம் வகுப்பு வரை | ரூ.110 (மாதம் ஒன்றுக்கு) |
| (ஈ) | பட்டப் படிப்பு | ரூ.150 (மாதம் ஒன்றுக்கு) |
| (உ) | தொழில் மற்றும் முதுநிலை பட்ட மேற்படிப்பு | ரூ.195 (மாதம் ஒன்றுக்கு) |

2002-2003-ல் இதற்கென ரூ.92.45 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**4.6. பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை**

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகள் எழுத பார்வையுள்ள உதவியாளர் ஒருவரை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

இதற்கு உதவிபுரிபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.30 வீதம் உதவித் தொகையை இத்துறை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடையும் 200 பார்வையற்ற மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:—

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.
2. பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.





3. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.
4. பார்வையற்றோருக்கான புனித லூயிஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.7. அரசு மண்டல பிரெய்லி அச்சகம்**

பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளி, பூவிருந்தவல்லியில் இயங்கிவரும் மண்டல பிரெய்லி அச்சகம் நவீனமயமாக்கப்பட்டு இரண்டு புதிய கணினிமயமாக்கப்பட்ட சிறிய பிரெய்லி அச்சு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இந்த இரண்டு அலகுகளும் கடந்த 4-8-2001 முதல் இயங்கி வருகின்றன.

2002-2003 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ.15.74 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.8. சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி**

பல்வகை ஊனத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்கும் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பிரத்தியேகப் பயிற்சி தேவைப்படுகிறது. இந்த சிறப்புப் பயிற்சியின் காலம் பத்து மாதங்களாகும். இதன் விவரங்கள் கீழ்வருமாறு:—

**(அ) பார்வையற்றோருக்கு**

பூவிருந்தவல்லியில் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள மண்டல பயிற்சி மையத்தில் பார்வயற்றோருக்கான கல்வி கற்பிக்க பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதில் மாநில அரசால் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு சேர்த்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

**(ஆ) செவித்திறன் குறையுடையோருக்கு**

செவித்திறன் குறைந்தோருக்குக் கற்பிக்கும் ஆசிரியர் பயிற்சி சென்னையிலுள்ள சிறுமலர் காது கேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளியில் நடத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 50 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு மாநில அரசால் தேர்வு செய்யப்படும் 10 ஆசிரியர்களுக்கும் சேர்த்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

**(இ) மனவளர்ச்சி குன்றியோருக்கு**

மனவளர்ச்சி குன்றியோருக்கு கற்பிக்கும் ஆசியர்களுக்கான பயிற்சி, சென்னையிலுள்ள பால விஹார் மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளியில் நடைபெறுகிறது. பயிற்சி பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 25 ஆகும்.

### 4.9. ஊனமுற்றோருக்கான பயிற்சி

பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி மையத்தில் ஒவ்வொரு வருடமும் மொத்தம் 30 பார்வையற்றோருக்கு கீழ்க்கண்ட தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது:—

1. பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஓராண்டு காலம்)
2. புத்தகம் கட்டுபவர் (ஓராண்டு காலம்)
3. மின்கம்பி சுற்றுவோர்கள் (ஆறு மாதங்கள்).

பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசமாக இருப்பிடம், உணவுடன் இரண்டு இணை சீருடைகளும் வழங்கப்படுகின்றன.

கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதோருக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, தற்போது பேசும் திறன் இழந்து காது கேளாத 16 மாணவர்கள் பொருத்துநர் பிரிவில் பயிற்சி பெற்று வருகின்றனர். ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 4.10. நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம்

நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம் தற்போது கிண்டி தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. இந்த உற்பத்திக் கூடத்தில் ஆண்டுதோறும் ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

2002-2003 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ.54.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 4.11. பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) பார்வையற்ற, ஆதரவற்ற, அனாதைப் பெண்கள் இந்த இல்லத்தில் சேர்க்கப்பட்டு சாக்குக் கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் இவர்களுக்கு 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள் மற்றும் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதில் வேலை அளிக்கப்படுகிறது. இப்பொருள்கள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தம் 40 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் பயிற்சி பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

### 4.12. ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீடு

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் பணியிடங்கள் மற்றும் பயிற்சியிடங்களில் மூன்று சதவிகிதம் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்று சதவிகிதத்தில் ஒரு சதவிகிதம் பார்வையற்றோருக்கும், ஒரு சதவிகிதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், ஒரு சதவீதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில் ஆசிரியர்கள் பணியிடத்தில் பார்வையற்றவர்களுக்கு இரண்டு சதவிகிதமும், ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் காதுகேளாத பேசும் திறன் அற்றவர்களுக்கு இரண்டு சதவிகிதமும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.13. வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை கீழ்க்குறிப்பிட்டவாறு 5 வருட காலத்திற்கு அல்லது 40 வயது வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை இதில் எது முன்னரோ அது வரை வழங்கப்படுகிறது:-

[2002 ஏப்ரல் 26

(அ) வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம் பின்வருமாறு:-

1. பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள்—ரூ.300 மாதம் ஒன்றிற்கு
2. புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி/பட்டப் படிப்பிற்குகீழ்—ரூ.250 மாதம் ஒன்றிற்கு
3. பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குக்கீழ்—ரூ.200 மாதம் ஒன்றிற்கு

(ஆ) 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

(இ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து குறைந்த அளவு ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் 1200 பார்வையற்ற நபர்கள் பயனடைகிறார்கள்.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.14. சுய வேலைவாய்ப்பு**

ஊனமுற்றோருக்கு உதவும்பொருட்டு அவர்கள் சுய வேலை வாய்ப்பில் ஈடுபடுவதற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக் கொள்ளவும் பெட்டிக்கடை அமைத்துக்கொள்ளவும் இத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. ரூ.2000 அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. 2002-2003-ல் இத்திட்டத்தில் குறைந்தபட்சம் 1000 பேர்கள் பயனடையும்வண்ணம் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊனமுற்றோருக்கான சுய வேலை வாய்ப்புக்கு மேலும் உந்துதல் அளிக்கும்பொருட்டு, தேசிய ஊனமுற்றோர் நிதி வளர்ச்சிக் கழகத்திலிருந்து பெறப்படும் கடன்களுக்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

**4.15. ஊனமுற்றோருக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்**

ஒவ்வோர் ஆண்டும் ஊனமுற்றோருக்கு இத்துறை மூலம் இலவசமாக மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், காதொலிக் கருவிகள், கருப்புக் கண்ணாடிகள், மடக்குக் குச்சிகள், பிரெய்லி கை கடிகாரங்கள், சூரிய ஒளியினால் இயங்கும் பேட்டரிகள் வழங்கப்படுகின்றன.



2002 ஏப்ரல் 26]

**4.16. பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கான சலுகைகள்**

பார்வையற்றவரைத் திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:—

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்காக ரொக்கத் தொகை ரூ.3000 மற்றும்
3. ரூ.7000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம்

ஒவ்வோராண்டும் இத்திட்டத்தின் மூலம் 100 தம்பதிகள் பயனடைவார்கள்.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.17. ஒரு கை அல்லது ஒரு கால் இல்லாதவரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவருக்கான சலுகைகள்**

இத்திட்டத்தின்கீழ் ஒரு கை அல்லது ஒரு கால் இல்லாதவரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவருக்கு கீழ்க்காணும் சலுகைகள் வழங்கப்படுகின்றன:-

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்காக ரொக்கத் தொகை ரூ.2000 மற்றும்
3. ரூ.5000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம்.

ஒவ்வோராண்டும் இத்திட்டத்தின்கீழ் 145 தம்பதிகள் பயனடைவர்.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.10.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.18. காது கேளாத வாய் பேசாத நபர்களைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபருக்கு கீழ்க்கண்டவாறு சலுகைகள் வழங்கப்படுகின்றன:**

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்கென ரொக்கத் தொகை ரூ.2000 மற்றும்
3. ரூ.5000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம்.

[2002 ஏப்ரல் 26

ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் 145 தம்பதிகள் பயனடைவார்கள்.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.10.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.19. உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய பயணச் சலுகை வழங்குதல்**

பார்வையற்றவர்கள் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி 100 கிலோ மீட்டர் தூரம் வரை அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது. ஏனைய உடல் ஊனமுற்றவர்களுக்கு இச்சலுகை சில நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் கல்விக் கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று வர வழங்கப்படுகிறது. பார்வையற்றவரும், கால் முடமானோரும், விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் ஆண்டுக்கு ஒரு முறை அவர்கள் சொந்த ஊருக்குச் சென்று வர இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மனவளர்ச்சி குன்றியவர்களைப் பொறுத்தமட்டில் ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையினை அரசு விலக்கி ஆணையிட்டுள்ளது. இதனால் அனைத்து மன வளர்ச்சி குன்றியவரும் உதவியாளர் ஒருவருடன் இலவச பேருந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.61.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.20. கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை**

கடுமையான ஊனமுற்றோருக்கு மாதம் ரூ.150 வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.115.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.21. மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிருக்கான பாதுகாப்பு இல்லம்**

14 வயதுக்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிரை பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு இல்லம் நடத்தும் தொண்டு



2002 ஏப்ரல் 26]

நிறுவனங்களுக்கு மாநில அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு 30 பெண்கள் பயனடையும்வண்ணம் ஆண்டுதோறும் தலா ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 நிறுவனங்களுக்கு (மதுரை, சேலம், தூத்துக்குடி, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் வேலூர்) மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.22. சட்டப் படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவி**

சட்டப் படிப்பு முடித்த பத்து உடல் ஊனமுற்ற பட்டதாரிகள், வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ஒவ்வொருவருக்கும் ரூ. 3000 உதவித் தொகை வழங்கப் படுகிறது.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.0.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.23. செயற்கை அவயவங்கள் பொருத்தும் துணை நிலையம், மதுரை**

கடுமையான கை, கால் ஊனமுற்ற குழந்தைகளுக்கான அரசுப் பள்ளிகளில் பயிலும் ஊனமுற்ற குழந்தைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு செயற்கை அவயவங்கள் பொருத்தும் துணை நிலையம் ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையத்தின் மூலம் ஊனமுற்ற குழந்தைகளுக்கு மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை மற்றும் உபகரணங்கள் ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன. இது தற்போது மதுரையிலுள்ள கடுமையான கை, கால் ஊனமுற்ற சிறப்புப் பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**4.24. மாநில விருதுகள்**

ஊனமுற்றோருக்கான சேவையைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஊனமுற்றோருக்கு அரிய சேவை புரிந்தவர்களுக்கு கீழ்க்கண்ட மாநில விருதுகள் சுதந்திர தினத்தன்றும், அனைத்துலக ஊனமுற்றோர் தினத்தன்றும் வழங்கப்படுகின்றன:—

ஊனமுற்றோருக்கான திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியமைக்காகச் சிறந்த மாவட்ட ஆட்சியர் விருதும், அதிக அளவில் ஊனமுற் றோருக்கு வேலை வாய்ப்பு வழங்கியமைக்காக

[2002 ஏப்ரல் 26

சிறந்த தொழிலபதிபர் விருதும், சிறப்பாக பணி செய்தமைக்காக சிறந்த ஊனமுற்ற பணியாளர் விருதும், ஊனமுற்றோருக்கு சிறந்த முறையில் கல்வி மற்றும் பயிற்சி அளித்தமைக்காக சிறந்த ஆசிரியர் விருதும், ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவை புரிந்த சமூகப் பணியாளர் விருதும், ஊனமுற்றோருக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்தமைக்காக சிறந்த மருத்துவர் விருதும், ஊனமுற்றோர், மகளிர் மற்றும் குழந்தைகள் நலனிற்காக சிறப்பாக சேவை செய்தமைக்காக சிறந்த நிறுவனங்கள் விருதும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாத மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

**4:25. மாவட்ட மறுவாழ்வு மையங்கள்**

மைய அரசின் உதவியுடன் செங்கல்பட்டில் மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று பலவகைப்பட்ட ஊனமுற்றவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கி வருகிறது. சுமார் 2000 பேர் இதன் மூலம் பயனடைகிறார்கள்.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.34.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தின் இதர 28 மாவட்டங்களிலும் இதைப் போன்ற மாவட்ட மறுவாழ்வு மையங்கள் மாநில நிதியுடன் நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்களின் வாயிலாக அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து அவர்களின் ஊனத்தன்மைக்கு ஏற்றவாறு உதவிகளும் உபகரணங்களும் மற்றும் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.241.59 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.26. அனைத்து விதமான ஊனங்களையும் அடையாளம் காணும் விரிவான மருத்துவ முகாம்கள்**

இளம்பிள்ளைவாதத் தடுப்புத் திட்டம் மாநிலம் முழுவதும் நிறைவேற்றப்பட்ட பிறகு இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களை மட்டும் உள்ளடக்காமல் வாய் பேசாத, காது கேளாத, பார்வையற்ற, மன வளர்ச்சி குன்றிய மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட அனைத்து வகை



2002 ஏப்ரல் 26]

ஊனமுற்றவர்களும் பயன்பெறும் வகையில் விரிவான மருத்துவ முகாம்கள் தற்போது நடைமுறையில் உள்ளன. 2002-2003-ல் காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் நீலகிரி மாவட்டம் தவிர ஏனைய மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றிற்கு 2 வட்டாரங்கள் வீதம் 54 வட்டாரங்கள் பயனடையும்.

2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென அடையாளமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.27. மத்திய அரசின் நிதியுதவியுடன் ஊனமுற்றோருக்காக செயல்படுத்தப்படும் திட்டம்**

**(1) உடல் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான முன்னோடித் திட்டம்**

செங்கல்பட்டில் நிறுவப்பட்டுள்ள இத்திட்டம் மாவட்டத்திலுள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு வேண்டிய மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒரு முன்மாதிரி திட்டமாக ஆரம்பிக்கப்பட்டு 1984 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(2) ஊனமுற்றோருக்கான தேசிய மறுவாழ்வுத் திட்டம் (National Programme for Rehabilitation of Persons with Disabilities)**

ஊனமுற்றோருக்கான தேசிய மறுவாழ்வு திட்டத்தின்கீழ் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் ஊனமுற்றோருக்கான விரிவான சமுதாய மறுவாழ்வு சேவைகள் மாநிலத்திலுள்ள காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தேனி மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் வழங்கப்படும். இம்மாவட்டங்களில் மாவட்ட, வட்டார, ஊராட்சி அளவில் மறுவாழ்வு சேவை ரூ.178.12 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**4.28. மைய அரசின் திட்டம்**

**கிராமப் புனர்வாழ்வுத் திட்டம் (கிராமின் புனர்வாஸ் யோஜனா)**

ஊனத்தைத் தடுத்தல், ஆரம்ப நிலையிலேயே ஊனத்தைக் கண்டறிதல், ஊனமுற்றோருக்கு உதவிகள் மற்றும் உபகரணம் வழங்குதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரும் மைய அரசின் திட்டமான இந்த கிராமின் புனர்வாஸ் யோஜனா (கிராமப் புனர்வாழ்வுத் திட்டம்)

இம்மாநிலத்தில் வேலூர், காஞ்சிபுரம், சேலம், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் மதுரை ஆகிய 6 மாட்டங்களில் செயல்படுத்தப்படும்.

**4.29. அரசு மறுவாழ்வு இல்லங்கள்**

தொழுநோயால் அவதியுறும் ஏழை நோயாளிகளுக்கு புனர்வாழ்வு அளித்திட பத்து அரசு மறுவாழ்வு இல்லங்களை தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட இடங்களில் அமைத்துள்ளது:—

| வ.எண் | | | அரசு மறுவாழ்வு இல்லம் |
|---|---|---|---|
| 1. | பரனூர் | .. | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2. | உளுந்தூர்பேட்டை | .. | விழுப்புரம் மாவட்டம் |
| 3. | பர்கூர் | .. | தருமபுரி மாவட்டம் |
| 4. | புதுக்கோட்டை | .. | புதுக்கோட்டை மாவட்டம் |
| 5. | விண்ணப்பள்ளி | .. | ஈரோடு மாவட்டம் |
| 6. | மனையேறிப்பட்டி | .. | தஞ்சாவூர் மாவட்டம் |
| 7. | யா.புதுப்பட்டி | .. | மதுரை மாவட்டம் |
| 8. | மல்லவாடி | .. | திருவண்ணாமலை மாவட்டம் |
| 9. | செல்லியம்பட்டி | .. | தர்மபுரி மாவட்டம் |
| 10. | தேவியாக்குறிஞ்சி | .. | சேலம் மாவட்டம் |

ஒவ்வோர் அரசு மறுவாழ்வு இல்லத்திலும் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறார்கள் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தானாக வரும் நோயாளிகள் அவர்களுடைய நோயின் தன்மையை மருத்துவர் உறுதிப்படுத்தியபின் இல்லங்களில் சேருவதற்கு அனுமதிக்கப்படுக்கின்றனர். உளுந்தூர்ப்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட தொழுநோய் பிச்சைக்காரர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் கணவனோ அல்லது மனைவியோ எவரேனும் ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் இருவரும் குழந்தைகளுடன் இல்லத்தில் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இல்லங்களில் தங்கும் இல்லவாசிகள் முழுமையாக குணப்படுத்தப்பட்ட நிலையிலோ அல்லது ஒழுங்கீன நடவடிக்கை காரணமாகவோ இல்லத்தை விட்டு வெளியேற்றப்படுகின்றனர்.





இல்லவாசிகளுக்கு இலவச தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி, வெவ்வேறு தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன திரைப்படம், வண்ணத் தொலைக்காட்சி, நூலகம், விளையாட்டு போன்ற பொழுதுபோக்கு வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. இல்லத்தில் தங்கும் இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.15/- மதிப்பீட்டிலும் அவர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.10/- மதிப்பீட்டிலும் உணவு வழங்கப்படுகிறது. சிறப்பு விழா நாட்களில் சிறப்பு உணவு கூடுதலாக ரூ.5/- மதிப்பீட்டில் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஆண்டுக்கு இரண்டு இணை உடைகளுடன் பொங்கல் அன்று இலவச வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் இலவசமாக பாய்கள் மற்றும் நுண்ணிய துளை ரப்பர் காலணிகள் வழங்கப்படுகின்றன. தட்டுகள் மற்றும் குவளைகள் 5 ஆண்டுக்கு ஒரு முறையும் போர்வைகள் மூன்று ஆண்டுக்கு ஒருமுறையும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் முழுமையான மருத்துவ வசதிகளுடன் மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு இல்லத்திற்கும் செலவினம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு இல்லவாசிகளுக்கு வழங்கப்படுகிறது:

| | ஆண்டொன்றுக்கு | (ரூபாய்) |
|---|---|---|
| 1. | செயற்கைக் காலணிகள் மற்றும் செயற்கைக் கால் அவயவங்கள் (தேவை உள்ளவர்களுக்கு மட்டும்) (ஆண்டொன்றுக்கு) | 1000/- |
| 2. | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு (ஆண்டொன்றுக்கு) | 2000/- |
| 3. | பற்பொடி மற்றும் பல்துலக்கும் புருசு வழங்குவதற்கு (ஆண்டொன்றுக்கு) | 2000/- |
| 4. | ஈமச்சடங்கிற்கு (ஒவ்வொரு நபருக்கும்) | 500/- |
| 5. | விளையாட்டுச் சாதனங்கள் வாங்கிட (ஆண்டொன்றுக்கு) | 1200/- |
| 6. | இசைக்கருவிகள் வாங்கிட (ஆண்டொன்றுக்கு) | 400/- |

1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுகள் வழங்கிட

ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உடல் தகுதியுள்ள இல்லவாசிகளுக்கு பாய், துணி நெய்தல், தையல், காலணிகள் உற்பத்திப் பிரிவில் பயிற்சி அளிக்கப்பட்டு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவர்களின் உடல் உழைப்பிற்கு ஏற்றவாறு போதுமான கூலி வழங்கப்படுகிறது. பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் விசைத்தறி ஒன்று இயங்கி வருகிறது.

2002-2003 ஆம் நிதியாண்டிற்கு ரூ.472.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.30. டானிடா திட்டம்**

டானிடா மூலம் பத்து அரசு மறுவாழ்வு இல்லங்களில் கட்டம் 1 மற்றும் 2-ன்கீழ் நில மேம்பாடு, மண்வளப் பாதுகாப்பு, நீர் ஆதார மேமபாடு, கால்நடைப் பராமரிப்பு மற்றும் வேளாண் பொறியியல் ஆகிய திட்டங்களை நல்ல ஆரோக்கிய உடலமைப்பு கொண்ட இல்லவாசிகளின் மூலம் மேற்கொண்டு அவர்களுக்கு தகுந்த கூலிகளும் காப்பு நிதிகளும் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**4.31. அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்**

1954 ஆம் ஆண்டு மார்ச் முதல் நாள் முதல் மேல்பாக்கம் அரசினர் ஏழைகள் பராமரிப்பு இல்லம் 950 என்று நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையுடன் (ஆண்கள் 770 + பெண்கள் 180) ஆரம்பிக்கப்பட்டது. 1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பிச்சைக்காரர்கள் ஒழிப்புத் திட்டம் சட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் பிச்சை எடுப்பவர்களைத் தடை செய்து நீதிமன்றங்கள் மூலமாக அவர்களைத் தண்டித்து மேல்பாக்கம் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் பாதுகாப்புடன் ஓர் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரையிலான தண்டனைக் காலம் வரை அவர்கள் பராமரிக்கப்படுகின்றனர். தண்டிக்கப்பட்ட பிச்சைக் காரர்களுக்கு இவ்வில்லத்தில் இலவச தங்குமிடம், உணவு, உடை, மருத்துவ வசதி அளிக்கப்பட்டு நெசவு, தச்சு, மண்பாண்டம் மற்றும் தையல் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும் இல்லத்திலுள்ள ஆண் இல்லவாசிகளுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு துண்டு, இரண்டு இணை சட்டைகள் மற்றும் கால் சட்டைகளும் பெண் இல்லவாசிகளுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு இணை சேலைகள் மற்றும் ஜாக்கெட்டுகளும் வழங்கப்படுகின்றன. மேலும் பொங்கல் நாளன்று இலவச வேட்டிகளும் சேலைகளும்



வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லவாசிக்கும், பாய், படுக்கை விரிப்பு, தட்டு, டம்ளர், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு முறைப்படியான மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் தண்டனைக் காலம் முடிந்தவுடன் சொந்த ஊருக்குச் செல்வதற்கு இருப்பூர்தி பயணச்சீட்டு மற்றும் பேருந்துக் கட்டணங்கள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு முறைப்படியான மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது.

இவ்வில்லத்திற்கு 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.43.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 5

### சமூகப் பாதுகாப்பு

**5.1** துயருரும் சூழலில் உள்ள சிறார்களுக்கு சேவை புரிவதில் தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது. ஆதரவற்ற, கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்களின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்காக முதல் சீர்திருத்த இல்லம் 1887 ஆம் ஆண்டில் இந்தியாவில் தமிழ்நாட்டில் செங்கல்பட்டு என்னும் இடத்தில் தொடங்கப்பட்டது. இது சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக தொடங்கப்பட்டது.

பிறகு தமிழ்நாடு அரசால் சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் இயற்றப்பட்டது. சிறார்களின் பாதுகாப்பிற்கென இச்சட்டம் இந்தியாவில் முதன்மையாக இயற்றப்பட்டது. தமிழ்நாடு குழந்தைகள் சட்டம், 1920 மாற்றி அமைக்கப்பட்டு, 2-10-1987 முதல் இளைஞர் நீதிச் சட்டம், 1986 (மத்திய சட்டம்) அமலாக்கம் செய்யப்பட்டது. குழந்தை உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் சாற்றுரையின் அடிப்படையில், மத்திய அரசு 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தை மறு ஆய்வு செய்து, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் என்ற புதிய சட்டம் இயற்றியுள்ளது. இப்புதிய சட்டத்தின் விரிவான விதிமுறைகளை தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் 14-2-2002-ல் அறிவிக்கை செய்துள்ளது. திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டு சட்டத்தின்படி பல்வேறு நிறுவனங்களை மாற்றி அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

[2002 ஏப்ரல் 26

எனவே, தற்போது சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்புடைய "இளைஞர் நீதிக் குழுமம்" "குழந்தைகள் நலக் குழுவாகவும்" "இளைஞர் நீதி மன்றங்கள்" "இளைஞர் நலக்குழுமமாகவும்" புதிதாக பெயர் மாற்றம் செய்து தோற்றுவிக்கப்படும்.

இதன் தொடர்ச்சியாக பல்வேறு குழந்தை கவனிப்பு நிறுவனங்கள் பெயர் மாற்றம் கொண்டு புதிய வடிவம் பெற உள்ளன.

**(அ) கூர்நோக்கு இல்லங்கள்**

தவறிழைத்த சிறார்கள் இளைஞர் நீதிமன்றங்கள் மூலமாகவும் புறக்கணிக்கப்பட்ட, ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட சிறார்கள் இளைஞர் நலக் குழுமம் மூலமாகவும், இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். அரசு சாரா அமைப்புகளின் கீழியங்கும் கூர்நோக்கு இல்லங்கள் பராமரிப்பு மானியமாக அரசு மாதம் ஒன்றுக்கு ஒரு இல்லவாசிக்கு ரூ.200/- வீதம் வழங்குகிறது.

தற்போது திருத்திய சட்டத்தின்படி, தவறிழைத்த (சட்டத்திற்கு புறம்பாக) சிறார்கள் மட்டுமே கூர்நோக்கு இல்லங்களில் சேர்க்கப்படுவார்கள். பின்வரும் 19 நிறுவனங்கள் தேவைப்படி மாற்றி அமைக்கப்படும்:—

| | | |
|---|---|---|
| 1. | அரசின் கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், காரைக்குடி, ஈரோடு, திருநெல்வேலி, சேலம், தருமபுரி மற்றும் வேலூர்) | 11 |
| 2. | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, நாகப்பட்டினம், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, கோயம்புத்தூர் மற்றும் திருவள்ளூர்) | 8 |
| | மொத்தம் | 19 |

2002-2003 ஆம் ஆண்டில் கூர்நோக்கு இல்லங்களைப் பராமரிக்க ரூ.188.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்கள்**

1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின்கீழ் அமையப்பெற்ற 23 இளைஞர் இல்லங்கள் மற்றும் 2 சிறப்பு இளைஞர் இல்லங்களில்



2002 ஏப்ரல் 26]

முறையே இளைஞர் நலக் குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதி மன்றங்களின் மூலம் அனுமதிக்கப்படும் சிறார்களுக்கு பாதுகாப்பு, பயிற்சி, கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவை வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | அரசினர் சிறப்பு இல்லங்கள், செங்கல்பட்டு (சிறுவர்) மற்றும் சென்னை (சிறுமியர்) | 2 |
| 2. | அரசிர் இளைஞர் இல்லங்கள் சிறுவர் 7 (சென்னை, இராணிப்பேட்டை, கடலூர், தஞ்சாவூர், பஞ்சப்பள்ளி, மல்லிப்புதூர், தட்டப்பாறை) மற்றும் சிறுமியர் 1 (சென்னை) | 8 |
| 3. | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் இளைஞர் இல்லங்கள் (திண்டுக்கல், கோயம்புத்தூர், தருமபுரி, சேலம், திருவண்ணாமலை, மதுரை மற்றும் சென்னையில் 9 நிறுவனங்கள்) | 15 |
| | மொத்தம் | 25 |

திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தின்கீழ் குழந்தைகள் நலக்குழுவின் ஆணைப்படி சிறார்களின் பாதுகாப்பிற்காக அனுமதிக்கப்படும் இளைஞர் இல்லங்கள், குழந்தைகள் இல்லங்களாக செயல்பட உள்ளன. இளைஞர் நீதிக் குழுமத்தின் ஆணைப்படி சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடுவதாகக் கருதப்படும் சிறார்கள் சிறப்பு இல்லங்களில் அனுமதித்து பராமரிக்கப்படுகிறனர்.

ரூ. 21.60 இலட்சம் செலவில் செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் துயிற்கூடங்கள் கட்டவும் மற்றும் ரூ.15.00 இலட்சம் செலவில் சென்னை பெண்கள் இளைஞர் இல்லத்தில் வகுப்பறைகள் பழுதுபார்க்கவும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ரூ.4.05 இலட்சம் செலவில், சென்னையில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் பெண்களுக்கான இளைஞர் இல்லத்தினைப் புதிதாகத் தொடங்க அரசு அனுமதித்துள்ளது. இப்பணி நடைபெற்று வருகிறது. இந்நிறுவனம் குழந்தைகள் இல்லமாக பெயர் மாற்றம் பெற உள்ளது.

அரசு சாரா நிறுவனங்களினால் பராமரிக்கப்படும் இளைஞர் இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு இல்லவாசிக்கு ரூ.200/- என பராமரிப்புத் தொகை அரசால் வழங்கப்படுகிறது.

2002-2003ஆம் ஆண்டில் இளைஞர் சிறப்பு இல்லங்களைப் பராமரிக்க ரூ.542.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) பிற்காப்பு இல்லங்கள்**

இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருந்து விடேறும் சிறார்களின் மறுவாழ்வு நலனை முன்னிட்டு, பிற்காப்பு நலத் திட்டங்களைச் செயல்படுத்த, தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட 3 இடங்களில் பிற்காப்பு நிறுவனங்களை நிறுவி பராமரித்து வருகிறது. சிறார்கள் நேர்மையான தொழில்முறை சார்ந்த மற்றும் பயனுள்ள வாழ்க்கை நடத்திடவும் இப்பிற்காப்பு இல்லங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | அரசினர் மாணவா பிற்காப்பு இல்லம், ஆத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றும் மதுரை | 2 |
| 2. | அரசினர் மகளிர் பிற்காப்பு இல்லம் (வேலூர்) | 1 |

2002-2003 ஆம் ஆண்டில் பிற்காப்பு இல்லங்களைப் பராமரிக்க ரூ.40.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இல்லவாசிகளுக்கு வேலைவாய்ப்பிற்கான தொழிற்கல்விப் பயிற்சி வழங்குவதுடன் பின்வரும் அடிப்படை வசதிகள் நிறுவனங்களில் செய்து தரப்பட்டுள்ளன.

1. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும்பொருட்டு நீர்சுத்திகரிப்பு இயந்திரம்
2. மின்சாரம் தடைபடாமல் இருப்பதற்காக அனைத்து இல்லங்களுக்கும் மின் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும்
3. இளைஞர் சிறப்பு இல்லவாசிகளுக்கு உள்ளாடைகள்.

**(ஈ) இளைஞர் நலக் குழுமங்கள்**

புறக்கணிக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்களின் தொடர்புள்ள வழக்குகளை விசாரிக்க இளைஞர் நலக் குழுமங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு இளைஞர் நலக் குழுமமும் அலுவல் சார்பற்ற ஒரு தலைவர் மற்றும் 4 அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு (மகளிர் உறுப்பினர் ஒருவர் உட்பட) கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் கூர்நோக்கு இல்லங்களின் வளாகத்திலேயே செயல்படுகின்றன. இவ்விளைஞர் நலக் குழுமங்களை



தற்போதுள்ள புதிய சட்டத்தின்படி குழந்தைகள் நலக் குழுவாக மாற்றி அமைக்கப்படவுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சென்னை | 2. | செங்கல்பட்டு |
| 3. | வேலூர் | 4. | விழுப்புரம் |
| 5. | தருமபுரி | 6. | சேலம் |
| 7. | ஈரோடு | 8. | திருச்சிராப்பள்ளி |
| 9. | தஞ்சாவூர் | 10. | மதுரை |
| 11. | திருநெல்வேலி | 12. | கோயம்புத்தூர் |
| 13. | மயிலாடுதுறை | 14. | விருதுநகர் |
| 15. | திண்டுக்கல் | 16. | தூத்துக்குடி |
| 17. | காரைக்குடி | 18. | திருவள்ளூர் |

**(உ) இளைஞர் நீதிமன்றங்கள்**

சென்னை மாநகரில் 12-வது பெருநகர நீதி மன்றம், தவறிழைத்த சிறார்களின் வழக்குகளை விசாரிக்கிறது. மாவட்டங்களில் தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவர்/உட்கோட்ட குற்றவியல் நீதிமன்ற நடுவர்/ குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர் ஆகியோர் வழக்குகளை விசாரிக்கின்றனர்.

திருத்தப்பட்ட 2000ஆம் ஆண்டின் சட்டத்தின்படி இளைஞர் நீதிமன்றத்திற்குப் பதிலாக இளைஞர் நீதிக் குழுமம் மட்டுமே சட்டத்திற்குப் புறம்பான செயலில் ஈடுபட்டுள்ளதாகக் கருதப்படும் சிறார்களின் வழக்குகளைக் கவனிக்கும். இளைஞர் நீதிக் குழுமங்களை அமைக்க தக்க நடவடிக்கைகளைத் துறை மேற்கொண்டு வருகிறது.

**5.2. 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் அமைந்த மகளிர் காப்பகங்கள்**

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கென அமைக்கப்பட்ட பாதுகாப்பு இல்லங்களில் பாதுகாப்பு, பராமரிப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு வழங்கப்படுகிறது. ஒழுக்கநெறி அச்சுறுத்தலுக்கு

உள்ளான சிறுமியர் மற்றும் மகளிர் பாதுகாப்பிற்காக தாமாக முன்வந்து இவ்வில்லங்களில் தங்குவதற்கு இயக்குநர் அனுமதியுடன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 6 மகளிர் விழிப்புணர்வுக் காப்பகங்கள் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் இயங்கி வருகின்றன:—

| | |
|---|---|
| சென்னை | 2 |
| மதுரை | 1 |
| திருச்சிராப்பள்ளி | 1 |
| சேலம் | 1 |
| கோயம்புத்தூர் | 1 |
| மொத்தம் | 6 |

**(அ) மீட்புப் புகலிடங்கள்**

இத்துறை மேற்குறிப்பிட்ட சட்டத்தின்கீழ் விசாரணைக்குட்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கு 6 மீட்பு புகலிடங்களை நிறுவி மகளிர் விழிப்புணர்வுக் காப்பகங்களுடன் இணைத்துப் பராமரித்து வருகிறது. நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரணை நிலுவையில் இருக்கும் பொழுது பெண்களுக்குக் கவனிப்பும், பாதுகாப்பும் இவ்வில்லங்களில் வழங்கப்பட்டு வருகின்றது.

**(ஆ) மணமாகாத தாய்மார்கள் இல்லம்**

பாலியல் கொடுமைகளால் பாதிப்புக்குள்ளாகி மகப்பேறடைந்த பெண்கள் கீழ்க்கண்ட இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்:— (i) சென்னையில் அரசினர் மகளிர் விழிப்புணர்வு காப்பகம் மற்றும் ஸ்ரீசாதனா மற்றும் (ii) அடைக்கலாபுரத்தில் (தூத்துக்குடி) புனித பிரான்சிஸ் சேவியர் மீட்புப் புகலிடம் (தன்னார்வத் தொண்டு நிறுவனம்).

**(இ) குறுகியகால இல்லம்**

இவை தவிர, திக்கற்ற மகளிருக்கென சென்னையில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் "அபய நிலையம்" என்ற இல்லம் இயங்கி வருகிறது. மேற்குறிப்பிட்ட இல்லத்தை நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு பராமரிப்புத் தொகையாக ஒரு பெண் இல்லவாசிக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.200/- வீதம் வழங்கப்படுகிறது.





2002-2003 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட இல்லங்களைப் பராமரிக்க ரூ.96.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) இடைவழி இல்லங்கள்**

பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள சிறுமியர் மற்றும் மகளிருக்குப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் 1999-2000 ஆம் ஆண்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் பின்வரும் இடங்களில் இப்புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது:—

1. உளுந்தூர்பேட்டை
2. நாமக்கல்

பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள வளர் இளம் பெண்களைக் கண்டறிந்து அவர்களுக்கு தீங்கு ஏற்படுவதைத் தடுக்கும் முகத்தான் பயனுள்ள மறுவாழ்வு வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பெண்களின் சுய மரியாதையை மேம்படுத்துவதற்கும் இத்திட்டம் உதவுகிறது. ஒவ்வொரு இடைவழி இல்லமும் 25 பெண்களை வைத்துப் பராமரிக்கப்பட அமைக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இடைவழி இல்லங்களைப் பராமரிக்க ரூ.0.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.3. இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்**

இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் சிறார்களின் ஆளுமை, நோக்கம் மற்றும் நடத்தை ஆகியவற்றை அறிவியல்பூர்வமாக ஆய்ந்து செயல்படுவதற்காக தோற்றுவிக்கப்பட்டவையாகும். சிறார்களின் சமூக மற்றும் பொருளாதார அடிப்படைகளை பயிற்சிபெற்ற சோதனை அலுவலர்கள் மற்றும் உளவியலாளர்கள் ஆய்வு செய்கின்றனர். இளைஞர் நீதிமன்றங்கள் சிறார்கள் குறித்த நலக்குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்கள் சிறார்கள் குறித்த அறிக்கையினை இளைஞர் வழிகாட்டி நிலையங்களில் இருந்து பெறுகின்றனர்.

சென்னை, மதுரை, வேலூர், தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் 6 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இளைஞர் வழிகாட்டி நிலையங்கள், கூர்நோக்கு இல்லங்கள், இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் உறையும் இல்லவாசிகளின் உளவியல் பூர்வமான பிரச்சினைகள் குறித்து ஆய்ந்து அறிக்கைகள் வழங்குகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் இளைஞர் வழிகாட்டி நிலையங்களைப் பராமரிக்க ரூ.4.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.4. கல்விப் பயிற்சி

அனைத்து அரசு இளைஞர்/சிறப்பு இல்லங்களிலும் 8 ஆம் வகுப்புவரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு சிறுவர்கள் அரசினர் சிறப்பு இல்லம் மற்றும் சென்னை சிறப்பு இல்லத்தில் 10ஆம் வகுப்புவரை கல்வியுடன், கணிப்பொறி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மேலும் சிறார்களை உயர் கல்வி தொடரும் பொருட்டு வெளியில் உள்ள மேல்நிலைப் பள்ளி, கல்லூரி, தொழிற் பயிற்சி நிலையம், பல்தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் தொழில் சார்ந்த பட்டப்படிப்புக் கல்லூரிகள் ஆகியவற்றில் அனுமதிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| மருத்துவ பட்டப்படிப்பு (பட்டப்பிரிவு) | 4 |
| பொறியியல் பட்டப்படிப்பு | 4 |
| இளங்கலை பட்டப்படிப்பு | 4 |
| தொழிற்பயிற்சி சான்றிதழ் படிப்பு | 44 |
| உயர்நிலைக் கல்வி | 74 |

இவ்வகையில் இல்லவாசிகளின் உயர்கல்விக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிப்பதற்காக இவ்வரசால் பொறியியல் கல்லூரிகளில் 5 இடங்கள் பொறியியல் பட்டப்படிப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் கல்வி செலவினங்களுக்காக ரூ.4.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.5. இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் வழங்கப்படும் தொழிற்பயிற்சி

சிறார்களுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் பின் குறிப்பிட்ட தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.



பயிற்சிபெற்ற ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர்கள் மூலம் தச்சு, புத்தகம் கட்டுதல், மின் தச்சு, கொத்து வேலை, தையல் மற்றும் பூ. வேலை, சோப்பு தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, நெசவு, இசைக் கருவி பயிற்சி, பாய் நெசவு, மாட்டுப்பண்ணை, கருமார்ப் பணி, இயந்திர நெசவு மற்றும் உலோகப் பணி, இவை மட்டுமின்றி பின்வரும் குறுகிய கால தொழிற் பயிற்சிகளும் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படுகின்றன. பயிற்சி முடிந்தவுடன் உரிய தேர்வுகள் எழுதவும் அனுமதிக்கப்படுகிறது.

(1) மெழுகுவர்த்தி தயாரிப்பு

(2) மாவு அரைத்தல்

(3) தானியங்கி வாகனங்கள் பழுதுபார்ப்பு

(4) வீட்டு மின் அலகுப் பணி

(5) தண்ணீர்க் குழாய் பழுதுபார்ப்பு

(6) திரை அச்சு

(7) பனியன் தயாரிப்பு

சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் உள்ள தையற் தொழிற்கூடங்களும், செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லத்தில் நெசவு தொழிற் கூடமும், தஞ்சாவூர், இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லங்களில் தச்சு தொழிற்கூடங்களும் இயந்திரமயமாக்கப்பட்டு இல்லவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

மகளிர் காப்பகங்கள், பெண்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தையல் மற்றும் பூ வேலை, பாய் நெசவு மற்றும் நெசவு ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்படுகிறது. சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் சலவைத் தொழில் சார்ந்த பயிற்சி வழங்கப்படுகிறது.

சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று இயங்கி வருகிறது. மேலும் இல்லவாசிகளுக்கு மனையியல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. பெண்கள் இளைஞர் சிறப்பு இல்லத்தில் பயிற்சி பெற்று, வெளியே பணிபுரியும் முன்னாள் இல்லவாசிகள் தங்குவதற்காக பிற்காப்பு தங்கும் விடுதி ஒன்று சென்னை அரசினர்

[2002 ஏப்ரல் 26

பெண்கள்/இளைஞர்/சிறப்பு இல்ல வளாகத்தில் இயங்கிவருகிறது. ப் முன்னாள் இல்லவாசிகள் இத்திட்டம் மூலம் பயன் பெறுகிறார்கள்.

தஞ்சாவூர் மற்றும் இராணிப்பேட்டை இளைஞர் இல்லங்களில் இயங்கும் ஹாலோ பிளாக் சிமெண்ட் செங்கற்கள் தயாரிக்கும் பிரிவு மற்றும் சென்னை அரசினர் பெண்கள் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லத்தில் இயங்கும் பெண்களுக்கான சுகாதாரத் துண்டுகள் தயாரிக்கும் பிரிவு ஆகியவற்றில் இல்லவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 5.6. தொழில் பிரிவுகளில் உள்ள சிறார்களுக்கு ஊக்கத்தொகை

கல்வி மற்றும் பயனுள்ள வேலை வாய்ப்புக் கிடைக்கும் வகையில் நிறுவனங்களில் உள்ள சிறார்களின் மனப்போக்கு கூர்ந்து கவனிக்கப்படுகிறது. இத்துறையின்கீழ் இயங்கும் இல்லங்களில் தொழிற் பயிற்சிபெறும் இல்லவாசிகளுக்குப் பின்வருமாறு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது:—

1. முழுத்திறன் பெற்ற இல்லவாசிகளுக்கு — ரூ.70 மாதம் தோறும்

2. பாதி திறன் பெற்ற இல்லவாசிகளுக்கு — ரூ.50 மாதம் தோறும்.

இவ்வாறு வழங்கப்படும் ஊக்கத்தொகை இல்லவாசிகளின் கை செலவுக்கணக்கில் மாதம்தோறும் சேமிக்கப்படுகிறது.

2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.7. வெளியேறும் இல்லவாசிகளுக்கான தொழிற்பயிற்சிகள்

காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தூரில் உள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் புத்தகம் கட்டுதல், கருமாரப் பணி மற்றும் வேளாண்மைப் பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தொழிற்பிரிவுகளில் பணி புரியும் இல்லவாசிகளுக்கு ஊக்கத் தொகை (முழுத் திறன் பெற்றோருக்கு ரூ.70-ம், பாதி திறன் பெற்றோருக்கு ரூ.50-ம் வழங்கப்படுகிறது. அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் இருந்து வீடேறும் இல்லவாசிகளுக்கு விரிவான பயிற்சிகள் வழங்கும் விதத்தில் புதிய திட்டம் துவக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு தொழிற்பயிற்சி மறுவாழ்வு மையம் எனப்



2002 ஏப்ரல் 26]

பெயரிடப்பட்டுள்ளது. செங்கல்பட்டு ஆத்தூர் அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவன வளாகத்தில் அமைந்துள்ள இம்மையத்தில் தானியங்கி இயந்திரங்கள் பழுதுபார்த்தல், பொது இயந்திரங்கள் பழுதுபார்த்தல், மின் இணைப்பு, மின்கம்பி சுருள் சுற்றுதல், திரை அச்சு குளிர்சாதனம் பழுதுபார்த்தல், காற்றுப்பதனம் பழுதுபார்த்தல், டி.ட்டி.பி. (கணினி) ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

தொழிற் பயிற்சி மறுவாழ்வு மையத்தில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகளுக்கு தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்பயனாக, இம்மையத்தில் பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்கள் சான்றிதழைப் பெற்று, வேலைவாய்ப்பகங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் இதுவரை 114 மாணவர்கள் பயிற்சி முடித்து பயன் அடைந்துள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.2.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்தில் பெண்கள் மற்றும் மகளிருக்கு உள்ளடக்கிகள், தோல்பொருள்கள் மற்றும் தையல் ஆகிய பிரிவுகளில் தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2002-2003 ஆம் ஆண்டில் அந்நிறுவனத்திற்கு ரூ.13.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.8. மறுவாழ்வுத் திட்டங்கள்

சமூகப்பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சிபெற்று வெளியேறும் இல்லவாசிகளுக்குக் கீழ்க்குறிப்பிட்ட மறுவாழ்வுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன:—

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குட்படாத பணியிடங்களுக்கு முன்னாள் இல்லவாசிகளுக்கு இத்துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

2. மறுவாழ்வு வழங்கும் விதமாக பெண் இல்லவாசிகளுக்குத் திருமணக் கொடையாக ரூ.3000-ம், திருமண நாள் செலவாக ரூ.2000-ம் வழங்கப்படுகிறது. இதுவரை 16 பெண் இல்லவாசிகள் பயன்பெற்றுள்ளனர்.

[2002 ஏப்ரல் 26

3. மகளிர் காப்பகங்களிலிருந்து வீடேறும் பெண்கள் மற்றும் [illegible]ருக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சமூகப் பாதுகாப்பு இல்லவாசிகளின் நலநிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. மற்றும் ஒழுக்க நெறி பிறழ்ந்து பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.5000 வரை நிதி உதவி அளித்து, கறவை ஆடு மாடுகள், சிறு கடைகள், தையற் கடை போன்றவை வைத்து சொந்தமாக தொழில் செய்து முன்னேற வகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 151 பெண்கள் நிதி உதவி பெற்றுள்ளனர்.

4. அரசினர் இளைஞர்/ சிறப்பு இல்லங்களில் பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்று வீடேறும் இல்லவாசிகள், சுய தொழில் தொடங்க உதவுவதற்காக, கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க கீழ்க்கண்டவாறு ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது:—

| வ. எண் | தொழிற்பிரிவுகள் | எண்ணிக்கை | உதவித் தொகை (தலா) ரூ. |
|---|---|---|---|
| 1 | தச்சு | 5 | 2000 |
| 2 | நெசவு | 2 | 1000 |
| 3 | புத்தகம் கட்டுதல் | 3 | 1000 |
| 4 | தோட்டம் மற்றும் வேளாண்மை | 4 | 500 |
| 5 | கொத்து பிரிவு | 2 | 500 |
| 6 | தையல் | 10 | 2500 |
| 7 | பூத்தையல் | 2 | 1000 |
| 8 | உலோக வேலை | 4 | 1000 |
| 9 | பாய் நெசவு | 4 | 1000 |
| 10 | வீட்டு மின் இணைப்பு மற்றும் குழாய் பணிகள் | 2 | 1000 |
| 11 | மின் பற்றவைப்பு | 2 | 1000 |
| 12 | இரண்டு சக்கர வாகன பராமரிப்பு | 2 | 2000 |



2002 ஏப்ரல் 26]

2002-2003 ஆம் நிதி ஆண்டில் இதற்காக ரூ.25,000/-நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.9. குடும்ப உதவித் திட்டம்**

பின்தங்கிய பொருளாதார சூழ்நிலை காரணமாக இளைஞர் இல்லங்களுக்கு வரும் சிறார்களுக்கு உதவி செய்யும் விதத்தில் குடும்ப உதவித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் இவ்வியக்ககத்தின்கீழ் செயல்படும் குழந்தைகள் கவனிப்பு இல்லாமல் உள்ள, அவர்களது குடும்பச் சூழலில் வளரும் விதமாக அவர்களின் கல்விக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, அமைக்கப்பட்ட குழு மூலம் சிறார்களைக் கண்டறிந்து அவர்கள் பெற்றோர் வசம் மீண்டும் ஒப்படைக்கப்படுகின்றனர். சிறார் ஒருவருக்கு ஒருமாதத்திற்கு ரூ.200/- வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 100 சிறார்கள் இதன் மூலம் பயன்பெறுகின்றனர். இல்லங்களில் சேர்ந்து பயிலாமல், தாமாகவே பயிலும் முயற்சியாக இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. 2002-2003ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.10. சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்**

பிச்சையெடுக்கும் சிறார்களைக் கண்டறிந்து, அவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்க்கும் ஆலோசனை வழங்கி, இச்சிறார்கள் பள்ளிக்குச் செல்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சென்னையில் “இந்திய குழந்தைகள் நலச் சங்கம்” எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று அரசின் மானிய உதவியுடன் இயங்கி வருகின்றது. 2002-2003ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.1.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.11. சிறப்பு பராமரிப்பு மையங்கள்**

இளைஞர்/சிறப்பு இல்லங்களில் பயிலும் ஆதரவற்ற சிறார்களுக்கு அன்பும் அரவணைப்பும் அளிக்கும் வகையில் 2 சிறப்பு பராமரிப்பு மையங்கள் (சிறுமியர் 1, சிறுவர் 1) செயல்பட்டு வருகின்றன. சென்னை அரசினர் பெண்கள்சிறப்பு இல்லத்தில் ஒரு மையமும், இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் ஒரு மையமும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் ரூ.1.20 இலட்சம் செலவில் 100 சிறார்கள் பயன்பெறுகிறார்கள்.

[2002 ஏப்ரல் 26

**5.12 துன்புறும் சூழலில் உள்ள சிறார்களின் இடர்ப்பாடுகள் தலையீட்டு மையம்**

குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் அவர்களை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க "தமிழ்நாடு அரசு இந்திய குழந்தைகள் நலச்சங்கம் (தமிழ்நாடு கிளை)" வாயிலாக ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்த வழக்குகள் விசாரிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தற்காலிகப் பாதுகாப்பு மற்றும் புகலிடம் அளிப்பதுடன், குழந்தையின் பெற்றோருக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. 2002-2003ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.13 மாநில அரசின் சாலையோரச் சிறார்களுக்கான இரவுப் புகலிடங்கள் திட்டம்**

சாலைகளில் வாழும் சிறார்கள் மற்றும் நடைபாதைகளில் வசிக்கும் சிறார்களுக்கு இரவுப் புகலிடங்கள் அளிக்கும் விதமாக ஒரு திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசின் மானிய உதவியுடன் (ரூ.65500/- ஒரு வருடத்திற்கு) இயங்கி வருகின்றன. 10 புகலிடங்களில் தலா 50 சிறார்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு புகலிடத்திற்கும் ஒருவேளை உணவு, முறைசாராக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி ஆகியவை வழங்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 3 | திருநெல்வேலி | 1 |
| மதுரை | 2 | திண்டுக்கல் | 1 |
| சேலம் | 1 | திருச்சிராப்பள்ளி | 1 |
| விழுப்புரம் | 1 | | |
| | | மொத்தம் | 10 |

இப்புகலிடங்கள் சாலையோரச் சிறார்களுக்கு இரவு நேரங்களில் பாதுகாப்பு அளிக்கவும் தொழிற்பயிற்சி மற்றும் முறைசாராக் கல்வி வழங்கவும் அமைந்துள்ளன. 500 சிறார்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகின்றனர். 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.6.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 26]

**5.14 ஒருங்கிணைந்த சாலையோரச் சிறார்கள் நலத் திட்டம்**

இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகார ஒப்பளிப்புத் துறை சாலையோரச் சிறார்களின் மேம்பாட்டுக்கென ஒருங்கிணைந்த நலத் திட்டத்தினை செயல்படுத்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கருத்துருக்கள் மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்டு நிதியுதவி பெறுகின்றன. ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு, அதிகபட்சமாக ஆண்டொன்றுக்கு, மானியம் ரூ. 15 இலட்சம் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 8 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தினைச் செயல்படுத்துகின்றன.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, சமூகப் பாதுகாப்புத் துறை நகரக் குழு ஒன்றினை அமைத்து அதற்கான திட்ட வரைவினை வெளியிட்டுள்ளது. இத்திட்டவரைவு சாலையோரச் சிறார்களின் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அரசு மற்றும் அரசுசாரா அமைப்புகளை ஒருங்கிணைத்து கூட்டமைத்து செயல்பட ஒரு வழிகாட்டுதலை ஏற்படுத்தித் தருகிறது. நம் நாட்டிலேயே இவ்வாறான அமைப்பு இது முதலாவதாகும்.

**5.15 போதை மருந்தினைப் பயன்படுத்துதலைத் தடுக்கும் திட்டம்**

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மைய அரசின் உதவியுடன் கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்துகின்றன:—

| வ. எண் | பயிற்சித் திட்டங்கள் பெயர் | நிறுவனங்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| அ. | போதை மருந்து விழிப்புணர்வு, ஆலோசனை மற்றும் உதவி மையம் | 6 |
| ஆ. | போதைக்கு அடிமையானவர்களுக்குச் சிகிச்சை அளித்தல் மற்றும் மறுவாழ்வளித்தல் | 23 |
| இ. | போதை தடுப்பு முகாம் | 1 |
| | மொத்தம் | 30 |

**5.16 குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம்**

குழந்தைகளுக்கு உதவி புரிவதற்காக பரந்த அளவில் தொலைபேசி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் "1098" என்ற

[2002 ஏப்ரல் 26

எளிதான எண் கொண்ட 'குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்டம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. துன்புறும் சூழலில் உள்ள குழந்தையோ அல்லது குழந்தையின் துன்புறும் சூழலைக் காணநேரிடும் நபரோ, '1098' என்ற தொலைபேசி எண்ணுக்கு கட்டணம் இன்றி தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். தன்னார்வத் •தொண்டு நிறுவனம் ஒருங்கிணைந்த கூட்டு இணையம் மூலம் தொலைபேசி அழைப்புகள் பெறப்பட்டு உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநரால் மத்திய அரசின் நிதியுதவியுடன் நடைமுறைபடுத்தப்படுகிறது. மேலும், திட்ட முனைப்புத்துறையாக சமூகப் பாதுகாப்புத் துறை உள்ளது. குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்ட அறிவுரைக் குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு யூனிசெப், தன்னார்வத் தொண்டு நிறுவனம், மத்திய அரசின் தகவல் துறை, இரயில்வே, தொலைபேசித் துறை மற்றும் மாநில அரசின் சமூக நலத் துறை, குழந்தைகள் நலப் பிரிவு மற்றும் காவல் துறை ஆகியவற்றிலிருந்து பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டதாகும். குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்ட அறிவுரைக் குழுமத்தின் தலைவராக சமூகப் பாது காப்புத் துறை இயக்குநர் இருந்து வருகின்றார்.

இதுவரை கீழ்க்காணும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1 | மருத்துவ உதவி | 123 |
| 2 | புகலிட உதவி | 1124 |
| 3 | துன்பத்திலிருந்து பாதுகாத்தல் | 145 |
| 4 | காணாமல் போன சிறார்கள் | 519 |
| 5 | குடும்பத்துடன் சேர்த்தல் | 657 |
| 6 | இறப்பு தொடர்பாக | 2 |
| 7 | உணர்வுபூர்வமான ஆலோசனை | 124 |
| 8 | தகவல் மற்றும் முறையிடுதல் | 859 |
| 9 | தொலைபேசி உதவி | 13321 |
| 10 | விளையாட்டு அழைப்பு | 3374 |



2002 ஏப்ரல் 26]

**5.17 காணாமல்போன சிறார்களுக்கான தகவல் மையம்**

காணாமற்போன சிறுவர்களை அவர்களுடைய குடும்பத்துடன் சேர்க்க உதவும் வகையில் உயர் தொழில் நுட்பதகவல் மையம் தொடங்கப்பட்டுள்ளது. இத்தகவல் மையங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்பத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 1.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.18 சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்திற்கு ஓர் இணைய தளம் ஏற்படுத்துதல்**

இத்துறையின் செயல்பாடுகள் மற்றும் துறை செயல்படுத்தும் "குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்டம்", " காணாமற்போன சிறார்கள் தகவல் மையம்", "சாலையோரச் சிறார்கள் நலத் திட்டம்" குறித்து பொது மக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த இத்துறைக்கென இணைய தளம் மார்ச் 2002-ல் தொடங்கப்பட்டது.

இந்த இணைய தளம் தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இணைய தளத்தின் முகவரி: www.tn.gov.in/social defence

மேலும் இன்டர்நெட் இணைப்பு ஜனவரி 2002ல் பெறப்பட்டு எளிய மற்றும் துரித தகவலுக்காக மின் அஞ்சல் இயங்கி வருகிறது. மின் அஞ்சல் முகவரி: dsd @ vsnl. net

**5.19 திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு**

சமூகப் பாதுகாப்புத் துறையினால் செயலாக்கப்படும் குழந்தைகள் நலத் திட்டங்களை (நிறுவனங்கள் மற்றும் நிறுவனம் சாராத பணிகள்) கண்காணிக்க யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் 1991 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்தில் திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் குறித்து கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்கங்கள் நடத்துவதோடு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சாலையோரச் சிறார்களுக்கான நலத் திட்டங்களை ஆய்வு செய்து வருகிறது. 2002-2003ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 26

## அத்தியாயம்–6

### முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

6.1 இத்திட்டம், முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய சீரிய திட்டமாகும். உற்றார் உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட ஐந்து இனங்களின்கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகின்றது.

1. முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டம் (1-4-1962 முதல்) செயல்படுத்தப்படுகின்றது.
2. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் (1-11-1974 முதல்)
3. ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் (1-6-1975 முதல்)
4. ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் (15-3-1981 முதல்)
5. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் (25-4-1986 முதல்)

இத்திட்டத்தில் அனைத்து இனங்களின் கீழ் பயனாளிகளுக்கு மாதம் ரூ.200/- வழங்கப்பட்டு வருகின்றது.

### 6.2. முதியோர் ஓய்வூதியத் திட்டம்

#### (அ) முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டம்

இத்திட்டம் பிழைப்புதவி இல்லாமலும் ஆதரிப்பவர்கள் யாரும் இல்லாமலும் உள்ள அனைத்து முதியோர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க அறிமுகப்படுத்தப்பட்டு 1-4-1962 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கண்பார்வையற்றோர், தொழு நோய், மனநோய், பாரிச வாயு மற்றும் அவயவம் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகை பெற குறைந்த பட்ச வயது வரம்பு 60 ஆகும். இதர ஆதரவற்ற நபர்களுக்குக் குறைந்த பட்ச வயது 65 ஆகும். இத்திட்டத்தின் கீழ் 31-03-2002 தேதியில் தோராயமாக 4,81,390 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.



2002 ஏப்ரல் 26]

முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டத்தின்கீழ் 65 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த மாதத் தொகை ரூ.200/-ல் மைய அரசின் பங்களிப்பாக மாதம் ரூ.75/-வழங்கப்படுகிறது.

#### (ஆ) ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்

உடல் ஊனம் 50 சதவீதம் அளவும் அதற்கு மேலும் உள்ள ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறத் தகுதி உடையவர் ஆவர். இத்திட்டத்தின்மூலம் பயன் பெறுவதற்குரிய குறைந்த பட்ச வயது வரம்பு 45 ஆகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளர் தலைவராகவும், மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் அடங்கிய குழு, ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டி பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து தனியார்களின் ஊனத்தின் தன்மைக்கேற்ப அவர்களுக்கு வயது வரம்பின்றி ஓய்வூதிய அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொழுநோயாளிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 31-03-2002 தேதியில் தோராயமாக 58,159 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

#### (இ) ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம்

முதியோர் ஓய்வூதியத் திட்டம் ஆதரவற்ற விதவைகளும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வயது வரம்பு ஏதும் இல்லை. 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும், தகுதியின் அடிப்படையில் திருமணமாகி கணவனை இழந்து விதவையான, மறுமணம் செய்யாமல் இருக்கும் ஆதரவற்ற பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைய தகுதி பெற்றவர்கள் ஆவர். முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்ட மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 31-03-2002 தேதியில் 4,62,802 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

#### (ஈ) ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்

முதியோர் ஓய்வூதியத் திட்டம் ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால்

[2002 ஏப்ரல் 26

விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனடைய குறைந்த பட்ச வயது 60 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 31-03-2002 தேதியில் தோராயமாக 93,230 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

**(உ) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்**

இத்திட்டம் 30 வயதுக்கு குறையாத கணவனால் கைவிடப்பட்ட, நீதிமன்றத்தில் விவாகரத்து சான்று பெற்ற, தகுதி வாய்ந்த ஆதரவற்ற பெண்கள்/மனைவிகள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. 18 வயது நிரம்பிய, கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற பெண்கள் வாரிசு இருந்தாலும் இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற தகுதியுள்ளவர்களாவர்.

இத்திட்டத்தின்கீழ் 31-03-2002 தேதியில் தோராயமாக 79,149 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

**6.3. பிற உதவிகள்**

**(1) இலவச வேட்டி/சேலை வழங்குதல்**

மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு, ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்கு சேலையும், ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகை அன்று வழங்கப்படுகிறது.

**(2) முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு இலவச சத்துணவு மற்றும் இலவச அரிசி வழங்குதல்**

அரசாணை எண் 394, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 5-9-1991-ன்படி முதியோர் ஓய்வூதியம் பெறும் அனைத்து பயனாளிகளும் 15-9-1991 முதல் கீழ்க்கண்ட படிநிலைகளின்படி இலவச அரிசி பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்:—

(அ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு வாரம் ஒருமுறை தலா 1 கிலோ இலவச அரிசி வழங்கப்படும்.



2002 ஏப்ரல் 26]

(ஆ) சத்துணவு கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு வாரம் ஒருமுறை தலா 1/2 கிலோ இலவச அரிசி வழங்கப்படும்.

அரசாணை எண் 288, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 26-9-1997-ன்படி, மாதம் ஒருமுறை அரிசி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி சத்துணவுக் கூடங்களில் உணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் நான்கு கிலோ இலவச அரிசியும், சத்துணவுக் கூடங்களில் உணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் இரண்டு கிலோ அரிசியும் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் 11,74,730 நபர்கள் பயன்பெறுகிறார்கள்.

**அன்னபூர்ணா திட்டம்**

அன்னபூர்ணா திட்டத்தின்கீழ், தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் உதவிபெறும் ஆதரவற்ற/மூத்த குடிமக்களுக்கு உணவு தானியங்கள் வழங்கப்படும் என அரசு ஆணை (நிலை) எண் 7, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 18-01-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. பயனாளிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும். பயனாளிகள் தேசிய ஓய்வூதியம் பெறுவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள். இத்திட்டத்திற்கு தமிழ்நாட்டில் உள்ள தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் பயன்பெறுபவர்களில் 20 சதவீதம் இலக்கான ஏறக்குறைய 86,000 நபர்களாவர். பின்பு திருத்தப்பட்ட இலக்குப்படி 71,974 பேர் பயனாளிகளாவர். நமது மாநிலத்திற்கு 2001-2002 ஆம் ஆண்டிற்கென மத்திய அரசு ரூ. 6.03 கோடி வழங்கியுள்ளது. மேற்காணும் தொகை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பிரித்து வழங்கப்படும்.

மாவட்டங்களில் தேசிய ஓய்வூதியத் திட்டத்திலுள்ள பயனாளிகளிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மாவட்டம் மற்றும் வட்டங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட முதுநிலை வரிசைப்படி சரிசம விதப்படியான அடிப்படையில் 20% பயனாளிகள் இத்திட்டத்தில் கொண்டு வரப்படுவார்கள். மாநில அளவில் இத்திட்டத்தைச் செம்மையாக செயல்படுத்த சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் பொறுப்பு வகிப்பார். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையரை ஒருங்கிணைப்பு அலுவலராக அரசு நியமித்துள்ளது.

[2002 ஏப்ரல் 26

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டத்திற்கான பயனீட்டாளர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர். மற்ற உணவுப் பங்கீடு அட்டைகளிலிருந்து மாறுபட்ட நிறத்தில் "அன்னபூர்ணா" அட்டையைத் தனியே பிரித்துக் காட்டும் நிறத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அச்சு செய்யப்பட்டு பொது விநியோக முறை கடைகளின் மூலம் 10 கிலோ இலவச அரிசி வினியோகிப்பதற்கென பயனீட்டாளிகளுக்கு வழங்கப்படும்.

சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தனது 21-03-2002 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலம் தேவையான நிதியினை வழங்கியுள்ளார். மேலும் அனைத்து மாவட்டங்களுக்கும் இந்திய உணவுக் கழகத்திடமிருந்து உரிய பொருள் விவரப் பட்டியல் பெற்று தொகுப்பு பட்டுவாடா வழங்கப்பட வேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளார்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் அனைத்து மாவட்டங்களையும் பார்வையிட்டு மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த பொறுப்பு வகிக்கும் அலுவலர்களுடன் ஆய்வும் செய்துள்ளார். 31-03-2002க்குள் அட்டைகளை அச்சிட வேண்டும் என்றும் அனைத்து மாவட்ட அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கியுள்ளார்.

## தொகுப்புரை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தன்னிகரற்ற பொன்னான ஆட்சியில் 2002-2003-ல் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

> "அறிவிக்கப்பட்டு இருக்கின்ற திட்டங்களை, உரிய முறையில் உரிய காலத்தில் நிறைவேற்றுவதே மிக முக்கியமானது என்று கருதுகிறேன். அந்தப் பணியை என் தலைமையில் அமைந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, சிறப்பாகச் செய்யும் என்று உறுதி கூறுகின்றேன்".

மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் உரையாற்றும்போது,



2002 ஏப்ரல் 26]

> "இந்த ஆட்சி, ஏழை எளிய மக்களின் அரசாகச் செயல்படும் என்றும், இந்த ஆட்சி, புரட்சித் தலைவர் எம்ஜிஆர். அவர்களின் ஆட்சியாகத் திகழ்ந்து, மக்கள் எங்கள் மீது வைத்துள்ள, அசைக்க முடியாத நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்போம்" என்பதையும் தெரிவித்து, நான் முன்பு கூறியதைப் போலவே "தமிழகத்தை இந்தியாவிலேயே. முதன்மை மாநிலமாக ஆக்கும் வரை நான் ஓயமாட்டேன், இந்த அரசும் ஓயாது" என்றும் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தச் சூளுரையை சிரமேற்கொண்டு, திட்டங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்து அவற்றைச் சிறப்பாக நிறைவேற்றிட சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை முனைப்பாகச் செயல்பட உறுதி மேற்கொள்வோம்.

அதன்படி, தமிழகத்தில் வறுமையில் வாடும் குழந்தைகள், மகளிர், ஊனமுற்றோர், முதியோர் ஆகிய நலிந்த பிரிவினருக்கு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலம் நேசக் கரம் நீட்டி உதவிகள் செய்வோம். அவர்களின் தேவை அறிந்து நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவர்களை நலம் பெறச் செய்வோம். அப்பொழுதுதான் அவர்கள் வாழ்வில் வளம் காண முடியும். அதனால் நாடும் நலம் பெறும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையை நமது இலட்சியமாகக் கொண்டு தொடர்ந்து செயலாற்றுவோம்.

நாம் அனைவரும் உறுதியோடும், கட்டுப்பாட்டோடும், கடமை உணர்வோடும், கருத்தொருமித்தும் செயல்பட்டால், வளமிக்க வருங்காலத்திற்கு நல்ல அடித்தளமாக அமைந்து, வறுமையில் வாடும் அனைத்துப் பிரிவினரும் முன்னேற்றம் அடைவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் என்று நாம் உறுதியாக நம்புவோம். இக்கனவுகள் நனவாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையில் நாம் அல்லும் பகலும் அயராது உழைத்திட உறுதி கொள்வோம்.

சென்னை-600 008